வரு.72 இல. 38 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2020 செப்டெம்பர் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

September 20 Sunday, 2020

32பக்கங்கள் 40/-






சித்திரவதையாகும் பகிடிவதை 02



வக்காளத்து வாங்க நான் பதவிக்கு வரவில்லை 07



யானை விலை குதிரை விலையாகிப்போன உளுந்தின் விலை! 18




ஆரவாரமில்லாமல் ஆரம்பமானது ஐ.பி.எல்.! 24



தேசிய சமுத்திர வள பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு கல்கிசை கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்வதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் மகிந்த அமரவீர உள்ளிட்டோர் சென்ற போது...

## ஜனாதிபதிக்கு பௌத்த மத ஆலோசனை சபை பாராட்டு

மகா சங்கத்தினரின் உபதேசங்கள் மற்றும் ஆலோசனைகளை செயற்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பௌத்த ஆலோசனை சபை தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி பின்பற்றுகின்ற வழி முறைகள் சிறந்த மற்றும் நியாயமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு காரணமாக அமையுமென்று ஆலோசனை சபையின் உறுப்பினர் நாயக்க தேரர் தமது நம்பிக்கையை வெளியிட்டார்.

அரசாங்கத்தின் கொள்கைகளை செயற்படுத்துவதற்காக மகா சங்கத்தினரின் உபதேசங்கள் மற்றும் கருத்துக்களை பெற்றுக்கொள்வதன் பொருட்டு பௌத்த ஆலோசனை சபை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு 04



## போராட்டத்தில் மரணித்தோரை நினைவுகூர

# அனுமதிக்காமை அநீதி

### தமிழ் கட்சிகள் ஜனாதிபதி, பிரதமருக்கு கடிதம்; தீர்வு தராவிட்டால் தொடர் போராட்டம்

எஸ். நிதர்சன், கந்தர்மடம் நிருபர்

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக போராடியவர்களை நினைவுகூருவதை தடுப்பதானது ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் மரணித்தவர்கள் தொடர்பான நினைவு உரிமையை மீறும் செயலாகும் என தெரிவித்துள்ள தமிழ் தேசிய கட்சிகள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நினைவு தினத்தை அனுமதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவ்வாறு நினைவு தினத்தை அனுஷ்டிக்க எதிர்வரும் மூன்று நாட்களில் ஜனாதிபதி அனுமதிக்காவிடின் தமிழர் தாயகப் பகுதியில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் அக் கட்சிகள் அறிவித்துள்ளன.

தமிழ் தேசிய கட்சிகளான தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் கூடியபோது, தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமையான இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையை தடுக்க வேண்டாமென கடிதம் மூலம் கோரிக்கை விடுவதென தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்புவதற்கான கடிதம் நேற்று காலை 10 மணியளவில் சீ.வீ.கே.சிவஞானத்தின் இல்லத்தில் 04



## கஜேந்திரகுமார் அணியும் இணைந்து கொண்டது



பருத்தித்துறை விசேட நிருபர்

தமிழ் தேசிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரும் இணக்கம் தெரிவித்து கடிதத்தில் 04

## நாளை வேலை நிறுத்த போராட்டம் நடைபெற மாட்டாது

தனியார் பஸ் ஊழியர்களால் நாளை திங்கட்கிழமை நடத்தவிருந்த வேலை நிறுத்த போராட்டம் நடைபெறாதென தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனை தெரிவித்துள்ளார். 04

## ராகிங் வெறுமனே பல்கலைக்கழக மட்டத்தில் எழும் ஒரு பிரச்சினை என விட்டுவிட முடியாது



பகிடிவதை என்பது வெறுமனே பல்கலைக்கழகத்தின் பிரச்சினை மாத்திரமன்று. அது ஒரு சமூகப் பிரச்சினை. பெற்றோருக்கு இதில் பெரும் பொறுப்புண்டு.

அத்துடன் அடுத்தமுறை தாமும் செய்யவேண்டும் என்ற விருப்புடன் பகிடிவதையை ஏற்றுக்கொள்ளும் புதுமுக மாணவர்களி்ன் மனப்பாங்கும் இது தொடரக் காரணம் என்கிறார் மாணவர் ஒழுக்காற்றுக்குழுத் தலைவர் ருசாங்கன் கோடீஸ்வரன். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், 04

## பள்ளிவாசல் நிர்வாகிகள் சுகாதார விதிமுறைகளை பின்பற்றுவது அவசியம்

### இலங்கை வக்பு சபை கண்டிப்பான உத்தரவு

பள்ளிவாசல்களில் கொவிட் 19 சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு, இலங்கை வக்பு சபை சில விதிமுறைகளை கட்டாயமாக பின்பற்ற வேண்டுமென அறிவித்துள்ளது.

சகல பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கும் கொவிட் 19 சுகாதார விதிமுறைகள் பின்பற்றியொழுகுவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் சகல நம்பிக்கையாளர்களை 04

## எக்காரணத்துக்காகவும் அரிசியின் விலையை அரசு அதிகரிக்காது



சந்தையில் அரிசி விலை எக்காரணத்துக்காகவும் அதிகரிக்கப்படமாட்டாதென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன உறுதியளித்துள்ளார். சந்தையில் அரிசிக்கான கேள்வி மற்றும் விலைகள் தொடர்பாக உற்பத்தியாளர்கள், மொத்த வியாபாரிகள் 04

## 33,000 கிலோ மஞ்சள் கடத்தலுக்கு உடந்தை

### இரு சுங்க அதிகாரிகள் கைது



33,000 கிலோ மஞ்சள் தொகையை சுங்க திணைக்களத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் வெளியேற்றியமை தொடர்பில் சுங்க அதிகாரிகள் இருவர் கைது 04

## ஜனநாயகத்துக்கு பாதிப்பில்லாது சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்



### 20 குறித்த உயர்பீடத்தின் முடிவு அறிவிக்கப்படும் - திகாரம்பரம் எம்.பி

ஜனநாயகத்துக்கும், நாட்டுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்பதையே தாம் வலியுறுத்துவதாக குறிப்பிட்டுள்ள தமிழ் முற்போக்கு கூட்டணி, அரசியலமைப்பின் மீது கொண்டுவரப்படவுள்ள 20ஆவது அரசியலமைப்பு 04

### ஆணைக்குழு முன் ஆஜரான

## ரணிலிடம் 3 மணி நேர வாக்குமூலம் பதிவு



அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜரான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மூன்று மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இச் சம்பவம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களான 04

## யாழ். செம்மணியில் வெடிபொருட்கள் மீட்பு

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

யாழ்ப்பாணம் செம்மணி இந்து மயானத்துள்ள வன்முறை கும்பலினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் சில 04



தேசிய பட்டியல் விடயத்தில் துரோகம் செய்திட்டாரெண்டு தெரிஞ்சிருந்தும் ஆதரவு கொடுப்பது எவ்வளவு பெரிய துரோகம் ஐயா....?

எனக்குப் புரியுது... ஆனா எங்க இந்த மனசு அதை கேக்குதில்லையே...

ஏன் ஐயா..? ஆருக்கும் தெரியாம கைய நனைச்சுப் போட்டிங்கலோ...!!

## நியூயோர்க்கில் துப்பாக்கிச் சூடு;

### இருவர் பலி, பலருக்கு காயம்



நியூயோர்க்கின் ரொசெஸ்ரர் (Rochester) நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதுடன் இதன்போது, 13 பேர்வரை 04

## இராகலையில் திடீர் தீ விபத்து 03 கடைகள் முற்றாக தீக்கிரை

### நள்ளிரவில் சம்பவம்; உயிர்ச்சேதம் இல்லை

ஹற்றன் சுழற்சி, ஹற்றன் விசேட நிருபர்கள்

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்ரீ கதிர்வேலாயுத ஆலயத்திற்கு செல்லும் பிரதான வீதியின் மருங்கில் அமைந்துள்ள கடைத்தொகுதிகளில் நேற்று நள்ளிரவு 01.00 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் சில்லறை கடை, கோழி கடை மற்றும் தொடர்பாடல் நிலையம் ஆகிய மூன்று கடைகள் முற்றாக எரிந்து நாசமடைந்துள்ளன. இத் தீ விபத்தில் எவருக்கும் உயிராபத்தோ, காயங்களோ ஏற்படவில்லையென்றும் பொருட்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

பிரதேச பொது மக்கள், நுவரெலியா மாநகர சபை தீயணைப்பு பிரிவினர், இராகலை பொலிசார் ஆகியோர் இணைந்து தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். 04



# சித்திரவதையாகும் பகிடிவதை



## தனிமனித மனமாற்றமே தீர்வாகலாம்

ஆர். மகேஸ்வரன் ...

பல்கலைக்கழகங்களில் நடைபெறும் பகிடிவதைகளை தடுப்பது தொடர்பில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அண்மையில் தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் புதிய மாணவர்கள் மத்தியில் பகிடிவதை இடம்பெற்றுள்ளமை தொடர்பில் அண்மையில் செய்திகள் வெளிவந்தன. பல்கலைக்கழக நடவடிக்கைகள் இணைய வழியாக இடம்பெறும் நிலையில் யாழ் பல்கலைக்கழகத்தில் பகிடிவதையும் இணையவழியாக இடம்பெற்றுள்ளது. யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடத்தின் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் நால்வர் கல்வி நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். யாழ் பல்கலைக்கழகத்தில் மாத்திரமல்ல

கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடந்த பகிடிவதை காரணமாக பேராதனைப் பல்கலைக்கழக பெறியியற்பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கு வகுப்புத் தடையும், பல்கலைக்கழக தடையும் விதிக்கப்பட்டு உடனடியாக விடுதிகளிலிருந்து வெளியேறுமாறு புதன்கிழமை பல்கலைக்கழக நிர்வாகம் உத்தரவிட்டது. இதற்கு முன்னர் இதே பீடத்தில் பேராதனையில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அங்கு பகிடிவதை வழங்கியதாக பேராதனை பொலிஸார் 15 மாணவர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். எனவே பகிடிவதை பற்றி சிந்திப்பது காலத்தின் தேவையாகும்.

பகிடிவதை காரணமாக பல்கலைக்கழக சமூகம் இரண்டாகப் பிரிந்து காணப்படுகிறது. பகிடிவதையினை ஆதரிப்போர் ஒருபகுதியினர் எதிர்ப்போர் இன்னொரு பகுதியினர் என இவ் இரண்டு குழுக்களுக்கும் இடையில் சண்டைகளும் நிகழ்கின்றன.

ஏன் ஆதரிக்கிறார்கள்? ஏன் எதிர்க்கிறார்கள்? இவ்வளவு நடந்தும் பகிடிவதை நிறுத்தப்படாமைக்கு மற்றொரு காரணம் அல்லது முக்கிய காரணம் தோட்டங்களில் தொழில் சங்கங்கள் சந்தாவுக்கு ஆள்பிடிப்பது போல் தமது கட்சிக்கு, குழுவுக்கு அரசுக்கு எதிராக, செயற்படுவதற்காக ஆள்பிடிப்பதே காரணமாகவுள்ளது. மனங்களில் மாற்றங்கள் ஏற்படும் வரை இது மாறப்போவதில்லை. இதன் காரணமாக பகிடிவதை ஆதரிப்போர் எதிர்ப்போர் என இரு குழுக்களாக பிரிந்து சண்டை பிடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இரு குழுக்களும் சண்டையைத் தவிர்ப்பதற்காக வெவ்வேறு சிற்றுண்டிச்சாலைகளை பயன்படுத்துகின்றனர். பகிடிவதையை ஆதரிக்கும் குழுவினரின் எண்ணிக்கை அதிகம் என்பதால் மாணவர் பொது அறையினை தம்வசம் வைத்துள்ளனர். எனவே, பகிடிவதைக்கு எதிரானவர்கள் வேறு இடங்களில் ஒன்று கூடுவதை காணமுடிகிறது. இக்குழுக்களுக்கு ஆதரவாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலரும் மறைமுகமாக இயங்குகின்றனர்.

பகிடிவதை எப்படி வந்தது, இதை நிறுத்த முடியாதா? சட்ட திட்டங்கள் போதாதா? என்ற கேள்விகள் எவருக்கும் எழுவது வழமை.

இந்த மாணவர்கள் சில வேளைகளில் அரசியல் குழுக்களின் கைப்பொம்மைகளாக ஆவதற்கான சாத்தியங்கள் உள்ளன. மறியல் போராட்டம், ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளும் அதிகமானோர் முதல் வருட மாணவர்கள் என்பதை உணர்ந்தவர்களுக்கு இது புரியும். அனேகமாக அதிக மாணவர்கள் அவர்கள் கலந்து கொள்ளும் போராட்டங்கள் எதற்காக இடம்பெறுகின்றது என்பதை அறியாமலேயே பங்கு கொள்கிறார்கள். சிரேஷ்ட மாணவர்களின் தூண்டுதலின் காரணமாகவே இம்மாணவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர். கனிஷ்ட மாணவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள சில அரசியல் குழுக்கள் திட்டமிட்டு செயற்படுகின்றன. இது இவர்களது அரசியல் நிகழ்ச்சி நிரலில் ஓர் அங்கமாகவும் காணப்படுகிறது. பல்கலைக்கழகங்களைப் பொறுத்த வரை எப்போதுமே இடதுசாரி அணிகளினதும் தீவிர போக்குடைய அரசியல் குழுக்களினதும் பாசறையாகவே காணப்படுகின்றது. இளம் வயதில் துடிப்புள்ள மாணவர்களை போராட்டங்களில் ஈடுபடுத்திக்கொள்வதும், ஈர்த்துக்கொள்வதும் இக்கட்சிகளினதும், குழுக்களினதும் நோக்கமாகும்.

மேற்கத்தேய கலாசாரத்தை நாம் அனைவரும் விமர்சித்தாலும் அதிலும் நாம் கற்றுக் கொள்வதற்கான விடயங்கள் இருப்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும். மேற்கத்தேய மாணவ, மாணவியர் தத்தமது காரியங்களைத் தனியாகவே செய்து கொள்வதற்கு சிறு காலத்திலிருந்தே பழக்கப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். இதனால் இளைஞர் பருவத்தில் அவர்களுக்கு தமது செயற்பாடுகள் தொடர்பில் நல்லதொரு தெளிவு ஏற்படும். எனினும் எமது கலாசாரத்தினுள் பிள்ளைகள் எல்லா சந்தர்ப்பத்திலும் தமது பெற்றோரின் பாதுகாப்பில் இருப்பதால் அதற்கு பின்னர் ஏற்படும் இடைவெளியால் பல்கலைக்கழகங்களின் பகிடிவதைகளுக்குள் சிக்கிக் கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

தீர்வின்றித் தொடரும் பிரச்சினையாக இருக்கிறது பகிடிவதை. பாடசாலை படிப்பை பலவித இன்னல்களுக்கும், சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும், போட்டிகளுக்கும் மத்தியில் வெற்றிகரமாக முடித்து விட்டு எதிர்கால கனவுகளைச் சுமந்து பட்டம் பெறுவதற்காக மாணவர்கள் பல்கலைக்கழகம் வருகின்றனர். ஏராளமான எதிர்பார்ப்புகளோடு தாய், தந்தை, உற்றார், உறவினர்களை பிரிந்து ஊரை விட்டு, நண்பர்களை பிரிந்து, புதியவர்களாய் பல்கலைக்கழகம் வருகின்றவர்களை மேலும் வாட்டி வதைத்து எடுப்பதே பகிடிவதை. இன்று ராகிங் பேய் பல்கலைக்கழகங்களில் சித்திரவதையாக மாறி பலரை உடல் உளப் பாதிப்புக்களுக்கு உள்ளாக்குவதோடு பெறுமதிமிக்க பல உயிர்களையும் குடித்துள்ளது. அதியுயர் கல்வி நிறுவனமாக மதிக்கப்படும் பல்கலைக்கழக அமைப்புகளில் இன்று அதிதீவிரமா ஒரு தொற்று வியாதியைப் போன்று பரவி வருவது பகிடிவதை என்று சொல்லப்படும் சித்திரவதையாகும்.

பகிடிவதை தொடர்பாக பதிவாகியுள்ள கொடூரமான சம்பவங்களுள் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ரத்கசீலி என்ற மாணவி இராமநாதன் மண்டபத்தின் மேல் மாடியிலிருந்து குதித்து உயிர் துறந்தார். அவரைத் தொடர்ந்து செல்வநாயகம், வரப்பிரகாஷ், துஷார, கெலும் என்று இந்தப் பட்டியல் நீள்கின்றது. சாகர இல்டா ஒபேசேகர விடுதியில் தங்கியிருந்த வேளை சிரேஷ்ட மாணவர்கள் நீர் ஓர் எழுத்தாளனா? எனக் கேட்டு பேனா முனையைக் காட்டி "இதைப் பிடித்து தானே நீ பகிடிவதையை எதிர்த்து எழுதினாய்" எனக் கூறி அப்பேனா முனையை அவரது இனப்பெருக்க உறுப்பினுள் அழுத்தியுள்ளனர். தற்போது தனது விட்டில் ஓர் அறையில் முடங்கிக் கிடக்கும் சாகர யன்னல் கதவுகளைத் திறக்க மறுக்கின்றான். திறக்கும் போது என்னைக் கொல்ல வருகிறார்கள் என உரக்கக் கத்துகின்றார்.

ராகிங் பிறந்தது எவ்வாறு என்பதை ஆராய்வோம். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை தொடர புதிதாகச் சேர்ந்தவர்களைத் தொந்தரவு செய்கின்ற சில்மிஷமான "ராகிங்" என்ற ஆங்கிலப்பதம் பகிடிவதை செய்தலையே குறித்து நிற்கிறது.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதையினை சமூக அறிவியலோடு நோக்கும்போது எமக்குப் புரிவது என்னவென்றால் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறும் இளைஞர், யுவதிகளின் இளமை மற்றும் அதனுடன் தொடர்புள்ள அனைத்தும் தவறான முறையில் கையாளப்படுகின்றது என்பதாகும்.

பகிடிவதை அல்லது இலகு வார்த்தையில் கூறுவதானால் 'ராகிங்' (ராக்) என்பதை இன்று முழுப் பல்கலைக்கழக கட்டமைப்பிலும் காணக் கூடியதாக உள்ளதோடு, சித்திரவதை மற்றும் கொடுமைகள் காரணமாக இதற்கு எதிராக சட்ட திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதே போன்று சட்ட ரீதியாகவும் பகிடிவதை தடை செய்யப்பட்டிருக்கின்றது என்றாலும் அந்த சட்டங்களையும் மீறிக் கொண்டு சிலர் பகிடிவதையில் ஈடுபடுவது ஏன் என்பது புரியாத ஒன்றாகவே உள்ளது.

பல்கலைக்கழகங்களிலும் சிரேஷ்ட மாணவர்கள் புதிய மாணவர்களோடு பல வருடங்கள் ஒன்றாக சேர்ந்து பயில, பழக வேண்டியுள்ளது அதற்காகப் பயன்படுவதே ராகிங். முதற் பழக்கம் பகிடியாக அமைந்து விட்டால் அது பயிற்சிக் காலம் முழுவதும் மறக்காது பசுமையாயிருக்கும்.

எனவே இந்தப் பகிடி மாணவர்களை இணைத்து வைக்கும் சொற்ப வேதனைதரும் நிகழ்வாக முன்பு இருந்து வந்தது. உலகம் முழுதும் இந் நடைமுறையை நாம் காணலாம்.

பல்கலைக்கழக மாணவர்களும், அதன் நிர்வாக அமைப்புகளும் பகிடிவதை போன்ற கொடு நிகழ்வுகளால் அவற்றின் தரமும், உயர்நிலை அந்தஸ்தும் இழக்கப்படுவதைப் புரிந்து கொண்டு பகிடிவதையினைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை தீவிரமாக எடுத்துள்ளன. பல்கலைக்கழகங்களில் பகிடிவதை என்பது ஒரு பாரம்பரியமாகவும் அதிலிருந்து எல்லா மாணவர்களையும் விடுவித்துக் கொள்வது ஒரு கடினமான பணியாகவும் இன்று மாறியுள்ளது. நாங்கள் பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டோம். ஆகவே எங்கள் முன்னோர்கள் எதைச் செய்தார்களோ, அதையே தற்போது நாங்கள் செய்கிறோம் என்று மாணவர்கள் விதண்டாவாதம் புரிகின்றனர். இன்னும் மாணவர்களை ஒழுக்கமுள்ளவர்களாகவும் சமுதாயப்பற்று மிக்கவர்களாகவும் பகிடிவதை என்ற உயிர்வதையில் ஈடுபடாத நற்பிரசைகளாகவும் உருவாக்க வேண்டியவர்கள் விரிவுரையாளர்களும் நிர்வாகிகளுமே. ஆனால் வேலியே பயிரை மேய்கின்ற நிலை இன்னும் பல்கலைக்கழகங்களைவிட்டு முற்று முழுதாக நீங்கவில்லை.

உளவியல் ரீதியான பகிடிவதை காரணமாக சமூக வழக்கிலுள்ள சமய சம்பிரதாய விழுமியங்களை மோசமான மொழியமைப்புகளைப் பயன்படுத்தி வசனிக்குமாறு பணித்தல். இதில் குறிப்பாக தேசியகீதம், திருக்குறள், கணித விஞ்ஞான விதிகள், சமய ரீதியான வசனங்கள் என்பன அடங்கும். புதிய மாணவர்களை தங்களது பெற்றோர்களை இழிவுபடுத்திக் கூறுமாறு பணித்தல், இதில் பெற்றோரின் உடல் கட்டமைப்பு தொடர்பான விடயங்களும் அடங்கும். தங்களைப் பற்றி தரக்குறைவினை ஏற்படுத்தும், அல்லது அவமானப்படுத்தும் வகையிலான ஏதேனும் கருத்துக்களைக் கூறுமாறு திணித்தல் போன்றவை அடங்கும். உண்மைப் பெயரைக் கூறாது மிகக் கீழ்த்தரமான பட்டப் பெயர்களை கூறுதல்.

பாலியல் ரீதியான பகிடிவதையில் சிரேஷ்ட மாணவர்கள் முன்னிலையில் மறைவானதோர் இடத்தில் ஆடையின்றி நிற்பதற்குப் பணித்தல், அல்லது கட்டாயப்படுத்தல், சில மாணவர்களை பலவந்தமாக விந்து வெளிபடுத்துமாறு அல்லது அது போன்ற பாவனை செய்யுமாறு பணித்தல், அல்லது கட்டளையிடுதல், புறம்பாலுறுப்புக்களினுள் ஏதேனும் எரிவூட்டும் பொருட்களை இடுதல் உதாரணமாக பற்பசையை இடுதல், மற்றவர்களுடன் பாலியலுறவு கொள்வது போன்று செய்துகாட்டுமாறும் கட்டளையிடுதல், பாலுறுப்புகளை தொடுமாறு தூண்டுதல், நடித்துக் காட்டுதல், சில வகையான ஆபாச வசனங்களையோ, அல்லது கூற்றுகளையோ வாசித்து தமது கருத்துரையை வழங்குமாறு கட்டாயப்படுத்தல், மிருகங்களுடன் உறவு கொள்வது போன்று பாவனை செய்து காட்டவைத்தல், உதாரணமாக நாய்களுடன் உடலுறவு கொள்வது போல் பாவனை செய்தல் பலாத்காரத்தில் தங்களது இச்சையை கனிஷ்ட மாணவர்கள் மூலம் தீர்த்தல். போன்றன இதில் அடங்குவன. மனங்களில் மாற்றம் வரும் வரை பகிடிவதையினை ஒழிக்கமுடியாது. அது போல மாணவர்களின் கல்வியை அழித்தும் உடல் ரீதியாக துன்புரித்தியும் தமது நோக்கத்தை தொடர்ந்தம் நிறைவேற்றும் எண்ணம் கொண்டவர்கள் அரசியலில் இருக்கும்வரை இதனை நிறுத்தவும் முடியாது. எனவே மாற்றத்தை சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து தொடங்குவோம்.











புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள

# வழித்தட ஒழுங்குவிதிகள்

## சாதகங்களும் பாதகங்களும்

ஒரு சிறப்ப கண்ணோட்டம்

லோரன்ஸ் செல்வநாயகம்...

நாட்டில் கடந்த சில வருடங்களாக வீதி விபத்துக்கள் வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் அதன்மூலம் வருடாந்தம் நூற்றுக்கணக்கானோர் உயிரிழப்பதுடன் ஆயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாகியும் வருகின்றனர்.

நாட்டில் 15 நிமிடங்களுக்கு ஒரு வாகன விபத்து இடம்பெறுவதாக அறிய கிடைப்பதுடன் ஒரு நாளில் ஆகக் குறைந்தது ஒருவராவது வீதி விபத்தில் மரணிப்பதையும் காணமுடிகின்றது.

காலத்திற்கு காலம் வீதி ஒழுங்கை பேணுவதற்காக பல்வேறு சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற போதும் சட்டங்களை மதித்து அதனை பின்பற்றி செயற்படுபவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர்.

இந்த நிலையில் நாளுக்குநாள் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதை தடுக்க முடியாமலும் அதனூடான உயிரிழப்புக்களை கட்டுப்படுத்த முடியாமலும் உள்ளது.

இத்தகைய பின்னணியிலேயே அரசாங்கம் நாளை 21ம் திகதி முதல் வீதி போக்குவரத்து சேவையில் வழித்தட முறைமையை மீறும் குற்றங்களுக்காக கடுமையான சட்டங்களை பிரயோகிக்கத் தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் பொலிஸ் போக்குவரத்து பிரிவினால் புதிய வீதி வழித்தட முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஏற்கனவே அந்த முறைமை நடைமுறையில் இருந்த போதும் வாகனச் சாரதிகளின் அலட்சியப்போக்கு காரணமாக அதனை முறையாக நடைமுறைப்படுத்த முடியாமல் அது கைவிடப்பட்ட நிலையிலேயே இருந்தது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் வீதி விபத்துக்கள் இடம்பெறுவதை கட்டுப்படுத்துவது தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஜனாதிபதி, பிரதமர், போக்குவரத்து அமைச்சர் ஆகியோர் தலைமையில் பல்வேறு பேச்சுவார்த்தைகள் இது தொடர்பில் இடம்பெற்றுள்ளன.

அதன் பிரதிபலனாகவே மேற்படி புதிய வழித்தட முறைமை கடந்த வாரம் அறிமுகப்படுத்தப்பட்டது.

பொலிசார் மற்றும் இராணுவத்தினரின் பங்கேற்புடன் ஒரு வார காலமாக முடிந்தளவு சாத்தியப்பாட்டுடன் இந்தப் புதிய முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இனியும் இந்த புதிய நடைமுறையை முறையாக பின்பற்றாத வாகன சாரதிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதேவேளை, நாளை முதல் வழித்தட சட்டத்தை மீறி செயற்படும் சாரதிகளுக்கு எதிராக 2000 ரூபா தண்டப்பணம் விதிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தவறினால் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர்.

மேற்படி சட்டத்தை மீறினாலும் கடந்த ஒருவாரகாலம் தண்டம் விதிக்கப்படாமல் சலுகைக்காலம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் நாளை திங்கட்கிழமை முதல் இவ்விதிகளை கடுமையாக அமுல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வார காலமாக பொது மக்களின் நலன் கருதி கொழும்பு நகரிலும் அதனை அண்டிய நகர்ப்புறங்களிலும் மிக அதிகமான பொலிசார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சாரதிகளுக்கும் பாதசாரிகளுக்கும் உரிய வழிகாட்டல்களை வழங்கி வருகின்றனர்.

குறிப்பாக பெண் பொலிசார் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியபடி வீதிகளில் காணப்பட்டனர். அதனைப் பார்த்த பாதசாரிகளும் வாகன சாரதிகளும் ஓரளவேனும் வழித்தட சட்டங்களைப் பின்பற்றியதைக் காணமுடிந்தது.

பஸ் வண்டிகளுக்காக தனியான வழித்தடம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் பின்னர் மோட்டார் சைக்கிள்களும் முச்சக்கர வண்டிகளும் குறித்த வீதிகளில் அதே வழித்தடங்களில் பயணிக்க வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

சில வீதிகளில் குறித்த வலதுபக்க வழித்தடங்கள் 2 காணப்படும் நிலையில் சில வீதிகளில் மூன்று வழித்தடங்களும் உள்ளன. எவ்வாறெனினும் இடது பக்க வழித்தடத்தில் பயணிக்குமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

புதிய முறைமை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வார காலமே ஆகியுள்ள நிலையிலும் சாரதிகள் அதற்கு பழக்கப்படாத நிலையிலும் கொழும்பிலும் அதனை அண்டிய நகரங்களிலும் பெரும்பாலான பகுதிகளிலும் அதிக வாகன நெரிசலை காணமுடிந்தது.

வாகன சாரதிகள் இவ்விதிகளுக்குப் பழக்கப் பட்ட பின் இந்த வாகன நெரிசல் குறைவடையும் என பொலிஸ் ஊடக மற்றும் தகவல் தொழில் நுட்பத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் லால் செனவிரத்ன தெரிவித்தார்.

மேற்படி வீதி ஒழுங்கை சாரதிகள் முறையாக கடைப்பிடிக்கின்றனரா என கண்டறிவதற்கு பொலிசாரும் இராணுவத்தினரும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் விமானப் படையினரின் ட்ரோனர் கமரா மூலம் அது பதிவு செய்யப்பட்டு குற்றம் இழைக்கும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மேற்படி புதிய வழித்தட முறைமைகளின்படி பஸ் வண்டிகள் பயணிக்கும் வழித்தடத்திலேயே மோட்டார் சைக்கிள்களும் முச்சக்கர வண்டிகளும் பயணிக்கும்போது பல்வேறு அசௌகரியங்களுக்கும் கால தாமதத்திற்கும் முகம் கொடுக்க நேர்ந்துள்ளதாக அதன் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது வாழ்வாதாரத்திற்காக கிடைக்கும் வருமானம் குறைந்து வருவதாக முச்சக்கர வண்டி சாரதிகள் குறை கூறுகின்றனர்.

அதேவேளை பஸ் வண்டிகளுக்கு பின்னால் முச்சக்கர வண்டிகளும் மோட்டார் சைக்கிள்களும் பயணிக்கும்போது பஸ் தரிப்பிடத்தில் பயணிகளை ஏற்றி இறக்குவதற்கு பஸ்கள் தரித்து நிற்கும் போது தாமும் அந்த பஸ்களுக்கு பின்னால் காலத்தை வீணாக்கிக் கொண்டு தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக முச்சக்கர வண்டி சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும் அத்தகைய பகுதிகளில் பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு காலதாமதத்தை தவிர்த்துக் கொள்ளும் வகையில் செயற்பட உள்ளதாகவும் போக்குவரத்து பொலிசார் தெரிவிக்கின்றனர். குறிப்பாக காலை வேளைகளில் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு ஏற்றிச்செல்லும் மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள், வாடகைக்கு முச்சக்கர வண்டியை அமர்த்தி பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பும் பெற்றோரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் புதிய முறைமை தொடர்பில் போக்குவரத்து பொலிசார் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

எனினும் சில பகுதிகளில் வாகன சாரதிகள் போக்குவரத்து பொலிசாரின் இந்த திட்டத்திற்கு ஆதரவாகவும் கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

ஆரம்பத்தில் சில அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்தாலும் காலப்போக்கில் அது வழக்கமாகி விடும். மாறாக வாகனங்கள் ஒன்றுக்கொன்று வழித்தடங்களை விட்டு முந்திச் செல்ல முற்படும் போது ஏற்படும் விபத்துக்கள் அதிகம் என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பொதுவாகவே நாட்டில் வீதி விபத்துக்கள் மூலம் அதிகம் பாதிக்கப் படுவது முச்சக்கர வண்டிச் சாரதிகளே. சில முச்சக்கர வண்டிச் சாரதிகள் பயணிகளை ஏற்றிக்கொண்டு எந்த பொறுப்புணர்வும் இன்றி தமது இலக்கை வேகமாக சென்று அடையவேண்டும் என்பதற்காக தன்னிச்சையாக, வீதி ஒழுங்குகளை பின்பற்றாது பயணிப்பது, பல விபத்துக்களுக்கு காரணமாகின்றது.

> எமது நாட்டில் 15 நிமிடங்களுக்கு ஒரு வாகன விபத்து இடம்பெறுகிறது. சில விபத்துக்கள் மட்டுமே செய்திகளாகின்றன. பெரும்பாலானவை யாரும் அறியாத விபத்துக்களாக இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

முச்சக்கர வண்டி ஒரு இலகு வாகனம் என்பதால் அது அதிகளவில் விபத்துக்குள்ளாகின்றது. எனினும் அதனை உணர்ந்து அதன் சாரதிகள் செயற்படுவது மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

வழித்தட முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் கடந்த சில தினங்களாக முச்சக்கர வண்டிகள் விபத்துக்குள்ளாகி பலர் மரணம் அடைந்துள்ளதையும் குறிப்பிட வேண்டும்.

அதேபோன்று வீதிகளில் ரொக்கட் வேகத்தில் மோட்டார் சைக்கிள்களை செலுத்தும் இளைஞர்களையும் நாம் அதிகமாக காணமுடிகின்றது. பொறுப்பில்லாத அவர்களது செயற்பாடுகளினால் தமது உயிருக்கும் பாதசாரிகளின் உயிருக்கும் ஏற்படும் இழப்பை அவர்கள் ஒருபோதும் உணர்வதில்லை.

இத்தகைய சூழ்நிலையில் மேற்படி வழித்தட முறைமை பல்வேறு அசௌகரியங்களுக்கு காரணமாக அமைந்தாலும் விபத்துக்கள் குறைந்து மனித உயிர்கள் அநியாயமாக பலியாவதை தடுக்க முடியுமானால் இந்த புதிய முறைமையின் அறிமுகம் நன்மையையே விளைவிக்கும் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அசௌகரியங்களையும் காலதாமதத்தையும் விட மனித உயிர்களின் மதிப்பு மிக உயர்வானது. அதனைக் கருத்திற் கொண்டு அனைத்து வாகன சாரதிகளும் செயற்பட்டால் விபத்து மரணங்களை தவிர்த்துக்கொள்ள முடியும்.

அதேவேளை வாகன சாரதிகளைப் போன்றே பாதசாரிகளும் வீதியில் பயணிக்கும் போது தமக்கான வீதி ஒழுங்கு விதிகளை முறையாக பின்பற்றினால் தமக்கு நேரவுள்ள விளைவுகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

ஏனெனில் சில வீதி விபத்துக்களுக்கும் உயிர்கள் பலியாவதற்கும் பாதசாரிகளின் கவனயீனமும் காரணமாகின்றது.

(19ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டு தசாப்தங்கள் பின்னோக்கிச் சென்றுள்ள சர்வதேச சுற்றுலாத் துறை




சுற்றுலா துறையின் சர்வதேச நிலைமை மோசமான பின்னடைவை சந்தித்துள்ளது. உலக சுற்றுலா அமைப்பின் புதிய அறிக்கைகளின்படி உலகம் பூராவும் மேற்கொள்ளப்பட்ட பயணங்கள் இருபது வருடங்கள் பின்னோக்கிச் சென்றுள்ளன. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் உலகில் காணப்பட்ட அமைப்பு சிக்கலான ஒன்றல்ல. இன்றுள்ளது போல் தொழில்நுட்பமும் விஞ்ஞானமும் வளர்ச்சி அடைந்திருக்கவில்லை. நாடுகளுக்கிடையில் பயணம் செய்ய பல தடைகள் காணப்பட்டன. நாடுகளுக்கிடையில் திறந்த தன்மை பற்றிய பிரச்சினை இருந்ததோடு சில நாடுகளில் அப்போதிருந்த ஏழ்மையும் பயணத்துக்கான சந்தர்ப்பத்தை மட்டுப்படுத்தியிருந்தது.

வளர்ச்சி அடைந்த நாடுகளின் மக்கள் நாட்டுக்கு நாடு பயணம் செய்யும் போது வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு புதிய வாய்ப்புகள் உருவாகியதோடு விமானப் பயணங்கள், விருந்தோம்பல், வேலைவாய்ப்புகள் மற்றும் அரச வருமானமும் அதிகரித்தது. கொவிட்-19 தொற்று காரணமாக சுற்றுலாத் துறை பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தது. சுகாதார விதிமுறைகளுக்கமைய சமூக இடைவெளி பேணப்பட்டது. தொற்று நாட்டுக்கு நாடு பரவாமல் இருக்க உலகசுகாதார அமைப்பு கடுமையான சட்டங்களை அறிமுகம் செய்தது. சர்வதேச அறிக்கைகளின்படி சுற்றுலாத்துறையில் பணியாற்றும் 120 மில்லியனுக்கு அதிகமானோரின் தொழில் அவதானத்திலுள்ளது. சிலர் முற்றாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதோடு சிலரின் வருமானம் மிகவும் குறைந்துள்ளது. விமான சேவை நிறுவனங்கள், ஹோட்டல் பணியாளர்கள், வழிகாட்டிகள் மற்றும் உல்லாசப் பயணிகளை இலக்காகக் கொண்டு உணவு பொருட்களை உற்பத்தி செய்வோர் என பலரும் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. இத்துறையின் வருமானம் 1.4 ட்ரில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டதோடு சில வேளைகளில் அது 310 பில்லியன் அமெரிக்க டொலராக குறையக்கூடும். அது பெரும் வீழ்ச்சியாகும்.

சுற்றுலாத்துறை வருமானத்தை நாட்டின் முக்கிய வருமானமாக கொண்ட நாடுகளுக்கு உல்லாசப்பயணிகளின் குறைவு பெரும் பிரச்சினையாகும். இத் துறையில் பிழைப்பை நடத்திய மில்லியன் கணக்கானோருக்கு வாழ்வதற்காக நிவாரணம் வழங்க வேண்டியுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. அது இலகுவானதல்ல. வருடத்தின் முதல் காலாண்டுப்பகுதியில் பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டதோடு ஏப்ரல், மே மாதங்களில் முற்றாக நிறுத்தப்பட்டது. அனைத்து நாடுகளும் தடையை நீக்கி பயணத்துக்கான பாதையை எப்போது திறப்பதென இன்னும் குறிப்பிடவில்லை. பயணத்துக்கான தடைகளை நீக்கிய பின்னரும் எண்ணங்கள் மாறி நம்பிக்கை உறுதிப்பட சில காலம் எடுக்கும். சுற்றுலாத் துறையில் ஈடுபட்டு வருமானம் ஈட்டுபவர்களின் தற்போதைய நிலைமை சிக்கலாகியுள்ளது.

உலக நிலைமையை விட இலங்கையின் தன்மை இன்னும் மாறுபாடானது. இஸ்லாம் அடிப்படைவாத அமைப்பின் தற்கொலை குண்டுத் தாக்குதல் நாட்டைப்பற்றிய தவறான தோற்றத்தை ஏற்படுத்தியது. அன்று தொடக்கம் இந்நாட்டு சுற்றுலாப் பிரிவு அரச சலுகையுடன் இயங்கியது என்பதை குறிப்பிட வேண்டும். உல்லாசப்பயண ஹோட்டல்களுக்கு கடன் உதவிகள் அளிக்கப்பட்டதோடு அங்கு வருபவர்களுக்கு விசேட வசதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரச வருமானம் நல்ல நிலைமையில் இல்லாத போது, சலுகை வழங்கக்கூடிய எல்லையுண்டு. தொற்று நிலைமை உலகப்பொருளாதார நிலைமை மோசமடைந்துள்ள வேளையில் சுற்றுலாத்துறையில் புனர்நிர்மானம் அவசியமாகும். தற்போதைய நிலைமைக்கு ஏற்றவாறு மாற்றங்களை உருவாக்கி மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

உள்ளூர் சுற்றுலாத்துறையில் அக்கறை செலுத்துவது அதிலிருந்து மீளவுள்ள ஒரு சந்தர்ப்பமாகும். ஹோட்டல் கட்டணங்கள், உணவுக்கான அறவீடு, போக்குவரத்து செலவு என்பவற்றை சாதாரண மக்களுக்கு ஏற்றவாறு குறைத்தால் வார இறுதியில் விடுமுறை நாட்களில் ஹோட்டல்களை உல்லாசப்பயணிகளை கவரும் இடமாக மாற்றலாம். அரசாங்கம் தலையிட்டு முடிவுகளை எடுக்கும் வரை காத்திருக்காமல் தமது கட்டமைப்பை மாற்ற சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளோர் முயன்றால் ஏதேனும் மாற்றங்கள் நிகழும். குறைந்த செலவுடனான சுற்றுலா கைத்தொழிலுடன் வெளிநாட்டு உல்லாசப்பயணிகளின் கவனத்தையும் ஈர்க்கக்கூடும். அது இந் நாட்டின் சுற்றுலாதுறைக்கு திருப்புமுனையாக அமையும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட்

### திங்கட்கிழமை பொதுமக்கள் தினம்

# அனைத்து உத்தியோகத்தர்களும் அலுவலகத்தில் இருப்பது அவசியம்

### ஜனாதிபதியின் செயலாளர் சுற்றுநிருபம்

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அனைத்து அரச நிறுவனங்களிலும் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் திங்கட்கிழமையன்று அலுவலகத்தில் இருக்க வேண்டுமென ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர விசேட சுற்றுநிருபம் ஊடாக அறிவித்துள்ளார்.

அரசாங்க நிறுவனங்களுக்கு வருகை தருகின்ற பொதுமக்கள், தொடர்புடைய உத்தியோகத்தர்களைச் சந்திப்பதற்கும், தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் இயலுமான வகையில் அனைத்து நிறுவனங்களிலும், சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் பொதுக்கள் தினமாகிய திங்கட்கிழமை தமது அலுவலகத்தில் இருக்க வேண்டும் என்பதில் அனைத்து நிறுவனத் தலைவர்களும் பொறுப்பாக இருக்க வேண்டும்.

திங்கட்கிழமையை பொதுமக்கள் தினமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளதையடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தினத்தில் அத்தியவசியமான தேவையைத் தவிர அனைத்து உத்தியோகத்தர்களும் விடுமுறை பெறுவதையும், அலுவலகத்திற்கு வெளியிலுள்ள வேறு கடமைகளைப் புரிவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் இந்த சுற்றுநிருபத்தில் கேட்கப்பட்டுள்ளது.



அக்கரைப்பற்றிலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற வேன் வேகக்கட்டுப்பாட்டை இழந்து அதாவுல்லா அரங்கிற்கு முன்னால் வீதியின் நடுவிலிருந்த மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியிருப்பதை படத்தில் காணலாம். படஉதவி எம்.ஏ. பஹ்மி

# கிணற்றுக்குள் வீழ்ந்த 12 முதலை குட்டிகளுடன் தாய் முதலையும் மீட்பு

**வவுனியா விசேட, ஓமந்தை விசேட நிருபர்கள்**

வரட்சி காரணமாக நீர்நிலைகளை தேடியலைந்த 12 முதலைக்குட்டிகளும், தாய் முதலையும் வவுனியா குருந்துபிட்டி பகுதியிலுள்ள கிணற்றில் விழுந்துள்ள நிலையில் மீட்கப்பட்டு காட்டுப் பகுதிக்குள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

இப் பகுதியிலுள்ள காணி உரிமையாளரினால் தோட்டத்திலுள்ள கிணற்றை சுத்தம் செய்வதற்காக நேற்று காலை சென்ற போது ஒரு முதலை இருப்பதை கண்டுள்ளார். பின்னர் அப்பகுதி மக்களின் உதவியுடன் முதலை மீட்கப்பட்டுள்ளது. மேலும் 12 குட்டிகளையும் கிணற்றிலிருந்து மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட 12 குட்டி முதலைகளையும் ஒரு பெரிய முதலையையும் அப்பகுதி மக்கள் பாதுகாப்பாக காட்டுப் பகுதியில் கொண்டு சென்று விடுவித்திருந்தனர்.

வரட்சியான காலநிலையால் குருந்துபிட்டிய குளத்தில் நீர் நிலைகள் வற்றி காணப்படுவதனால் அங்கிருந்து வெளியேறி நீர்நிலைகளை தேடி சென்றதனாலேயே கிணற்றுக்குள் வீழ்ந்திருப்பதாக அப் பகுதியில் வசிப்பவர்கள் தெரிவித்தனர்.

### தம்பலகமம், பத்தினிபுரம் கிராமத்தில்

# தொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் கையளிப்பு





**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகமம் பிரதேச செயலகப் பிரிவின் பத்தினிபுரம் கிராமத்தில் பனைபொருள் உற்பத்தி உபகரணங்களை வழங்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக

பிரம்புகள் பித்தளை மட்பாண்டங்கள் மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டுக்கான அமைச்சர் பிரசன்ன ரணவிர அவர்களினாலும் மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தவினால்(19) ஆரம்பித்து வைக்கப்பட்டதையும்.

பனைசார் உற்பத்திப்பொருட்களில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு தேசிய மட்டத்தில் சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இத் தையல் மெசின், அடுப்பு, பனை உற்பத்திக்கான உபகரணங்கள் பொருட்கள் வழங்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இந் நிகழ்வில் தம்பலகமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி சிறீபதி,உதவி திட்டமிடல் பணிப்பாளர் மாவட்ட உயர் அதிகாரிகள் உட்பட பிரதேச அதிகாரிகள் பிரதேச அரசியல் வாதிகள் பலரும் கலந்து கொண்டு பனை சார் உற்பத்தியாளர்களுக்கு கைத்தொழில் பொருட்களை கையளிப்பதையும் முள்ளிப்பொத்தானை சிறாஜ் நகர் இளைஞன் எம் முபீஸ் அமைச்சரின் புகைப்படத்தை வரைந்து அமைச்சரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்

## நியூயோர்க்கில்...

காயமடைந்துள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூடு மக்கள் கூடியிருந்த பகுதியொன்றில் இடம்பெற்றுள்ள நிலையில், பாதிப்பு தொடர்பில் முழுமையான தகவலை பொலிசார் இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

## நாளை வேலை...

நேற்று முன்தினம் நெரிசல் இல்லாமல் வாகனம் செலுத்த முடியுமாக இருந்ததே இதற்கு காரணமென கூறப்பட்டுள்ளது.

## யாழ். செம்மணியில்...

மீட்கப்பட்டுள்ளன. நேற்று காலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மயான வளாகத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டு,மிதிவெடி என்பன மீட்கப்பட்டன.

கடந்த வாரம் யாழ் கல்வியங்காடு பகுதியில் வன்முறைக் கும்பலைச் சேர்ந்த விக்டர் சுந்தர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆவா கும்பலைச் சேர்ந்த நிசா விக்டரை யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் நளினி சுதாகரன் முன்னிலையில் அழைக்கப்பட்டது. சந்தேகநபர், நபர் ஒருவரை வெட்டி படுகாயம் ஏற்படுத்தியதன் மூலம் அவரைக் கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

அத்தோடு அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் செம்மணி பகுதியில் கைக்குண்டு மற்றும் ஜொனி ரக மிதிவெடி என்பன மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. எனவே அவை நீதிமன்றின் உத்தரவில் மீட்கப்படவேண்டும்" என்று பொலிசார் மன்றுரைத்தனர்.

சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், பிணை விண்ணப்பத்தை முன்வைத்தனர். இருதரப்பு விண்ணப்பத்தையும் ஆராய்ந்த மன்று, சந்தேகநபரை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. சந்தேகநபரால் காண்பிக்கப்பட்ட மிதிவெடி, கைக்குண்டு என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டிருந்தன.

## அனுமதிக்காமை அநீதி...

தயாரிக்கப்பட்டது. இக் கடிதத்தில் தமிழ் தேசிய கட்சிகளை சேர்ந்த 14 பேர் ஒப்பமிட்டுள்ளனர். இதில் முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் , பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், கஜேந்திரகுமார், கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஸ் பிறேமச்சந்திரன், என்.சிறீக்காந்தா, எம். கே.சிவாஜிலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்க்களான பொ.ஐங்கரநேசன், அனந்தி சசிதரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், பேராசிரியர் சிவநாதன் மற்றும் சிற்பரன உள்ளிட்ட 14 பேர் கையொப்பம்மிட்டிருந்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மின்னஞ்சல் ஊடாகவும்,பதிவுத்தபால் ஊடாகவும் மகஜர் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துட்ன மீண்டும் 23ஆம் திகதி கட்சிகளின் தலைவர்கள் ஒன்றுகூடுவார்கள். அரசின் பதில் அல்லது பிரதிபலிப்பை அவதானித்து அடுத்த கட்ட நடவடிக்கை தீர்மானிக்கப்படும். அரசு எதிர்மறையான பதிலை வெளிப்படுத்தினால், 25 அல்லது 26ஆம் திகதி வடக்கு, கிழக்கு தழுவிய பூரண கதவடைப்பு மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## 33,000 கிலோ மஞ்சள்...

செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 33,000 கிலோ மஞ்சடன் மூன்று கொள்கலன் பாரவூர்திகளும் மற்றும் 3,000 கிலோ உளுந்துடன் 07 லொறிகளும் நேற்று முன்தினம் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டது. கொழும்பு, புளூமெண்டல் பொலிசாருக்கு கிடைத்த தகவலுக்கமைய இப் பிரதேசத்தில் வாகன தரிப்பிடமொன்றில் சுமார் 40 அடி நீளம் கொண்ட மூன்று கொள்கலன் பாரவூர்திகளில் இந்த மஞ்சள் மூடைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. சம்பவம் தொடர்பில் 10 பேர் புளூமெண்டல் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இச் சட்டவிரோத மஞ்சள் மற்றும் ஏனைய பொருட்கள் டுபாயிலிருந்து கடந்த சில தினங்களுக்கு முன்னால் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் மட்டக்குளி பிரதேசத்தின் வர்த்தகர் ஒருவரால் இப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## இராகலையில் திடீர் தீ...

எனினும் பொருட்கள் மற்றும் ஆவணங்கள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

தீ ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப்படவில்லையென்றும் மின்சார ஒழுக்கு காரணமாக இத் தீ ஏற்பட்டிருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகின்றது. ஏற்பட்ட தீ காரணம் தொடர்பாகவும், சேதவிபரங்கள் தொடர்பாகவும் இராகலை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கஜேந்திரகுமார்..

கையொப்பமிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் யாழில் இடம்பெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் போது தற்போதய அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை கண்டித்து தமிழ் தேசியத்தின்பால் நிற்கின்ற அனைத்துக் கட்சிகளின் கையெழுத்து அடங்கிய கடிதத்தை ஜனாதிபதிக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்திற்கு வருகைதந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளும், தமிழ் தேசிய பசுமை இயக்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியோர் ஜனாதிபதிக்கு வழங்கவுள்ள கடிதத்தில் கையப்பமிட சம்மதம் தெரிவித்திருந்தன.

எனினும் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கு அழைப்புவிடுக்கப்பட்ட போதும் அவர்கள் கலந்துகொள்ளவில்லை.

இந்நிலையில் நேற்று ஜனாதிபதிக்கு வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

## ஜனாதிபதிக்கு பௌத்த மத...

ஐந்து மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி தீர்மானித்தார். மகா சங்கத்தினருக்கும் ஜனாதிபதிக்குமிடையில் முதலாவது சந்திப்பு ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. அங்கு கொவிட் நோய்த் தொற்று தடுக்கும் செயற்பாடுகள் மற்றும் அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றி ஜனாதிபதி நாயக்க தேரருக்கு தெளிவுபடுத்தினார்.

ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வாரத்தில் வெள்ளிக்கிழமை பௌத்த ஆலோசனை சபையை கூட்ட விரும்புவதாக தெரிவித்த ஜனாதிபதி, அதில் கலந்துகொள்ளுமாறு மூன்று நிக்காயக்களின் மகா சங்கத்தினருக்கும் அழைப்பு விடுத்தார்.

ஆலோசனை சபையின் உறுப்பினர் மூன்று நிக்காயக்களின் தேரர்கள் “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள பல்வேறு துறைசார்ந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஆலோசனை மற்றும் உபதேசங்களை ஐந்து வாரங்களாக ஜனாதிபதிக்கு முன்வைத்தனர்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை 06 ஆவது தடவையாகவும் கூடிய பௌத்த ஆலோசனை சபையின் மூலம் இதுவரை முன்வைத்த ஆலோசனைகளை செயற்படுத்துதல் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டது.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த புராதன இடங்களை பாதுகாத்தல், குறைபாடுகளை களைந்து பிரிவெனா கல்வியின் மேம்பாட்டுக்கான செயற்பாடுகள், விகாரை காணிகளுக்கு சிக்கலற்ற பூஜா உறுதிப் பத்திரங்களை வழங்குதல், பௌத்த அறநெறிப் பாடசாலைக் கல்வி, தேசியக்கல்விக் கொள்கை, பாலர் அபிவிருத்தி, தேசிய பாதுகாப்பிற்கு முக்கியத்துவமளித்தல், போதைப் பொருள்தடுப்பு,சுற்றாடல்பாதுகாப்பு, சாசனத்தின் சிறப்பான செயற்பாட்டுக்கு வழிவகைகளை செய்தல், பௌத்த பல்கலைக்கழகங்களை கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வருதல் உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளுக்கு அரசாங்கம் தமது அவதானத்தை செலுத்தி செயற்படுத்துதல் தொடர்பாக மகா சங்கத்தினர் பாராட்டுக்களையும் ஆசிர்வாதத்தையும் தெரிவித்தனர்.

## எக்காரணத்துக்காகவும்...

மற்றும் விவசாய அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்புகளை அழைத்து அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நுகர்வோருக்கு நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை அதிகரிக்க வேண்டாமென அரசாங்கம் முடிவு செய்துள்ளது. நெல்லை பதுக்கி வைத்திருக்கும் அரிசி வர்த்தகர்கள் மற்றும் விலைகள் அதிகரிக்கும் என்ற நம்பிக்கையில் அவற்றை சந்தைக்கு வெளியிடாதவர்கள் பற்றிய தகவல்கள் எம்மிடம் ஏற்கனவே உள்ளன. எனவே அரிசியை மொத்தமாக சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்காதிருந்தால், எந்தவொரு விலையும் அதிகரிக்காமல் நுகர்வோரின் அன்றாட தேவையை பூர்த்தி செய்ய அமைச்சரவையின் ஒப்புதலுடன் வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படும் என்றார்.

## ராகிங் வெறுமனே...

இதே யாழ் பல்கலைக்கழகத்தில் 90களின் ஆரம்பத்தில் நான் கல்வி கற்க நுழைந்தபோது முற்றிலும் பகிடிவதை எதிர்ப்பாளராகவே செயற்பட்டிருந்தேன்.

சிரேஷ்ட மாணவர்களின் எந்தவொரு கட்டுப்பாட்டையும் துளியும் ஏற்றுக்கொள்ளாது சவால் விட்டு போராடி எனது பல்கலைக்கழக கல்வியைத் தொடர்ந்திருந்தேன்.

பின்னாளில் முதல் வகுப்புச் சித்தியுடன் பட்டக்கல்வியை நிறைவு செய்தபோது விரிவுரையாளர் பதவிக்கான வாய்ப்புக்கள் இருந்தபோதும், பல்கலைக்கழகத்தின் மீதும், குறிப்பாக கலைப்பீடத்தின் மீதும் இருந்த வெறுப்பு காரணமாக அதைப் புறமொதுக்கிவிட்டு 2000ஆம் ஆண்டளவில் மட்டக்களப்பு மண்ணில் ஊடகப் பணியுடன் எனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்திருந்தேன்.

அன்றிலிருந்து ஊடகவியலாளராக, சுயதொழில் முயற்சியாளனாகத் தொடர்ந்த எனது பயணத்தில் கல்வி தொழில் வழிகாட்டி ஆலோசனைச் சேவையின் அனுபவம் காரணமாகத் தேடிவந்ததே பேரவை உறுப்புரிமை பதவி. இதில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பொறுப்பு பிரிக்கப்பட்டபோத மாணவர் ஒழுக்காற்றுக்குழு பொறுப்பை நானே விரும்பி ஏற்றிருந்தேன்.

இந்தக் குழுவின் பணிகள் மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்டபோது, பகிடிவதை உள்ளிட்ட சில குற்றச்செயல்கள் புரிந்ததாக இனங்காணப்பட்ட சில மாணவர்களுக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கை பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், புதிய துணைவேந்தரின் ஆலோசனைப்படி தண்டனைக்குப் பதிலான மாற்று அணுகுமுறையை அந்த மாணவர்கள் தொடர்பில் கடைப்பிடித்துக்கொண்டிருக்கும்போதே இந்தப் புதிய பிரச்சினை எழுந்துள்ளது.

என்னைப் பொருத்தவரையில் பகிடிவதை என்பது வெறுமனே பல்கலைக்கழகத்தின் பிரச்சினை மாத்திரமன்று. அது ஒரு சமூகப் பிரச்சினை. பெற்றோருக்கு இதில் பெரும் பொறுப்புண்டு. அத்துடன் அடுத்தமுறை தாமும் செய்யவேண்டும் என்ற விருப்புடன் பகிடிவதையை ஏற்றுக்கொள்ளும் புதுமுக மாணவர்களி'ன் மனப்பாங்கும் இது தொடரக் காரணம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, கோடிக்கணக்கான ரூபாய் மக்கள் வரிப்பணத்தில் இலவச கல்வியைப் பெறும் மாணவர்கள் தமக்காகச் செலவிடப்படும் இத்தனை தொகைப் பணம் தொடர்பில் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டியதும் அவசியமாகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ரணிலிடம் 3 மணி நேர...

எம்.ஏ.சுமந்திரன் மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர்களான சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா, உள்ளிட்ட தரப்பினர் தொடர்ந்தும் வாக்குமூலம் வழங்கினர். திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க முன்வைத்த முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் வழங்கவே அவர்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகினர். இதேவேளை, குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜரானார். சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புக்கு மத்தியில் அவர் இந்த ஆணைக்குழுவில் ஆஜரானதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஜனநாயத்துக்கு பாதிப்பில்லாது...

திருத்தச் சட்டமானது பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பாக கூட்டணியின் உயர்பீடம் ஒன்றுகூடி ஆராய்ந்து அது தொடர்பான தமது நிலைப்பாட்டை அறிவிக்கும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட மூலம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடு என்னவென்று வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் சமூகத்தில் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இச் சட்டமூலத்திலுள்ள உள்ளடக்கங்கள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். எமது மலையக புத்திஜீவிகளுக்கும் கருத்துகளை முன்வைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளன.

20ஆவது திருத்தச் சட்ட மூலத்திலுள்ள சில சரத்துகள் தொடர்பில் அரசாங்கத்துக்குள்ளேயே ஒருமித்த நிலைப்பாடில்லை. ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி திருத்தப்பட்டு புதிய வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்படும் என்றார்கள்.

ஆனால், பாராளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போதே திருத்தப்படும் என தற்போது அறிவித்துள்ளனர். எனவே, எவ்வாறான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பது எமக்குத் தெரியாது. பாராளுமன்றத்தில் சட்டமூலம் முன்வைக்கப்பட்ட பின்னர் தமிழ் முற்போக்கு கூட்டணியின் உயர்பீடம்கூடி தனது நிலைப்பாட்டை அறிவிக்கும். ஜனநாயகத்துக்கும், நாட்டுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்பதே பொதுவான கருத்தாக உள்ளது. அதனையே நாமும் விரும்புகின்றோம் என்றார்.

## பள்ளிவாசல் நிர்வாகிகள்...

வேண்டுவதற்கும் வக்பு சபை தீர்மானித்துள்ளது. அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொருவருக்குமிடையிலும் ஒரு மீற்றர் இடைவெளி பேணுதல் வேண்டும். அனைத்து சந்தர்ப்பங்களிலும் முகக்கவசம் அணிதல் வேண்டும். தொழுகை விரிப்பின்றி கம்பளங்களின் (கார்ப்பட்) மீது தொழுவதற்கு அனுமதிக்கலாகாது, எல்லா சந்தர்ப்பங்களிலும் தொழுகை விரிப்பை பயன்படுத்தல் வேண்டும். நீர்த் தொட்டிகளை எப்போதும் பயன்படுத்த முடியாதவாறு மூடி வைக்கப்படல் வேண்டும். ஏனைய அனைத்து செயற்பாடுகளும் பிரதேச பொது சுகாதார பரிசோதகரின் (PHI) மேற்பார்வையின் கீழ் நடைபெற வேண்டும்.





நிந்தவூர் பிரதேச சபை உப தவிசாளர் வை எல் சுலைமாலெப்பையின் அழைப்பையேற்று கடந்த 17ஆம் திகதி நிந்தவூர் பிரதேச சபைக்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா யஹம்பத் அங்குள்ள அரச நிறுவனங்கள், பாடசாலைகள், சமூக சேவை அமைப்புகள், மீனவர்கள், விளையாட்டு கழகங்கள், குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்த்துவைக்க ஆவன செய்தார்.



கொழும்பில் உள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தூதரகத்தின் பதில் தூதுவர் ஹுமெட் அல் தமிமி, வெளியுறவு செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகேயை அவரின் அலுவலகத்தில் சந்தித்தார். இரு நாடுகளின் பரஸ்பர நலனுக்காக இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவதில் உறுதிப்பாட்டை இருவரும் மீண்டும் வலியுறுத்தினர்.

படம்: ருசெயிக் பாருக்

## இலங்கை சமாதான நீதவான்



மாளிகைகாடு கிழக்கைச் சேர்ந்த அஹமது லெவ்வை நூர்தீன் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சாய்ந்தமரு பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ சேவை அலுவலகராக பணியாற்றி வரும் இவர் சமூக சேவைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர்.

சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தனது ஆரம்பக் கல்வியை சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை கல்முனை ஸாஹிரக் கல்லூரியிலும் கற்றுள்ளார்.

இவர் சாய்ந்தமருதைச் சேர்ந்த அஹமதுலெவ்வை சபுறா உம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரராவார்.




# இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில்துறைக்கு வரிச்சலுகைகள்

## வரலாற்று ரீதியான தீர்மானமெனப் பாராட்டு

*பேருவளை விஷேட நிருபர்*

இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில்துறைக்கு சில வரிச்சலுகைகளை வழங்கி இத்தொழிலைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் எடுத்துள்ள தீர்மானமானது ஒரு வரலாற்று ரீதியான தீர்மானம் என்று சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் சங்க செயலாளர் லியாகத் ரஸ்வி, G.G, A.J.P (GIA) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் அந்த அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது

1971ம்ஆண்டு முதல் இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில்துறைக்கு சில வரிச் சலுகைகளை அடுத்தடுத்த அரசாங்கங்களால் வழங்கப்பட்டு வந்தது, துரதிர்ஷ்டவசமாக தொழில்துறையின் இடைவிடாத எதிர்ப்புகள் இருந்தபோதிலும் இது 2017 ஆம் ஆண்டில் சர்வதேச நன்கொடையாளர்களின் ஆதரவின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய உள்நாட்டு வருமான வரிக் கொள்கையில் விவேகமின்றி நீக்கப்பட்டது. இது நாட்டிற்கு தீங்கையே விளைவிக்கும்.




இந்த முக்கியமான சலுகைகளை மீண்டும் நிலைநிறுத்துவதற்கான உத்தரவை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது, இது ஒரு வரலாற்று ரீதியான தீர்மானமாகும். இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிலுக்கு பல சலுகைகள் வழங்கப்படுவதால் இது இலங்கைக்கு அதிக அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுக்கக்கூடிய தொழில்துறை என்ற நிலையை மீண்டும் பெறும்.

போட்டியிடும் நாடுகளான தாய்லாந்து மற்றும் ஹாங்காங் முறையே இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில்துறையில் இருந்து முறையே 15 பில்லியன் அமெரிக்க டாலர் மற்றும் 25 பில்லியன் அமெரிக்க டாலர் ஏற்றுமதி வருவாயைப் பெறுகின்றன. இரண்டும் இரத்தினக்கற்களை உற்பத்தி செய்யாத நாடுகளாக இருந்தும் அவை இந்த இலக்குகளை அடைகின்றன. இந்த நாடுகளில் எந்தவொரு தொழிற்துறையின் (15 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் 'இலங்கைக்குப் பெயர் கொடுத்த கலைஞன்..! 'கரவேக சுரஞான கேசரி

## யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தி..!



புங்குடுதீவில் எங்கள் அயலிலுள்ள கந்தசுவாமி கோவில் பூங்காவனத் திருவிழா விடியும்வரை நடைபெற்றதை எமது பள்ளிப் பருவத்தில் பார்த்தது இன்றும் ஞாபகம்..!

இந்தப் பூங்காவனத் திருவிழாவில் தவில் மேதை தட்சணாமூர்த்தியின் தவில் கச்சேரி இடம்பெறுவது வழமை.

அத்துடன் கைதடி பழனி நாச்சிமார்கோவிலடி கணேசன் இணுவில் என். ஆர். சின்னரராசா ஆகியோருட்படப் பலரின் தவில் கச்சேரியும் அளவெட்டி என். கே. பத்மநாதன் இணுவில் என். ஆர். கோவிந்தசாமி சாவகச்சேரி பஞ்சாபிகேசன் ஆகியோருட்பட்ப் பலரின் நாதசுவரக் கச்சேரியும் தவறாது இடம்பெறும்.

இவர்கள் யாபேரும் முதல் இடம்பெறும் திருவிழாக்களுக்குப் பணம்பெற்று வாசித்தாலும் பூங்காவனத் திருவிழாவுக்கு இலவசமாகவே வாசிப்பதாக எனது தந்தையார் அன்று கூறியது ஞாபகம்.!

காலை ஏழு மணியளவில் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் (பிரதான வீதியில்) இவர்களின் 'சமா' போட்டியிட்டு நடைபெறும்.

அவ்வேளை அவ்வீதியால் இறுப்பிட்டியிலிருந்து யாழ் நோக்கி வரும் இ. போ. ச. வண்டி பல நிமிடங்கள் தரித்துநிற்கவேண்டியிருக்கும். கந்தசுவாமி கோவிலடியில் வேலணை மத்திய கல்லூரிக்குச் செல்வதற்காக இ. போ. ச. வண்டிக்குக் காத்திருக்கும் நாங்கள் இந்த அற்புதக் கலைஞர்களின் 'சமா'வையும் கண்குளிரப் பார்த்து இரசித்ததுண்டு.

**வீ.ரீ. இளங்கோவன்**

வாழ்வை மீண்டும் வளமாக்குங்கள் www.neptunehealth.lk

**உள்நோயாளர் மருத்துவ சேவைகள்**



மனநல ஆரோக்கிய சிகிச்சைகள் உட்பட மன அழுத்தம், போதைபொருள் பாவனைக்கு அடிமையாதல், Bipolar Disorder, உக்கிரமான நடத்தையுடைய நோயாளிகள்

30ற்கும் மேற்பட்ட **முன்னணி மருத்துவர்களால**மும்மொழியிலும் சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

NO. 186, PARK ROAD, Narahenpita.
Tel: 0720 239 747 / 0720 222 555 / 0112 590200
NEPTUNE HEALTH BE KIND TO YOURSELF

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI
BUDGET ADZ
It suits your budget

**Honda Vezel DAA-RU3 - 2015**



CAO – 8XXX / Registered in - Feb 2016 / Fuel system - Hybrid / Petrol / Engine Capacity - 1490 cc / Mileage - 143619kms / First owner / Color - Wine Red / Auto / Full option / Push Start / Multi Function / DVD / Reverse Camera / Maintained at Sterling / Good Condition

077 7 230 063 / 076 77 38 364

ADZ | has

**கண்டி பேராதனை**

பேராதனை ஹனிபா ஒழுங்கையில் 32 பேர்ச் காணி விற்பனைக்குண்டு. நுழைவு பாதையின் அகலம் 15 அடி. கொழும்பு-கண்டி பிரதான வீதிக்கு 200 மீற்றர். வசிப்பிடத்திற்கு அல்லது வியாபாரத்திற்கு மிகவும் உகந்தது. ஏதாவது ஐயங்கள் இருப்பின், தயவு செய்து என்னுடன் தொடர்பு கொள்வதற்கு தயங்க வேண்டாம்.

071 113 34 72

ADZ | has



தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329
சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 04ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 02

# இரட்டைப் பிரஜாவுரிமை எதிர்ப்பு சுயநல அரசியலின் வெளிப்பாடு!

இலங்கை அரசியல் அரங்கில் அண்மைக்காலமாக இருபதாவது திருத்தச் சட்டம் தொடர்பில் கூடுதலாகப் பேசப்படுகிறது. அதனோடு இரட்டைப் பிரஜாவுரிமை பற்றிய விடயமும் இணைந்துகொள்வதை அடிக்கடி காண முடிகிறது.

இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்கள் எதிர்காலத்தில் நாடாளுமன்றம் செல்வதற்கு இருபதாவது திருத்தத்தில் வழி ஏற்படுத்தப் படவுள்ளதாக அரசியல்வாதிகள் எதிரும் புதிருமாகத் தங்கள் தரப்பில் கருத்துகளைத் தெரிவித்து வருகிறார்கள். அதிலும் கடந்த 2015இல் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகித்தவர்கள், தற்போது வேறு அணியில் இருந்தாலும், இரட்டைப் பிரஜாவுரிமைக் கூடுதலாக வழங்கிய அரசாங்கத்தின் பங்காளர்கள் என்பதை மறுக்க முடியாது.

இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகிப்பதை தடுக்கும் வகையில் 19ஆவது திருத்தத்தில் காணப்படும் கட்டுப்பாடுகளே 20ஆவது திருத்தத்தில் நீக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் இலங்கையில் வாக்காளராகப் பதிய முடியும். அதற்குச் சட்டத்தில் இடமுண்டு. ஆனால், அவர்களால் இங்கு அரசியலில் ஈடுபட முடியாது என்று தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார். இலங்கை பிரஜையாக இல்லாத எவரும் வாக்காளாராகப் பதியமுடியாது எனவும் குறிப்பிட்டிருந்தார். இதற்குக் காரணம் பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தில் இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் பற்றிய வியாக்கியானமாகும். அதேவேளை, இரட்டைப் பிரஜாவுரிமையோ இலங்கைப் பிரஜாவுரிமையோ அல்லாத ஒருவரை நாட்டின் முக்கிய நிறுவனத்தின் தலைமைப் பதவிக்கு நியமித்ததும் நல்லாட்சி அரசாங்கமே. சிங்கப்பூர் பிரஜாவுரிமையை மாத்திரம் கொண்டிருந்த அர்ஜுன் மகேந்திரனை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமித்ததன் காரணமாகவே, பிணைமுறி மோசடி தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாமல் இன்னமும் நீதித்துறை திணறும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

எவ்வாறாயினும், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலேயே கூடுதலானோருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது என்றால் மிகையில்லை. 2016 ஆண்டின் இறுதிக்குள் 20ஆயிரம் பேருக்கு இரட்டை பிரஜாவுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதாவது, 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08ஆம் திகதி முதல் இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குவதை அப்போதைய அரசு துரிதப்படுத்தியிருந்தது.

மிகவும் நேர்மையான முறையில் இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்படுவதாகவும் அப்போதைய அரசாங்கம் தெரிவித்திருந்தது.

வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்ற இலங்கையர்கள் இயல்பாகவே தமது இலங்கை பிரஜாவுரிமையை இழந்து விடுகின்றனர். எனவே, இவர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதன் மூலம் இலங்கைக்கான பிரஜாவுரிமையினை பெற முடியுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் இலங்கையில், இடம்பெற்ற யுத்தம் காரணமாக , கல்வித் தகைமை மற்றும் தொழில்துறையில் தேர்ச்சி பெற்ற பலர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவ்வாறு வெளியேறியவர்களினது, அறிவு, அனுபவம் மற்றும் பங்களிப்பு நாட்டிற்கு அவசியமாகின்றது. எனவேதான், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் இரட்டை பிரஜாவுரிமை வழங்கலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டத்தின் 19, 20 மற்றும் 21 ஆம் பிரிவுகளின் கீழ், இலங்கை பிரஜாவுரிமையை/ குடியுரிமையை இழந்த ஒருவருக்கு அல்லது இலங்கைப் பிரஜாவுரிமையை/ குடியுரிமையை இழக்க அண்மித்திருக்கும் ஒருவருக்கு மட்டுமே இரட்டைப் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பிக்க முடியும் என்கிறது குடியுரிமைச் சட்டம்.

குடியுரிமைச் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவின் கீழான ஏற்பாடுகளின் கீழ் பிறிதொரு நாட்டின் குடியுரிமையை பெற்றுக் கொண்டதன் பேரில், இலங்கைக் குடியுரிமையை இழந்த ஒருவருக்கு, அல்லது குடியுரிமைச் சட்டத்தின் 19(3) ஆம் பிரிவின் கீழான ஏற்பாடுகளின் கீழ் பிறிதொரு நாட்டின் குடியுரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவைப்பாட்டின் பேரில், இலங்கைக் குடியுரிமையை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்குத் தேவையான ஒருவருக்கு மட்டும் இரட்டைக் குடியுரிமை வழங்கக் கோரி விண்ணப்பிக்க முடியும் என்றும் குடியுரிமைச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

வெளிநாட்டிற்குச் சென்று கல்வித் தகைமையை வளர்த்துக்கொண்ட ஓர் இலங்கையர் அந்த நாட்டின் குடியுரிமையைப் பெற்றுக்கொண்டு அரசியலிலும் வேறு வேறு துறைகளிலும் கோலோச்ச முடிகிறது. அவர்கள் அமெரிக்கா, பிரித்தானியா, கனடா உள்ளிட்ட நாடுகளின் பாராளுமன்றத்திலும் உள்ளூராட்சி மன்றங்களிலும் உறுப்பினர்களாக முடிகிறது. அதேபோன்று வெளிநாட்டினர் ஒருவர் இலங்கையில் எந்தப் பணியிலும் ஈடுபட முடியாது என்றாலும், சொந்த நாட்டின் குடிமகன் ஒருவர் வெளிநாட்டுக் குடியுரிமையையும் இலங்கைக் குடியுரிமையையும் பெற்றுக்கொண்டிருந்தாலும் அரசியல் ஈடுபட முடியாது என்று சட்டத்தில் தடை விதிக்கப்படுவது எந்த வகையில் நியாயம் என்று தெரியவில்லை.

இருபதாவது திருத்தமானாலும்சரி, புதிய அரசியலமைப்பு என்றாலும் சரி, இந்த விடயங்களையும் ஆழமாகச் சிந்தித்து அதற்கேற்ற வகையில் சட்டத்தை வகுத்தால் நாட்டின் எதிர்காலம் சுபீட்சமாக அமைவதற்கு வழிகோலும்!

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# 20 ஒரு வரலாற்று வாசிப்பு

**ஒரு தடவை விக்ரர் ஐவனுடன் பேசிக் கொண்டிருந்தபோது ஐவன் சொன்னார், "இலங்கை மக்கள் எப்போதும் மாற்றத்தை விரும்புகின்றவர்கள். அதற்காக தங்களை அர்ப்பணித்துச் செயற்படுகின்றவர்கள்" என.**



இதற்கு அவர் சில உதாரணங்களையும் சொன்னார். "1971 இல் ஜே.வி.பியின் போராட்டம் என்பது மாற்றத்துக்கானது. அதைப்போல 1988, 89 இல் மேற்கொள்ளப்பட்ட ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சியும் மாற்றத்துக்கான ஒரு முயற்சியே. இவற்றில் விமர்சனங்கள் இருந்தாலும் இந்தத் தூண்டலை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

தமிழர்களும் தங்களுடைய தளத்தில் மாற்றங்களுக்காக முயற்சித்திருக்கிறார்கள். ஒன்று இலங்கை அரசின் போக்கிற்கு மாற்றாக. இரண்டாவது தமிழ் அரசியற் தலைமைத்துவத்துக்கும் அதன் போக்குக்கும் மாற்றாக.

இதைப்போல 1994 இல் யு.என்.பியின் பதினேழு ஆண்டுகால அதிகாரத்துக்கு எதிராக திருமதி சந்திரிகா குமாரதுங்கவைத் தலைமையாக ஏற்றுக் கொண்டு மாற்றமொன்றுக்காக வாக்களித்தனர் மக்கள். இன்னொரு மாற்றத்துக்காக 2015 இல் நல்லாட்சிக்கான அரசாங்கத்துக்கு வாக்களித்தார்கள். இதில் பிந்திய இரண்டும் முக்கியமானவை. ஏனென்றால் இவை இரண்டும் ஆயுத முனையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அல்ல. ஜனநாயக ரீதியிலானவை. அதிலும் இந்த நாட்டிலுள்ள இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். நடந்த தவறுக்குப் பரிகாரம் காண வேண்டும் என்ற அடிப்படையில் வெளிப்படையாகவே இதைச் சொல்லி மக்களிடம் வாக்குக் கேட்கப்பட்டது. மக்களும் இதற்கு தங்களுடைய சம்மதத்தை வழங்கினார்கள். 1994 இல் சந்திரிகா குமாரதுங்கவுக்கு 68 வீதமான மக்களின் ஆதரவு கிடைத்தது. நல்லாட்சி அரசாங்கத்துக்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் அனைத்தும் ஒன்றாக ஆதரவை வழங்கியிருந்தார்கள்" என.

ஐவனின் இந்தக் கூற்று மறுக்க முடியாதது. இதில் நிறைந்திருக்கும் உண்மையை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்று இதைக் குறித்து ஆழமான வாசிப்புச்செய்யப்படுவது அவசியம். அதுவொரு கால நிபந்தனையாகும். ஏனெனில் ஒவ்வொரு சமூகங்களுக்கிடையிலும் ஒவ்வொரு சமூகத்தினரிடையேயும் இப்பொழுது விளைந்து போயிருக்கும் அரசியல் தப்பபிப்பிராயங்களுக்கு இவற்றினுள்ளே செறிந்து கிடக்கின்ற உண்மைகள் பல விடயங்களைப் புரிந்து கொள்ள வைக்கும்.

மாற்றத்துக்கான மக்களுடைய முயற்சிகளும் ஆதரவும் சிதைக்கப்பட்டது என்பது துயரத்துக்குரியது மட்டுமல்ல, கண்டனத்துக்கும் உரியது. ஆயுதப்போராட்டங்களை அரசு ஒடுக்கியது. அரச இயந்திரம் அதனுடைய இயல்பில் அதையே செய்யும். அதையே செய்துமிருக்கிறது. இதில் இன வேறுபாடு என்று எதுவும் இல்லை. 1971 இலும் 1989 இலும் எப்படி ஜே.வி.பியை அரசாங்கம் ஒடுக்கியதோ அதைப்போலவே தமிழ் இயக்கங்களையும் (புலிகளையும்) அரசாங்கம் ஒடுக்கியது. இன்னும் இதை உன்னித்துச் சொன்னால், 1971 இல் ஜே.வி.பியை ஒடுக்கியது சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம். 1989 இல் ஒடுக்கியது, ஐ.தே.க அரசாங்கம். 1971 இல் சுதந்திரக் கட்சி அரசாங்கத்துக்கு இந்தியா வெளிப்படையாகவே அனுசரணை வழங்கியது. 1989 இல் இந்தியா அமைதியாக இருந்தது. அல்லது மறைமுகமாக ஆதரவளித்தது எனலாம்.

இதன்போதெல்லாம் மக்களே அழிவுகளையும் நெருக்கடிகளையும் சந்தித்தனர். இருந்தாலும் அவர்கள் மாற்றத்தைக் குறித்துச் சிந்திப்பதை தவிர்க்கவில்லை. தங்களை மாற்றத்தின் திசையை நோக்கியே அடையாளப்படுத்த விரும்புகிறார்கள். ஆகவே மாற்றத்துக்கு மக்கள் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்த மாற்றத்துக்குத் தலைமை ஏற்ற சக்திகள்தான் அரசியல் தவறுகளை இழைத்திருக்கின்றன. ஜே.வி.பியும் தவறிழைத்திருக்கிறது. இப்போது ஜனநாயக அரசியல் வழிமுறைக்கு வந்த பிறகும் கூட ஜே.வி.பி இன்னும் சரியான பாதையைக் கண்டறிய முடியாமல் தடுமாறிக் கொண்டேயிருக்கிறது. மூன்றாவது சக்தி என்ற கருதப்பட்ட ஜே.வி.பி இன்று அதிலிருந்து பின்னடைந்துள்ளது இதற்கு உதாரணம். முற்போக்கு நிறத்தைச் சூடிக் கொண்டிருக்கும் ஜே.வி.பி தமிழ், முஸ்லிம் சமூகங்களை வென்றெடுக்கவும் இல்லை. நெருங்கிச் செல்லவும் இல்லை. சிங்களச் சமூகத்திலும் தன்னை வளர்த்துக் கொள்ள முடியாமலிருக்கிறது. இதைக்குறித்தெல்லாம் இன்னும் அந்தக் கட்சிக்குள் சரியான மதிப்பீடுகளும் உணர்தல்களும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இதுவொரு பெருந்துயரம்.

ஜே.வி.பி சரியான முறையில் நல்லதொரு பாதையை வகுத்துக்கொண்டு பயணித்திருந்தால் இன்றைய நெருக்கடிகள் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. இலங்கைச் சமூகங்களும் வேறான நிலையிலிருந்திருக்கும். நாடும் வேறுவிதமான வளர்ச்சிப் பாதையில் சென்றிருக்கும்.

தமிழ்த் தரப்பில் மாற்றத்துக்காக முயற்சித்த விடுதலை இயக்கங்கள் தங்களுக்குள் உக்கிச் சிதைந்ததே வரலாறு. புலிகள் அரசாங்கத்தினால் தோற்கடிக்கப்பட்டதாக கருதப்பட்டாலும் அவர்களுடைய தோல்விக்கும் உட்சிதைவுக் காரணங்கள் இருந்தன. ஒட்டுமொத்தத்தில் தமிழ்த்தரப்பு முஸ்லிம்களிமிருந்தும் தனிமைப்பட்டு, தனக் குள்ளும் தெளிவுகளும் ஒருங்கிணைப்பும் இல்லாமல் சிதைந்து தடுமாறிக் கொண்டிருக்கிறது. இன்று அதற்குப் பயணப் பாதையும் இல்லை. சரியான பயணமும் இல்லை.

இப்படித்தான் சந்திரிகா குமாரதுங்கவுக்கு வழங்கப்பட்ட ஆணையும் பிறகு ரணில் – மைத்திரி பங்காளர்களுக்காக வழங்கப்பட்ட நல்லாட்சிக்கான ஆணையும் மக்களுடைய நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் மாறாகச் சிதைக்கப்பட்டன. இதற்கமைவான புறச் சூழல் இல்லாதிருந்ததால்தான் சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியினால் விரும்பியதைச் செய்யமுடியாமல் போனது. நல்லாட்சியின்போதும் இழுபறிகளும் உட்சரிவுகளும் ஏற்பட்டதால் திட்டமிட்ட எதையும் செய்ய முடியவில்லை என்று யாரும் சாட்டுப்போக்குகளைச் சொல்லக் கூடும்.

அரசியல் அர்த்தத்தில் இது ஏற்புடைய நியாயங்கள் இல்லை. அரசியல் என்பது நெருக்கடிகளும் சவால்களும் நிறைந்த கடினமா வழிப்பயணமே. அதன் வழிநெடுகத் தண்ணீப்பந்தலும் மலர்சொரிவுகளும் செங்கம்பள விரும்புமாக இருக்காது. எப்போதும் எதிர்நிலைச் சக்திகளின் நெருக்கடிகள் இருந்து கொண்டேயிருக்கும். அதுவும் இலங்கை போன்ற தென்னாசியப் பிராந்திய நாடுகளில் இது இன்னும் உச்சம். பொதுநன்மையைக் குறித்துச் சிந்திக்கும் அரசியல் நாகரீகமும் மாண்பும் மனப்பாங்கும் இங்கே கிடையாது. இங்கே உள்ளதெல்லாம் கட்சி நலன், தனிநலன் முதன்மைப்பாடுகளே. இதற்கமைய மாறி மாறி கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பிரயோகிப்பார்கள். இதனால்தான் முதலில் சொல்வதற்கும் பின்னர் எடுக்கும் நிலைப்பாட்டுக்குமிடையில் முரண்பாடுகளும் வேறுபாடுகளும் எழுகின்றன.

ஆகவே கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் விரைந்து வேலை செய்வதே இதற்கு ஒரே வழி. அதற்குரிய திடசித்தம் (உறுதிப்பாடு) தலைவர்களுக்கிருக்க வேண்டும். தங்களுடைய ஆளுமையினாலும் சிந்தனையினாலும் அரசியல் உறுதிப்பாட்டினாலும் மனப்பாங்கினாலும் இதைச் சாதிக்க முடியும். வரலாறு முழுவதும் இப்படித்தான் தம்முன்னிருந்த வரலாற்று நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் தலைவர்கள் தீர்த்து வைத்திருக்கின்றனர். தீர்வு கண்டிருக்கின்றனர். இதன்மூலம் பேராளுமைகளாக வரலாற்றிலும் உலகப்பரப்பிலும் மேலெழுந்திருக்கிறார்கள். இலங்கையின் அத்தனை தலைவர்களும் தோற்றுப்போனவர்களே. அது ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்த தலைவர்களாக இருக்கலாம். ஜனநாயக அரசியல் வழிமுறைத்தலைவர்களாக இருக்கலாம். எல்லோருமே இதற்குள் அடக்கம். ஆயுதப்போராட்டத்தலைவர்கள் தோற்றது மட்டுமல்ல, தங்கள் உயிர்களையும் இழக்க வேண்டியதாயிற்று.

அரசியல் தலைவர்கள் மதிப்பிழந்து போய் தெருவில் நிற்கிறார்கள். இன்று ரணில் விக்கிரமசிங்கவின் நிலையைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஐம்பது ஆண்டுகால அரசியல் அனுபவத்தையும் அரசியல் செல்வாக்கையும் கொண்டிருந்த ரணில், கட்சியையும் காப்பாற்ற முடியாமல், தன்னுடைய அரசியல் ஸ்தானத்தையும் தீர்மானிக்க முடியாத நிலைக்குள்ளாகியுள்ளார். மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா குமாரதுங்க போன்றோரும் ஏறக்குறைய மதிப்பிழந்த முன்னாள் ஜனாதிபதிகளாகவே உள்ளனர்.

இதற்கெல்லாம் காரணம், மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றத் தவறியதே. மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பற்கு முடியாமல் போனதே. மக்களுக்கு விரோதமான அரசியலைப் பின்னர் முன்னெடுத்தமையே. நாட்டின் தேசிய விவகாரங்களான இனப்பிரச்சினை, பொருளாதாரச் சிக்கல்கள், பண்பாட்டு நெருக்கடிகள் போன்றவற்றுக்கான தீர்வைக் காணாமல் விட்டதே.

ஆகவேதான் சனங்கள் இவர்களைப் புறக்கணிக்க வேண்டியதாயிற்று. அல்லது தோற்கடித்தனர். இதுதான் தமிழ்ப்பரப்பிலும் நடந்திருக்கிறது. முன்னர் தமிழரசுக் கட்சியும் பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்ச்சமூகத்தினால் நிராகரிப்புக்குள்ளாகியதும் இப்படியே. இப்பொழுது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதும் இந்த அடிப்படையிலேயே. இறுதியாகக் கடந்த ஆட்சியின்போது மக்கள் அரசியலமைப்பில் 18 க்குப் பதிலாக 19 ஐ விரும்பினார்கள். அல்லது அதற்கு ஆதரவளித்தனர். ஆனால், 19 ஆட்சித்தளம்பலைக் கொடுத்ததால் (மைத்திரி – ரணில் இறுபறி அல்லது ஜனாதிபதி – பிரதமர் அல்லது ஜனாதிபதி – பாராளுமன்றம் என்ற அதிகாரப் போட்டி) இதற்குப் பதிலாக ஒரு ஸ்திரமான ஆட்சி வேணும். அதற்கமைவான அரசியலமைப்பு வேண்டும் என்று வாக்களித்திருக்கிறார்கள்.

மக்கள் எப்போதையும்போல இன்னொரு மாற்றத்துக்காக ஆதரவளித்திருக்கிறார்கள். அந்த எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார்கள். ஆனால், இதை எப்படி இந்த அரசாங்கம் அல்லது இந்த ஆட்சித்தரப்பினர் காப்பாற்றவுள்ளனர் என்பதே இன்றுள்ள கேள்வியும் எதிர்பார்ப்புமாகும்.

இந்த வாரங்களில் கொண்டு வரப்படவிருந்த 20 வது திருத்தம் தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதில் பலவிதமான கோணங்களும் பார்வைகளும் முன்வைக்கப்படுகின்றன. ஆளும் தரப்புக்குள்ளும் இதைப்பற்றிய விவாதங்கள் நடந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. வெளியில் 20 க்கு எதிப்புக்காட்டப்படுகிறது.

எதிர்ப்போ, ஆதரவோ எதுவும் மக்களுக்கு வெளியே என்றால் அது பயனற்றுப் போகும். வரலாற்றில் இன்னொரு தவறாகவே போய் முடியும். இதுதான் வரலாற்றின் வாசிப்பாகும்.

கருணாகரன்...

# அரசுக்கு வக்காளத்து வாங்க நான் பதவிக்கு வரவில்லை

எஸ்.நிதர்ஷன்


அங்கஜன் இராமநாதன் எம்.பி

**தமிழ் மக்களுக்கு எதிராக அநீதி இழைக்கப்படுமிடத்து நிச்சயமாக அரசாங்கத்திற்கு அதனை எடுத்துச் செல்வது தன்னுடைய முயற்சியாக இருக்கும் என்றும் அரசாங்கத்திற்கு வக்காளத்து வாங்குவதற்கு தான் பதவிக்கு வரவில்லை என்றும் சொல்கிறார் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன். தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய நேர்காணலில் தன்னுடைய மக்களின் பிரதிநிதியாகத்தான் தான் அரசாங்கத்தில் இருக்கிறேன் என்கிறார். நேர்காணலின் முழு விபரம் வருமாறு...**

***கேள்வி : சுதந்திரக் கட்சியினூடாக யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு நீங்கள் வெற்றி பெற்றுள்ளதை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?***

**பதில் :** பாராளுமன்றத் தேர்தல் வரலாற்றிலும் மாகாண சபை தேர்தல் வரலாற்றிலும் சுதந்திரக் கட்சியினூடாக யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு ஒரே ஒருவராக நான் தான் வெற்றி பெற்று வந்திருக்கிறேன். இது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுடைய வெற்றி என்று நான் சொல்ல வில்லை.

எந்தக் கட்சியில் யார் வந்தாலும் நல்லது செய்தால், உண்மையாக இருந்தால் நேர்மையாகச் செயற்பட்டால், மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றதற்கான அங்கீகாரமாகத் தான் நான் இதனைப் பார்க்கின்றேன். அந்த அடிப்படையில் மக்களுக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் இருந்து அவர்களுக்காகச் செயற்பட்டதால் இது சாத்திமானதென நான் நம்புகின்றேன்.

தேசியக் கட்சியொன்றுக்கு இவ்வாறு வரவேற்பு இங்கு கிடைக்குமென்று யாருமே எதிர்பார்க்கவில்லை. ஆனால் யாராக இருந்தாலும் மக்களுடன் இருந்தால் அவர்களுக்கு கிடைக்கும். அந்த அங்கீகாரம் இத் தேர்தலின் ஊடாக எனக்கு கிடைத்துள்ளது.

***கேள்வி : இந்த வெற்றியின் பின்னராக நீங்கள் செய்யப் போவது என்ன?***

**பதில் :** என்னுடைய வெற்றி என்று சொல்வதனை விட எனக்கு கிடைத்த ஆணை அல்லது பொறுப்பு என்று தான் கருதுகின்றேன். அதிலும் மக்கள் வழங்கிய வழமைக்கு மாறான ஆணையாகவே இதனை நான் பார்க்கிறேன். அதாவது இதுவரை காலமும் தமிழ்த் தேசியம் சார்ந்த ஆணைகள் தான் அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த முறை அதிகூடிய விருப்பு வாக்குகளை எனக்கு வழங்கியிருக்கின்றனர். அதனை பார்க்கின்ற போது அபிவிருத்திக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் தங்களுடைய வாழ்க்கையை மாற்றியமைப்பதற்காகவும் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் இழந்த தகுதிகளை மீளப் பெறுவதற்காகவும் கொடுக்கப்பட்ட ஆணையாகவே இதனை நான் பார்க்கிறேன்.

அந்த அடிப்படையில் மக்களுக்கு மீளவும் ஒரு முன்னேற்றத்தைக் கொடுப்பதற்கு யாழ் மாவட்டத்தைக் கட்டியெழுப்புவதற்கு, வீழச்சியடைந்த சகல துறைகளையும் எழுப்புவதற்காக என்னால் முடிந்த முயற்சிகளையும் சகல துறைசார் பிரச்சினைகளுக்கான தீர்வையும் பெற்று பொருளாதார முன்னேற்றம் வேலைவாய்ப்பு சுய தொழில் ஊக்குவிப்பு என அனைத்தையும் பெற்றுக் கொடுத்து எமது மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை அடையாளப்படுத்தி அதில் என்னால் முடிந்தளவு வருகின்ற ஐந்து வருடத்தில் செய்யக் கூடியதைச் செய்து பொருளாதார ரீதியாக பலம் வாய்ந்த மக்களாக எமது மக்களை மாற்ற வேண்டும்.

அதற்காக ஐந்த வருடத்தில் எல்லாவற்றையும் முடிக்கலாம் மாற்றலாம் என்று சொல்லவில்லை. இயலுமானதை செய்யக் கூடியதை, மாற்றக் கூடியதை செய்வோம் என்று தான் சொல்கிறேன். இதனைக் குறிப்பிட்டுச் சொல்வதானால் என்கனவு நினைவாக்கும் வரையில் என்னுடைய இந்தப் பயணம் தொடரும்.

***கேள்வி : அபிவிருத்திக் குழுவின் தலைவராக உங்களுடைய செயற்பாடுகள் எவ்வாறு உள்ளது?***

**பதில் :** மத்திய அரசினாலும் மாகாண சபையினாலும் அபிவிருத்திகளை ஒருங்கிணைத்து பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். கடந்த காலங்களில் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டங்கள் ஏராளம் நடந்தது. ஆனால் அவை அரசியல் பேசும் மேடைகளாகவே இதுவரை காலமும் அமைந்தன.

அந்த நிலைமை மாற்றப்பட்டு மக்களின் தேவைகள் பிரச்சினைகளை அறிந்து அதனைத் தீர்த்து வழங்கும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். குறிப்பாக மாகாணத்திற்கு அல்லது மாவட்டத்திற்கு என்ன தேவையோ அதனை மத்தியிலிருந்து கொண்டு வருகின்ற வகையில் செயற்பாடுகள் அமையும். மத்திக்கும் மாகாணத்திற்கும் மாவட்டத்திற்குமென ஒரு இணைப்பு பாலமாக நாங்கள் செயற்படுவோம். அதனூடாக அபிவிருத்திகளை முன்கொண்டு செல்லக் கூடியதாக இருக்கும்.

***கேள்வி : யாழ். அபிவிருத்தி தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் உங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் நீங்கள் அதிகார வரம்பை மீறி செயற்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றனவே?***

**பதில் :** அவையனைத்தும் கட்டுக்கதைகள். இந்தக் கட்டுக்கதைகள் எல்லாம் ஊடகங்களால் உருவாக்கப்பட்ட கதைகளாகத் தான் இருக்கின்றன. குறிப்பாக நானும் அமைச்சரும் எங்காவது தர்க்கித்ததையோ அல்லது முரண்பட்டதையோ கண்டிருக்கிறார்களா.

இவ்வாறு ஏதுமே இல்லாமல் ஊடகங்கள் தான் முரண்பாடுகள் பற்றி கட்டுக்கதைகளை பேசி வருகின்றன. இவை எல்லாமே ஆளுங் கட்சிக்குள் குழப்பம், பிளவு, மோதல் என்று காட்டுவதற்காக ஊடகங்களால் மேற்கொள்ளப்படுகின்ற சதி நடவடிக்கைகள். அரசியல் நோக்கத்துடன் செய்யப்படுபவை. அரசியல் பின்புலத்துடன் ஊடகங்கள் இயங்குவதே இதற்கு காரணமாக இருக்கின்றது.

இன்று பாராளுமன்றில் பலர் உறுப்பினர்களாக வந்துள்ளனர். அதை போல டக்ளஸ் தேவானந்தாவும் ஒரு மூத்த அமைச்சர். அவருடன் நான் போட்டிபோட வேண்டுமென எந்தக் காலத்திலும் எண்ணியதுமில்லை. அப்படி செய்யப் போவதுமில்லை.

ஆனால் எனக்கு கொடுக்கப்பட்ட வேலையை நான் சரியாக செய்வேன். அதை பிழையாக செய்ய எந்தவிதத்திலும் யாருக்கும் இடங்கொடுக்க மாட்டேன்.

ஆளும் கட்சியோ எதிர்க்கட்சியோ யாருடனும் சேர்ந்த வேலை செய்ய நான் தயார். என்னுடைய நோக்கம் 'என்கனவு யாழை' நனைவாக்குவதே. அதனூடாக மக்களை முன்னேற்ற எனது பணிகள் தொடரும். நாட்டை சுபீட்சமாக நாடாக உருவாக்க வேண்டுமென்ற அரசின் நோக்கத்தை நாம் செயற்பாட்டில் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வோம்.

***கேள்வி : தமிழ் மக்களுக்கு எதிராக அல்லது தமிழ் மக்களுக்கு விரோதமான முறையில் அரசாங்கம் செயற்படுவாகவும் தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகளை பிரயோகிககப்பதாகவும் தமிழ் கட்சிகள் குற்றஞ்சாட்டு முன்வைக்கின்றனவே?***

**பதில் :** தமிழ் மக்களுக்கு விரோதமாக அல்லது எதிராக செயற்படுவதென்பது பொய்யான குற்றச்சாட்டாகவே பார்க்கிறேன். அவ்வாறு அரசாங்கம் பாகுபாடு காட்டவில்லை என்பதை பல சந்தர்ப்பங்களில் அரசின் செயற்பாடுகளே உணர்த்தியிருக்கின்றது.

குறிப்பாக யாழில் மக்கள் வீட்டு திட்டதிற்காக போராடிய போது அதனை அறிந்த பிரதமர் உடனடியாகவே உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணித்திருந்தார். தமிழ் மக்களில் அக்கறையில்லாவிட்டால் அப்படி செய்திருக்க மாட்டார்கள் என்பதை புரிந்த கொள்ள வேண்டும். அதே மாதிரியாக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அக்கறையுடன் தான் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

எதனை அடக்குமுறை என்று சொல்லுகின்றனர் என்று பார்க்க வேண்டும். எதிர்க் கட்சிகள் அரசின் மீது குற்றச்சாட்ட வேண்டுமென்பதற்காக இவ்வாறு குற்றங்களைச் சுமத்துகின்றனர்.

இன்று இவர்கள் குற்றம்சாட்டுபவை அனைத்தும் கடந்த ஆட்சியிலும் நடந்தது. அப்பொழுது அரசிற்கு கூட்டமைப்பு ஆதரவை வழங்கிக் கொண்டிருந்ததால் அந்த விடயங்களை நல்லிணக்க அரசு நல்லாட்சி அரசு என்று பெயர் சூட்டியிருந்தனர். இப்போது இந்த அரசாங்கத்துடன் கூட்டமைப்பு இல்லாததால் தமிழர்களுக்கு எதிரான அரசாக காட்ட முனைகின்றனர். கன்னியா, மன்னாரில் திருக்கேதீஸ்ரவரம், தொல்பொருள் எல்லாம் நடந்தது நல்லாட்சியில் தான். இப்போது எதிர்க்கட்சியில் இருக்கின்றனர் என்பதற்காக எல்லாவற்றுக்கும் அரசை குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்க முடியாது.

***கேள்வி : தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கத்தினால் அநீதி இழைக்கப்படுகின்ற போது உங்களது செயற்பாடு எவ்வாறு இருக்கும்?***

**பதில் :** தமிழ் மக்களுக்கு எதிராக அநீதி இழைக்கப்படுமிடத்து நிச்சயமாக அரசாங்கத்திற்கு அதனை எடுத்துச் செல்வது என்னுடைய முயற்சியாக இருக்கும். என்னைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திற்கு வக்காளத்து வாங்குவதற்கு நான் வரவில்லை. என்னுடைய நோக்கமும் அதுவல்ல. என்னுடைய மக்களின் பிரதிநிதியாகத் தான் நான் அரசாங்கத்தில் இருக்கிறேன். அந்த அடிப்படையில் மக்களின் கருத்துக்கள் அபிலாசைகளை அரசில் நான் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு தான் நான் இருப்பேன்.

மேலும் தமிழ் மக்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் அநீதி ஏற்பட்டிருந்தால் அதனை அரசிடம் விளக்கி அதனைத் தடுக்க முடியுமென்று நான் நம்புகின்றேன். சிங்களவர்கள் முஸ்லிம்கள் என அனைவரையும் உள்ளடக்கியதாக ஒரே நாடு ஒரே சட்டம் என்று அரசு எண்ணுவதால் அதற்கான நியாயத்தை பெற்றுக் கொள்ள முடிமென்று நான் நம்புகிறேன்.

***கேள்வி : அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைவதை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?***

**பதில் :** இதுவொரு வெளிப்படையான அரசியல் நாடகம். அதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இன்றைக்கு அவர்களுக்கு சரிவு ஒன்று ஏற்படுகின்றது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. அதாவது மக்கள் மத்தியில் அவர்களுக்கு இருக்கின்ற வரவேற்பு என்ன என்பதை பார்க்க வேண்டும். அந்தக் கட்சிகள் தொடர்பில் தனிதனியே கதைப்பது அழகல்ல. கடந்த தேர்தலில் கூட்டமைப்பு, முன்னணி, கூட்டணி எல்லாம் எதிர்பார்த்தது என்ன. வந்தது என்ன என்று பார்க்க வேண்டும். அப்படி பார்த்தால் அவர்களுக்கு பின்னடைவும் ஏமாற்றமமும் தான் விளங்கும். இவர்களை விட அதிக மக்கள் வாழ்வின் முன்னேற்றத்துக்கே வாக்களித்தனர்.

அவர்களது ஒரேயொரு நோக்கம் சரிவடைகிற வாக்கு வங'கியைத் தூக்கி நிறுத்தவதற்காக மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி அரசியல் இலாபத்தை அடைவதற்கான ஒரு நாடகத்தை மேடையேற்றுவதாகும். அந்த நாடகத்தை அனைத்து தமிழ் தேசிய கட்சிகளையும் இணைத்துச் செய்கின்ற போது மீண்டும் மக்களிடத்தே நம்பிக்கையை ஏற்படுத்தி அனைத்து வாக்குகளையும் சூறையாடி மக்களுக்கு ஏதும் செய்யாமல் இன்னமும் ஐந்து வருடம் காலத்தை விணாக்குவதற்கான முயற்சிதான் அ து. அந்த முயற்சி எதிர்காலத்தில் வெற்றிபெறாதென்று நம்புகிறேன்.

(தொடர் 10ஆம் பக்கம்)

## கசப்பும்... இனிப்பும்...

– தமிழ்மணி மானா மக்கீன்

### கசப்பு

இலங்கையின் ஓர் ஊரும், பெயரும் இன மத பேதமின்றி இன்று அனைவராலும் பேசுபொருள்.

தேனகமாம் மட்டக்களப்பு மாநகருக்கு அடுத்து முஸ்லிம் சமூகத்தார் செறிந்து வாழும் 'காத்தான்குடி' அது. 'காத்த நகர்' என்று செல்லமாக அழைப்போர் உள்ளனர். எனக்கும் இந்தப் பெயரே விருப்பு!

உண்மையில், இப்பொழுது அது காத்த நகர் தானா? காக்கும் நகர் தானா?

தறுதலை ஸஹ்ரான் என்பானைப் பெற்றெடுத்த மண்ணாக அடையாளமாகிப்போன அது மிக அநியாயமாக, 'வஹ் சைத்தானால் ஆட் கொண்டு இலங்கையையே 'ஜிஹாத்' ஹாபிஸ் காண் வைத்துப் புரட்டியெடுக்கப்போகிற ஊர் எனச் சர்வ சாதாரணமாகப் பெரும்பான்மையினர், அதுவும் தென்னிலங்கை அப்பாவிகள் அச்சப்படுகிற நிலைமையை உருவாக்கி விட்டது.



அந்த 2019 ஏப்ரல் 21க்குப் பிறகு, இன்று ஓராண்டும் ஐந்து மாதங்களும் கடந்துவிட்ட நிலையில் 'காத்த நகர்" என்கிற காத்தான்குடி காக்கும் நிலையிலிருந்து நிலை தடுமாறி இன்னொரு அபாயத்தில் அல்லல்பட நாளும் நேரமும் பார்த்து விட்டது பார்த்து.

அந்த மண்ணின் ஒரு நல்ல கவிமணியாகவும், ஓர் அரசியல் சிந்தனையாளராகவும், சமூக சேவையில் சகட்டு மேனிக்குப் பல கஷ்டநஷ்டங்களை அனுபவித்தவராகவும், கிழக்கின் சிறந்ததொரு ஊடகவியலாளருமாகவும் திகழ்கின்ற, 'தினகரன் 'லைட் ரீடிங்' ஆரம்பகால அதிதீவிர வாசகனுமான டி.எல். ஜௌபர்கான், முகநூல் பக்கத்தில் பின் காணப்படும் பதிவைத் தந்து பதைபதைக்க வைத்துள்ளார்.

"இன்று (11/09/2020) காலை காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்திக்க அவர் அலுவலகத்தில் நுழைகிறேன்.

சிறு குற்றப் பிரிவில் எனக்குத் தெரிந்த ஒருவர் அமர்ந்திருக்கிறார். அவரை காவல் நிலையத்தில் காண்பதரிது. நல்ல பண்பான மனிதர். "ஆச்சரியத்தை அள்ளிக் குடித்தவனாக அவர் அருகில் சென்று, "ஏன் இங்கே வந்தீர்கள்" எனக் கேட்க.

"அத ஏன் கேக்குறிங்க... எண்ட மகனொருவன் படாதபாடு படுத்துறான்" எனச் சொல்லி முடிப்பதற்குள்ளேயே, அவரது கலக்கத்தின் அல்லது காயப்படுத்தலின் தெளிவை என்மன்சு உள் வாங்கிக் கொண்டது.

"எந்த நேரமும் படுத்துக்கிட்டே இருக்கான். கதைக்கிறானுமில்லே... தண்ணி கேட்டு எப்பப்பார்த்தாலும் நச்சரிக்கிறான். தண்ணி எடுத்துத் தலையில துப்புறான்..."

அவர் முடிப்பதற்குள், "ஐஸ் பாவனையாளரின் செயற்பாடுகள் இவை என்பதை என் மனம் சொல்லிக் கொண்டது. (மேலும், ஐஸ் பாவனையாளர்களுக்கு ஏசியும் தேவையாம்.



கண்களால் ஜாடை காட்டினார். பயந்த நிலையில் மெதுவாகச் சொன்னார்! இவர் தான் மகன்!"

அவனை நன்றாகப் பார்க்க முன்னயே அவனது தேகம் சொன்னது, 'போதை பாவனைக்காரன்' என்று!

"என்ன செய்ய இங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்றபோது, பொலிஸ் அழைத்து வரச் சொன்னதாகவும், எங்கேயோ இவரை அனுப்பப் போவதாகவும் தெரிவித்த போது நான் புரிந்து கொண்டேன்.

போதைப் பாவனையாளர்களை ஆற்றுப்படுத்துகின்ற (கவுன்சிலிங்) முகாமிற்கு அனுப்பப் போகிறார்கள் என்பது!

ஒரு தந்தையே தன் மகனை பொலிஸில் குற்றவாளியாக ஒப்படைக்க வந்திருக்கும் சகிக்க முடியாத நிகழ்வைக் கண்ட கனத்த இதயத்துடன் புனித ஜும்ஆத் தொழுகைக்கு விழைகிறேன். தொழுது விட்டுத் துஆக் கேட்க....!

அபிமானி ஜௌபர்கான் இடுகைக்கு இருவர் வழங்கியுள்ள தகவல்களும் படு பயங்கரமாக இருக்கின்றன.

மன்சூர் மரைக்கார் பதிவிட்டுள்ளார் இவ்வாறு "இவ் வியாபாரத்தைச் செய்பவர்களில் அதிகம் எம்மவர்களே! எமது எதிர்கால இளைஞர் சமுதாயம் படுகுழியில் விழப்போகிறது என்பதையும், தங்கள் குடும்ப உறவுகளும் விழுவார்கள் என்பதையும் உணர்ந்த பின்னரே ஒரு வழி பிறக்கும்."

ஜௌபர் முஹம்மது என்பாரின் பதிவு இப்படி "இளைஞன் ஒருவனது தொல்லை காரணமாகக் கடந்த ஆறுமாதங்களாக இரு குடும்பங்கள் தங்கள் சொந்த வீடுகளை விட்டு வெளியேறி வாடகை வீட்டில் வசித்து வருகிறோம். இதில் பாதிக்கப்பட்டதில் என் குடும்பமும் ஒன்று!"

ஆன்மிகச் சிந்தனைகளும், செயல்பாடுகளும், கலை இலக்கிய ஆற்றுகைகளும் கட்டுக்கடங்காமல் செழித்திருக்கும் ஊரில் நடப்பது என்ன?

உலகளாவிய தகவலொன்றும் எனக்குக் கடந்த வெள்ளியில் (18.09.2020) கிடைத்தது. உலகம் முழுமையிலும் இருபது நாடுகள் போதைப்பொருள் உற்பத்தியிலேயே மூழ்கியுள்ளதாம். 'பெரு' என்ற நாடு முதலிடமும் 'இந்தியா' இரண்டாம் இடமுமாம்! ஆக, வெகு லேசாகக் கடல் கடந்து காத்தான்குடி போன்ற நகரங்களில் ஊடுருவுவது கஷ்டமில்லை! நாம் தான் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். நம் ஆன்மீகம் கைகொடுக்கக் கையேந்த வேண்டும்.

### இனிப்பு 1

என் வயது வளர்ச்சிக்கேற்ப ஒவ்வொரு கால கட்டங்களிலும் தமிழ்த் திரையில் எனக்குப் பிடித்தவர்கள் என்று விரல்விட்டெண்ணக் கூடிய அளவுக்கு நடிக – நடிகையர் இருக்கிறார்கள். அபிமானிகளுக்கும் அவ்வாறே இருக்கும்.

இன்றையக் காலகட்டத்தில் நான் முதல் நம்பர் நடிகராக வரித்திருப்பது ஒரு 'ராஜ்கிரண்' தான்!

சேரனின் 'தவமாய்த் தவமிருந்து' அப்படி ஆக்கியது. இன்றைக்கு நானொரு வயதான தந்தை! அவரும் அப்படியே!

எனது முகநூல் பக்கத்தில் அவரும் ஒருவராக வலம் வருவது பெரும் பாக்கியம், பெருமை.

கடந்த 10ல் முகநூல் பார்த்துக் கொண்டிருந்த போது அவரின் ஒரு பதிவு பரவசப்படுத்தியது. அத்தோடு எந்த நடிகராவது இப்படி வெளிப்படையாக, தான் கடந்து வந்த வாழ்க்கைப் பாதையை வெளிச்சமிடுவாரா என வியப்பிலும் வியப்பு.

ரசித்து பிரமிக்கச் செய்த அவரது பக்கப் பதிவை இனிப்பாக வழங்கிப் பெருமைப்படுகிறேன்.

★ என் தந்தையாரின் மூதாதையர் வழியால் நான் மறவன்.

★ என் தாயாரின் மூதாதையர் வழியால் நான் மீனவன்.



★ பிறப்பால் நான் இஸ்லாமியன்.

★ என் அன்னை ஊட்டிய பாலினால் நான் தமிழன்.

★ இனத்தால் ஒரு திராவிடன்.

★ தேசத்தால் ஓர் இந்தியன்.

★ தினமும் குறைந்தது ஐந்து வேளை இரு கரங்கள் ஏந்திக் கெஞ்சுவதால் இறைவன் சந்நிதியில் பிச்சைக் காரன்.

★ பதினாறு வயதில் சென்னை வந்து, ஒரு திரைப்பட விநியோக நிறுவனத்தில் தினக்கூலி 4 ரூபாய் 50 பைசாவுக்குப் படப்பெட்டிகளை சுமந்து ஊர் ஊராகத் தியேட்டர்களுக்குக் கொண்டு சேர்த்ததால்,

★ நான் 'படத்துக்காரன்'.

★ அதன் பிறகு விநியோகஸ்தன்.

★ அதன் பிறகு தயாரிப்பாளன்.

★ அப்புறம் நடிகன் இயக்குநன்.

★ ஊரில் முஹியத்தீன் அப்துல் காதர்.

★ தமிழகத் திரைத்துறையில் 'ராஜ் கிரண்'!

இப்படி எத்தனையோ பெயர் நாமங்கள் என் உடலுக்கு!

என் ஆத்மாவுக்கு என்ன பெயர்?

தெரியவில்லையே, தேடிக் கொண்டிருக்கிறேனே...!

இவ்வாறு அருமை அருமையாக தன்னை வெளிச்சமிட்டுக் கொண்டுள்ள 'ராஜ்கிரண்' ஒன்றைத் தவற விட்டு விட்டார்.

அதை நான் வெளிச்சமிடுகின்றேன்.

ஆட்சேபிக்க மாட்டார் என்ற எதிர்பார்ப்பில்...

தமிழகத்தில் புகழ் பெற்ற ராமேஸ்வரம் திருத்தலத்திற்கு சுமார் 62 கி.மீ. தூரம் முன்னாலேயே இராமநாதபுர சமஸ்தானத்திலிருந்து பிரிந்து போகிறது ஓர் ஊர். 'கீழக்கரை' என்பார்கள். 'கீர்த்திமிகு கீழக்கரை' என்றே நான் சொல்வேன். கொடை வள்ளல் சீதக்காதி பிறந்த ஊர். இங்கேதான் 'ராஜ்கிரணும்' பிறந்தார். கிழக்குத்தெரு அவர் பிறப்பிடம்.

1955 முதல் 1966 வரை அவர் கற்ற இரு கல்விக் கூடங்கள், சதக்கத்துன் ஜாரியா ஆரம்பப் பள்ளியும், ஹமீதிய்யா மேல் நிலைப்பள்ளியும், (இதன் நிறுவனர் பற்றிய ஒரு வரலாற்று நூலை நான் வழங்கியுள்ளேன் என்பது இடைத்தகவல்) பாடசாலைகளில் செல்வம் அய்யா, ஜோர்ஜ் அய்யா இரு தலைமை ஆசிரியர்கள் வழிகாட்டலில் அறிவை வளர்த்துக் கொண்டவர்.

தமிழ்த் திரையுலகம் தவமாய் தவமிருந்து, பெற்ற இந்த நடிகமணி நீடுவாழ்ந்திட படைத்தவன் பாக்கியம் செய்திடுவானாக! அத்தோடு, அவர் தேடும் ஆத்மாவின் பெயரையும் அடையாளப்படுத்துவானாகவும், வேண்டுதல்கள்.

# ஜீவன் தொண்டமான் கவனத்திற்கு...!






# கண்டி சோகம கீழ்ப்பிரிவு: நீர், மின்சார வசதியில்லாமல் ஒரு அரைகுறை குடியிருப்பு

கண்டி மாவட்டம் உடபாத்த பிரதேசத்திற்குட்பட்ட சோகம கீழ்ப்பிரிவின் காட்டு லயம் எனப்படும் தொழிலாளர் குடியிருப்புகள் ஒரு மலையடிவாரத்தில் அமைந்துள்ளது. இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட மிக பழைமையான குடியிருப்புக்கள் இவை.

இந்த குடியிருப்புகளுக்கு மேல் உள்ள மலைப்பகுதி தொடர்ச்சியாக மண்சரிவிற்கு உள்ளாகிவந்திருக்கிறது. இடையிடையே கற்பாறைகளும் மண்பகுதிகளும் சரிவுக்குள்ளாகி வருவதால் இயற்கை அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் இப்பகுதியை இயற்கை அனர்த்தம் ஏற்படக்கூடிய இடம் என முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது. மழைக்காலங்களில் உயிருக்கு பாதுகாப்பு இன்மையால் மக்கள் தொடர்ச்சியாக பாதுகாப்பான இடங்களுக்கு புலம்பெயர்வது வாடிக்கையாகிப் போனது.

2017 ம் ஆண்டு காலப்பகுதியில் மண்சரிவு அச்சத்தினால் புலம்பெயர்ந்து சரஸ்வதி மத்திய கல்லூரியில் ஒரு மாத காலமும் அதைத் தொடர்ந்து விளையாட்டு மைதானம் ஒன்றிலுமாக மொத்தமாக 51 நாட்கள் தற்காலிக குடில்கள் அமைத்து வாழ்ந்தனர். இக்காலப்பகுதியில் இதே சோகம கீழ்பிரிவு தோட்டத்தில் பாதையோரமாக வசதிகள் கொண்ட இடத்தில் ஏழு பேர்ச் காணியில் வீடுகள் கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இன்றைக்கு வீடு கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்களாகின்றன. கட்டுமானப்பணிகள் அரைகுறையான நிலையில் பாதிக்கப்பட்ட மக்களை இதில் போய் குடியேறும்படி பணித்துள்ளனர். திறப்பு விழா செய்யப்படவில்லை. பெயர்ப்பலகை மொட்டையாக உள்ளது.

இவர்களுக்கான நீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. கட்டப்பட்ட வீடுகளில் நீர்த்தாங்கி பொருத்தப்பட்டுள்ளது. அதற்கான வீட்டு நீர் பாவனைக்கு குழாய் கட்டமைப்பு வீட்டுக்குள் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவ்விடத்திற்கு நீர் கொண்டு வரப்படவில்லை. வெயிலில் சூடேறி நீர் தாங்கிகள் வெடிக்கும் நிலையில் உள்ளன.

இந்த இருபது வீடுகளில் நான்கு வீடுகளுக்கு மட்டுமே குடும்பங்கள் குடிவந்துள்ளன. இவர்களும் இரவு வேளையில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கே சென்று விடுகின்றனர் .

நீரும் மின்சாரமும் இல்லாத வீட்டில் யார்தான் குடியிருப்பார்கள்?

பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது, உடைகள் கழுவுவது, உடை அயன் பண்ணுவது என பல்வேறு பிரச்சினை காரணமாக உயிரச்சத்துடனும் அதே குடியிருப்புகளில் வாழ்கின்றனர்.

இந்த புதிய வீடமைப்பு குடியிருப்புத் தொகுதி உள் வீதிகள் செப்பனிடப்படவில்லை.

இவர்களுக்கான நீர், மின்சாரம், பாதைகள் போன்ற அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து வீட்டிலுள்ள குறைபாடுகளையும் சீர்திருத்தி மனிதர்கள் குடியிருக்கக் கூடிய வீடுகளாக மாற்றிக் கொடுக்க வேண்டும். ஏற்கனவே பல மில்லியன் நிதி செலவிடப்பட்டு விட்டது. அது வீணாகிவிடக் கூடாது. எமது இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி, சோகம கீழ் பிரிவு குடியிருப்புகளுக்கும் அந்த அப்பாவி மக்களுக்கும் விடிவு பெற்றுத் தரப்பட வேண்டும். மீண்டும் மழைக்காலம் ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஆர். நவராஜா...**
படங்கள் :
தெல்தோட்டை தினகரன் நிருபர்

# நட்டத்தில் இயங்கும் பெருந்தோட்டங்கள்

## தோட்டத் தொழிலாளர்களுக்குப் பிரித்து கொடுக்கப்படுமா?

## மலையக அரசியல் தலைமைகள் வாளாவிருந்துவிடக் கூடாது

**‘ சுமார் பத்து வரையிலான தோட்ட நிறுவனங்கள் பாரிய நட்டத்தை அடைந்துள்ளதாகவும் அவற்றை பொறுப்பேற்று சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு பிரித்துக் கொடுப்பதே சிறந்த வழி என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார் ’**

ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் முக்கியமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. தேயிலை பயிர்ச்செய்கை, உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் நிலவும் தேக்கநிலை பற்றி ஆராயும் நோக்கிலேயே இது நடந்தது. ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ தலைமையில் நடந்த இக்கலந்துரையாடலில் இத்துறைகளோடு சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள், சிறு தோட்ட உரிமையாளர்கள், சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தார்கள். பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஷில் ராஜபக்ஷவும் இக்கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தார்.

ஆனால் பெருந்தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர்களோ, இங்கு வாழும் மக்களின் பிரதிநிதிகளோ கண்ணில் படவில்லை. எனினும் இங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் கவனத்துக்குரியவை.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, ஏற்றுமதி சரிவு, சந்தைப்படுத்தலில் எதிர்நோக்கும் சவால், நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் பற்றி எல்லாம் கருத்துப் பரிமாற்றங்கள் நடந்தன. மீள் பயிர்ச்செய்கை இடம்பெறாமை, தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளமை, சிறு தோட்ட உரிமையாளர்களது வகிபாகம் பற்றியும் பேசப்பட்டது. ஜனாதிபதி இங்கு கருத்துத் தெரிவிக்கையில் சிறு தோட்ட உற்பத்தித் துறை வளர்ச்சியடைந்து வருவதும் அதே நேரம் பெருந்தேட்டத்துறை வீழ்ச்சியை நோக்கி பயணிப்பதும் அவதானிக்கப்பட வேண்டியது என்று கூறினார். சுமார் பத்து வரையிலான தோட்ட நிறுவனங்கள் பாரிய நட்டத்தை அடைந்துள்ளதாகவும் அவற்றை பொறுப்பேற்று சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு பிரித்துக் கொடுப்பதே சிறந்த வழி என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். இது நல்ல யோசனைதான். இச் சிறு தோட்ட உரிமையாளர்கள் என்னும் வரையறைக்குள் எத்தனை பெருந்தோட்ட மக்கள் பயனடையப் போகிறார்கள்? என்பதுதான் கேள்வி.

ஏற்கனவே ஆங்காங்கே மிகச்சிலரே இவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளார்கள். அதிலும் ஏகப்பட்ட கட்டுப்பாடுகள், நிபந்தனைகள். ஆனால் இதற்குள் அடங்காத சிறுதோட்ட உரிமையாளர்கள் எவ்வித பிக்கல் பிடுங்களுமின்றி சுதந்திரமாக இயங்குகிறார்கள். இவ்வாறான ஒரு பின்னணி பெருந்தோட்டப் பகுதிகளிலும் ஏற்படுத்தப்படுமா? யோசிக்க வேண்டியுள்ளது. நட்டத்தில் உள்ள தோட்டங்களைப் பிரித்துக் கொடுப்பது என்பதில் எவருக்கும் பிரச்சினையில்லை.

**பன். பாலா ...**

(19ஆம் பக்கம் பார்க்க)

**ஒரு தாலாட்டுப் பாடல்**

# சத்தம் ஒண்ணு கேக்குது சடங்குனு சொல்றாங்க...

கொசு எதுவும் கடித்ததுவோ.
நுளம்பு வந்து குத்தியதோ
பக்கத்துவீட்டு பாட்டுசத்தம்
பயத்தில நீ அழுகிறாயோ?
ஆராரோ ஆரிவரோ
இந்தியா செனலுல எப்பவும்
குடும்பசண்ட சத்தத்தில
பயந்து நீயும் அழுகிறாயோ
ஆராரோ ஆரிவரோ
ஓட்ட கூரையில ஒழுகிவரும்
தண்ணிப்பட்டு சில்லுனு
ஆனதால சின்னபுள்ள
நீ அழுகிறாயோ
ஆராரோ ஆரிவரோ.
வேளைக்கு போகாத
வெட்டிப்பய போடும்
சத்தத்தில நீ இப்போ
விழிச்சிக்கிட்டு அழுகிறாயோ?
ஆராரோ ஆரிவரோ
பிறந்தநாளுனு சொல்லி
பெரிய வெடி போட்டாங்க
காதுவெடிக்க நீயும்
கதறியழுகிறாயோ
சின்னமாடு போட்ட கன்னு
சீம்பாலு எடுத்து வந்து
சீனிபோட்டு தாரோன் புள்ள
சின்னபுள்ள நீயும் தூங்கு
கோழி முட்டபோட்டு
கொக்கு வந்திருக்கு
நாளைக்கு காட்டுறேன்
நல்லபுள்ள நீ தூங்கு
சத்தம் ஒன்னு பெரிசா கேக்குது
சடங்குனு சொல்லுறாங்க
வாரம் ஒன்னாச்சி இன்னும்
வச்ச சத்தம் குறையல
என்னைக்கு திருந்துவானே
எடுத்து சொல்ல முடியல
செத்தவீட்டு சத்தம்மா
செவியதுவும் வெடிக்குதம்மா
பழையபாட்டு படிச்சுகிட்டு
பைலாவும் போடுறாங்க.
செத்தவனும் தூங்கலம்மா
பெத்தவனும் தூங்கலம்மா
ஜீவன் ஒன்னு வந்திருக்கு
செழிப்பாக எண்ணியிருக்கு
ஆராரோ ஆரிவரோ....
வீடுகேட்டு ஆழுகிறயா இல்ல
ரோட்டு கேட்டு ஆழுகிறயா.
மெல்லமெல்ல வருது புள்ள
மெதுவாக தூங்கம்மா ..!
பாலம்போட அழுகிறாயா இல்ல
பல்லுவர அழுகிறாயா
கட்சிக்கு வேல செஞ்சா
கணக்கபுள்ள வேலையுண்டு.
காக்காபு டிக்க போனாதான்.
கண்டாக்கு வேலை உண்டு.
ஒன்னுக்கும் உதவாத உங்க
அப்பன் ஒருசோத்து மாடு
காக்கா புடிக்கலன்னா நாம
காலம் தள்ள முடியாது
ஆராரோ ஆரிவரோ....!

நவகலி நவராஜா



# மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஆளுமை அமரர் எஸ்.எம்.கார்மேகம்

## ஸ்தாபகர், பொதுச்செயலாளர், மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்

1960களில் மலையகத்தின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் எழுத்தாளர்கள் பலர் வந்து வீரகேசரியில் இணைந்து கொண்டார்கள் என்றால் அதற்கான உந்துசக்தியாக திகழ்ந்த ஒரே மனிதர் எஸ்.எம். கார்மேகம்.


எஸ்.எம். கார்மேகம்

மலையக எழுத்தாளர்கள் தமது மலையக எழுத்து இயக்கத்தின் ஊற்றுமுனையாக இன்று வரை கார்மேகம் திகழ்கிறார். வீரகேசரி முகாமைத்துவ பணிப்பாளர் கேசவனின் ஆசீர்வாதத்தோடு ஆரம்பிக்கப்பட்ட தோட்ட வட்டாரம், தொடர்ந்து தோட்ட மஞ்சரி மற்றும் மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் வீரகேசரியுடன் இணைந்து நடத்திய மலையக சிறுகதைப் போட்டிகள் மூலம் தெளிவத்தை ஜோசப் முதல் மாத்தளை மலரன்பன் வரை பல புகழ்பூத்த எழுத்தாளுமைகளை மலையகம் பிரசவித்திருக்கிறது.

இருந்த சமயம் பார்த்தவை, வாசித்தவை, கேட்டவை எல்லாவற்றையும் எழுதவேண்டும் என்ற வேகமும் ஆர்வமும் எழுந்தன.

கல்லூரி படிப்பை முடித்து நான் வீரகேசரியில் 1968 ஜனவரியில் பணியாற்ற ஆரம்பித்தபோது அவரது எழுத்து, சமூகப் பணிகளோடு நானும் இணைந்து கொண்டேன். அது என் வாழ்க்கையின் சிறப்பான அனுபவமாகும். அந்த நாட்களில் மலையக இளைஞர்களையும் இலக்கிய ஆர்வலர்களையும் வீரகேசரி உணர்வூட்டியும் உற்சாகப்படுத்தியும் வந்தது. இதற்கு மூல விசையாக கார்மேகம், முன்னாள் விநியோக முகாமையாளர் ஆர். இராமையா ஆகிய இருவரும் செயற்பட்டனர். வீரகேசரி முகாமைத்துவ நிர்வாக பணிப்பாளர் கேசவன், ஏறத்தாழ 60களில் மலையக எழுத்திற்கு உந்துசக்தியாக இருந்தார். இவர்களுக்கு பக்கபலமாகவும் துணையாகவும் மஸ்கெலியா வே.மூக்கப்பிள்ளை, இர.சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன், கலைஒளி மு. முத்தையாபிள்ளை, கண்டி, க. ப. சிவம், கவிஞர்தமிழோவியன், செய்தி ஆசிரியர் ரா.மு. நாகலிங்கம், பாரதி இராமசாமி, தி. சற்குருநாதன், பொ. கிருஸ்ணசாமி ஆகியோர் 1960களில் மலையகத்தில் எழுச்சியுற்ற பல மலையக எழுத்தாளர்களை அடையாளம் காட்டி வளர்த்தெடுத்தவர் கார்மேகம். இதற்கு அவர் தோட்ட மஞ்சரியை நன்கு பயன்படுத்தினார். இவர் அட்டன் கொட்டகலை கல்மதுரை (STONY CLIFF) தோட்ட முடியன் கங்காணியின் மகன். தோட்டப் பாடசாலையில் படித்துவிட்டு, அட்டன் புனித பொஸ்கோ கல்லூரியில் சேர்ந்து 1951ஆம் ஆண்டு கல்வியைத் தொடர்ந்தனர்.

அக்காலத்தில் மலையக பெருந்தோட்டத்துறையில் எஸ்.எஸ்.சி. தேர்வில் சித்திபெறுவதென்பது பெரும் அசகாய சாதனையாகும். கல்வி, விளையாட்டுத்துறைகளில் அக் கல்லூரி மத்திய மாகாணத்தில் முன்னணியில் திகழ்ந்தது. பொஸ்கோ மாணவன் என்றால் வெள்ளைக்கார துரைமார் கேள்வியின்றி வேலைபோட்டுக் கொடுப்பார்கள். அப்படித்தான் 1959 இல் கார்மேகத்துக்கு கல்மதுரைத் தோட்டத்துரை ஆர். ஜே. பார்வோலா, டீ மேக்கர் வேலை போட்டுக் கொடுத்தார்.

ஆனால், அதனை ஏற்றுக் கொள்ளாமல் 1960 இல் வீரகேசரி உதவி ஆசிரியராக சேர்ந்துக் கொண்டார். மிகப்பெரிய வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டு 1960களில் உயிர்த்தெழுந்த வீரகேசரி, பயிற்சி பத்திரிகையாளர் பதவிக்கு அப்போது விண்ணப்பங்களைக் கோரியது. விண்ணப்பித்தோரில் 85 பேரை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அவர்களில் மூவரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

கால் நூற்றாண்டுகாலம் வீரகேசரியின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து இரவுபகலாக உழைத்து, மலையகப் பெருந்தோட்டத் துறையிலும், நகர்ப்புறங்களிலும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களை உருவாக்கிய பெருமை இவரைச் சேர்ந்ததாகும்.


இலங்கை கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில் நினைவுப்பரிசை பெறும் கார்மேகம். மத்தியில் தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் காணப்படுகிறார்.

வீரகேசரியின் பிரதி செய்தியாசிரியராகவும் தமிழக தினமணியில் பிரதி ஆசிரியராகவும் கால் நூற்றாண்டுகளுக்கு மேல் பணியாற்றிய கார்மேகம், மலையக எழுத்து, இயக்கத்தில் நாம் முன்னிறுத்தப்பட வேண்டிய முதன்மையான முக்கிய ஆளுமையாவார். அவரது ஆளுமைகள் குறித்து பத்திரிகையாளர் எஸ்.எம். கார்மேகம், வாழ்வும் பணியும் என்ற வரலாற்று நூலை தொகுத்து பதிப்பித்து கம்போடியா தமிழ் விழாவிலும் புதுடெல்லியில் நடைபெற்ற வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் மாநாட்டிலும் வெளியிட்டு வைத்தமை குறிப்பிடத்தக்கது.

கார்மேகத்தை கண்டியில் முதன் முதலாக 1965இல் சந்தித்தது, இப்பொழுதும் என் மனதில் பசுமையாக நினைவில் உள்ளது. அன்று செய்தியாசிரியர் ரா.மு. நாகலிங்கம், க.ப. சிவம் உட்பட சிலருடன் அவர் மிகவும் எளிமையாகவும் மனம் விட்டும் பேசிக்கொண்டிருந்தார். பேச்சுக்கள் எங்கெல்லாமோ சென்று, மலையக மக்களின் வாழ்க்கையில் வந்து நின்றது. அந்தச் சின்ன வயதில் மலையகம் பற்றி சிந்திக்கத் தொடங்கிய எனக்கு, அனுபவ முதிர்ச்சியோடு அவர் பேசியவை நெஞ்சில் பசுமரத் தாணிபோல் பதிந்தன.


தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம். இராமையாவுடன் கார்மேகம் (மத்தியில்)

வீரகேசரியில் தோட்ட மஞ்சரி பகுதியினால் கார்மேகத்துடன் எனக்கு வளர்ந்த உறவு அவரையும் அவர் பணியாற்றிய நிறுவனத்தையும் சுற்றியே எனது மனதை சுழல வைத்தது. அவருடன் ஏற்பட்ட இந்தத் தொடர்பின் இறுக்கம் வவுனியாவில் நடைபெற்ற வீரகேசரி, மித்திரன் கலைவிழாவின் போது என்னையும், இணைத்தது. பம்பரம்போல் சுழன்று பல விடயங்களை செய்துவந்த அவர் எனக்கு நெருங்கியவரானார். எழுத வேண்டும் என்ற ஆவலை என்னிடம் தூண்டியவர்களில் அவரும் ஒருவர். எதையும் கூர்மையாக அவதானித்து நிதானமாக எழுதும் பழக்கம் அவருடையது. நின்றும் இருந்தும் நடந்தும் எனது எழுத்தார்வத்தையும் இலக்கிய உணர்வையும் சுழன்றெழச் செய்தார்.

அதிகாலையிலேயே மூச்சுப்பிடித்து பத்திரிகை வாசிக்கும் பழக்கம் சிறுவயது முதல் என்னிடம் இருந்தது. காலையில் கடைக்குச் சென்று அன்றைய பத்திரிகையை வாங்கி தலைமுதல் கால்வரை புரட்டிப் பார்க்காவிட்டால் அன்றையதினம் விடியாத தினமாக இருக்கும். நான் மாத்தளையில் படித்துக் கொண்டி

(19ஆம் பக்கம் பார்க்க)

**எச்.எச். விக்கிரமசிங்க...**

# தோட்டங்களை தொழிலாளர்களிடையே பகிர்ந்தளிக்க அரசு இணங்கியுள்ளது

தலவாக்கலை
பி.கேதீஸ்

**உங்களைப் பற்றி அறிமுகம்?**

நான் வட்டகொடை தெற்கு மடக்கும்புர தோட்டத்தைச் சேர்ந்த மருதபாண்டி லெட்சுமி அவர்களின் மூன்றாவது புதல்வன் எனது பிறப்பிடமும் வட்டக்கொடை தெற்கு மடக்கும்புர தோட்டம் ஆகும்.

**உங்களுடைய அரசியல் பிரவேசம்?**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக 2002 ம் ஆண்டு நடைப்பெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலில் கொத்மலை பிரதேச சபையில் போட்டியிட்டு வெற்றி பெற்று பிரதேசசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டேன். அதன்பின்னர் 2006 ம் ஆண்டு நடைப்பெற்ற மத்திய மாகாண சபை தேர்தலிலே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்று மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆனேன். 2013ம் ஆண்டு நடைபெற்ற மத்திய மாகாண சபைத் தேர்தலில் அதே கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்று மத்திய மாகாண விவசாய, இந்து கலாசார மற்றும் கல்வி அமைச்சர் ஆனேன். நடந்து முடிந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக மொட்டு சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். பல வருடங்களாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர்களாக பதவி வகித்த நான் தற்போது அக்கட்சியின் நிதிச்செயலாளராகவும் பதவி வகிக்கின்றேன்.

**உங்களுடைய அரசியல் பிரவேசம் சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கிலா ஆரம்பிக்கப்பட்டது? அல்லது எதேச்சையாகவா நீங்கள் அரசியலில் நுழைந்தீர்கள்?**

எனது அரசியல் பயணம் உயரிய நோக்கத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலேயேதான் நான் அரசியலில் காலடி வைத்தேன். மக்களுக்கு சிறந்த முறையில் சேவைகள் செய்தமையினால்தான் இன்று மக்கள் பாராளுமன்றம் வரை அனுப்பியுள்ளார்கள். தொடர்ந்து மக்களுக்காகவே எனது சேவைகளை முன்னெடுப்பேன்.

**இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் உறவு முறை இருப்பதாக கூறுகின்றார்களே அது உண்மையா? இ.தொ.காவில் ஈர்ப்பு ஏற்பட காரணம் என்ன?**

அப்படி ஒரு உறவு முறை கிடையாது. எனது பரம்பரையினர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அங்கத்தவர்கள். நானும் எனது சிறுவயது முதலே இ.தொ.காவின் காங்கிரஸின் ஆதரவாளன். இ.தொ.காவின்' முன்னாள் பொதுச் செயலாளர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் துடி துடிப்பும் துணிச்சலும் என்னை மிகவும் கவர்ந்திருந்தது. இ.தொ.காவின் கொள்கைகளும் என்னை ஈர்த்தமையினாலேயே நான் இ.தொ.காவுடன் இணைந்து எனது அரசியல் பயணத்தை முன்னெடுத்தேன். இ.தொ.காவின் எம்மை ஏனைய சமூகங்களுக்கு நிகராக வாழ வைத்த மாபெரும் ஸ்தாபனம் அதில் நானும் ஒரு உறுப்பினர் என்பதில் பெருமைக் கொள்கின்றேன்.

**மலையக கல்வி அபிவிருத்தியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பங்களிப்பு எப்படியிருக்கின்றது?**

மலையக கல்விக்கு வித்திட்டவர் இ.தொ.காவின் ஸ்தாபகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான். அவரின் அயராத முயற்சியினால் தான் இன்று மலையகம் கல்வியில் உயர்வடைந்துள்ளது. அதேபோல் அமரர் ஆறுமுகன் தொண்டமான் மலையக கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு சேவைகளை செய்துள்ளார். அதனை இன்று முழு மலையகமே புரிந்துகொண்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து மலையகத்திற்கு ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்ட காலத்தை மாற்றியமைத்தவர் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான். இன்று எமது சமூகத்தை சேர்ந்தவர்களே ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் பல்வேறு துறைசார் அறிவியலாளர்களாகவும் திகழ்கின்றனர். இன்று மலையக பாடசாலைகளிலே கல்வி பெறுபேறுகளை பார்க்கும்போது வியக்கத்தக்கதாக இருக்கின்றது. அன்று எம்மிடம் இருந்தது ஆசிரியர் தொழில் மட்டுமே. 1982 ம் 1983ம் ஆண்டுகளில் சௌமியமூர்த்தி தொண்டமான் 500 ஆசிரியர் நியமனங்களை மலையகத்திற்கு பெற்றுக்கொடுத்தார். அதில் 402 நியமனங்கள் கணித பாடம் சித்தியடையாதவர்களும் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். அதன்பிறகு பல்வேறு ஆசிரியர் நியமனங்கள், ஏனைய அரச நியமனங்கள் மலையகத்திற்கு இ.தொ.காவினால் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இந்நியமனங்கள் அரசியல், கட்சி பேதமின்றி அனைவருக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டன. 2007 ம் ஆண்டு 3179 ஆசிரியர் நியமனம் 2015ம் ஆண்டு உதவி ஆசிரியர் நியமனம் போன்றன இ.தொ.கா தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானால் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இ.தொ.கா வின் தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் ஊடாக 2017 ம் ஆண்டு மத்திய மாகாணத்திலுள்ள பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு மலையக கல்வி வளர்ச்சியில் இ.தொ.கா பெரும் பங்காற்றியுள்ளது. அமரர் ஆறுமுகன் தொண்டமானால் பல அரச வேலை வாய்ப்புகள் மலையகத்திற்கென பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், தபால் உத்தியோகத்தர்கள்,கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பல நியமனங்களை அடுக்கி கொண்டே போகலாம்.

1970 ஆண்டு தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் பாராளுமன்றம் சென்றார் அதன்பிறகே மலையகமெங்கும் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. சீடா நிறுவனத்தின் வேலைத்திட்டங்களை மலையகத்திற்கு கொண்டு வர சௌமியமூர்த்தி தொண்டமான் பெரும் பாடுபட்டார். சீடா மலையகத்திற்கு வந்த பின்னரே மலையகத்தில் ஒழுங்கான பாடசாலை கட்டடங்களை காணமுடிந்தது. மலையக சமூகத்தோடு பெரும்பான்மை சமூகம் போட்டி போடுகின்ற அக்கால சூழ்நிலையிலும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை எமது சமூகத்திற்காக தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் செய்தார். தோட்டப் பாடசாலைகளாக இருந்த சகல பாடசாலைகளும் அரசாங்க பாடசாலைகளாக பொறுப்பேற்கப்பட்டு நாற்பது வருடங்களை கடந்துவிட்டன. பல்வேறு வெளிநாட்டு நிதி உதவியுடன் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் நியமனங்கள் பெருவாரியாக வழங்கப்பட்டு தற்போது ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் நிவர்த்திக்கப்பட்டுள்ளது. இவ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 75 வருட காலப் பகுதியில் மலையகத்தில் பாடசாலை வசதிகள், போக்குவரத்து வசதிகள், மின்சார வசதிகள் என்பன பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. மலையகத்தில் இன்று கல்வி வளர்ச்சியடைந்தமைக்குக் காரணம் இ.தொ.காவே. பெருந்தோட்ட பிள்ளைகளின் கல்விக்காக பங்காற்றிய பெருந்தலைவர்களாக அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானும் அமரர் ஆறுமுகன் தொண்டமானுமே திகழ்கின்றார்கள்.

> **'ஒரு தோட்டத்தில் நூறு வீடுகள் அமைக்கப்படுமாயின், அத் தோட்டத்தில் வசிக்கும் ஆசிரியர்மார், அரசு ஊழியர்கள், பெருந்தோட்ட உத்தியோகத்தர் ஆகியோருக்கும் அவ்வீடுகள் வழங்கப்பட வேண்டும் என மறைந்த ஆறுமுகன் தொண்டமான விரும்பினார். அந்த எண்ணக்கருவுக்கு நாங்கள் சொல்வடிவம் கொடுப்போம்'**



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும்
நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான
**மருதபாண்டி ரமேஸ்வரன்**

**அரசியல் மற்றும் தொழிற்சங்க ரீதியில் மலையகத்தில் பலமானதொரு அமைப்பான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் அரசியல் செயற்பாடுகள் குறித்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

தொழிற்சங்க ரீதியில் மலையக மக்களுக்கு செய்ய வேண்டிய சேவைகளை இ.தொ.கா செவ்வனே நிறைவேற்றி வருகின்றது. அதன் காரணமாகவே இ.தொ.கா அரசாங்கத்தோடு இருந்தாலும் சரி இல்லையென்றாலும் சரி இவ் இயக்கத்தை எவராலும் அழித்துவிட முடியாது. எமது அரசியல் தலைவர்கள் அனைவரிடமும் இ.தொ.கா மீதும் அதன் தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் மீதும் மிக உயர்ந்த நன்மதிப்பு உள்ளது. காங்கிரசின் முடிவுகள் அனைத்தும் கொள்கை ரீதியானதாகவும், மக்கள் நலன் சார்ந்ததாகவும் இருப்பதே இதற்குக் காரணம். எவரிடமும் தலைநிமிர்ந்து தைரியமாக பேசக்கூடிய வல்லமை காங்கிரசிற்கு மட்டுமே இருக்கிறது. இலங்கை தொழிலாளா' காங்கிரஸினால் மட்டுமே மலையக மக்களுக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்க முடியும் என்பதை மக்கள் நன்றாக உணர்ந்துள்ளனர். இ.தொ.கா.வின் சேவை மலையக மக்களுக்கு என்றும் தேவை. எனவே எங்கள் மக்கள் பணி தொடரும். நாங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயமாக நிறைவேற்றுவோம்.

**தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் இ.தொ.கா என்ற மாபெரும் ஸ்தாபனத்தை கட்டுக்கோப்புடன் கட்டிக்காத்தார். அவரின் இழப்பிற்கு பின்னர் அதன் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் தலைமையின் கீழ் கட்டுக்கோப்புடன் செயற்படுமா?**

நிச்சயமாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பது ஒரு ஆலமரம். அதன் கிளைகள் உடையலாம் ஆனால் மரம் சாயப்போவதில்லை. ஒரு கிளை உடைந்தாலும் இன்னொரு கிளை முளைக்கும். இது ஒரு கட்டுக்கோப்பான அமைப்பு. நாங்கள் அனைவருமே ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் வழிநடத்தி அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பாசறையில் வளர்ந்தவர்களே. காங்கிரஸ் என்பது ஒரு குடும்பம் இங்கு சில சர்ச்சைகள் உருவாகலாம். ஆனால் பிளவுகள் இல்லை. அமரர் ஆறுமுகன் தொண்டமான் இருந்தபோது எப்படி கட்டுக்கோப்புடன் இருந்ததோ அதே போலவே இந்த இயக்கம் நீடித்து நிற்கும்.

**பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளவு உயர்வு நிச்சயமாகக் கிடைக்குமா?**

நிச்சயமாக கிடைக்கும். அதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம்.

**அமரர் ஆறுமுகன் தொண்டமானுடன் இணைந்து செயற்பட்ட நீங்கள் தற்போது நீங்கள் புதிய பொதுச் செயலாளருடன் செயல்படுகிறீர்கள். இந்த இருவருக்கும் இடையே நீங்கள் அவதானிக்கின்ற வித்தியாசங்கள் என்ன? உங்களுக்கும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கிடையிலான உறவு எப்படியிருக்கின்றது?**

எங்களுடைய நட்பு சிறப்பாகவே இருக்கின்றது. எனக்கும் ஆறுமுகன் தொண்டமான் ஐயாவுக்கும் இடையே எவ்வாறு ஒரு நட்பு இருந்ததோ அதேபோல பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானுக்கும் எனக்கும் இடையே அதே நட்பு நிலவுகிறது. அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஐயா எப்போதுமே துடிப்பாகவே இருப்பார். எந்த விடயத்தையும் உடனுக்குடன் தீர்வு காண வேண்டும் என்று செயற்படுவார். துடிப்புடனும் துணிச்சலுடனும சவால்களை எதிர்கொள்வார். அவருடைய துணிச்சலை எண்ணி நான் வியந்து போயிருக்கிறேன்!

(21 ஆம் பக்கம் பார்க்க)

# ரணிலின் அழுங்குப்பிடியிலிருந்து ஐ.தே.க வை மீட்கப்போவது யார்?

சுஐப் எம்.காசிம்

'முழு யானை இருக்க முட யானை' பிளிறுவது போலுள்ள அரசியல் சூழல் தோன்றி வருவது அனைவரையும் அசத்திப் போட்டுள்ளது. அரசியலமைப்பின் இருபதாவது திருத்தம் எதிர்கொண்டுள்ள இன்றைய எதிர்ப்புக்கள், இயலாதோரின் அழுகுரலாகவே அமையப் போகின்றன. அரசாங்கத்திற்குள்ளும் இதைச் சிலர் எதிர்க்கின்றனர். காலவோட்டத்தில் இவை சமரசத்திற்கு வரலாம் அல்லது எதிர்ப்போரின் அபிலாஷைகளையும் இருபது உள்ளடக்கலாம்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை, எதிர்க் கட்சிகள் எதிர்ப்பதுதான் விவகாரமாகி வருகிறது. ஐக்கிய தேசிய கட்சி, இதன் எதிர் வினையான ஐக்கிய மக்கள் சக்தி என்பவையும் இருபதை எதிர்க்கிறதே ஏன்? எதைச் சாதிக்கும் சாத்தியத்தில் இக்கட்சிகள் எதிர்க்கின்றன? இதுதான், இன்று பலரையும் அசத்தியுள்ளது. உண்மையில் இது இரட்டிப்பு அசத்தல்தான்.

நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றி, அரசாங்கத்தை அமைத்தது மட்டுமல்ல, முதலாவது பிரதமரையே உருவாக்கிய ஐக்கிய தேசியக் கட்சி, இன்று கையேந்துவதற்கும் பாத்திரமில்லாத யாசகனாகிவிட்ட நிலையில், இருபதை எதிர்க்கும் இலட்சணம் யாரை அசத்தாமல் விடும்? இதுமட்டுமல்ல கைக்கு வந்த ஒரேயொரு எம்.பியையும் பாராளுமன்றத்திற்கு அனுப்பியதாகவும் இல்லை. இதற்குள்ளா இருபதற்கு எதிர்ப்பு?

அண்மையில் இக் கட்சியின் 74 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டம் வெறும் முன்னாள் பதவிகளால் அலங்கரிக்கப்பட்டதை விடவும் ஆச்சர்யமும் அசத்தலும் வேண்டுமா? இப்போதுதான் பிரதித் தலைவரே தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இன்னும் எத்தனை தடைகளைக் கடக்க உள்ள இக்கட்சியின் எதிர்காலத்தில், தலைவர் தெரிவும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும். பிரதித் தலைவர் அடுத்தபடியாக தலைவராகும் மரபை ஏற்க முடியாது, தலைவருக்கும் செயற்குழுவில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்கின்றனர் வஜிரஅபேவர்தன உள்ளிட்டோர். குடும்பத்தின் பிடியிலிருந்து கட்சி கை நழுவும் நிலை ஏற்படக்கூடாதென, ரணிலால் நகர்த்தப்பட்ட காய்தான் ருவான் விஜயவர்த்தன.

இதையுணர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள், ரணிலின் காய் நகர்த்தல்களை முடிந்த வரை முறியடிப்பது, முடியாவிட்டால் வெளியேறுவதென்ற விரக்தியில் உள்ளனர். இவர்களின் வெளியேற்றம் ஐக்கிய மக்கள் சக்தியைப் பலப்படுத்துமென எடுத்த எடுப்பிலும் சொல்ல முடியாதுள்ளது. ஒரு வகையில், கட்சியை அதிகாரமில்லாத யாசகனாக்கிய பொறுப்புக்கு, இவர்கள் சஜித்தையே பொறுப்பாக்குகின்றனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பிடிவாதமின்றி பொறுப்புடனும் பொறுமையுடனும் நடந்திருந்தால், கட்சியின் கட்டுக்கோப்புக் குலைந்திருக்காது. ரணிலின் இறுமாப்பைத் தகர்க்க உண்மையில் சஜித் பிரேமதாசவைத் தவிர வேறு தெரிவு இல்லைதான். என்ன செய்வது தருணம் சரியில்லை என்பதை சஜித் சிந்தித்திருக்க வேண்டுமே!



இதுதான், இன்று வரைக்கும் யானைக்காக வாதிடுவோரின் நிலைப்பாடு.

அமைச்சுப் பதவிகளையாவது ஆசைகாட்டி அரவணைக்க, இவர்களில் எவரும் எம்.பிக்களாகவும் இல்லை. இதனால், யானைப்பாகனாக யார் வருவாரென்பதில் அரசுக்கு அக்கறையும் இல்லை. தொலைபேசிகளைத் தொடர்பு கொள்வதுதான், இன்று அரசுக்குள்ள ஆறுதல். ஆறுதல் மட்டுமல்ல உள்வீட்டு நெருக்குவாரங்களை நீர்த்துப் போகச் செய்வதற்கும் இது தவிர வழியுமில்லை. இந்த வழிகளில் விழும் பூச்சிகளாக சிறுபான்மை எம்.பிக்கள் உள்ளவரை, அரசாங்கம் அஞ்சப் போவதுமில்லை. விழுவதற்கு முன்னர் சில விடயங்களைப் பேசுவதற்காக சில எம்.பிக்கள் எத்தனிப்பது, தொலைபேசி இலக்கங்கள் படிப்படியாகத் தொலையவுள்ளதையே தெளிவுபடுத்துகின்றன.

புதிய அரசியலமைப்புக்கு முன்னர் இருபதில் எதையாவது நியாயங்கண்டு அல்லது நியாயங்களைச் சேர்ப்பதற்கு எம்.பிக்கள் சிலர் எடுக்கும் முயற்சிகள், தனித்துவ கட்சிகளின் தலைவர்களைத் தனிமைப்படுத்தலாம்.

இவ்வாறு நிகழின், உதயமாகவுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியிலும் தனிநபர் ஆளுமையே அலங்கரிக்கப்படும். எம்.பிக்களை விடுத்து, வெறும் தலைவர்களாக வந்து, ஐக்கிய மக்கள் கூட்டணியை பலப்படுத்த முடியாதே! எனவே, எல்லாப் பலங்களும் உடைவது, 'நதிகளின் கிளைகள் கடைசியாகக் கடலில் கலப்பது' போன்று அரசாங்கத்திலே கலக்கும். இதனால்தான் இவற்றை, இயலாதோரின் அழுகுரல் என்கின்றோம்.

எனவே, இருப்பதைச் சாத்தியமாக்கல் அல்லது எதிர்க் கட்சியைப் பலப்படுத்தல் பற்றித்தான் சிறுபான்மை அரசியல் நகர வேண்டும். வீர வசனம், வீறாப்புச் சபதம், விட்டில் பேச்சுக்களைக் கைவிட வேண்டிய கட்டத்திற்குள் தனித்துவ தலைமைகள் வர வேண்டியுள்ளன. உதவாவிட்டாலும் உபத்திரம் செய்யாமலாவது இருந்து, எதிர்கால இலக்குகளை வெல்ல, இருபதாவது திருத்தத்திலாவது இறுமாப்பைக் கை விடுவதுதான், தமிழ் மொழிச் சமூகங்களுக்குப் பாதுகாப்பு.

கடந்த சகல தேர்தல்களிலும் இவ்வாறான நடுநிலைக் கொள்கைகளை இத்தலைமைகள் கையிலெடுத்திருக்க வேண்டும். ஆகக் குறைந்தது பொதுத் தேர்தலிலாவது இது கடைப்பிடிக்கப்பட்டிருந்தால், இன்று கைவிடப்படும் சூழ்நிலைக்கு சிறுபான்மைச் சமூகங்கள் சென்றிருக்காதா? என்றே சிந்திக்கத் தோன்றுகிறது.

# தமிழ் கலாசாரத்தின் அவசியத்தை உணர்த்தும் 'கயிறு'

துரைராசா சுரேஷின் சங்கவி பிலிம்ஸ் அளிக்கும் ஸ்கைவே பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள படம் 'கயிறு'.

இந்தப் படத்தில் நாயகனாக எஸ்.ஆர். குணாவும், நாயகியாக காவ்யா மாதவ்வும் நடித்துள்ளனர். மேலும் 'ஹலோ' கந்தசாமி, சேரன் ராஜ், பிந்து தேவி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இயக்குநர் கணேஷ் தமிழ் சினிமாவுக்கு புதியவர் அல்ல. விஜய், ஷாலினி நடிப்பில் வெளியான 'காதலுக்கு மரியாதை' மற்றும் வினயன் இயக்கத்தில் விக்ரம் நடித்த 'காசி' ஆகிய படங்களில் இணை இயக்குநராகப் பணியாற்றியவர். இது தவிர 'கண்ணுக்குள் நிலவு' மற்றும் 'ஒரு நாள் ஒரு கனவு' போன்ற படங்களின் இயக்கத்திலும் கணேஷ் பணியாற்றியுள்ளார்.




தமிழ் கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தையும் அது போற்றி பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இப்படம் உணர்த்துகிறது.

தினமும் காலையில் ஒரு இளம் காளை மாட்டுடன் வீடு வீடாக சென்று குறி சொல்லும் ஒரு பூம் பூம் மாட்டுக்காரனை பற்றியது இத்திரைப்படம். அவனுக்கு ஒரு பெண் மீது காதல் ஏற்படுகிறது. அப்பெண்ணை திருமணம் செய்ய வேண்டுமென்றால் தன்னுடைய தொழிலை விடவேண்டும் என்கிற சூழலுக்கு அவன் தள்ளப்படுகிறான். தான் மிகவும் விரும்பும் காளை மாட்டையும் அவன் இழக்க வேண்டும். இழக்க வேண்டியது அவன் தொழிலை மட்டுமல்ல, தன் தந்தை வழியாக தன்னிடம் வந்த பாரம்பரியத்தையும்தான். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமென்றால் நம் கலாச்சாரத்தின் ஒரு பழக்க வழக்கத்தையும் கைவிட்டாக வேண்டிய சூழல். இவை அனைத்தும் அவனை ஒரு இக்கட்டான சூழலுக்கு தள்ளுகிறது. அதன் பிறகு அவன் என்ன செய்கிறான் என்பது தான் படத்தின் கதை.

இப்படம் நம் கலாச்சாரத்தை போற்றி பாதுகாப்பதை பற்றி மட்டும் பேசவில்லை. மாறாக விலங்குகளிடம் அன்பாக இருப்பதன் தேவை குறித்தும் பேசுகிறது. நமது கலாச்சாரம் நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற பொக்கிஷம் என்பதை அழுத்தமாக கூறியுள்ளது திரைப்படம்.

பெண்களுக்கு சிறு வயதிலேயே திருமணம் செய்து வைக்கும் பழக்கத்தை மாற்ற வேண்டும் என்பதையும் இன்னொரு பக்கம் இப்படம் ஆணித்தரமாக எடுத்து வைத்திருக்கிறது.

மிக முக்கியமாக விலங்குகளும், பறவைகளும் தாங்கள் உயிர் பிழைத்திருக்க மனிதர்களை சார்ந்திருக்கிறது. நாம் அவற்றை துன்புறுத்த கூடாது. மாறாக, நாம் அவற்றின் மீது அன்பையும், கனிவையும் காட்ட வேண்டும் என்ற ரீதியில் பல்வேறு சமூக கருத்துக்களை இத்திரைப்படம் தன்னுள் கொண்டிருக்கிறது,

இப்படம் அமெரிக்காவில் நடைபெற்ற 'தி கிரேட் சினிமா நவ் திரைப்பட விழா'வில் சிறந்த படத்துக்கான விருது, மெக்சிகோவில் நடந்த '7 கலர்ஸ் பேச்சிலர்ஸ் சர்வதேச திரைப்பட விழா'வில் சிறந்த நடிகருக்கான விருது உள்ளிட்ட 6 சர்வதேச விருதுகளை வென்றுள்ளது. ரஷ்யாவில் நடைபெற்ற 'யூரேசியா சர்வதேச மாதாந்திர திரைப்பட விழா', 'கொலம்பியா சினிமே லேப்' மற்றும் 'இரான் சர்வதேச திரைப்பட விழா'வில் சிறந்த படத்துக்கான இறுதிப் பட்டியலிலும் இந்தக் 'கயிறு' திரைப்படம் இடம் பெற்றது.

அதுமட்டுமல்ல. 'லண்டன் சர்வதேச திரை விருது விழா', மேற்கு ஆபிரிக்காவில் நடைபெற்ற 'மலபோ சர்வதேச இசை மற்றும் திரைப்பட விழா' மற்றும் அமெரிக்காவில் நடைபெற்ற 'மாண்ட்கோமெரி சர்வதேச திரைப்பட விழா' உள்ளிட்ட பெரும் திரைப்பட விழாக்களில் சிறந்த திரைப்படத்துக்கான அதிகாரபூர்வ பட்டியலில் இடம் பிடித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சுருக்கமாக, இப்படம் உலகம் முழுவதும் நடந்த 20 திரைப்பட விழாக்களில் தன்னுடைய முத்திரையைப் பதிவு செய்திருக்கிறது.

நாயகன் 'சின்ராசு' என்னும் குணா தன்னுடைய குடும்பம் வழி, வழியாக செய்து வந்த பூம்பூம் மாட்டினை வைத்து குறி சொல்லும் வேலையை தன்னுடைய தந்தையின் இறப்புக்குப் பிறகு தானே செய்து வருகிறார்.

குணா ஒரு வீட்டில் சொன்ன குறி வார்த்தைகள் தவறிப் போனதாகச் சொல்லி அந்த ஊரின் மிராசுதார் குணாவைக் கடுமையாகத் திட்டுகிறார். கையோடு அந்த ஊரைவிட்டுப் போகச் சொல்கிறார். இல்லையெனில் அந்தத் தொழிலையே கைவிடச் சொல்கிறார்.

இதனால் கோபமடையும் குணா தனது 'கந்தன்' என்னும் தனது மாட்டை அழைத்துக் கொண்டு கண் போன போக்கிலே நடந்து வருகிறார்.

(தொடர் 22ஆம் பக்கம்)


# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

40 ஆண்டுகள்

## உயர் தொழிற்துறை தொடர்பாடலுக்கான ஆங்கில மொழி உயர்தரச் சான்றிதழ் 2020 / 2021 (பகுதி I / பகுதி II)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மொழிக் கற்கைத் துறையினர் வழங்கும் மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டமானது 02 மட்டங்களை அடிப்படையாகக் கொண்டது.

(அ) பகுதி I
இக்கற்கை நெறியானது அடிப்படை ஆங்கில மொழித் திறனை விருத்தி செய்ய விரும்புபவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) பகுதி II
இக்கற்கை நெறியானது தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதில் விசேட கவனம் செலுத்துகின்றது. இதன் மூலம் மாணவர்கள் தமது வேலைத் தளத்தில் தொழிலாற்றுவதற்கான ஆங்கில மொழியில் வினைத்திறன்களைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்விரு நிலைகளையும் பூர்த்தி செய்தவர்களுக்கே சான்றிதழ் வழங்கப்படும்.

இக்கற்கை நெறிகள் இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் நடைபெறும்

அம்பலங்கொடை, அம்பலந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம், பதுளை, பண்டாரவளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, கம்பஹா(மிரிஸ்வத்த), ஹட்டன், யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, கிளிநொச்சி, குளியாப்பிட்டிய, குருணாகல், மாத்தறை, மொனராகலை, மன்னார், பொலன்னறுவை, புத்தளம், இரத்தினபுரி, திருகோணமலை, வவுனியா

அனுமதித் தகைமைகள்

(i) விண்ணப்பதாரிகள் 18 வயதினைப் பூர்த்தி செய்தவர்களாக அல்லது அதற்கு மேற்பட்ட வயதினையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
(ii) கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில் ஏதாவது 6 பாடங்கள் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.
(iii) இக்கற்கை நெறிகளுக்கான பகுதி I / பகுதி II அனுமதியானது, 2020.11.01 ஆம் திகதி நடைபெறும் ஆங்கிலத் தரப்படுத்தல் பரீட்சையின் பெறுபேறுகளைப் பொறுத்து அமையும்.
(iv) அடிப்படை ஆங்கில கற்கை நெறியின் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்தோர் பகுதி II கற்கை நெறிக்குத் தம்மைப் பதிவு செய்து கொள்ளமுடியும். இவர்கள் தரப்படுத்தல் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதில்லை. எனினும் விண்ணப்பப் படிவத்தினை மாத்திரம் பூர்த்தி செய்து, விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படவேண்டிய இறுதி திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவே சமர்ப்பித்தல் வேண்டும்.

• இந்நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ஆங்கிலமொழி மற்றும் இலக்கியத்திற்கான டிப்ளோமா பாடநெறிக்கு அவர்களது செயற்றிட்ட திறமையின் அடிப்படையில் உள்வாங்கப்படுவார்கள்.

Apply Online Only

https://reginfo.ou.ac.lk/applyonline/என்ற எமது இணைய தளத்திற்குப் பிரவேசித்து வருவழி (Online) மூலம் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூபா 500/-
விண்ணப்பங்கள் : **20.09.2020 தொடக்கம் 20.10.2020 காலப்பகுதியினுள் ஏற்றுக்கொள்ளப்படும்**

www.ou.ac.lk என்ற இணைய தளத்தில் பிரவேசித்து, குறிப்பிட்ட பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய கைந்நூலைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பற்று / கடன் (Debit/Credit/eZ Cash mCash) அட்டை மூலம் விண்ணப்பக்கட்டணங்களைச் செலுத்த முடியும்.
பற்று / கடன் அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தை வருவழியில்(Online) சமர்ப்பித்த பின்னர் அருகிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் பணத்தைச் செலுத்தலாம். இணைய தளம் மூலம் விண்ணப்பித்தல் தொடர்பான தகவல்களை அருகிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களுக்குச் செல்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

வருவழி முறை மூலம் (Online) விண்ணப்பித்தல் தொடர்பான விபரங்களை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஏதாவது பிராந்திய அல்லது கற்கை நிலையங்களுக்குச் செல்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
கொழும்பு(நாவல), அனுராதபுரம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி(பொல்கொல்ல), மாத்தறை(நூபே), பதுளை, குருநாகல், அம்பாறை, பண்டாரவளை, கம்பஹா, காலி, அம்பலாந்தோட்டை, ஹட்டன், திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, களுத்துறை, கேகாலை, மொனராகலை, பொலன்னறுவை, புத்தளம், இரத்தினபுரி, மன்னார், குளியாப்பிட்டிய, அம்பலாங்கொடை, மாத்தளை மற்றும் வவுனியா.

மேலதிக தகவல்களுக்காகத் தொடர்பு கொள்ளவும்.
பொது தொடர்புகள் அலுவலகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட. காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை (அனைத்து பொது விடுமுறை நாட்கள் தவிர்ந்த)

ஏனைய நிலையங்களில்
காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரை (ஞாயிறு, திங்கள் மற்றும் பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த நாட்களில்)
பொதுசன தகவல் அலுவலகம் - 011-2881327/ 011-2881256

பதிவாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட


## அரசுக்கு வக்காளத்து வாங்க... (7ஆம் பக்க தொடர்)

**கேள்வி : இனப்பிரச்சனைக்கான தீர்வை இந்த அரசில் ஏற்படுத்த முடியுமா?**

**பதில் :** இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக எத்தனை அரசுகளுடன்முயற்சி செய்திருக்கிறோம்? அது நிண்ட வரலாறு. இந்த அரசினூடாக அது கிடைக்க வேண்டும் என்பது எல்லாருடைய நம்பிக்கையும் கோரிக்கையும் ஆகும். அதேபோல தீர்வு இந்த அரசினூடாக கிடைக்க வேண்டுமென்ற நம்பிக்கை எனக்கும் இருக்கிறது. அது யாப்பு மாற்றத்தினூடாக வருமென்று ஜனாதிபதியே பல தடவைகள் சொல்லியும் இருக்கின்றார். இந்தளவு காலமும் யாப்பு மாற்றம் ஊடாகத் தான் மக்களுக்கு தீர்வு கிடைக்குமென்று நம்பிக்கொண்டிருந்தோம். ஆனால் யாப்பு மாற்றத்தால் எல்லாம் தீர்ந்துவிடுமென்று கருத முடியாது.

இன்று கல்வி, வீடு வாழ்வாதாரம், என எங்களுக்கு பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் தேவை. ஆக எங்களுக்கு இன்று தேவைப்படுவது தீர்வுகளே ஒழிய ஒரு தீர்வு மட்டுமல்ல. இதில் எந்த தீர்வை முதல் எடுக்கிறோம் என்பதில் பிரச்சினையில்லை. எல்லாத் தீர்வுக்கும் நாங்கள் முயற்சி எடுப்போம். எது முதல் முதல் வருகிறதோ அதனை எடுத்துக் கொண்டு அடுத்த தீர்வை நோக்கி பயணிப்போம். கல்வியும் வேலை வாய்ப்பும் பொருளாதாரமும் வீட்டு திட்டமும் கூடத் தீர்வு தான்.

**கேள்வி : 13 ஆவது திருத்தத்தை நீக்கப் போவதாக அரச தரப்பில் சொல்லப்படுகின்ற நிலையில் உங்களது நிலைப்பாடு என்ன?**

**பதில் :** 13 ஆவது திருத்தத்தை நீக்க வேண்டுமெனச் சொல்வதென்பது ஒரு சில தனிப்பட்டவர்களுடைய கருத்து. அதைத் தான் எதிர்க்கட்சிகள் பெரிய பிரச்சாரமாக முன்னெடுக்கின்றன. ஆனால் அரசாங்கம் 13 ஆவதை நீக்கப் போவதாக எங்கேயும் சொல்லவில்லை. அதனால் இது எதிர்க்கட்சிகள் மக்களை தவறாக திசை திருப்பும் செயலாகவே நான் பார்க்கிறன்.

13 ஆவது திருத்தச் சட்டம் எமது மக்களுக்கு முழுமையாக பொருத்தமானதா இல்லையா என்பது அப்பாற்றபட்ட விடயம். ஆனால் எங்களுடைய நீண்ட கால கோரிக்கைக்கு முதற்கட்டமாக கிடைத்த தீர்வு. அதனை நாங்கள் ஏற்றுக் கொண்டு செயற்பட்டு வருகிறோம். ஆயினும் அதனை சிலர் முன்னர் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது தேர்தலில் அதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஆனால் எங்களைப் பொறுத்தவரைக்கும் 13 ஆவது திருத்தச் சட்டம் அதிகாரப் பகிர்வு என்ற விடயத்திற்குள் வருகிறது. அந்த அடிப்படையில் அதை மாற்ற வேண்டிய தேவை இருக்காது. முழுமையாக மாற்ற வேண்டியதில்லை. ஆனால் அந்தத் திருத்தத்திற்குள் மாற்றங்கள் கொண்டு வர வேண்டிய தேவை வரலாம். என்னைப் பொறுத்தவரைக்கும்இப்போதைக்கு அதைத் இல்லாமற் செய்வதற்கான எந்தவொரு நோக்ககமும் அரசாங்கத்திற்கு இல்லை என்று தான் கருதுகின்றேன்.

**கேள்வி : 20 ஆவது திருத்தம் ஜனநாயக விரோதமானது சர்வாதிகாரத்தை நோக்கியது என்று எதிர்த் தரப்புக்கள் குற்றஞ்சாட்டி வருகின்ற நிலையில் அது தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

**பதில் :** 20 ஆவது திருத்தத்திற்கு எதிராக இன்று பலரும் பலதைச் சொல்கின்றனர். ஆனால் 20 இற்கு முன்னர் 19, 18, 17 என பல திருத்தங்கள் வந்தன. இந்தச் சட்டங்களால் எங்களது வாழ்வில் ஏதாவது மாற்றங்கள் காணப்பட்டதா. இந்த திருத்த ங்கள் என்று சொலலிக்கொண்டிருப்பதெல்லாம் ஒவ்வொரு அரசாங்கம் வருகின்ற போது மேந்கொள்பவைதான்

முக்கியமாக ஜனாதிபதி பிரதமர் என்ற அதிகார இழுபறியால் நாடே ஸ்தம்பிதம் அடைந்த நிலையை பார்த்திருந்தோம். அந்தப் பாதிப்பு சாதாரண மனிதருக்கும் தெரிந்தது. ஆனால் அதே சட்டம் வேலை செய்கின்றதென்றால் அண்ணனும் தம்பியும் இருக்கிற படியால் தான். ஆனால் எதிர்காலத்திலும் இவ்வாறு சகோதரர்கள் இருக்க முடியுமா.

ஆகவே 20 ஆவது திருத்தத்தை கொண்டுவர வேண்டுமென மக்கள் அங்கீகரித்து தான் பெரும்பான்மையை அரசாங்கத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். இதைக் கொண்டு வருவோம் என்று சொல்லி தான் தேர்தலிலே போட்டியிட்டார்கள்.

**கேள்வி : உங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு என்னதை செய்யப் போகின்றீர்கள்?**

**பதில் :** எனக்கு வாக்களித்த மக்களுக்கு நிச்சமயாக நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். எனக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்கள் இருப்பது யாழ், கிளிநொச்சி மாவட்டத்தில் தான். அது என்னுடைய மாவட்டம். நான் இன்றைக்கு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராக இருக்கிறேன். எனது நோக்கம் யாழ், கிளிநொச்சி மாவட்டத்தை முன்னேற்றுவது தான். அதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பேன்.

# மனுக்கோரல் அறிவித்தல் திருத்தம் (IFB)

## பாதுகாப்பு அமைச்சு

**இலங்கை விமானப்படையின் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களுக்கான பூரண பழுதுபார்த்தல் (CAPITAL OVERHAUL), நிரல் பராமரிப்பு சேவை (PROGRAMMED DEPOT MAINTENANCE) (PDM), பிரதான பழுதுபார்த்தல்கள் (MAJOR OVERHAUL) மற்றும் சேவை காலத்தை நீடித்தல்.**

01. இது 2020 ஜூலை 12 ஆம் திகதி சிலுமின, வாரமஞ்சரி, மற்றும் சண்டே ஒப்சவர்வ் பத்திரிகைகளில் பிரசுரமான வழங்கல் விளம்பரம் தொடர்பிலாகும். அந்த விளம்பரத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மனுக்களின் முடிவுத்திகதி கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்பட்டுள்ளது.

| மனு அடையாள எண் | தகவல்கள் | மனுக்கோரல் நிறைவடையும்/ திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் | |
|---|---|---|---|
| | | நீக்கப்படுவது | சேர்த்துக்கொள்ளப்படுவது |
| AHQ/19/FR/ M17/1015 | SMH-4419 MI-171E ஹெலிகொப்டர்களுக்கான முழுமையான பழுது பார்த்தல்கள் | 2020 செப்டெம்பர் 23ஆம் திகதி 14.00மணித்தியாலம் | 2020 ஒக்டோபர் 23ஆம் திகதி 14.00மணித்தியாலம் |
| AHQ/19/FR/ M17/1016 | SMH-4429 MI-171E ஹெலிகொப்டர்களுக்கான முழுமையான பழுது பார்த்தல்கள் | 2020 செப்டெம்பர் 22ஆம் திகதி 14.00மணித்தியாலம் | 2020 ஒக்டோபர் 22ஆம் திகதி 14.00மணித்தியாலம் |
| AHQ/18/FR/ HRC/1009 | SCH-880 C-130 விமானங்களுக்கான நிரல் பராமரிப்பு சேவைகளை வழங்குதல். (PDM) | 2020 செப்டெம்பர் 23ஆம் திகதி 11.00மணித்தியாலம் | 2020 ஒக்டோபர் 23ஆம் திகதி 11.00மணித்தியாலம் |
| AHQ/17/FR/ ANT/1008 | SCM-868 AN-32B விமானத்திற்கான பிரதான பழுதுபார்த்தல்கள் மற்றும் சேவை காலத்தை நீடித்தல். | 2020 செப்டெம்பர் 22ஆம் திகதி 11.00மணித்தியாலம் | 2020 ஒக்டோபர் 22ஆம் திகதி 11.00மணித்தியாலம் |

02. விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் பரீட்சிக்கும் கால எல்லை **2020 ஒக்டோபர் 07 ஆம் திகதி வரை** வேலைநாட்களில் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

03. மனுக்களை வழங்கும் இறுதித்திகதி **2020 ஒக்டோபர் 21 ஆம்** திகதியாகும்.

04. விளம்பரத்தில் மற்றைய விடயங்களில் எவ்வித மாற்றங்களும் இல்லை.

05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களில் அதிகாரிகளை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். பிரதான வழங்கல் அதிகாரி- (தொலைபேசி- 011-2325468) அல்லது வழங்கல் அதிகாரி (மனுக்கள்) (011-2441553) அல்லது 011-2441044 நீட்டிப்பு 23569 பெக்ஸ் இல: 011-2441553 மற்றும் 011-2347694).

**விமானப்படை தலைமையகம்**
த.இல 1592.
கொழும்பு 2.

**விமானப்படை தளபதி**

# டென்டர் ஊடாக வாகன விற்பனை

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)
Company No. PB 917 PQ

| வாகன இல. | வகை மற்றும் மாதிரி | விபரம் | யார்ட் |
|---|---|---|---|
| **மோட்டார் கார்** | | | |
| NP HW- 8xxx | KIA MENTOR 1.5 - MOTOR CAR | 2000, 1498CC, PETROL, KOREA, SILVER | A |
| WP CAV -4xxx | TATA NANO TWIST XTA - MOTOR CAR | 2014, 624CC, PETROL, INDIA, HATCH BLACK | A |
| 18-2xxx | FORD LASER GHIASEDAN - MOTOR CAR | 1992, 1300CC, PETROL, JAPAN, GREEN OF BLACK | A |
| CP GH- 1xxx | NISSAN BLUE BIRED -MOTOR CAR | 1995, 1830CC, PETROL, JAPAN, MAROON | A |
| NW KP-8xxx | FIAT LINEA - MOTOR CAR | 2011, 1368CC, PETROL, INDIA, LIGHT BLUE | A |
| 14 SRI 7xxx | TOYOTA KE74- MOTOR CAR | 1984, 1500CC, PETROL, JAPAN, BLUE | A |
| WP KX-2xxx | TOYOTA PRIUS - MOTOR CAR | 2011, 1790CC, PETROL/ ELE, JAPAN, LIGHT BLUE | A |
| 15 SRI 6xxx | TOYOTA CORONA AT150 - MOTOR CAR | 1985, 1500CC, PETROL, JAPAN, SILVER | C |
| WP JW-8xxx | HYUNDAI ELANTA XD 4D A - MOTOR CAR | 2000, 1599CC, PETROL, SINGAPORE, SILVER | A |
| WP KB-5xxx | SUZUKI SWIFT DBA-ZC 115 - MOTOR CAR | 2004, 1320CC, PETROL, JAPAN, BLACK | A |
| SG CAG-2xxx | SUZUKI ALTO LXI 800 - MOTOR CAR | 2015, 796CC, PETROL, INDIA, GRANITE GREY | A |
| EP KQ-6xxx | MARUTI ZEN ESTILO - MOTOR CAR | 2011, 998CC, PETROL, INDIA, DUSKY BROWN | C |
| **மோட்டார் வேன்** | | | |
| SP DAE-4xxx | TATA SUPER ACE - DUAL PURPOSE | 2016, 1405CC, DIESEL, INDIA, WHITE | B |
| CP PU- 7xxx | MAHINDRA MAXXIMO - DUAL PURPOSE | 2012, 909CC, DIESEL, INDIA, BLACK | B |
| 59-0xxx | TOYOTA HIACE - DUAL PURPOSE | 1992, 2440CC, DIESEL, JAPAN, WHITE | B |
| NW GW-1xxx | MAZDA BONGO - DUAL PURPOSE | 1997, 1780CC, PETROL, JAPAN, SILVER | B |
| SG DAE- 2xxx | TATA XENON LIGHT TRUCK - DUAL PURPOSE | 2016, 2956CC, DIESEL, INDIA, GREEN BLACK | B |
| UP DAA-2xxx | MAHINDRA BOLLERO MAXXI TRUCK - DUAL PURPOSE | 2015, 2523CC, DIESEL, INDIA, BLACK | C |
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| WP BFO-8xxx | BAJAJ V 15 DTSI -MOTOR CYCLE | 2016, 150CC, PETROL, INDIA, BLACK MET | A |
| EP BIK- 2xxx | TVS APACHI RTR - MOTOR CYCLE | 2019, 160CC, PETROL, INDIA, METALLIC BLUE | C |
| WP BHF-7xxx | DEMARK WARRIOR - MOTOR CYCLE | 2018, 150CC, PETROL, MALAYSIA, BLACK | A |
| NE BIO-7xxx | HERO DESTINI- MOTOR CYCLE | 2019, 125CC, PETROL, INDIA, BROWN | A |
| **முச்சக்கர வண்டி** | | | |
| EP YD-7xxx | BAJAJ AR4S UG - THREE WHEELER | 2010, 173.5CC, PETROL, INDIA, ECO GREEN | C |
| NW AAP -0xxx | BAJAJ RE - THREE WHEELER | 2014, 198.88CC, PETROL, INDIA, ECO GREEN | A |
| EP AAL-6xxx | BAJAJ RE 205 - THREE WHEELER | 2013, 198.75CC, PETROL, INDIA, JET BLACK | C |
| EP YH-3xxx | BAJAJ RE 205 - THREE WHEELER | 2010, 198.75CC, PETROL, INDIA, ECO GREEN | C |
| WP-YE-4xxx | TVS KING - THREE WHEELER | 2010, 200CC, PETROL, INDIA, BRIGHT RED | A |
| **மோட்டார் லொறி** | | | |
| WP LL- 1xxx | LANKA ASHOK LEYLAND COMMET TIPPER 1613 - MOTOR LORRY | 2011, 6540CC, DIESEL, INDIA, YELLOW | B |
| **மோட்டார் லொறி** | | | |
| 934xxx | AIRMAN PDS 175 S - AIR COMPRESSOR | 2015, JAPAN | A |

**மேலே குறிப்பிட்ட வாகனங்களை பரிசீலிக்கும் இடம்:**

**முற்றம் "A"**
இல. 01, ஸ்ரீ மஹா விஹார வீதி,
பாமன்கட, தெஹிவளை,
(ஸ்ரீ மஹா விஹாரயின் உள்ளே)
விசாரணை: **0117 209 358**
சுரன்ஜித் - **0763241184**
ஜெராட் **0760 651 294**

**முற்றம் "B"**
இல. 344, ஸ்ரீ மங்கலவத்த,
மம்பே, பிலியந்தல.
சுரன்ஜித் **0763 241 184**
ஜெராட் **0760 651 294**

**முற்றம் "C"**
12வது மைல்கல்,
கல்முனை வீதி,
வலதபிடிய, அம்பாறை
தமித் **0769 665 224**


கேள்வி பத்திரங்களை மீள செலுத்தப்படாத கட்டணமான ரூ. 400/- ஐ செலுத்தி வாகன முற்றத்திலிருந்து பெறலாம். பூரணப்படுத்தப்படாத கேள்வி பத்திரங்களும், கேள்வி பத்திரங்களின் ஊடாக கோரப்படாத மனுக்களும் நிராகரிக்கப்படும்.

**2020 செப்டெம்பர் 20 (ஞாயிறு) முதல் செப்டெம்பர் 24ம் திகதி (வியாழன்) வரை**
**மு.ப. 8.30-பி.ப. 5.00 வரை**

**24ம் திகதி செப்டெம்பர் 2020 பி.ப. 5.00 மணிக்கு டென்டர் மூடப்படும்**

**விசாரணைகள்:** தலைமை - மீள்பெறுகை,
**சியபத்த பினான்ஸ் பீஎல்சீ,**
சயுரு செவன, இல. 46/12, நவம் மாவத்தை, கொழும்பு 02.
தொலைபேசி: **011 7 605 605** நீட்சி. **1104**

எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தல் இன்றி ஏலவிற்பனையிலிருந்து விலக்கி கொள்ள கம்பனிக்கு உரிமையுண்டு

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
App Store Google play Windows Store

Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

# 'அரசுடமையான பாரிய விற்பனை நிலைய வலையமைப்புடன் இணையுங்கள்'

## முகாமைத்துவ உதவியாளர் (MA 1 – 2)

**தகைமைகள்:**

**வெளிவாரி அபேட்சகர்கள்**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

க.பொ.த (உ/த) பரீட்சையில் (பொதுப் பரீட்சை தவிர) மூன்று பாடங்களில் சித்தி.

**உள்வாரி அபேட்சகர்கள்:**

தேர்ச்சி பெற்ற - ஆரம்ப நிலை, பகுதி தேர்ச்சி பெற்ற - ஆரம்ப நிலை மற்றும் தேர்ச்சி பெறாத - ஆரம்ப நிலை கொண்ட பின்வரும் தகைமைகள் உடையவர்கள் விண்ணப்பிக்க தகுதி பெறுகின்றனர்.

**கல்வி:**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், கணிதம் ஆகிய பாடங்களுடன் இரு திறமை சித்திகள் கொண்டதாக ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**மற்றும்**

மேலுள்ள ஊழியர்கள் பிரிவுகளின் கீழ் குறைந்தது ஐந்து 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**உடன்**

IT பதவிக்கு தொடர்புடைய எந்த ஒரு சான்றிதழ் கற்கையிலும் (குறைந்தது ஆறு மாதங்கள்) ஓரளவு தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
(உள்வாரி அபேட்சகர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:** அடிப்படை சம்பளம் ரூபா 27,910/=
(அரசாங்கத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்)

**சம்பள அளவு:** MA 1-2-2016 ரூபா (27,910 —10 x 300 - 7 x 350 - 12 x 600 - 12 x 710 - 49,080)

## அலுவலக உதவியாளர் (PL – 1)

**தகைமைகள்:**
**வெளிவாரி அபேட்சகர்கள்:**
க.பொ.த. (சா/த) பரீட்சையில் தோற்றியோர்
**வயது:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:**
அடிப்படை சம்பளம் ரூபா 24,750/= (அரசாங்கத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்)
**சம்பள அளவு:** PL 1 – 2016 ரூபா (24,750 –10x250— 10x270 - 7 x300 - 15 x330 - 37,000)

## களஞ்சிய உதவியாளர் (PL – 1)

**தகைமைகள்:**
**வெளிவாரி அபேட்சகர்கள்:**
க.பொ.த. (சா/த) பரீட்சையில் தோற்றியோர்
**வயது:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:**
அடிப்படை சம்பளம் ரூபா 24,750/= (அரசாங்கத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்)
**சம்பள அளவு:** PL 1 – 2016 ரூபா (24,750 –10x250— 10x270 - 7 x300 - 15 x330 - 37,000)

**எல்லா விண்ணப்பதாரர்களும்,**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு மற்றும் பதவியின் பணிகளை மேற்கொள்ளும் உடல் மற்றும் உளத் தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

உங்களுக்கு சரியான தகைமைகள் மற்றும் அனுபவம் இருந்தால் சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்களது சுயவிபரக் கோவையை இந்த விளம்பரத்தின் 14 நாட்களுக்குள் பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கவும். (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்).

(தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்களுடன் மாத்திரமே நிறுவனம் தொடர்பு கொள்ளும்)

**தலைவர்**
**லங்கா சதொச லிமிடட்,**
**இல. 27, CWE செயலகக் கட்டடம்,**
**வொக்சல் வீதி, கொழும்பு 02.**

வர்த்தக அமைச்சு
குறைந்த விலையில் உங்களிடத்தில்
லங்கா சதொச LANKA SATHOSA

**திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆய்வுகள் மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சு**
**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை**

# கைத்தொழில் பயிற்சியை பூர்த்தி செய்த பட்டதாரி மற்றும் டிப்ளோமா விண்ணப்பதாரிகளின் இறுதி மதிப்பீட்டுப் பரீட்சை சபைக்காக வெளி வளங்கள் பங்களிப்பு குழாம் ஒன்றிற்கு தகைமையுள்ள புலமைவாய்ந்த தொழில்சார்ந்தவர்களைப் பதிவு செய்து கொள்ளல்

NAITA

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் (NAITA) 1990 இலக்கம் 20 மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் அதிகாரத்தின் பிரகாரம் பல்கலைக்கழகம் மற்றும் வேறு உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர்களுக்கான கைத்தொழில் பயிற்சி (Industrial Training) வழங்குதல் இடம்பெறும்.

மேற்படி கல்வி நிறுவனங்களின் மாணவர்களின் கைத்தொழில்மய பயிற்சியின் இறுதியில் நடத்தப்படும் மதிப்பீடு (Assessment) விடயங்கள் எமது அதிகாரசபை மற்றும் அக்கல்வி நிறுவனங்களைக் கொண்ட மதிப்பீட்டு பரிசீலனை கமிட்டி (Assessment panel) மூலம் இடம்பெறும் அம்மதிப்பீட்டுக் குழுவின் தேவைப்பாட்டின் அடிப்படையில் எமது அதிகார சபையை பிரதிநிதித்துவப்படுத்தி சமுகமளிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள புலமை வாய்ந்த தொழில்சார்ந்தவர்களைக் கொண்ட வெளி மதிப்பீட்டாளர்களின் குழாம் (External Assessment panel Member pool) ஒன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் பாடத்துறை/பாடங்களுக்காக மதிப்பீட்டாளர்களாக இணைந்துகொள்வதற்கு விரும்பும் புலமைவாய்ந்த தொழில்சார்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| விண்ணப்பிக்க முடியுமான பாடத்துறை/பாடங்கள் | பதிவிற்கான தகைமைகள் |
|---|---|
| 01. சிவில் பொறியியலாளர் (Civil Engineering) | பல்கலைக்கழகத்தின் மானியங்கள் ஆணைக் குழுவில் பதிவுசெய்துள்ள பாடத்துறையுடன் சம்பந்தப்பட்டதாக பெற்றுக் கொண்ட பொறியியல் பட்டத்துடன் குறித்த துறையில் 03 வருட அனுபவம் அல்லது NDT/HNDE/NDES/NVQ Level 6 அல்லது அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் அல்லது வேறு நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொண்ட டிப்ளோமா சான்றிதழுடன் குறித்த துறையில் 05 வருட அனுபவம். |
| 02. அளவு மதிப்பீட்டாளர் (Quantity Surveying) | |
| 03. மின் பொறியியலாளர் (Electrical Engineering) | |
| 04. இலத்திரனியல் மற்றும் தொலைதொடர்பு பொறியியலாளர் (Electronic Telecommunication Engineering) | |
| 05. இயந்திர பொறியியலாளர் (Mechanical Engineering) | |
| 06. இரசாயன மற்றும் செயற்பாட்டு பொறியியலாளர் (Chemical & Process Engineering) | |
| 07. கடற்பொறியியலாளர் (Marine Engineering) | |
| 08. பொருள் விஞ்ஞான பொறியியலாளர் (Meterial Science Engineering) | |
| 09. Aeronautical Engineering | |
| 10. உயிரியல் விஞ்ஞான பொறியியல் (Biomedical Engineering) | |
| 11. விவசாயம் (Agriculture) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவுசெய்துள்ள பாடத்துறைகளுடன் சம்பந்தப்பட்டதாக பெற்றுக்கொண்ட பட்டத்துடன் குறித்த துறையில் 03 வருட அனுபவம் அல்லது NDT/HNDE/NDES/NVQ Level 6 அல்லது அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது வேறு நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட டிப்ளோமா சான்றிதழுடன் குறித்த துறையில் 05 வருட அனுபவம். அல்லது பாடத்துறை/பாடங்களுடன் சம்பந்தப்பட்டதாக அரச அல்லது தனியார் துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உயர் முகாமைத்துவத் தரத்தில் 10 வருடத்திற்கு மேற்பட்ட தொழில்சார் அனுபவம். |
| 12. துணிமணி மற்றும் ஆடையக தொழில்நுட்பம் (Textile & clothing Technology) | |
| 13. தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்பம் (Information & Communication Technology) | |
| 14. முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் (Management & Accountancy) | |
| 15. பொலிமர் தொழில்நுட்பம் (Polymer Technology) | |
| 16. போக்குவரத்து மற்றும் வழங்கல் முகாமைத்துவம் (Transport & Logistics Management) | |
| 17. ஹோட்டல் மற்றும் சுற்றுலா (Hotel & tourism) | |
| 18. அழகியற்கலை (Cosmetology) | |
| 19. பொதுசன ஊடகம் (Mass Media) | |
| 20. சமூக விஞ்ஞானம் (Social Science) | |


இம்மதிப்பீட்டு விடயங்கள் நாட்டின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக நடைபெறுவதுடன், அதற்காக பங்குபற்றும்போது நாளாந்த கொடுப்பனவொன்று செலுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

**விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் விண்ணப்பித்தல்**
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் www.naita.gov.lk என்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். சரியாக பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் மற்றும் கல்வி, தொழிற்பயிற்சி அனுபவத்தை உறுதிசெய்யக்கூடிய சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் உதவிப்பணிப்பாளர் (விசேட கைத்தொழிற்பயிற்சி) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, இல-971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கட, ராஜகிரிய என்ற முகவரிக்கு 2020.10.07ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெளி வளங்களின் பங்களிப்பு குழாமிற்கு பதிவுசெய்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்களை மின் அஞ்சல் மூலம் அனுப்புவதாயின் விண்ணப்பத்துடன் கல்வி, தொழில்சார் அனுபவத்தை உறுதி செய்யும் சான்றிதழ்களின் ஸ்கேன் பிரதிகளை naitaindustrialtraining@gmail.com என்ற மின் அஞ்சலுக்கு அனுப்பலாம்.

**தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள்**
**லலித் நிரோஷன் - 0714553736**
**எஸ்.பி.டி அனுராதா - 0710542999**
**0112888782 EXT-601,602**

**தலைவர்**
**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை**
**971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த**
**வெலிக்கட, ராஜகிரிய**




## புதிய போக்குவரத்து கட்டுப்பாடுகள்:



# சாலை ஒழுக்கமுடைய சமூகத்தை உருவாக்க வேண்டும்

**' இலங்கையிலே பெண்கள் தொழிற்படையில் பங்கு கொள்ளும் வீதம் குறைவாக உள்ளமைக்கு பாதுகாப்பான நம்பகரமான போக்குவரத்து முறைமையொன்று இல்லாமை முக்கிய காரணியாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. எனவேதான் சிறந்த ஒரு போக்குவரத்து முறைமை ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாத ஒன்றாகப் பார்க்கப்படுகிறது '**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வினைத்திறன் மிக்க உட்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. குறிப்பாக நேர்த்தியான வினைத்திறன் மிக்க ஒரு போக்குவரத்து முறைமை மிக அத்தியாவசியமான உட்கட்டமைப்பாகும். மூலப்பொருள்களை, உற்பத்தித் தானங்களை நோக்கி நகர்த்தவும் முடிவுப்பொருள்களை சந்தைகளை நோக்கி நகர்த்தவும் சேவைகளை வினைத்திறனாக உரியகாலத்திற்கு வழங்கவும் பயணிகளையும் ஊழியர்களையும் சேவை நிலையங்களுக்கு நேரகாலத்துடன் வசதியாக உடல் உள அழுத்தங்களின்றி கொண்டு செல்லவும் நேரகாலத்திற்கு இயங்கும் சுத்தமான பாதுகாப்பான வசதியான உள்நாட்டுப் போக்குவரத்து முறைமையொன்று இன்றியமையாததாகும்.

இலங்கை போன்றதொரு சிறிய தீவில் நெடுந்தூரம் பயணிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. ஆயினும் சிறிய தூரத்தைப் பயணிக்கவும் அதிகநேரம் எடுக்கும் அவலம் இற்றைவரை நிலவுகிறது. இன்றைய தேவைக்கு ஏற்ற முறையான போக்குவரத்து முறைமையொன்று உருவாக்கப்படாமையே இன்றைய அவல நிலைக்கான முக்கிய காரணமாகும்.

சுத்தமான முறையான நேரசூசிக்கமைய இயங்கும் வசதியான பொதுப் போக்குவரத்து முறைமையொன்று கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளிலே அறிமுகப்படுத்தப்படுமாயின் தனிப்பட்ட மோட்டார் வாகனங்களின் பயன்பாட்டையும் முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களின் பயன்பாட்டையும் கணிசமாகக் குறைக்கலாம்.

அதன்மூலம் நாளாந்தம் வாகன நெரிசலில் எரியும் எரிபொருளுக்கான செலவையும் விரயமாகும் வேலை மணித்தியாலங்களையும் எரிபொருள் தகனத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் மாசுபாட்டையும் அதேபோல் நெரிசல் காரணமாகப் பயணிகளுக்கும் வாகன சாரதிகளுக்கும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் காவல்துறை அதிகாரிகளுக்கும் ஏற்படும் உடல் பாதிப்புகளையும் மன அழுத்தங்களையும் குறைக்கலாம்.

வாகன நெரிசலில் சிக்கி உரியநேரத்திற்கு வேலைக்கு வரமுடியாமல் பிந்திவரும் ஊழியர்களும் நெரிசல் மிகு பொதுப்போக்குவரத்தில் நசுங்கிப் பிதுங்கிக் கசங்கி நொந்து நூலாகி சேவைக்கு வருபவர்களும் நல்ல மனநிலையில் தத்தமது உத்தியோகக் கருமங்களை வினைத்திறனாகச் செய்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. அது உற்பத்தித் திறனைப் பாதித்து பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகமாக மாறும்.

அதேபோல் ஒருநாள் வேலை நேரத்தின் பின்னர் அதே போக்குவரத்து நெரிசலில் சிக்கி அயர்ந்து தாமதமாக வீடு திரும்புபவர்களின் குடும்ப வாழ்க்கையும் நீண்டகாலப் பாதிப்புக்களைச் சந்திக்கும். குறிப்பாக இலங்கையிலே பெண்கள் தொழிற்படையில் பங்கு கொள்ளும் வீதம் குறைவாக உள்ளமைக்கு பாதுகாப்பான நம்பகரமான போக்குவரத்து முறைமையொன்று இல்லாமை முக்கிய காரணியாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. எனவேதான் சிறந்த ஒரு போக்குவரத்து முறைமை ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாத ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

மேலை நாடுகளிலும் ஆசியாவில் ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் காணப்படும் வினைத்திறனான பொதுப் போக்குவரத்துச் சேவை அந்நாடுகளின் உற்பத்தித்திறன் அதிகரிப்பிற்கும் நேரமுகாமைத்துவ முன்னேற்றத்திற்கும் பெரும் பங்காற்றியுள்ளது. காலையில் காரியாலயத்திற்கு வருகைதர முன்னர் பொதுப்போக்குவரத்தில் பயணிக்கும் போதே மடிக்கணணியில் அன்றைய நாளுக்குரிய வேலையின் கணிசமான பகுதியை செய்துவிடுபவர்களை நாம் காண்கிறோம். அந்நாடுகளில் காலம் என்பது ஒரு முக்கிய காரணியாகப் பார்க்கப்படுகிறது. அதனை விரயம் செய்ய அவர்கள் விரும்புவதில்லை. ஒருசில நிமிடங்கள் ஒரு பேரூந்தோ அல்லது தொடரூந்தோ தாமதமானாலும் கூட அது முக்கியமான ஒரு குறைபாடாகக் கருதி உடனடியாக உரிய அதிகாரிகளுக்கு முறையிடப்படுகிறது. இலங்கையிலோ எந்தஒரு நிகழ்வுக்கும் காலதாமதமாகச் செல்வது கௌரவத்தின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது.

அப்போதுதான் திடீரென விழித்துக் கொண்டதுபோல் போக்குவரத்தை முன்னேற்றுவதற்காக அவ்வப்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஒருசில நாட்களுக்கு அல்லது வாரங்களுக்கு மட்டும் நடைமுறைப்படுத்தப்படுவதும் அதன் பின் மறந்துபோய் வேதாளம் மீண்டும் முருங்கைமரம் ஏறுவதும் பழகிப்போய்விட்ட ஒரு சேதிதான்.

இப்போது கொழும்பு மற்றும் புறநகர்களின் சில வீதிகளில் மீண்டும் நடைமுறைக்கு வந்திருக்கின்ற வீதி ஒழுங்கை விதிகளும் இத்தகைய வகையினவாகும்.

முன்னர் பேருந்துகள் வீதியின் இடப்புற ஒழுங்கில் பயணிக்க வேண்டும் எனக் கூறப்பட்டது. ஆனால் பாதையின் இரண்டு ஒழுங்குகளிலும் சமாந்தரமான ஓட்டப்பந்தயம் நடத்தும் பேரூந்துகளை காலி வீதியிலும் ஏனைய பிரதான வீதிகளிலும் காணமுடிந்தது. இப்போது முன்னர் பாதையின் இடதுபுறத்தில் வழங்கப்பட்டிருந்த பேருந்து முன்னுரிமை ஒழுங்கில் முச்சக்கர வண்டிகளும் மோட்டார் சைக்கிள்களும் செல்லப் பணிக்கப்பட்டுள்ளது. அதனை எதிர்த்து பேருந்துகள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாகவும் தகவல்கள் கசிகின்றன. சிலர் அதனை தனிப்பட்ட மோட்டார் வாகனங்களில் செல்லும் மேட்டுக்குடி வர்க்கத்திற்கு சாதகமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையாக சித்தரிக்க விரும்புகின்றனர்.

உண்மையில் போக்குவரத்துச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி உரிய ஒழுங்கில் ஒன்றன் பின் ஒன்றாக வாகனங்கள் செல்லுமாயின் நெரிசலின் நேரத்தைக் குறைக்க முடியும். உரிய ஒழுங்கில் செல்லாமை ஒழுங்குகளை அடிக்கடி மாற்றி முந்திச் செல்ல முயற்சிக்கின்றமை சமிக்ஞை விளக்குகளின் முன்னே சென்று குவிகின்றமை வீதியின் குறுக்காக நிறுத்துகின்றமை போன்றவை நெரிசல் ஏற்படக் காரணமாகின்றன. முச்சக்கர வண்டிகள் பேருந்துக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்ற வாகனங்களே நெரிசலை பெரும்பாலும் ஏற்படுத்துகின்றன. போட்டிக்கு ஓடும் பேருந்துகள் துண்டுகளை பொறுக்குவதற்காக பேயோட்டம் ஓடுகின்றன. பின்னால் வரும் வாகனம் முந்திச் செல்லாதவாறு குறுக்காக நிறுத்திப் பொறுக்குகின்றன. அவற்றுக்குத் தரித்துச் செல்ல உரிய இடங்களும் முறையான நேரசூசிகைகளும் இருந்தபோதிலும் அவற்றையெல்லாம் பெரிதாக எவரும் அலட்டிக்கொள்வதில்லை.

முச்சக்கர வண்டிகளோ மிகச்சிறிய ஒரு இடம் கிடைத்தாலும் முன்னே சென்று செருகுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும். அவ்வாறு முன்னே சென்று செருகுவதால் ஏற்படும் நெரிசலையும் காலதாமதத்தையும் ஒருபோதும் சிந்திப்பதில்லை. ஏதோ பிறவிப் பெருங்கடலைத் தாண்ட அவசரமாக ஓடுவதைப்போல உலகம் பிறந்தது எனக்காக இந்த வீதி இருப்பது என் ஒருவனுக்காக என்ற பாணியிலான முச்சக்கர வண்டிகளின் ஓட்டம் நெரிசலுக்கு முக்கிய பங்களிப்பு செய்கின்றது. பேவ்மன்ட்களிலும் நேக்காக ஓடி சிக்சாக் ஆட்டம் காட்டும் மோட்டார் சைக்கிள் சாரதிகள் நெரிசலுக்கு முக்கிய பங்களிக்கும் மூன்றாவது வகை. ஏனைய வாகன வகையறாக்களை அதற்கடுத்தடுத்த கட்டங்களில் சேர்த்துக் கொள்ளலாம்.

முச்சக்கர வண்டிகள் உற்பத்தி செய்யப்படும் இந்தியாவின் டெல்லி நகரத்திலேயே முச்சக்கரவண்டிகள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. இலங்கையிலும் கொழும்பு நகருக்குள் அவற்றைத் தடைசெய்தால் நிச்சயம் நெரிசல் குறைவதுடன் கொழும்பு நகரின் வளி மாசுபாட்டை கணிசமானளவு குறைக்கலாம். அவற்றுக்குப் பதிலாக சிறிய மோட்டார் வாகனங்களை பதிலீடு செய்ய ஊக்குவிக்கலாம். மோட்டார் சைக்கிள் சாரதிகள் போக்குவரத்து விதிமுறைகளை கடுமையாகப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படலாம்.

இப்போது அறிமுகமாகியுள்ள இடப்பக்க ஒழுங்கில் செல்லும் நடைமுறையும் வரவேற்கத்தக்கது.

ஒரேயோரு பிரச்சினை யாதெனில் அந்த ஒழுங்கையில் பேயோட்டம் ஓடும் பேருந்துகளில் இருந்து இவர்களை எவ்வாறு பாதுகாப்பது என்பதுதான். பேருந்துக்கள் அவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தரிப்பிடத்தில் சரியாகத் தரித்துநின்று பயணிகளை ஏற்றுவதை காவல் துறையினர் முறையாகக் கண்காணிக்க வேண்டும். அத்தகைய நிறுத்தங்களில் ஒளிப்படக் கருவிகளை பொருத்துவதன் மூலம் விதிகளை மீறும் பேருந்துகளைத் தண்டிக்க முடியும். தாம் கண்காணிக்கப்படுகிறோம் என்பது தெரிந்தால் சாரதிகளின் விதி மீறலைத் தடுக்கவும் முடியும்.

எவ்வாறாயினும் வீதியின் முன்னால் ஒரு காவல்துறை அதிகாரி இருந்தால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்று வாகன சாரதிகள் பொதுவாகச் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். காவல் அதிகாரி இல்லாவிட்டால் எங்காவது புகுந்து வாகனங்கள் முன்னே சென்றுவிடும் என்பதே இதன் பொருள். ஆனால் சாலை ஒழுக்கமுடைய ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். இந்தச் சிறிய நாட்டில் இதனைச் செய்ய முடியாதாயின் அதை ஒரு பலவீனமாகவே பார்க்கப்பட வேண்டும். சட்டங்கள் மூலம் அதனை முற்றாகச் செய்துவிட முடியாது. மனமாற்றமே இங்கு தேவைப்படுகிறது. ஒருபுறம் நாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளது. ஆனால் பாதைகளின் அளவோ அவ்வாறு அதிகரிக்கப்பட முடியாதது.

எனவே நகர்ப்புறங்களிலே பொதுப் போக்குவரத்தை மேம்படுத்தி விருத்தி செய்வதும் உப நகரங்களையும் கிராமங்களையும் விருத்தி செய்து பொருளாதார மற்றும் நிருவாக நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதன் மூலமும் நகரங்களை நோக்கிய மக்களின் நடமாட்டத்தைக் குறைக்கலாம். நீண்டகால ரீதியில் நிலைபேறுடைய போக்குவரத்து முறையொன்றின் தேவை முன்னொருபோதுமில்லாதவாறு இப்போது உணரப்பட்டுள்ளது. அதனை சாலைவிதிக் கட்டுப்பாடுகள் மூலம் முற்றிலும் தீர்த்துவிட முடியாது.

## இருதுருவ உலக ஒழுங்கை நோக்கி

# சீன, அமெரிக்க உறவு?

சீன அமெரிக்க உறவானது இருதுருவ அரசியல் வடிவத்தை நோக்கியதாக மாறிவருகிறது. வரத்தகப் போரில் ஆரம்பித்து படிப்படியாக அரசியலிலும் இராணுவத்திலும் இராஜதந்திரத்திலும் அத்தகைய மோதல் வலுத்துவருகிறது. தவிர்க்க முடியாது இரு அணிகளை உருவாக்கும் உத்தியில் இரு அரசுகளும் செயல்பட ஆரம்பித்துள்ளன. அதில் அமெரிக்காவைக் காட்டிலும் சீனாவே முதன்மையான போக்கினை கொண்டு இயங்குகிறதை அவதானிக்க முடிகிறது. சீனா கொரனோவுக்கு பின்பான உலக ஒழுங்கை தனித்த நிர்வகிக்க திட்டமிட்ட போதும் ஐரோப்பாவும் அமெரிக்காவும் அதற்கான உத்திகளை முறியடித்து வருவதனால் உடனடியாக இரு துருவ உலக ஒழுங்கையாவது நிலைநிறுத்தும் நோக்கில் சீனா இயங்க ஆரம்பித்துள்ளது. சீனாவின் நகர்வுகளுக்கு அமெரிக்கா வாய்ப்புக்களை வழங்குவது போலவே சமகாலப் போக்கு காணப்படுகிறது. இக்கட்டுரையும் இரு சக்திகளதும் போக்கினை தேடுவதாக அமையவுள்ளது.

முதலில் சீனாவின் அமெரிக்கா மீதான குற்றச்சாட்டினை நோக்குவது பொருத்தமானது. சர்வதேச ஒழுங்கு மற்றும் உலக அமைதிக்கு அமெரிக்கா மிகப்பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக சீன இராணுவம் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளது. இது பற்றி சீன இராணுவ அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் வு கியான் கூறுகையில் பிராந்திய அமைதியின்மையைத் தூண்டுவது சர்வதேச ஒழுங்கை மீறுவது உலக அமைதியை அழிப்பது அமெரிக்காதான் என்பதை பல ஆண்டுகளாக வெளிவந்துள்ள சான்றுகள் காட்டுகின்றன. கடந்த இருபது ஆண்டுகளாக ஈராக் சிரியா லிபியா மற்றும் ஏனைய நாடுகளில் அமெரிக்காவின் நடவடிக்கையினால் எட்டு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதோடு கோடிக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். தன்னைப்பற்றி சிந்திப்பதற்கு பதிலாக அமெரிக்கா சீனாவின் இயல்பான பாதுகாப்பு மற்றும் இராணுவக் கட்டுமானம் பற்றி தவறான கருத்துக்களை வெளியிட்டு வருகிறது

அண்மையில் சீனாவின் இராணுவ வெளியுறவு மற்றும் பொருளாதாரம் தொடர்பில் பென்டகன் காங்கிரஸுக்கு வழங்கிய அறிக்கை தொடர்பிலேயே இத்தகைய கருத்தினை சீன இராணுவம் வெளிப்படுத்தியிருந்தது. அது மட்டுமன்றி சீனாவிலுள்ள அனைத்து இராஜதந்திரிகளுக்கும் கட்டுப்பாடு விதிக்கப்படும் என சீன வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இதற்கு சீனா கூறும் காரணம் அமெரிக்கா சீன இராஜதந்திரிகள் மீது விதித்த கட்டுப்பாடுகளுக்கு பதிலளிப்பதாகவும் அமெரிக்காவின் அந் நடவடிக்கைகளை விலக்கிக் கொள்ள அழுத்தம் கொடுப்பதாகவுமே அமையும் எனத் தெரிவித்துள்ளது. குறிப்பாக அமெரிக்காவின் தடைகள் அதிகம் சீனாவுக்கு நெருக்கடியானதாக அமைந்திருப்பதுடன் இரு நாடுகளுக்குமான உறவின் முழுமையும் பாதிக்க கூடியதாக அமைந்துள்ளதேயாகும். அதாவது அமெரிக்காவிலுள்ள சீனத் தூதரக அதிகாரிகள் அங்குள்ள பல்கலைக்கழகங்களுக்கு வருகைதர முன் அனுமதி பெற வேண்டும் எனவும் கலாசார நிகழ்வுகளுக்காக 50 மேற்பட்டவர்கள் ஒன்று கூடுவதற்கு முன்அனுமதி பெறவேண்டும் எனவும் உள்ளூர் அதிகாரிகளுடனான சந்திப்புகளை முன்அனுமதி பெற்றே நடாத்த வேண்டும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துள்ளது.

இது மட்டுமன்றி அமெரிக்கத் தரப்பு சீனாவுக்கு எதிரான ஆசிய அணியொன்றை உருவாக்குவதில் முனைப்புக் கொண்டு செயல்படுகிறது. குறிப்பாக அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் மைக் பாம்பியோ சீனாவின் அத்துமீறிய நடவடிக்கைக்கு எதிரான ஆசிய நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். தென்சீனக் கடல் பகுதியில் செயற்கைத் தீவுகளை அமைத்துவரும் 24 நிறுவனங்களை அமெரிக்கா தடை செய்தமையை அடுத்து ஆசிய நாடுகள் அந்த நிறுவனங்களுடன் உறவினை



முறித்துக் கொள்ள வேண்டும் என பாம்பியோ இணைய வழி உரையாடல் மூலம் 10க்கும் மேற்பட்ட தென்கிழக்காசிய நாடுகளிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும் போது சீனக் கம்யூனிஸக்கட்சி நம்மையும் நம் மக்களையும் மிதித்து செல்ல அனுமதிக்காதீர் என தெரிவித்தார். ஆனால் அமெரிக்காவின் கோரிக்கையை முன்கூட்டியே நிராகரித்த பிலிஸ்பைன்ஸ் சீனாவின் முதலீகள் தமக்கு அவசியமானவை என்பதை வலியுறுத்தியுள்ளது.

எனவே இரு தரப்பு முரண்பாடுகளை நோக்கும் போது பரஸ்பரம் மோதல் போக்குக்கான ஆரம்பமாக தெரிகிறதா என்று எண்ணம் தோன்றுகிறது. மாறாக அமெரிக்காவின் நடவடிக்கைகள் சீனாவை சீண்டுவதன் மூலம் ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டுள்ளதா என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும். காரணம் கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் அமெரிக்கா சீனாவுக்கு எதிரான கோசங்களை முதன்மைப்படுத்திவிட்டு ஆட்சியில் அமர்ந்ததும் சீனாவுடனான நட்பினை பேணுவதில் கரிசனை கொண்டவராக ட்ரம்ப் காணப்பட்டார். அதனாலேயே அதற்கான வாய்ப்புப் பற்றிய உரையாடல் பொதுத் தளத்தில் ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் புதிதாக ஜனாதிபதியாக ஜோ பிடன் தேர்ந்தெடுக்கப்பட்டால் நிலைமை சீனாவுக்கு எதிரானதாக அமைய வாய்ப்புள்ளதாக சொல்லப்பட்டாலும் நடைமுறையில் ஜனநாயகக் கட்சியின் போக்கு தந்திரோபாய ரீதியானதாக அமைய வாய்ப்புள்ளது. அதனை அடிப்படையாக் கொண்டு பார்க்கும் போது சீனாவுடனான உறவு சுமூகமடைய வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. ஆனால் அது ஆபத்துமிக்கதாக அமைய வாய்ப்புள்ளது. ஆனால் சீனா அமெரிக்காவின் புதிய ஜனாதிபதிக்கு முன்பே இருதுருவ உலக ஒழுங்கை நிறுவ அதிகம் விரும்புகிறது. அல்லது ட்ரம்ப்ன் இரண்டாவது ஆட்சிக்காலத்தை சாத்தியப்படுத்த விரும்புகிறது. அதனால் அதிக அமெரிக்க எதிர்ப்புவாதத்தை வெளிப்படுத்துகிறது.

வெளிப்படையாகப் பார்க்கும் போது இரு நாடுகளும் மோதிக் கொண்டாலும் அடிப்படையில் ஆட்சியாளரதும் தேசங்களதும் நலன்கள் சாத்தியமான வழிமுறைக் கூடாக நகர்த்தப்படுகிறது. அதில் அமெரிக்க ஆட்சியாளர்களைப் போல் அல்லாது சீனர்கள் ட்ரம்ப்பின் நெருக்கடியான காலத்தை பயன்படுத்திக் கொண்டு சீனாவின் நலன்களை நிறைவு செய்வதில் வெற்றி கண்டுவருகின்றன. சீனப் பொருளாதாரம் வளர்ச்சிப் போக்கினை எட்டியுள்ளமையும் இராணுவ ரீதியில் இந்தியாவைக் கையாளுவதுடன் நின்றுவிடாது தென் சீனக்கடல் பகுதியை ஆதிக்கம் செய்வதுடன் விண்வெளியிலும் கணிசமான மாற்றங்களை நகர்த்தி வருகிறது. குறிப்பாக அண்மையில் 09 செயற்கைக் கோள்களை ஒரு கப்பலிலிருந்து சீனா வெற்றிகரமாக ஏவியது. இவ்வாறு பல மாற்றங்களை எட்டிவரும் சீனா அமெரிக்காவுடனும் இந்தியாவுடனும் மோதாது செயல்படுவதுடன் ஒரு கொதிநிலை அரசியலை அரங்கேற்றி வருகிறது. அது ஏறக்குறைய பனிப்போர்க்காலச் சூழலை நினைவுகொள்வதாக தெரிகிறது. அது தெளிவான பனிப்போராக அமையாது விட்டாலும் இரு தரப்புக்குமான இரு துரவ அரசியலுக்கான ஆரம்பமாகவே தெரிகிறது.

எனவே அமெரிக்க சீன முரண்பாடு வெளிப்படையாக இருதுருவ அரசியலை நோக்கியதாக அமைந்துள்ளது. அதில் அமெரிக்காவை விட சீனாவே அதிகம் முனைப்புக் கொண்டதாக தெரிகிறது. சீனாவுக்கு உடனடியாக இல்லாது விட்டாலும் எதிர்காலத்தில் ஒரு இரு துரவ அரசியல் ஒழுங்கு தேவைப்படுகிறது. அதன் பொருளாதார பாய்ச்சலும் இராணுவ வலிமையும் உலகை ஆதிக்கம் செய்வதற்கு முன்பான ஒத்திகையாக இருதுருவ உலக ஒழுங்கினை கருதுகிறது. அதனை நோக்கி சீனா பயணிப்பது போன்றே அமெரிக்காவும் காணப்படுகிறது. ஆனால் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலே அதன் முடிவை வெளிப்படுத்தக் கூடியதாக அமையும்.



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்...


புதுமையான மாற்றங்களுடன்
வெளிவருகிறது!
தினம் தினம் புதுமைகளுடன்
தினகரன்
THINAKARAN
சமநிலையான செய்தி,
அரசியல் அலசல்,
ஆழப்பார்வையுடன்...
தினமும்...
மலைச்சாரல்
நகர்வலம்
கிழக்கின் குரல்
அயல்நாட்டு செய்திகள்
சர்வதேச செய்திகள்
தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
திங்கள்
சைவ மஞ்சரி
செவ்வாய்
கிறிஸ்தவ மஞ்சரி
லோரன்ஸ் செல்வா
புதன்
முத்தாரம்
வியாழன்
மங்கையர் முற்றம்
லக்ஷ்மி
வெள்ளி
கலைக் கதம்பம்
சைத்திரியன்
வெள்ளி
ஆலமுல் இஸ்லாம்
– அஜ்வாத் பாஸி
aalamulislam.tkn@lakehouse.lk
வெள்ளி
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
சனி
புதுப்புனல்
ஒக்டோபர் 2 முதல்
உங்கள் கரங்களில்...
LAKE HOUSE
லேக்ஹவுஸ் வெளியீடு




# சுவாசத்திற்கு சுதந்திரம் வேண்டும்...!

ரம்புக்எலையூரான்



சுதந்திரமாய்
வெளிச்சென்ற
என்
சுவாசத்திற்கு
இப்போ
சுதந்திரமில்லை...!
இரவிலும்
பகலிலும் – காலைப்
பொழுதினிலும்
இன்பத்திலும்
துன்பத்திலும்;
துயில்கயிலும்
துள்ளிக்குதிக்கையிலும்
மயக்கத்திலும்
மயான
அமைதியிலும்
நீ
சுதந்திரமாய்
வெளிச் சென்றாய்
Co2 நிறைந்த
அசுத்த வாயுவை
வெளியில்
எடுத்துச் சென்ற
என்
சுவாசமே,
இன்று
சுதந்திரமாய்
வெளிச் செல்ல
தவிக்கின்றாய்
'கொரோனா'வின்
வரவு
கொடுமை
ஐயோ,
கொடுமை
நாசியையும்
வாயையும்
'மாஸ்க்' இனால்
மூடியதால்
சுவாசத்திற்கும்
சுதந்திரமில்லை!
O2 உடன்
கலந்து
Co2உம்
உட்செல்கிறது,
உடல்
சுகாதாரம்
உத்தரவாதம்
இல்லாமல்
வாடுகிறது!
என்
சுவாசமே;
கொரோனாவிற்கு,
தூக்குத்
தண்டனையை
நிறைவேற்றி;
உன்
சுதந்திரத்தை
நிச்சயிக்கும்
நாள் என்றோ?

# எண்ணங்கள்

அலிறிஸாப், அக்குறணை

இறக்கை கட்டி
பறக்கும் எண்ணங்கள்
ஒளியை விட வேகமாக
செல்லும் அதிசயத்திற்கு
ஒப்பான தல்லவோ
நிதம் நிதம் தோன்றும்
எண்ணங்கள் எவ்வளவு
அற்புதமானவை
உலகில் தென்படும்
அதிசயங்கள் அனைத்தும்
எண்ணங்களின்
பிரதிபலிப்பு அல்லவா
கண்ணுக்குப் புலப்படாத
எண்ணங்கள் எள்ளவு
மாயமானவை
வசீகரமானவை
சின்னஞ்சிறு இதயத்தில்
ஊற்றெடுக்கும் எண்ணங்கள்
பென்னம்பெரிய
பரிமாணம் பெற்று
உலகையே வசப்படுத்தி
அண்மைப்பட வைத்திருப்பது
இறைதந்த
மகத்துவமன்றோ
எண்ணங்களைப் பிறப்பித்த
அவன் வல்லமை சாலப்
பெரிதன்றோ



# எனக்குப் பிடித்த சிலை

அ.கௌரிதாசன், ஆலங்கேணி கிழக்கு

அச்சடித்த சித்திரம்போல் அங்கம் வாய்த்த
ஆரணங்கின் அகலங்கள் கமலமொட்டு!
மச்சமது கொண்டவளின் கன்னம் தானும்
மாங்கனியின் வனப்பினையே காட்டிநிற்கும்!
பட்டுவிரல் வெண்டிக்காய்; நகங்க ளெல்லாம்
பவளத்தின் கீற்றாகும், குறங்கு வாழை!
மட்டுநிகர் சுவைநல்கும் இதழ்கள் கொவ்வை
மங்கைநுதல் பிறைநிலவின் வடிவமாகும்!
நெளி கூந்தல் கருமேகம்; ஒளிரு கின்ற
நித்திலத்தை ஒத்ததுவே அழகுப் பற்கள்!
களிசேர்க்கும் காரிகையின் கைகள் காந்தள்
கழுத்தழகு வலம்புரியாம் கடல்வாழ் சங்கு!
மயிலொத்த சாயலுள்ள மங்கை யாளின்
மணிமொழிகள் முக்கனியின் தோயலாகும்!
பயிலுக்கு ஏற்றபடி காதற் பாடம்,
பாழிரவில் கற்பிக்கும் ஆசான் ஆவாள்!
மருளுகின்ற மான்விழியாள் எந்தன் தேவி
மங்கையிவள் பின்னழகு சொக்கிப்போகும்!
சிரிப்பழகு சித்தத்தை சிறை பிடிக்கும்
சிலையவளை எந்தனுக்கு மிகப்பிடிக்கும்!



# யாரறிவார்

கம்பளையூர்
மஞ்சுளா கிருஷ்ணசாமி

அதிகாலை முதல்
அந்தி மாலை வரை
கிழக்கில் தொடரும்
பயணத்தை
மேற்கில் முடிக்கும்
கதிரவனே
உன்னையொன்று
கேட்கின்றேன்
விண்ணை அளந்ததுண்டோ
தேய்ந்து வளர்ந்து
ஓய்ந்து போகாது
இரவெல்லாம்
உறவாடும்
வட்ட நிலவே
வானின் விட்டத்தை
கணித்ததுண்டோ
வண்ண வடிவெடுத்த
சின்னத் தாரகையே
ஆகாயத்தின் நிறத்தை
ஐந்து நொடியில்
மாற்றிடும் மேகங்களே
ஏது கேட்க
நீங்கள்
என்னதான் சொல்ல
கடலில் தோன்றி
கரையில் இரையாகி
அழகுக்கு
அழகு சேர்க்கும்
அலை மோதும்
அலைகளே
நீங்கள் தான்
கண்டதுண்டோ
ஆழ்கடலின்
ஆழத்தை
ஒளி முதலே
இரவல் ஒளியே
நட்சத்திர தேவதைகளே
மோதும் மேகங்களே
சாந்தமில்லா
சமுத்திர அலைகளே
எனக்கும் தான்
விடையில்லை
உயிர்த்துடும்பு
ஒடியும் வரை
உடலோடத்தை
ஓட்டிச் செல்லும்
எந்தனுக்கும்
சமுதாயச் சந்தையிலே
நித்தம்
நிறம் மாறும்
மனக் கோலத்தின்
வடிவம் புரியவில்லை
யாரறிவார் தெரியவில்லை

# இனியும் வேண்டாம் பிரிவு

ஜெ. அப்சால் அஹமட், நிந்தவூர்



எந்த எதிர்பார்ப்பும் இன்றி இணைந்தோம்
இனம், மதம், எதையும் பாராமல்
நம் நட்பு கடலாய் பரவியது
ஆனால் இன்று தனிமையின் நிழலாய்
நட்பின் வேர்கள் துண்டித்துப் போனதே
யாரும் அறியாத உண்மையை நாம்
ஒருவருக்கு ஒருவர் துணையாய் பகிரவே
இன்றும் யாரும் அறியாதவர்களாய் இருக்கிறோம்
தனிமையில் தவித்த நாட்கள் போதும்
எதற்காகவும் இனியும் பிரிவு வேண்டாம்

# நாட்பட்ட காயம்

மருதகவி, அஷ்ரப் இஸ்மாயில்
சாய்ந்தமருது

முகம் திருப்பி மோதல் தவிர்த்து
ஓரம் ஒதுங்கிச் சென்ற போதும்
எரிதணல் ஒப்பென கனத்திடும் மனமோ
புரிதல் இன்றியே பகைமை காணும்
சாதி சனத்திலும் நிறைந்த நட்பிலும்
பேதம் மிகைத்தால் பாதகமே
செய்நன்றி சொற்பமாய் தோன்றிட
பொய் வந்து புகும் இமயமாய்
அண்மித்து நின்றும் தூரம் காணும்
சொல்லொன்று கேட்டால் மல்லுக்கு நிற்கும்
நாணிழுத்த வில்லாய் வேகத்தை வலிதாக்கி
சொல்கொண்டு நறுக்கும் தருணமெல்லாம்
காண்பவர் நடுவே தூற்றுதல் நிறைக்கும்
மாட்சிமை குறைவதை காணாது போகும்
எந்நிலை மாந்தர்க்கும் இந்நிலை வரும்
ஏற்றத் தாழ்வை இறுக்கிப் பிடித்தால்
தோற்றம் காட்டும் இவை அனைத்தும்
போட்டு வைத்ததை விட்டு விடாமையே
தட்டுத்தடுமாறி நாட்கள் கழிந்தாலும்
நாட்பட்ட காயமோ நீறு பூத்திடும்

# மறந்த செயல்கள்

சின்னம்பிள்ளைச்சேனை சிறஹாப்தீன்

ஒழுக்கம் எனும் வாழ்க்கையில்
குறை கூறுதல்,
மானம் பாதிக்கப்படும்
என்பதை மறந்துவிட்டாயா
புரியாத குற்றத்தை
புரிந்ததாக இயம்புவர்
அப்பாவத்தை சுமந்துகொள்வதை
மறந்துவிட்டாயா
ஆராயாமல் செய்திகளை அறிவிப்பவர்
சமூகத்தில் குழப்பநிலை வளர
துணைபோவதை மறந்துவிட்டாயா
பாவத்தில் உண்மை, பொய்
தீர பாரினில் பாராமல் பேசித் திரிவதை
எம்மதமும் கண்டிக்கின்றன
எது விளம்பரமாக மாறுகிறது
அது அதன்பால் ஈர்க்கும்
இவ்விடயத்தில் ஈடுபடுவோர்
இறைவனின் சந்நிதானத்தில்
நிறுத்தப்படுவர்
ஒரு நாள் வரும் அந்நாளில்
நாவுகளும், கரங்களும் ஏன்
கால்களும் உனக்கெதிராக
சாட்சிகூறும்
சத்தியமாக, உண்மையாளன்
இறைவன் அவன்
உண்மையாக்கிக்காட்டுவான்
என்பதையும் மறந்துவிட்டாயா?

# இப்படியும் சிலர்

வி. ரி. இளங்கோவன்

இவர்கள்
ஊரார் அரிசியை
உலையில் போட்டு
வடித்தெடுக்கக்
காத்திருப்பர்
அடுத்தவர் சூட்டில்
அங்கம் தேய்த்து
அலுப்புத் தீர்க்க
அலைவர்
எல்லாமே அடமானம்
வெள்ளை வேட்டி
வெளியில் மினுக்கு
உள்ளே அசூசை
புன்னகை புரிவர்
'பொக்கற்'
நிறைப்பதற்கே
அடுத்தவர் அகப்பையால்
அண்டாவையே
தூக்குவர்
அழுக்கையும்
அள்ளிக் கொள்வர்
விற்பனைக்காக
குழந்தை போலும்
குழைவர்
காரியம் கைகூட
என்றும்
கரம் கூப்பிக்
காத்திருப்பர்
முதலில் வரும்
வண்டிக்காகவே
மற்றவர்களெல்லாம்
பிழைக்கத் தெரியாதவர்கள்
இவர்கள் பார்வையில்
பாவம் இவர்கள்
எரிமலை தணிய
சிறுநீர் பொழிவர்
சித்தம்
தெளிய
சில நாளாகலாம்
மொத்தத்தில் அவிய முன்
சத்தியத்தை
அகத்திடை இருத்துக
வந்த வீதியை
மறவாது பேணுக
காழ்ப்புணர்வு அல்ல
கருணையினால் தான் !

# புரட்டுங்கள்

கந்தளாய் முஸ்தபா சகாப்தீன்



ஊறித் தெறிக்கும் – மன
உணர்வலைகளில்
அணலும் வெம்பலும் குளிரும்
மோனமாக மோதிக் கொண்டதாக
முனகிக் கொள்ளும் சத்தம்
அலட்டிக் கொள்ளாத
காற்றும் ஒளியும் மேகனமாய்த்
தலையசைத்து ஆமோதிக்க
ஈனமென்றறியாத கானக்குயில்
போனால் போகட்டுமெனக்
கூவிப் பிரளாயிக்க – மனதுள்
பேதை எண்ணங்களில் புரண்டு
புழுங்கித் தவிக்கும் இளவல்களே;
புதிதாகப் பூக்களை தொந்து
என்னசுகம் கண்டீர்கள்,
தேடலில் பல தேவைகளிருக்கட்டும்
நோக்கில் நல்லவைகள் நிறுத்திக்
களைவதில் கறையகற்றிப்
பகுத்தறிவின் பக்குவத்தைப்
பரசவ மாக்கி பார்வையைப்
புனிதமாக்கி வாழ்வுப்பாதையில்
புரட்சிவளம் பெருகிடப்
புழுதி தட்டில் புதுச்சிந்தனை
புரட்டுங்கள் எழுச்சி உருவாகும்
புது வாழ்வும் செழிக்கும்

# இலக்கியத் தேன்வதையின் இதயக் குமுறல் இது

கவிப்புனல், கே.எம்.ஏ அஸீஸ்
சாய்ந்தமருதூர்

பனங்கொசுக்களின் படையெடுப்பு
இலக்கியத் தேன்வதையில்
ஈக்களும், பாக்கள் இசைக்கின்றன
நாக்குள் புழுப்போல நகர்ந்து
ராஜாத்தேனியின் அட்டகாசம்
நாளுக்கு நாள்,
கூஜாத்தூக்கிகளின் கொடுமுடியில்
குடும்ப ஆதிக்கத்தை
கரம் பற்றத்துடிக்கும்
ஹிட்லர், இடிஅமீன், பாணியில்
ஒன்று.. இரண்டாகி...
இரண்டு மூன்றாகி...
சர்வாதிகார சவாலுக்குள் பிரிந்து
முகாம் இடுகின்றன, முசாட்கள்
பங்கு போடப்பட்ட
பழம் சோற்றுப் பருக்கைகளாக
செத்துப்போன இதயம் கொண்ட
சாத்தானிய வல்லூறுகள்
அடுத்தவன் பற்றியே ஆராய்கிறது
தன்னை மறந்த தலைக்கொழுப்பில்
தலைக்குள் மலம்வைத்த இறால்களாக
எல்லாவற்றையும் ஆழமாக அவதானித்த
இலக்கியத் தேன்வதை ஒப்பாரிவைக்கிறது
தலையில் அடித்தவாறு,
புதினமான என்மேனியில்
புழுதிக்கரங்களின் சவாரியா?
வேண்டாம்... வேண்டவே வேண்டாம்
இலட்சியம் இத்துப்போன
வாலில்லா அதுகளின்
வங்குறோத்து சேட்டைகளுக்கு
முட்டுக் கொடுக்க நான் என்ன?
முட்டாளா? என்ற முணுமுணுப்பில்

# சவாலும் சாதனையும்

வித்தகர் கு. சண்முகம், வந்தாறுமூலை

வாழ்க்கையில் சவால்கள் வருவது சகஜம்
அதனை எதிர்கொள்ளும் வல்லமை தேவை
வாழ்வில் அதுவே மிகக் கடினம் என்றால்
மனிதனாக இந்த உலகில் வாழமுடியுமா
ஆயிரமாயிரம் சவால்கள் வாழ்வில் வந்திடும்
அவை பலப்பல வடிவில் எமைத் தாக்கிடும்
ஆனால், அதைக்கண்டு தளர்ந்துவிடாதே
அதுவே உன் வாழ்க்கையை பாழாக்கிவிடும்
எதிர்பாராமல் சடுதியில் வந்திடும் சவால்களை
நாம் வாழ்வில் எதிர்கொள்ள நேர்ந்தால்
என்ன செய்யலாம் என அவசரப்படாமல்
சிந்தித்து வெல்லும் வழியை நாடவேண்டும்
எத்தனை சவால்கள் எதிரே வந்தாலும்
அத்தனையும் வென்று சாதனை படைத்திடு
எவ்விடர் வரினும் சிந்தனை கலங்கிடாதே
வேதனை தாங்கி வெற்றியைத் தேடு
வாழ்க்கை என்னும் நீண்ட பாதையில்
மேடும் பள்ளமும் நிறையவே இருக்கும்
வாழப்பிறந்த நமக்கு இதுவொரு தடையா
பொறுத்திரு காலம் பதில் சொல்லும்
காரியம் எதையும் தெரிவு செய்யும்போது
சற்று நிதானமாகச் சிந்திக்கவேண்டும்
கண்ணியம் இன்றி பாய நினைத்தால்
தடக்கி விழுந்து வலிதான் விஞ்சும்
ஆற அமர ஆழமாக சிந்தித்து
நல்ல முடிவுகள் எடுத்து இறங்கினால்
ஆயிரம் சவால்கள் வந்தாலும் தயங்காது
முன்னோக்கிச் செல்ல காரியம் கைகூடும்
வேதனையும் சோதனையும் தொடரும்போது
மிடுக்குடன் தாங்கும் தைரியம் வேண்டும்
வேரொடு சாயும் நாணல் போல் நிமிர்ந்திடு
தன்னிலை மறந்து முயற்சியைக் கைவிடாதே
உன்பணி திடமாக மனத்திடம் வேண்டும்
துணிந்து நடந்திடு தூரம் சேய்மையாகும்
உழைத்திடு சோம்பலை அறவே அகற்றிடு
சவால்களைத் தகர்த்திடு சாதனை படைத்திடு

# போதை ஒழிக்கும் பாதை காண்போம்!

காத்தான்குடி கலைமதி றபாய்தீன்

போதையால் – என்
பாதை மாறும்!
பாவங்களும்
பாதங்களும் அரங்கேறும்!
குடும்பம்
குதூகலத்தை இழக்கும்!
வீண்வம்பு விபரீதம்
வாழ்வில் நிலைக்கும்!
உன்
உள்ளமும் இல்லமும்
இருட்காடாகும்!
துன்பங்கள் வாழும்
துயர் வீடாகும்!
போதையால்
வீடு மட்டுமல்ல
நாடே சீர்கெட்டுப்போகிறது!
வாழும் வம்சங்களும்
வளரும் 'வாரிசு'களும்
வாழ்வில்
வாட்டம் காண்கிறது!
நம்பிக்கையில்
ஆட்டங் காண்கிறது!
வாழ்க்கையை அழிக்கும்
நம்
வாழ்நாளை ஒழிக்கும்
இந்த
போதைப்பாவனையை ஒழிக்கும்
நாம் நல்ல
பாதையைக் காண வேண்டாமா?
போதையின்
தீமைகளையும்
தீவினைகளையும்
நாம் உணர வேண்டாமா?
தன்னினது தன்மைகளை மாற்றி
தவறுகளையும்
தப்புகளையும்
தினம் நம்மை
செய்ய வைக்கும்
இந்த
போதையை ஒழிக்க
பாதையைக் காண்போம்!
போதையைப் போக்க
வழிகளை அமைப்போம்!
போதையில் இருந்து
நம் வம்சங்களை மட்டுமல்ல
வளரும் வாரிசுகளையும்
வாழ்விலே காப்போம்!
நம் வீட்டையும் நாட்டையும்
தீவினை செய்யும்
போதையிலிருந்து மீட்போம்!

# ஆட்சி மாற்றங்களும் கல்வி சீர்திருத்தங்களும்



இலங்கை வரலாற்றின் தொடக்கத்திலிருந்து கல்வி என்பது ஆட்சியாளர்கள் தீர்மாணிக்கின்ற ஒன்றாகவே இருந்துவந்திருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் மற்றும் பொருளாதார தொழினுட்ப செயற்பாடுகளுக்கும் கல்வியின் முக்கியத்துவம் அடிப்படையான வழிகாட்டியாகவும் குறிகாட்டியாகவும் நோக்கப்படுவதே ஆகும்.

விஜயனின் வருகையிலிருந்து குறிப்பாக கி.மு. 543 இற்குப் பின்னரான காலம் தொட்டு மகிந்தர் இலங்கையில் பௌத்த மதத்தை அறிமுகம் செய்து கி.பி 1500 ஆண்டுகள் வரையும், அதன் பின்னர் இலங்கையை ஆட்சி செய்த போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆங்கிலயர் என்று தொடர்ந்து, சுதந்திர இலங்கையின் இன்றுள்ள ஆட்சிக் காலம்வரை வரலாறு முழுவதும் இலங்கையின் கல்வி ஆட்சியாளர்களால் திட்டமிடப்படுகின்ற ஒன்றாகவே உள்வாங்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக நாட்டில் ஏற்படுகின்ற ஆட்சி மாற்றங்கள் காலத்துக்கு காலம் கல்வி நடைமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது என்பது வழக்கமான ஒரு செய்தியாகும். மாறாக அது ஒரு புதிய நடவடிக்கை அல்ல. அந்தவகையில் தற்போதுள்ள ஆட்சியாளர்கள் பாடசாலைக் கல்வி நடைமுறையில் புதிய சீர்திருந்தங்களை கொண்டுவருவது தொடர்பான கருத்துக்களும் செய்திகளும் ஊடகங்களில் பகிரப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது.

தற்போதுள்ள கல்வி நடைமுறைகள் 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்திலிருந்து உருவாக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட கொள்கை யோசனைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனலாம். தேசிய கல்வி ஆணைக்குழுவின் 1993 ஆம் ஆண்டின் அறிக்கை மற்றும் 1996 ஆம் ஆண்டின் அறிக்கை இறுதியாக வெளியிடப்பட்ட 2003 ஆம் ஆண்டின் அறிக்கைகள் நாட்டின் பாடசாலைக் கல்வி தொடர்பான சீர்திருத்த முன்மொழிவுகளையும் வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளதை நாம் நினைவுகூரலாம்.

குறிப்பாக தேசிய கல்வி ஆணைக்குழுவின் கல்விச் சீர் திருத்த முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் விதத்தில் 1997ஆம் ஆண்டை கல்விச் சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு என்பனவற்றுக்கான வருடமாக பிரகடனம் செய்தனர். அவ்வாண்டில் அரசாங்கத்தினால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையின் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழு மிக முக்கியமாக 3 விடயப் பரப்புகளை வரையறுத்து ஆலோசனை வழங்கியுள்ளது.

### கல்வி வாய்ப்பு

கலைத்திட்டம் தொடர்பான செயற்பாடுகளைப் புதுப்பித்தலும் பொருத்தப்பாடும்

கல்வி சார் ஊழியர்களையும் கல்வி முகாமைத்துவத்தையும் தொழில் தகைமை உடையாதாக்கி அதனூடாக வினைதிறனைக் காணுதல்.

இதுதான் கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் தேசிய கல்வி ஆணைக்குழு கொண்டுள்ள கல்விச் சட்டகம் எனவும் கூறலாம்.

இது இவ்வாறு இருக்க இன்று கல்வி அமைச்சராகவுள்ள பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸின் ஊடகப் பேச்சுக்கள் கல்விச் சீர்திருத்தம் பற்றிய பல விடயங்கைளை முன்மொழிந்து வருவது பற்றியும் தற்போது கல்விச் சமூகம் உற்றுநோக்க ஆரம்பித்துள்ளது. 2023 ஐ கல்வி சீர்திருத்த ஆண்டாகக் கொண்டு இந்த விடயங்கள் ஆராயப்படுகின்றன.

இதில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸின் மிக முக்கியமான கருத்து என்பது நாட்டின் தொழில் முறைமைக்கும் கல்வி முறைமைக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகிறது அதனை இல்லாது செய்யும் வகையில் பாடசாலைக் கல்வி முறைமை புதிதாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கிறது.

மிக முக்கியமாக இலங்கையின் கல்வி முறைமை பரீட்சை மையக் கல்வியாகவே இருந்து வருகின்றது. இதனால் பரீட்சை அடைவுகளின் படி கல்வியில் ஒருசாரார் வெற்றிபெற பரீட்சையில் குறைந்த அடைவைப் பெறுகின்ற மறுசாரார் கல்வியின் பயனற்றவர்களாக ஒதுக்கப்படுகின்றார்கள். அது மாத்திரமன்றி பரீட்சை மையக் கல்வி நாட்டின் தொழில் வாண்மைக்கும் தேவைக்கும் ஏற்ற மனித வளத்தை உருவாக்காதும் விடுகின்றது.

இதன் பின்னணிகளும் உணரப்பட்டதன் விளைவாகவும் மாறிவரும் நவீன உலக ஒழுங்கிற்கும் நடைமுறைக்கும் ஏற்ப கல்வி அறிவு மாற்றம் அடைய வேண்டும் என்பதன் அவசியம் மேல் எழுவதாலும் புதிய கல்வி சீர்திருத்த செயற்பாடுகள் இன்றியமையாத அவசியம் உடையதை நாம் மறுக்கவும் முடியாது.

இதனை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்படும் கல்வி சீர்திருத்தங்களில் மிக முக்கியமாக பாடசாலைக் கல்வி ஆண்டு தவணை முறையிலிருந்து Semester முறைக்கு மாற்றம் செய்யப்படும் விடயம் காணப்படுகிறது.

Semester முறை என்பது ஒரு கல்வி ஆண்டின் ஒரு பகுதியாகும் ஒரு கல்வி நிறுவனம் தனது வகுப்புக்களை நடத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நேர அட்டவணையாகும் குறிப்பாக இது 6 மாதங்களை உள்ளடக்கிய 1518 வாரங்களை கொண்டதாக அமையும்.

Semester முறையானது தற்போது எமது நாட்டின் மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்களில் குறிப்பாக பல்கலைக்கழக கல்வி ஆண்டில்



**நவாஸ் சௌபி**

நடைமுறையில் இருந்துவருவதனை நாம் அறியலாம். உலக நாடுகள் பலவற்றில் பாடசாலைக் கல்வியில் இத்தகைய Semester முறை நடைமுறையில் உள்ளன. இதற்கு உதாரணமாக அமரிக்கா, லண்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளை குறிப்பிடலாம்.

இதன் பின்னணியில் தற்போது எமது நாட்டில் மாற்றம் செய்ய எதிர்பார்க்கும் Semester முறை எவ்வாறான நடைமுறைகளைக் கொண்டுள்ளது. அதன் உள்ளடக்கம் எத்தகையது என நாம் விளங்க வேண்டும். தற்போது இதுபற்றிய முழு வடிவமும் முடிவாகவுமில்லை அது எமக்கு வெளிப்படவுமில்லை என்றாலும் ளநஅநளவநச என்பதன் பொதுவான நடைமுறைகளை வைத்து நாம் இதனை நோக்கலாம்.

தற்போதுள்ள பாடசாலைக் கல்வி ஆண்டானது முதலாம் தவணை, இரண்டாம் தவணை, மூன்றாம் தவணை என 3 காலாண்டுகளை உள்ளடக்கியதாக பிரிக்கப்பட்டு அதன் கலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகிறது. இந்த முறையில் மாணவர்கள் ஒரு கல்வி ஆண்டுக்கு 3 பரீட்சை மதிப்பீடுகளை எதிர்கொள்கின்றனர். இதனை Semester முறைக்கு மாற்றுவதன் மூலம் வருடத்திற்கு இரண்டு மதிப்பீடு என்ற அடிப்படையில் 15 வாரங்களுக்குட்பட்ட ஒரு Semester காலத்தை கொண்டுவருவது தற்போது முன்வைக்கப்படும் ஒரு மாற்று யோசனையாகலாம்.

அடுத்து இந்த Semester முறையில் பரீட்சை நடைபெறும் போது குறிப்பிட்ட பாடத்திட்டங்கள் அந்த ளநஅநளவநச யுடன் முடிந்துவிடும் அடுத்த Semester க்கு அந்தப் பாடத்திட்டம் தொடர்புபடாமல் புதிய பாடத்திட்டம் கற்பிக்கப்படும். அதாவது 6 மாதங்களை வரையறையாகக் கொண்ட பாடத்திட்டங்கள் அமுல்படுத்தப்படலாம்.

மேலும் Semester முறையில் தற்போதுள்ள பாடநூல்கள் இல்லாமல் கைஏடுகள் மூலமான கற்றல் ஆவணங்கள் ஒவ்வொரு Semester ற்கும் ஏற்றவாறு வாழங்கப்படலாம்.

இதன்படி, கல்வி ஆண்டில் Semester முறையை உருவாக்குவதில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள தவணை முறைக்கும் புதிய Semester முறைக்குமிடையில் காணப்படும் குறை நிறைகள் சாதக பாதகங்கள் என்ன என்பது பற்றியும் நாம் தெளிவு காண வேண்டும்.

இதில் மிக முக்கியமாக மாணவர்கள் பரீட்சைக்கு கற்பதிலும் ஆசிரியர்கள் கற்பிப்பதிலும் உள்ள விடயங்கள்தான் பிரதானமாக கவணிக்கப்படும். அடுத்து இதனை நடைமுறைப்படுத்துவதில் கலைத்திட்டம் உருவாக்குவது அதனை நடைமுறைப்படுத்துவது இதற்கான பாடநூல்கள் தயாரிப்பதில் அரசுக்கு புதிய சவால்கள் உள்ளன என்பதும் தவிர்க்க முடியாததாகும்.

பிரதானமாகக் கூறுவதாயின் எமது பாடசாலையின் கல்வி அடைவு மட்டம் பரீட்சைப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் தற்போதுள்ள தவணை பரீட்சைகளுக்கு மாணவர்கள் ஆயத்தமாகுவது கற்பது பாடங்களை ஒழுங்கு செய்வது என்பது பெரும் சுமையாக இல்லாமல் குறுகிய அளவில் இலகுவாகவுள்ளது. இதற்கமைய கற்பிக்கும் கால அளவும் பாட அலகுகளும் குறைவாக இருக்கிறது.

Semester முறையில் இவ்வாறு இல்லாமல் 6 மாதங்களை அடிப்படையாகக் கொண்ட கற்றல் அலகுகள் ஒரு சுமையாக மாணவர்களால் உணரப்படலாம். உரிய காலத்திற்குள் முழுமையாக பாட அலகுகளை கற்று முடிக்க வேண்டும் என்ற கட்டாயம் மாணவர்களுக்கு ஒரு கற்றல் சுமையை ஏற்படுத்தலாம்.

மறுபுறம் Semester முறையில் இத்தகைய கற்றல் சுமை இருந்தாலும் தற்போதுள்ள தவணை முறையில் ஒரு ஆண்டுக்கான பாடத்திட்டத்தினையும் மூன்றாம் தவணையில் முழுமையாகக் கற்க வேண்டும் என்பதால் இறுதிப் பரீட்சையில் ஒரு வருடத்திற்கான பாடச் சுமை மாணவர்களுக்கு ஏற்படுவதுண்டு. Semester முறையுடன் ஒப்பிடும் போது இது அதிகப் பாடச் சுமையுடையதாக அமைந்திருக்கிறது. ஆனால் Semester முறையில் குறிப்பிட்ட Semesterயுடன் உரிய பாடத்திட்டம் முடிவதனால் அடுத்த Semester க்கு புதிய விடயங்களையே கற்க வேண்டி ஏற்படும் இது ஒரு வருட சுமையை விட குறைவு எனக் கருதலாம்.

அடுத்து தற்போதுள்ள பாடத்திட்டமானது தவணை முறையில் வரையறுக்கப்பட்டாலும் ஒரு வருடத்தை முழுமையாக உள்ளடக்கிய பாடத்திட்டமாகவே கற்பிக்கப்படுகிறது. இதனால் முதலாம் தவணைக்குரிய பாட அலகுகளை இரண்டாம் தவணையிலும், இரண்டாம் தவணை அலகுகளை மூன்றாம் தவணையிலும் கற்பிக்கும் நிலை ஏற்படுவதுண்டு. இது தவறான செயற்பாடு என்றாலும் ஒரு வருடத்திற்குள் கற்பித்து முடித்தால் சரி என்ற மனப்பாங்கில் சிலநேரங்களில் சில ஆசிரியர்களால் இந்த விடயம் கையாளப்படுவதுண்டு.

ஆனால் Semesterமுறையில் இந்த விடயம் சற்றும் சாத்தியம் இல்லை. 6 மாத காலத்துடன் உரிய பாட அலகுகள் கட்டாயமாக முடித்தாக வேண்டும். அடுத்த Semester க்கும் அதற்கும் எந்த தொடர்பும் இருக்காது என்பதால் இந்த நிலை உருவாகும்.

எது எவ்வாறாயினும் Semester முறை என்பது மாணவர்கள் கற்பதற்கும் ஆசிரியர்கள் கற்பிப்பதற்கும் குறுகிய ஒருவரையறையை கொண்டுள்ளது என்பது மேலாக விளங்குகின்ற ஒரு பயனாகத் தெரிகிறது எனலாம்.

இதற்கு மேலாக Semester முறைமை எமது பாடசாலை மாணவர்களுக்கும் கல்விச் சமூகத்திற்கும் எந்தளவு சாதக பாதகமான நிலைமைகளை உருவாக்கும் என்பது பற்றிய கள ஆய்வுகள் வாய்மொழி மற்றும் எழுத்து மூலமான கருத்துக் கணிப்புகள் உருவாக்கப்படுவது இன்னும் பல விடயங்கள் இது தொடர்பான முடிவுக்கு உகந்ததாகப் பெற்றுத் தரும்.

alinea

## தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டம் (NLEAP)

## பதவி வெற்றிடம்

NLEAP கருத்திட்டத்தினை முகாமைத்துவம் செய்து அமுல்படுத்துவதற்குப் பொறுப்பான கனேடிய நிறைவேற்று முகவராக (Canadian Executing Agency) எலீனியா இன்டர்நெஷனல் (Alinea International) ஆனது குளோபல் அபயார்ஸ் கனடாவினால் (Global Affairs Canada) ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

செயற்றிட்டத்தின் பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து எலீனியா இன்டர்நெஷனல் விண்ணப்பங்களைக் கோருகின்றது.

❖ **செயற்றிட்ட உத்தியோகத்தர் (Project Officer)**

எலீனியா இன்டர்நெஷனல் மற்றும் NLEAP ஆகியவை சமமான வாய்ப்புக்களை வழங்கும் தொழில் வழங்குநர்களாகும். பல்வகைமையினைக் மதிக்கும் நாம் உறுதியான செயற்பாட்டின் மூலம் சகல ஊழியர்களையும் உள்ளடக்கும் கௌரவமளிக்கும் தன்மைகொண்ட சூழலை உருவாக்குவதற்குக் கடப்பாடு கொண்டுள்ளோம்.

பொருத்தமான விண்ணப்பதாரிகளுக்கு எலீனியா இன்டர்நெஷனல் நிறைவான சம்பளத்தினையும் நலன் பொதியினையும் வழங்குகின்றது.

தயவுசெய்து உங்களது சுய விபரக்கோவையினையும் முகப்புக் கடிதத்தினையும் **info@nleap.lk** எனும் முகவரிக்கு **2020ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30ம் திகதியோ** அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கும்வண்ணம் மின்னஞ்சலிடவும். தொழில் விபரங்கள் பற்றியும் விண்ணப்பிக்கும் செயல்விதிகள் பற்றியும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளத் தயவுசெய்து **www.nleap.lk.** என்ற எமது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யவும்.

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை

## அவசர தேவைகளை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பங்களைக் கோரல்

இலங்கை மனிதவள மேம்பாட்டுக் கவுன்சில் என்பது அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நிறுவனம் ஆகும். 1997ம் ஆண்டு 18ம் இலக்கச் சட்டத்தின் நியதிகளுக்கு அமைவாக, தேசிய கொள்கைகளுக்கு இணக்கமாக மனிதவள அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு விதப்புரை வழங்குதல் இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் பிரதான பணியாகும்.

அதற்கமைவாக, கீழ்வருவன தொடர்பாக தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் விசேட வல்லுனர்கள்/நிபுணர்கள் அடங்கிய குழாமை நிறுவுவதற்கான அவசர தேவை இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைக்குள்ளது.

01)தொழில் சந்தை 2) தொழில்நுட்ப, தொழில் கல்வி மற்றும் பயிற்சித் துறை 3)கல்வி 4)தொழில் வாய்ப்பு 5) மனிதவள அபிவிருத்தி 6)விஞ்ஞானமும் தொழில்நுட்பமும 7)வறுமை ஒழிப்பு 8)சமூகப் பாதுகாப்பு 9)குடித்தொகை 10)தொழில்சார் நிபுணத்துவம் 11)சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி 12)சட்ட சீர்திருத்தம். 13)தகவல் முகாமைத்துவ முறைமை/தரவு விஞ்ஞானம்

தயவுசெய்து உங்கள் சுயவிபரக் கோவையை கீழ்வரும் சான்றிதழ்களுடன், பதிவுத்தபால் மூலம் தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திசபை, இல 354/2, 7ம் மாடி, நிபுணதாபியச, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 எனும் முகவரிக்கு 2020/10/03 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில், தபால் உறையின் வலது பக்க மூலையில் அவசர தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், அனுபவம், விருதுகள், பெறுபேறுகள், சேவை சான்றிதழ்கள், பிரதான தகைமைகள்

குறிப்பு: இது நிரந்தரப் பதவி அல்ல என்பதுடன், இலங்கை தேசிய மனிதவள மேம்பாட்டு கவுன்சிலின் தேவைக்கு அமைவாக உங்கள் சேவை பெற்றுக் கொள்ளப்படும். தயவுசெய்து உங்கள் விருப்பமட்டத்தை (தேசிய/மாகாண/மாவட்ட) சுயவிபரக் கோவையில் குறிப்பிடவும். அரச நிதி சுற்றுநிருப இலக்கம் 01/2020ற்கு அமைவாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். இந்தச் சுற்றறிக்கையையும் நியதிப் பட்டயத்தையும் இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் இணையதளத்தில் பார்வையிட முடியும்.

**தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை,**
**இல 354/2, 7ம் மாடி, நிபுணதாபியச,**
**எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05**

தொலைபேசி இல: 0112595680

## இரத்தினக்கல் மற்றும்... (05 ஆம் பக்கத் தொடர்)

ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கும் இடையூறு விளைவிக்கும் எந்தவொரு அரசாங்க கொள்கைகளும் இல்லை அவை இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதிக்கு இடையூறு இல்லாத சூழலை ஏற்படுத்தியுள்ளன.

புதிய வரிக் கொள்கையானது மற்ற நாடுகளிலிருந்து குறிப்பாக ஆபிரிக்காவிலிருந்து ஏராளமான இரத்தினக் கற்களை தருவித்து, நமது பல நூற்றாண்டுகள் பழமையான நிபுணத்துவத்தை பயன்படுத்தி அவற்றை வெட்டி மெருகூட்டி பெறுமதி சேர்த்தலுக்கு பிறகு சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்ய ஊக்குவிக்கும்.

“சிலோன் சபையர்“ என்ற வர்த்தக நாமம் உலகில் ஒரு உன்னதமான இடத்தை வகிக்கிறது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் வழிகாட்டுதலுடன் இந்தத் தொழில்துறை எதிர்காலத்தில் ஒரு மைய நிலையை அடைய முடியும்.

300,000 க்கும் அதிகமான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர், மேலும் இலங்கையர்கள் பட்டைதீட்டப்படாத இரத்தினக்கற்களை பற்றிய அறிவில் முன்னணியில் இருப்பதைக் குறிப்பிடுவதில் நாம் மிகவும் பெருமிதம் கொள்கிறோம், மேலும் உலகெங்கிலும் உள்ள பட்டைதீட்டப்படாத இரத்தினக்கற்களை இலங்கைக்குள் தடையின்றி கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை செய்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு நாம் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். நாட்டுக்குள் கொண்டுவரப்படும் இரத்தினக் கற்கள் அனைத்தும் பெறுமதி சேர்க்கப்பட்டு மீண்டும் மறு ஏற்றுமதி செய்யப்படுகிறது, இதன் மூலம் நாட்டுக்கு தேவையான அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்கிறோம்.

கடந்த வாரம் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட சில முக்கியமான தீர்மானங்களினால் போட்டித் தன்மை வலுப்பெறும் மற்றும் அந்நிய செலாவணி வருவாய் அதிகரிக்கும். நாட்டுக்கு வரும் மில்லியன் கணக்கான சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து பெறுமதி மிக்க அந்நிய செலாவணியை தக்க வைத்துக் கொள்வது அவசியமானது. தங்கத்தின் மீதான இறக்குமதி வரியை நீக்குவது உண்மையில் ஒரு முக்கியமான படியாகும், இது சர்வதேச அளவில் போட்டித்தன்மையை மீண்டும் பெறவும், சுற்றுலாப் பயணிகளுக்கு உயர்தர நகைகளை விற்கவும், அனைத்து முக்கிய அந்நிய செலாவணி வருவாயை கணிசமாக அதிகரிக்கவும் உதவுகிறது என்று தெரிவித்தார்.

### இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
### துறைமுகங்கள் மற்றும் கப்பற்சேவைகள் அமைச்சு
### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# காலி துறைமுகத்தில் Yacht Marina இன் செயற்பாட்டிற்கான முன்மொழிவுகளின் அழைப்பிற்கான நீடிப்பு

1. காலி துறைமுகத்தில் அபிவிருத்தி, பராமரிப்பு, இயக்கம் ஆகியன திருத்தப்பட்டு துறைமுகம் மற்றும் பிற சேவைகளை வழங்குவதற்காக 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சட்டத்தினால் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சின் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது காலி துறைமுகத்தில் Yacht Marina இன் இயக்கத்திற்காக கட்டப்பட்டு, சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அதன் பின்னர் உரித்து மாற்றம் செய்தல் (Build, Operate and Transfer) சலுகையொன்றை வழங்குவதற்கு ஆர்வம் கொண்டுள்ளதுடன் சலுகை உரிமையாளரொருவரை தெரிவு செய்வதற்காக முன்னெடுக்கப்படுவதே இந்த முன்மொழிவிற்கான அழைப்பாகும்.
2. BOT சலுகையை வழங்கலை பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக ஆர்வமுள்ள சாரார்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்களை அமைச்சின், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழுத் (SCAPC) தலைவர் இத்தால் கோருகின்றார். முதலீட்டாளரின் தெரிவானது மதிப்பீட்டு செயற்பாட்டொன்றிற்கு உட்பட்டதாக அமைந்திருக்கும். தெரிவு செய்யும் தகவுத்திறனானது முன்மொழிவுகளுக்கான ஆவணத்தில் விபரமாக விளக்கப்படுத்தப்பட்டிருப்பதுடன் அதனது மாதிரிப் பிரதியொன்று இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை (1ஆம் குறிப்பைப் பார்க்கவும்) திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் பார்வையிடுவதற்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள சாரார் 2020 ஒக்ரோபர் 16 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மாதிரி பிரதியை பார்வையிடலாம்.
3. கீழே வரையறுக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் வரிகள் அடங்கலாக 60,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், 2 ஆம் குறிப்பிலுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், எந்தவொரு ஆர்வமுள்ள சாராரினாலும் முன்மொழிவிற்கான அழைப்பின் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
4. முன்மொழிவிற்கான செயற்பாட்டு அட்டவணையானது பின்வருமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

| | நிகழ்வு | முன்னைய திகதி | நீடிக்கப்பட்ட திகதி | நேரம் | இடம் |
|---|---|---|---|---|---|
| அ | முன்மொழிவிற்காக அழைப்பு ஆவணம் வழங்கல் | 2020 ஓகஸ்ட் 17 ஆம் திகதியன்று | 2020 ஒக்ரோபர் 16 ஆம் திகதி வரையும். | மு.ப. மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் | 1 ஆம் குறிப்பு |
| ஆ | முன்மொழிவிற்கான அழைப்பு ஆவணத்திற்கான தெளிவுறுத்தல்களுக்காக விண்ணப்பிப்பதற்காக ஆர்வமுள்ள சாரார்களின் இறுதி திகதி | 2020 ஓகஸ்ட் 26 ஆம் திகதியன்று | 2020 ஒக்ரோபர் 26ஆம் திகதியன்று | ------------------------ | 1 ஆம் குறிப்பு |
| இ. | முன்மொழிவு அழைப்பு ஆவணத்திற்கான தெளிவுறுத்தல்களை வழங்குவதற்கான SCAPC இன் இறுதித் திகதி | 2020 செப்டம்பர் 7 ஆம் திகதியன்று | 2020 நவம்பர் 6 ஆம் திகதியன்று | ------------------------------ | ------------- ---------- |
| ஈ | முன்மொழிவு அழைப்புக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி | 2020 செப்டம்பர் 16 ஆம் திகதியன்று | 2020 நவம்பர் 16 ஆம் திகதியன்று | பி.ப. 2 மணிக்கு | 2 ஆம் குறிப்பு |
| உ. | முன்மொழிவிற்கான அழைப்புக்களை திறத்தல் | 2020 செப்டம்பர் 16 ஆம் திகதியன்று | 2020 நவம்பர் 16 ஆம் திகதியன்று | பி.ப. 2 மணிக்கு | 2 ஆம் குறிப்பு |

**1 ஆம் குறிப்பு:**
பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி), இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,
45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01, இலங்கை.
தொலைபேசி இல.: + 94(0) 112483456, தொலைநகல்: + 94 (0) 112323055, மின்னஞ்சல் முகவரி: cepd@slpa.lk

**2 ஆம் குறிப்பு:**
துறைமுகங்கள் மற்றும் கப்பற்சேவைகள் அமைச்சு, 19, சைபித்திய வீதி, கொழும்பு-01, இலங்கை.

**3 ஆம் குறிப்பு:**
வதிவிட முகாமையாளர் அலுவலகம்
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை
காலி.

5. முன்மொழிவு அழைப்புக்களின் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக ஆர்வமுள்ள சாரார்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் மற்றும் செலவினங்களுக்கு ஒன்றில் SCAPC அல்லது இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையும் பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள் மற்றும் கப்பற்சேவைகள் அமைச்சு.**
**2020 செப்டம்பர் 15 ஆம் திகதியன்று.**

### பாதுகாப்பு அமைச்சு

# சுத்திகரிப்பு, சுகாதாரச் சேவையைப் பெற்றுக்கொள்ளல்

ஆள் அடையாளம் தொடர்பான செயலாளர் அலுவலகக் கட்டிடம் (சுகுறுபாய) 2020.10.01 முதல் 2021.09.31 வரையான ஒரு வருட காலத்திற்கு சுத்திகரிப்பு மற்றும் சுகாதார சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து இத்தால் திறந்த விலைமனுக்களை கோருகின்றது.

ஸ்ரீ சுபுதிபுர வீதி, பத்தரமுல்லை என்ற இடத்தில் அமைந்துள்ள 20 மாடிகளை கொண்ட பிரதான கட்டிடம் மற்றும் கட்டிடங்கள் இரண்டிற்குமுரிய பிரதேசங்களில் சுத்திகரிப்பு சேவை மற்றும் சுகாதார சேவை தொடர்பாக குறித்த அமைவிடங்களுக்குப் பொருந்தும் வகையில் பிரேரணைகள் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இது சூழல் சிநேகபூர்வமான எண்ணக்கருவொன்றின் மீது நிர்மானிக்கப்பட்ட கட்டிடமொன்றாகும். இங்கே காட்டப்பட்டுள்ள கட்டிடங்களிலுள்ள மேசை, கதிரை, யன்னல், மாடிப்படிக்கட்டு, மாடிப்படிக்கட்டு கைப்பிடி, சுவர், மின்னுயர்த்தி மற்றும் மின்விசிறிகள் நாளாந்தம் சுத்தம் செய்யப்படல் வேண்டும்.

அதனால், இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள நிறுவனங்கள் மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

01. நிறுவனமொன்றாக பதிவு செய்துகொள்ளப்படல் வேண்டும். (ISO சான்றிதழைக் கொண்டுள்ள நிறுவனங்கள் தொடர்பாக மேலதிக கவனம் செலுத்தப்படும்)
    - ii. அரசாங்க சட்டத்திட்டங்களுக்கமைவாக சேவையை வழங்கும், வரி செலுத்தும் நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டும்.
    - iii. கடந்த மூன்று வருட காலப்பகுதியில் குறித்த சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டும்.
    - iv. கடந்த வருட காலப்பகுதியில் சேவையை வழங்கிய நிறுவனங்களின் பட்டியலொன்றை வழங்க வேண்டும். (அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 5 நட்சத்திர ஹோட்டல்களில் தற்போது சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுவதால் அது தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
    - v. கொவிட் 19 வைரசைக்கட்டுப்படுத்துவது தொடர்பாக கடைபிடிக்கப்படும் செயற்பாடுகள் காணப்படல் வேண்டும்.
    - vi. சுத்திகரிப்பதற்காக உபயோகிக்கப்படும் இயந்திரங்கள், இந்த கட்டிடத்திற்குப் பொருந்தும் வகையில் நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
    - vii. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள், 2020.11.01 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
    - viii. ஒப்பந்தக்காலப் பகுதியில் எக்காரணங்கொண்டும் விலைமனுக்களை மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாததுடன் அதன் பிரகாரமே விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.
    - ix. பயிற்றப்பட்ட பதவி நிலையினரை மாத்திரம் சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.
    - x. ஊழியர்கள் தொடர்பாக 2020 வருடம் உள்ளிட்டதும் 05 வருடகாலமொன்றிற்காக தொடர்ச்சியாக ஊழியர் சேமலாபநிதியம் (E.P.F) மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (E.T.F) போன்றவற்றைச் செலுத்தியுள்ள ஊழியர்களையும் சேவையில் ஈடுபடுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
    - xi. பதவி நிலையினருக்காக நலன்புரி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
    - xii. அவசர சேவை தேவைப்பாடுகள் தொடர்பான சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக தொழிலாளர்களை ஈடுபடுத்தவும் முடியுமாக இருத்தல் வேண்டும்.
    - xiii. கட்டிடத்தின் தன்மையைப் பொறுத்து ஆண்களும் தேவைப்படுவதால் அவர்களை பணியில் ஈடுபடுத்த முடியுமாகவிருத்தல் வேண்டும்.
    - xiv. கட்டிடங்களை சுத்திகரிக்கும் நடவடிக்கை தொடர்பாக ஈடுபடுத்த முடியுமான ஆகக்குறைந்த ஊழியர்களின் தொகை 25 ஆக இருத்தல் வேண்டும்.
    - xv. சுத்திகரிப்பு சேவை மற்றும் சுகாதார சேவை ஆகிய இரண்டையுமே பெற்றுத்தருவதற்கு முடியுமாக இருக்க வேண்டியதுடன், சேவை வழங்கப்படும் ஒவ்வொரு நாளும் சுகாதார சேவை தொழிலாளரொருவர் ஊழியர்களிடையே காணப்படல் வேண்டும்.

2020.09.21 அன்று மு.ப.9.00 மணிமுதல் 2020.10.12 அன்று 12.00 மணிவரை (வார வேலை நாட்களில்) ரூ.3500.00 மீளளிக்கப்படாத கட்டணமொன்றை பாதுகாப்பு அமைச்சின் கொடுப்பனவு பிரிவிற்கு செலுத்தி, கணக்காளரிடமிருந்து (வழங்கல்கள் மற்றும் சேதங்கள்) விலைமனுப் பத்திரங்களை பெற்றுக்கொண்டு அது தொடர்பாக தேவைப்படும் விபரங்கள் மற்றும் வளவைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு அனுமதி பெற்றுத்தரப்படும். விலைமனு விண்ணப்பத்துடன் அமைச்சின் செயலாளர் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.10,000.00 விலைமனுப் பிணையொன்றை சமர்ப்பிக்க வேண்டும். இந்த விலைமனுப் பிணை தொடர்பாக அமைச்சின் சிராப்பரிற்கு பணம் வைப்புச் செய்யப்பட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையோ அல்லது இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிப் பிணையொன்றையோ சமர்ப்பிக்க வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரரிற்கு ஒப்பந்தம் கைச்சாத்திட முன்னர் விலைமனுப் பெறுமதியின் 10% ஆன செயற்பாட்டு வங்கிப் பிணையொன்றை பெற்றுத்தர முடியுமாகவிருத்தல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2020.10.12 அன்று பி.ப.2.00 மணிக்கு முன்னர் இந்த அமைச்சிற்கு நேரில் வந்து ஒப்படைக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கள் அனுப்பப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில், "சுத்திகரிப்பு சேவையை வழங்குவது தொடர்பாக விலைமனுக்கோரல் - 2020 சுகுறுபாய" எனக் குறிப்பிடப்படல் வேண்டும் மேற்படி தினத்தன்று பி.ப.2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்..

விலைமனுக்கள் திறக்கப்படும் தினத்தன்று விலைமனுக்களைச் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவருக்கு கலந்துகொள்ளலாம்.

**பாதுகாப்பு செயலாளர்,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இலக்கம் 15/5,**
**பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு 03.**
திகதி : 2020.09.20

# வாரமஞ்சரி சிறு விளம்பரம்

## வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

புத்தளம் நகரில் உப்பு வாய்க்கால் விற்பனைக்கு உண்டு. மன்னார் ரோட்டிற்கு அண்மையில் 1.5 ஏக்கர் தொடர்புகளுக்கு 0787357196. 056398

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

கொழும்பு 04இல் அலுவலக இடவசதி வாடகைக்கு உண்டு. கிட்டத்தட்ட 3000ச.அடி மேல் மாடி வீடு பிரத்தியேக உள் நுழைவு வழியுடன். தொடர்பு 0773550042. 056481

Business premises ஒரு மாடிக்கு 600sqft உடைய மூன்று மாடிகளைக் கொண்ட வியாபார ஸ்தலம் Havelock Road ஐ நோக்கி issipathana Mw. junction இல் வாடகைக்கு 01 oct-20 முதல் காலியாக கிடைக்கும். 0773275088 056436

### 211 விதைகளும் செடிகளும் தேவை

செங்காந்தல் மலர் (காத்திகைத் தாய்) நன்கு உலர்ந்த விதைகள் கொள்வனவு செய்யப்படும். ரொக்கப் பணக் கொடுப்பனவு தொடர்பு 0779795349 053160

## வேலைவாய்ப்பு

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

டின்கர், பெயின்டர், பொலிஷர்மார் தேவை. தங்குமிட வசதியுடன் கூடியது. துஷார மோட்டர்ஸ் இன்ஜினியரின், இல. 78, சுனேத்ராதேவி வீதி, கொஹுவளை. 0777252876. 055059

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

மாலபே இருவரைக் கொண்ட வீட்டில் கையுதவிக்கு 45 55 வயதிற்கிடைப்பட்ட சிங்களம் பேசக்கூடிய பெண் தேவை. 0771533191 056022

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

தச்சன்மார்கள் தேவை. (Carpenters) உணவு, தங்குமிட வசதிகள் வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படலாம். தொடர்பு கொள்ளவும் 0713255329 056176

### 325 தொழில்துறை பொது

சொப்பிங் பேக் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பேக் கட்டிங், ஆண் ஒபரேட்டர் தேவை. சர்பெக் இன்டஸ்ட்ரீஸ் இல.9, 3ஆம் லேன், மாளிகாவ வீதி, ரத்மலானை 0773030558 , 0112625634. 056544

பாதுக்கை இன்டர்லொகிங் கல் உற்பத்தி நிறுவனத்திற்கு அனுபவமுள்ள ஊழியர்கள் தேவை. குடும்பத்திற்குப் பொருத்தமானது. தங்குமிடம் இலவசம். 071-0714986, 071-4948199. 056521

ஹோமாகம, பனாகொட, templeburg கைத்தொழில் பேட்டையிலுள்ள ஓர் உற்பத்திக் கம்பனிக்கு தேர்ச்சிபெற்ற / தேர்ச்சி பெறாத ஊழியர்கள் அவர்களது உற்பத்திப் பிரிவுக்கு தேவை. வயது 1832, நல்ல சம்பளம் சலுகையுடன் தயவுசெய்து அழையுங்கள் 0778869803. 056432

Medihelp Health care (Private) Limited Following Vacancies exit at an ambulance Service unit, Colombo 03. 01) Ambulance nurses Having experience One or more years, Age below 30 years. 02) Ambulance Drivers having heavy vehicle license Age below 40 years. Salary: based on skills and experience. 21/A, ALFRED PLACE, Colombo - 03. Phone : 0115733363. Email. medi-help@live.com. Applications: To managingdiretor. 055440

## பொது

### 427 டியூஷன்

கிருளப்பனையில், தமிழ், சிங்களம். ஆங்கிலம், ஹிந்தி, அரபு மொழிகளுக்கான பிரத்தியேக வகுப்புகள். உங்கள் வசதிக்கேற்ப நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம். 0772945268. 053222

### 431 நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு

உங்களது மத அனுஷ்டானங்களில் ஈடுபடும் விகாரை, தேவாலயம், பூஜை பிரதேசங்களை சுத்தமாக, நறுமணம் கமழச் செய்யும் வெள்ளை இரும்பு துணைப்பாகங்களுடன் ஊதுபத்தி ஸ்டான்ட் தேவையான பக்தர்களுக்கு பெற்றுக்கொள்ளலாம். 0771333123 - 0112610505 055905

## சொந்த விடயம்

### 520 உணவு/ உணவு வழங்கல்

Zoya's wattalapam Home made Stemed delicious wattalapam, No Preservatives added, Rs.100/ - upwards at Borelesgamuwa. Contact 0775517422 055605

### 528 தங்குமிட வசதிகள்

கொழும்பு 13 ஜெம்பட்டா வீதியில் வேலை செல்லும் பெண்களுக்கு அறைகள் வாடகைக்குண்டு. தொடர்புக்கு 0771518242 056670

## காணி/தோட்டம்

### 601 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் விற்பனைக்கு

மட்டக்குளிய பாம் வீதியில் வீடமைப்புத்திட்டத்திற்குப் பின்னால் களஞ்சியம், அபார்ட்மென்ட் அமைப்பதற்கு பொருத்தமான வர்த்தக ரீதியிலான காணி, விற்பனைக்கு. பிலியந்தலை நகரில் (1KM) ஆட்டிகல மாவத்தையில் 06 பேர்ச் தனி மாடியில் டைல் செய்யப்பட்ட வீடு. (வங்கிக் கடன் வசதி மாற்றக்கூடியது) உடன் விற்பனைக்கு. 0113170946, 0776647885, 07108677 07. 056413

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொழும்பு பிரதேசத்தில் மாத்திரமேயுள்ள சொத்துக்களை வாங்க, விற்பதற்கு வாடகைக்கு விட தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள். மொஹமட் காணி தரகர். 0776502878. 056574

தெஹிவளை வைத்யா வீதி காணி விற்பனைக்கு தரகர்கள் வேண்டாம். தொடர்புகள் 0768716848 056021

தெஹிவளை Sea Side தொடர்மாடியில் 3 அறைகள், 2 குளியலறைகள், 1040 சதுர அடி Building One year Complete. வீட்டு உறுதியுடன் 220 இலட்சம். தரகர்கள் தேவையில்லை. 0 777373083. S. இந்திரன். 055948

பொரலஸ்கமுவ, 25 வருடங்கள் பழைமை வாய்ந்த வீட்டுடன் கூடிய 9.25 பேர்ச் முக்கோண வடிவிலான காணி விற்பனைக்கு. பொரலஸ்கமுவ சந்திக்கு 5 நிமிட நடை பயணம். தெஹிவளை வீதிக்கு 2 நிமிட நடை பயணம். 11 அடி பிரத்தியேக வீதி, அமைதியான சூழல், 3 படுக்கையறை, 1 குளியலறை, அமரும் அறை, பகுதியளவில் டயில் பிடிக்கப்பட்டது. சமையலறை, பணியாளர் அறை + குளியலறை, தோட்டம் மற்றும் வாகனத்திற்கான பார்கிங். வீட்டில் திருத்த வேலைகள் உள்ளன. வீடு இருக்கும் அதே நிலையில் விற்கப்படுகின்றது. ரூ. 18 மில்லியன் (பேர்ச் ஒன்று ரூ. 1.75 மில்லியன் + வீட்டிற்கு ரூ. 1.8 மில்லியன்) சிக்கலற்ற உறுதி மற்றும் Title கண்டிப்பாக தரகர் வேண்டாம். அழையுங்கள் 0777330333/ 0112517110. 056535

மாலம்பே SLIT, SITM நிறுவனத்தின் புதிய, குடிபுகாத வீடொன்று விற்பனைக்கு. 10 பேர்ச், 3 அறைகள், மண்டபம், பணியாளர் அறை, வாகனம் நிறுத்தப்போதிய இட வசதி. 225 இலட்சம். தொ.பே. 0773222571. 055235

ராஜகிரிய 4.5 பேர்ச். வீடு விற்பனைக்கு . (கீல்ஸ் இற்கு அருகில்) தொடர்பு 0755478265. 056443

வெள்ளவத்தையில் பெறுமதியான குடியிருப்பு ஆடம்பர வீடு, காலி வீதிக்கு அருகில். தரை மாடி. 2 மாடி, 4 படுக்கையறை + மாஸ்டர் ப/அ, வேலையாள் அறை, டிரைவர் அறை, வேலையாள் குளியலறை, டிரைவர் குளியலறை, டபிள் கராஜ் 140 மில்லியன் எதிர்பார்க்கப்படுகின்றது. (பேசித் தீர்க்கலாம்) நேர்மையான கொள்வனவாளர்கள் மட்டும் தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள் 077-1022555. 055965

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கந்தான நகர மத்தியில் பாதி முடிக்கப்பட்ட வீட்டுடன் 10 பேர்ச் விற்பனைக்கு 25M. 076-9846508, 071-4577800 056677

### 622 வீடு சொத்து மாத்தளை மாவட்டம் விற்பனைக்கு

மாத்தளை ரத்தொட்ட பிரதான பாதைக்கு முகப்பாக அமைந்துள்ள 13.5 பேர்ச் காணி உடன் விற்பனைக்கு. 076 2197481. 056698

### 634 வீடு சொத்து மட்டக்களப்பு மாவட்டம் விற்பனைக்கு

மட்டக்களப்பு நகரில் காணி மட்டக்களப்பு பார் வீதியில் லைட் ஹவுஸ் பக்கமாகவுள்ள 40 பேர்ச் முக்கோண வடிவிலான காணி நகர மத்தியிலிருந்து 1 1/2 கி.மீ. காணியின் பின்புறமாக களப்பு உள்ளது. கடற்கரைக்கு 10 நிமிட நடை பயணம். இயற்கை அழகு நிறைந்த இடம். தொ.பே. 0755268617, 0770330353. 054805

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

கொழும்பு கருவாத் தோட்டம் 2 அறைகள் மண்டபம், சமையலறை, 2 பெல்கனிகள் 2 குளியலறைகள் குளிரூட்டப்பட்ட மாடி வீடு விற்பனைக்கு. 0773002239, 011 2610505. 055913

கொழும்பு 7. 6 அறைகள் குளிரூட்டப்பட்ட இரு மாடி வீடு குத்தகைக்கு உண்டு. 011-2610505/ 0773002239 ரத்மலானை. 055908

கொழும்பு15, இரண்டு படுக்கையறைகள், ஒரு குளியலறை, சமையலறை, விசாலமான பல்கனி மற்றும் வாகனம் நிறுத்தும் பகுதியொன்றுடன் கூடிய முழுதும் டயில் பிடிக்கப்பட்ட வீடு வாடகைக்கு. வாடகை ரூ. 35, 000/ =. தொலைபேசி 0777406580. 056308

## மாங்கல்ய மாலை

### மணமகள்

முஸ்லிம் கௌரவமான, கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் தமது அழகான ஆங்கில மொழி மூலம் கல்விகற்ற 27 வயதுள்ள மகளுக்கு நன்கு படித்த உயர்தொழில் புரியும் மணமகனை எதிர்பார்க்கின்றனர். fatherf528@gmail.com B149840

### மணமகன்

இந்திய குடியுரிமையுள்ள இந்து, தமிழ் பெற்றோர் 1984இல் பிறந்த கேம்பிரிட்ஜ் இல் கல்வி கற்ற தமது மகனுக்கு பொருத்தமான மணமகளைத் தேடுகின்றனர். அவர் தற்போது இலங்கையில் இருந்து கொண்டு கொழும்பிலுள்ள குடும்ப வியாபாரத்தை தொடர்கின்றார். அவர் பிரித்தானிய இரட்டை குடியுரிமை பெற்றவர். ஒரு தங்கை திருமணமாகி வெளிநாட்டில் வசிக்கின்றார். தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள் sivakumar97@hotmail.com G151026

Repeat Your Ad For Better Offers

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the Sunday Observer

# சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்துக்குச் செல்லும் முதல் கருப்பின பெண்



சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்துக்குச் செல்லும் முதல் கருப்பின பெண் என்கிற சாதனையைப் படைக்க இருக்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை ஜினெட் எப்ஸ். போயிங் என்ற தனியார் நிறுவனம் தயாரிக்கும் ஸ்டார் லைனர் 1 என்ற விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு (ஐஎஸ்எஸ்) 2021ஆம் ஆண்டு ஜினெட் செல்வார் என அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா தெரிவித்துள்ளது.

இப்பயணத்தில் சக விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ், ஜோஷ் கசாடா ஆகியோருடன் இணைந்து சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்து ஆராய்ச்சிப் பணிகளை ஜினெட் மேற்கொள்வார்.

அமெரிக்காவைச் சேர்ந்த கருப்பினத்தவர்கள் 10க்கும் மேற்பட்டோர் இதுவரை விண்வெளிக்குச் சென்றுள்ளனர். அவர்களில் குயன் ஃப்ளூபோர்டு என்பவர்தான் விண்வெளிக்கு (1983) சென்ற முதல் கருப்பினத்தவர். 2000இல் சர்வதேச விண்வெளி நிலையம் அமைக்கப்பட்ட பிறகு இதுவரை 200க்கு மேற்பட்டோர் அங்கு சென்று தங்கிப் பணியாற்றியுள்ளனர். விண்வெளி நிலையத்தை உருவாக்கும் பணிகளில்கூட கருப்பினத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆனால், அங்கு தங்கியிருந்து பணியாற்றும் வாய்ப்பை கருப்பினத்தைச் சேர்ந்தவர்களில் யாருக்கும் கிடைக்காத நிலையில், முதல் வாய்ப்பு ஜினெட் எப்ஸுக்கு கிடைத்திருக்கிறது.

இயற்பியலில் இளநிலை பட்டமும், அறிவியலில் முதுநிலை பட்டமும், விண்வெளிப் பொறியியலில் முனைவர் பட்டமும் முடித்துள்ளார் ஜினெட். தனது முனைவர் பட்ட பயிற்சியின்போது நாசாவின் மாணவ ஆராய்ச்சியாளர் திட்டத்தில் பணியாற்றி பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தார். பின்னர், ரிசர்ச் லேபரட்டரீஸ் என்ற நிறுவனத்தில் இரு ஆண்டுகள் பணியாற்றினார். அதன் பிறகு சிஐஏவில் இணைந்து 7 ஆண்டுகள் டெக்னிக்கல் இன்டெலிஜென்ஸ் அதிகாரியாகப் பணிபுரிந்தார்.

அதன்பிறகு 2009இல் விண்வெளி வீரர்கள் குழுவில் தேர்வு பெற்றார். ஜினெட்டுக்கு இப்போது கிடைத்துள்ளது முதல் வாய்ப்பு என்றுகூட சொல்ல முடியாது. ஏனென்றால் 2018ஆம் ஆண்டே ஜினெட்டுக்கு இந்த வாய்ப்பு கிடைத்தும் கைகூடாமல்போனது. அப்போது ரஷியாவின் சோயுஸ் ராக்கெட் மூலம் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்துக்குச் செல்ல மூவரில் ஒருவராக ஜினெட் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். ஆனால், கடைசி நேரத்தில் ஜினெட் மாற்றப்பட்டு செரீனா அனான் சான்ஸ்லர் என்பவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. பொதுவாக, மருத்துவப் பிரச்சினை அல்லது குடும்ப ரீதியான காரணங்களுக்காகத்தான் விண்வெளி வீரர்கள் மாற்றப்படுவார்கள்.


ஆனால், இந்த இரண்டு காரணங்களும் இல்லாத நிலையில் கடைசி நேரத்தில் தனக்கு வாய்ப்பு கிடைக்காததால் மிகுந்த ஏமாற்றமடைந்த ஜினெட்டுக்கு இப்போது மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது.

போயிங்கின் ஸ்டார்லைனர் விண்கலம் இன்னும் இரு முக்கியமான சோதனைகளைக் கடக்க வேண்டியுள்ளது. கடந்த டிசம்பரில் ஆளில்லாமல் இந்த விண்கலம் ஏவப்பட்டபோது, சில தொழில்நுட்ப பிரச்சினைகள் காரணமாக சர்வதேச விண்வெளி நிலையத்தை அடையவில்லை. ஆனால், பாதுகாப்பாக தரையிறங்கியது. இன்னொரு முறை இந்த சோதனையை ஸ்டார்லைனர் வெற்றிகரமாக நிறைவேற்றிய பின்னரே, ஜினெட் உள்ளிட்ட மூன்று விண்வெளி வீரர்களும் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் செல்ல முடியும்.

இது எனது நிர்வாகம் எடுத்த முடிவு. இருந்தாலும் நான் தொடர்ந்து முயற்சிப்பேன்' என நம்பிக்கையுடன் தெரிவித்திருக்கிறார் ஜினெட்.

# மீண்டெழு

சுகந்தி மணிமாறன்



# மதிப்பற்ற பெண் சிந்தனை; மாறுமா ஆண் சமூகம்?

எமது சமூகத்தில் சிலநேரம் சிறுமிகளும் பெண்களும், "ஏன்தான் பெண்ணாகப் பிறந்தேனோ" என்று அலுத்துக்கொள்கிறார்கள். "ஏன்தான் ஆணாகப் பிறந்தேனோ, நான் பெண்ணாகப் பிறந்திருக்கலாம்" என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால், பல ஆண்கள்,…

1. பெண்ணாகப் பிறக்க எனக்கு விருப்பமில்லை. ஏனென்றால், எனக்குப் பெண்களைப் பிடிக்காது.
2. பெண்ணாகப் பிறந்தால் ஆணுக்கு அடிமையாக இருக்க வேண்டும்.
3.வீட்டுக்குள் இருக்க வேண்டும். வெளியே செல்ல முடியாது. அடிவாங்க வேண்டும். அடுப்பங்கரையில் இருக்க வேண்டும்.
4.பெண்ணாகப் பிறந்தால் தியாகியாக இருக்க வேண்டும்.

என்ற வாதங்களுடன் ஆண் பிள்ளையாக இருப்பதன் சௌகர்யம், சுதந்திரம், பெண்ணைப் பார்க்கும் விதம் மற்றும் அவர்கள் பெண்களின் நிலையை புரிந்துவைத்துள்ள விதம் எனப் பலவற்றை உற்றுப்பார்க்க வேண்டியுள்ளது.

பெண்ணென்றால் தியாகம்செய்ய, ஆணுக்காக வாழ, அடி வாங்க, வீட்டுக்குள்ளே இருக்க எனப் பல வார்த்தைகளில் அவ்வாக்கியங்களின் பொருளை உணர முடிகிறது. இது நம் சமூகத்தின் பெரும்பான்மை ஆண்களின் சிந்தனைச் செயல்பாடுகளுக்கான சாட்சியமாகும். ஆனால் இவற்றைப் பெரும்பான்மைப் பெண்கள் ஏற்றுக்கொண்டிருப்பதையும் சேர்த்து யோசிப்பது நல்லது.

நம் நாட்டில், நமது வாழ்வில், நமது குடும்பங்களில் நடந்துள்ள மாற்றங்கள் என்ன என்பதை நாம் கேள்விக்குட்படுத்த வேண்டியதும் அவசியம். நாம் பாடிய, பேசிய, பாடமாகப் படித்த சமத்துவம், சகோதரத்துவம், பகிர்வு போன்றவை பெண் குழந்தைகளை எட்டிய அளவு ஆண் குழந்தைகளை ஏன் சென்றுசேரவில்லை? பெண் குழந்தைகளுக்கு அவர்களுடைய வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும் போது 'ஆணைப் போல்' என்று குறிப்பிட்டுப் பல செய்திகளைக் கடத்துகிறோம். ஆனால், ஆண்களிடம் 'பெண்களைப் போல் பொறுமையாக இருக்க வேண்டும், உழைக்க வேண்டும், பராமரிப்பு வேலைகளில் ஈடுபட வேண்டும், கடுமையாக உழைக்க வேண்டும்' என்றெல்லாம் சொல்லித்தரவில்லை.

பெண்களுக்கான விஷயங்களை முக்கியமானதாகக் குறிப்பிட்டு, பாராட்டி, அங்கீகரித்து நாம் பொதுவெளியில் பேசுவதில்லை. அவற்றை எடுத்துக்காட்டாக்கி குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லத் தவறிவிடுகிறோம்.

பெண்களைமையப்படுத்தி குழந்தைப்பேறு, குழந்தை வளர்ப்பு, குழந்தைகளுடைய தேவைகள் போன்றவை இருந்தாலும் அது பற்றி மதிப்பற்றுப் போவதற்குக் காரணமாக 'ஆணாகப் பிறந்திருப்பது' என்று இருப்பதை மாற்றும் வழிகளைப் பற்றி யோசிக்க வேண்டும். பெண்களிடம் மதிப்பும் மரியாதையும் வைத்துள்ள ஆண்கள் நம்மிடையே ஆங்காங்கே இருக்கின்றனர். அடுப்படியைப் பகிர்ந்துகொள்ளும் ஆண்கள், குழந்தைகளைப் பராமரிக்கும் ஆண்கள் என இருக்கும் இவர்கள் எல்லோருடைய கண்களுக்கும் தெரிவதாக இல்லை. "ஆண்பிள்ளை பொம்பள மாதிரி இதையெல்லாம் செய்யலாமா?" என்பது போன்ற பெண்களின் குரல்களும் அதற்குக் காரணமாக இருக்கின்றன. தனக்கு எதிரான பல விஷயங்களைத் தானே விரும்பிச் செய்யும் மனநிலை பெண்களிடம் பரவலாக்கப்பட்டுள்ளது. அவற்றைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். இவையெல்லாம் சிறு சிறு செயல்களென்றாலும் ஆண்களும் பெண்களும் இணைந்து வாழும் மகிழ்ச்சியான வாழ்க்கையை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும் அதற்கு நாம் கடத்த வேண்டிய தொலைவு இன்னும் இருக்கிறது.

# ஆதிக்க வெறியால் ஆக்கிரமிக்கப்படும் பெண்ணினம்

இந்தியா என்றாலே அதன் பன்மைக் கலாசாரமும், 'ஒழுக்க நெறியும்', குடும்ப அமைப்பின் மகத்துவமும் புகழ்ந்துரைக்கப்படும் நிலை மாறி இப்போது இந்தியா என்றால் அது ஒரு வல்லுறவு தலைநகரமாக, பெண்களுக்குப் பாதுகாப்பற்ற நாடாக, பெண்களின் அடிப்படை உரிமைகளான வாழும் உரிமை, உடல் நலம், திருமண உரிமை ஆகியவை கூட மறுக்கப்படும் நாடாக உலக வரைபடத்தில் காட்சி அளிக்கிறது. வளர்ந்து வரும் நாடு இந்தியா என்று சொல்வதைக் காட்டிலும் பெண்கள் விடயத்தில் பிற்போக்குத்தனம் பெருகி வரும் நாடாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகி விடாது.

ஆனால், இந்தியா பற்றி நாம் இப்படி தொடங்கும் போது இவர்கள் அவநம்பிக்கைவாதிகள், கேடுகெட்ட பெண்ணியவாதிகள், விளம்பரப்பிரியர்கள், வேலையற்ற கம்யூனிஸ்டுகள் என்று வசைபாடப்படுவோம். ஏனென்றால் 'நல்லதே நினை, நல்லதே நடக்கும்' என்னும் மாயாவாத மதவாத நம்பிக்கைகளை சாஸ்வதம் என்று நம்பும் 'ஆன்மீக' நாடல்லவா இது. ஆகவே, நாம் எப்போதும் எதிர்மறைகளையோ, குறைகளையோ பேசக்கூடாது. 2 வயது பெண் குழந்தையை வல்லுறவு செய்து கொன்றாலும் 'குறையொன்றுமில்லை.

பெண்களுக்கெதிரான வன்முறைகள், அவர்களுக்கிழைக்கப்படும் கொடுமைகள் பற்றிய புள்ளி விபரங்கள் போதுமான அளவுக்கு அன்றாடம் வெளியிடப்பட்டு வருகின்றன. உலகளவில் பெண்கள் வாழ்வதற்கான பாதுகாப்பற்ற நாடுகள் பட்டியலில் இந்தியா ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தியப் பெண்களின் அவல நிலைக்குப் பின்னால் இருக்கும் இந்திய மனநிலை இதுவே. மற்ற நாடுகள் மட்டும் என்ன ஒழுங்கா? இதைவிட மோசமானக் கொடுமைகள் நடக்கவில்லையா என்று கேட்போரும் உண்டு. பெண்களை உடன்கட்டை ஏறச் செய்து, வரதட்சணை என்னும் கொடிய தீயில் பெண்களை காவு கொடுத்து, இன்னும் இதர கொடுமைகள் செய்து இன்றைக்கும் ஒரு பெண் குழந்தை என்பதே பெரும் சுமையாக கருதும் நிலை இந்தியாவைத் தவிர வேறெங்கும் நிலவுமா என்பது சந்தேகமே.

இந்தியாவில் பெண்கள் நிலை குறித்து ஒற்றை வரியில் சொல்வதானால், பெண் என்பவள் அடக்கப்பட வேண்டியவள், அவள் ஆளப்பட வேண்டியவள், அவள் ஆணுக்கான, ஆணின் தலைமையிலான குடும்பத்திற்கு ஒரு பணிப் பெண். பெண்களுக்கெதிரான அனைத்து குற்றங்களுக்கும் அடிப்படையாய் இருப்பது இக்கருத்தியலே.

பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதே ஒரு பொய், ஆண்களைக் காட்டிலும் பெண்கள்தான் அதிகம் படிக்கிறார்கள், வேலை வாய்ப்பில் அவர்களுக்கே முக்கியத்துவம், நிறைய சம்பாதிக்கிறார்கள், நவநாகரீகமாகத் திரிகிறார்கள், சொல்லப்போனால் ஆண்கள்தான் பாவம், ஆண்கள்தான் அடங்கிப் போகிறார்கள் என்பதே பெரும்பாலாரின் வாதமாய் இருக்கிறது.

பேருந்தில் ஒரு யுவதி வல்லுறவுக்காட்பட்டாலும் சரி, வீட்டிற்குள் ஒரு பாட்டி வல்லுறவுக்காட்பட்டாலும் சரி இவர்கள் பெண்களின் உடையையும், கலாச்சாரத்தையுமே குறை சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

ஆனால், வரதட்சணைக் கொடுமையால் ஒரு பெண் கொல்லப்படும்போதோ அல்லது ஏழ்மையால் ஒரு பெண் தன் மனதில் இரும்பைக் காய்ச்சி ஊற்றி தன் பிள்ளைகளின் வாயில் விஷத்தை ஊற்றிக் கொல்லும்போதோ இத்தகைய கதாகாலட்சேபவாதிகளால் பெண்களிடம் குற்றத்தைக் காண முடியவதில்லை. வெறும் அனுதாபங்களோடு நிறுத்திக்கொள்வார்கள்.

உண்மையில், இந்தியாவில் பெண்களின் நிலைக்கு அத்தகைய குற்றவாளிகளைவிட நிலவும் தந்தை ஆதிக்க சமூக அமைப்பிற்கும், ஏற்றத்தாழ்வு மிக்க பொருளாதார அமைப்பிற்கும் நிபந்தனையற்ற ஆதரவு தருபவர்களே முதன்மை காரணம். குறிப்பிட்ட குற்றத்திற்கு தனிநபர் காரணமாக இருந்தாலும் ஒட்டுமொத்தமாக பெண்களுக்கெதிரான குற்றங்கள் பெருக ஆணாதிக்க சமூக அமைப்பே காரணம். அதைக் களைவதற்காகப் பெண்கள் பெண்ணியம், பெண் உரிமை என்று பேசும்போதும், போராடும்போதும் அதை ஏளனப்படுத்துவோரும், அப்பெண்களை ஆபாசமாகப் பேசுவோரும் ஆணின் அதிகார மனதிற்கு மறைமுகமாக தீனி போடுகின்றனர்.

தேசிய குற்ற ஆவணங்கள் மையத்தின் பதிவின் படி ஒவ்வொரு 1.7 நிமிடங்களுக்கும் பெண்களுக்கெதிரான வன்முறை பதிவு செய்யப்படுகிறது, அதோடு ஒவ்வொரு 16 நிமிடங்களுக்கும் ஒரு வல்லுறவு புகார் மற்றும் ஒவ்வொரு 4.4 நிமிடங்களுக்கும் ஒரு சிறுமி குடும்ப வன்முறைக்குள்ளாகிறாள் என்று தெரிவிக்கிறது.

இவ்வளவு குற்றங்கள் நடந்தும் தண்டனைகளை கூட்டுவது பற்றியும், பெண்களையே பொறுப்பேற்கச் சொல்வதுமாகத்தான் அரசு பெண்கள் பிரச்சினையை கையாண்டு வருகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி, குற்றமிழைத்தவருக்கு தண்டனை இவையெல்லாம் உடனடி நடவடிக்கைகள். அவற்றை காலதாமதமின்றி செயல்படுத்த வேண்டும். ஆனால், பெண்களின் நிலையை உயர்த்த, அவர்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாழ அடிப்படை சிந்தனை மாற்றங்களை உருவாக்குவதற்கான செயல்திட்டத்தை அரசு வகுக்க வேண்டும். பாலின உணர்வூட்டல் (gender sensitizing) கல்வியை வகுக்க வேண்டும். பாலியல் கல்வி என்பது வேறு. பாலினக் கல்வி என்பது வேறு பாலியல் கல்வி என்பது இயற்கையான பாலியல் அடையாளம் பற்றிய உயிரியல் கல்வி. ஆனால், பாலினக் கல்வி என்பது ஆணாதிக்க சமூகத்தில் ஆணாதிக்க சிந்தனையோடு சமூகமயமாக்கப்பட்ட மனங்களுக்கு சமத்துவ சிந்தனையை போதித்தலாகும். இதுவே நிரந்தர தீர்வை வழங்கும்.

**சாவின் உதடுகள்**





# வறுமைக்குள் தள்ளப்படும் அபாயம்!

உலகில் கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார பின்னடைவால் 4 கோடியே 70 இலட்சம் பெண்களும் சிறுமிகளும் வறுமைக்கோட்டுக்குக் கீழே தள்ளப்படும் அபாயம் நிலவுவதாக ஐ.நா அறிவித்துள்ளது. ஐ.நா. பெண்கள் அமைப்பும் ஐ.நா.வளர்ச்சித் திட்டமும் இணைந்து நடத்திய ஆராச்சியில் இவ் விடயம் தெரியவந்துள்ளது. ஆகையால் அதிக பெண்கள் வறுமைக்குத் தள்ளப்படும் சதவீதம் அதிகரித்து ஆண்களுக்கும் பெண்களுக்குமான பொருளாதார இடைவெளி மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் ஆராய்ச்சியில் வெளியிடப்பட்டுள்ளது.

பெண்களின் வறுமை வீதம் 2019 முதல் 2021 வரை 2.7 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டது. ஆனால், கொரோனா முடக்கத்தால் உருவான பொருளாதாரச் சீர்கேட்டால் இது 9.1 சதவீதமாக உயரும் அபாயம் உள்ளது. பெண்களுடன் ஆண்களும் அதிக எண்ணிக்கையில் வறுமைக்குத் தள்ளப்படுவதால் ஏற்கெனவே வறுமையில் வாடுகிறவர்களுடன் இந்தத் திடீர் உயர்வும் சேரும்.

இதனால், உலகம் முழுவதும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறவர்களின் எண்ணிக்கை 43 கோடியே 50 இலட்சத்தைத் தாண்டும் எனவும் ஐ.நா.வின் ஆராய்ச்சி கூறுகிறது. கொரோனா தொற்றுக்கு முன்பிருந்த நிலையை எட்ட எவ்வளவு முயன்றாலும் 2030க்குள் அதை அடைந்துவிட முடியாது என்கிறார் ஐ.நா.பெண்கள் அமைப்பின் செயல் இயக்குநர் ஃபும்சிலே ம்லாம்போ தெரிவித்திருக்கிறார்.



# வடை போச்சே!!

## யானை விலை குதிரை விலையாகிப் போன உளுந்தின் விலை!

**தமிழர்களின் உணவு பண்பாட்டில் வடை பாயாசத்துடன் உண்பது என்பது மனக் கிளர்ச்சியுட்டும் ஒரு விஷயம். அக்காலத்தில் நாட்டுக் கோழிக்கறியுடன் சாப்பாடு என்றால் எப்படி விசேஷமோ அப்படியே தான் வடை பாயாச விருந்தும்! ஏதேனும் விசேசம் என்றால் வீடுகளில் மரக்கறி சாப்பாட்டுடன் வடை பாயாசமும் இடம் பிடிக்குமானால் அந்த சாப்பாட்டின் மகத்துவமே தனி!**

இந்த வடை பாயாசம் என்பது ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு சுவையுடன் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒன்றுக் கொன்று சளைத்ததல்ல என்றவகையில் வித்தியாசமான சுவைகளை நாக்குக்கு வழங்கும், எல்லோருக்கும் பிரியமான சாப்பாடாக வடை பாயாசம் விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது. அத்துடன் சைவக் கோவில்களில் சக்கரை பொங்கலுடன் வடை கொடுப்பார்கள் அமுதம் தான் போங்கள்! அதற்கு என்று ஒரு இளைஞர் கூட்டம் பொங்கலுக்கும் வடைக்கும் கோயில் கோயிலாக அலையும். அத்துடன் காலை சாப்பாடு பலருக்கு ஒரு வடை ஒரு தேநீருடன் முடியும், அதே போல் மாலையில் ஒருவடை ஒரு தேநீர் அருந்தி தங்கள் களைப்பை போக்கிக் கொள்வார்கள்.

நாம் அனைவருமே நரியும் காக்கையும் வடையும் நாம் அனைவருமே கதையைக் கேட்டு வளர்ப்பவர்கள் தானே! தமிழர்களின் உணவிலும் கல்வியிலும் இலக்கியத்திலும் வாழ்வோடும் பின்னிப் பிணைந்தது வடை என்றால் அது மிகையாகாது.வடையில் இரண்டு வகையுண்டு. ஒன்று உழுந்து வடை, மற்றது பருப்பு வடை, வடையானது பலகார வகையாக இருந்தாலும் இந்தியாவிலும் இலங்கையிலும் சிறுவர் முதல் பெரியவர் வரை விரும்பி சாப்பிடும் உப உணவாகும். தமிழர்களின் விழாக்களிலும், சடங்குகளிலும் வடையானது முக்கிய பங்கு வகித்து வருகின்றது.

இலங்கையில் அதுவும் வடக்கு பகுதியில் வடையானது ஜெட் வேகத்தில் விலை உயர்ந்துள்ளதைப் பார்க்க முடிகிறது. அதிர்ச்சியளிக்கும் விலை உயர்வு! இலங்கையில் வடக்கு பகுதியில் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் 1975 ஆம் அண்டு காலப்பகுதிகளில் 25 சதம் விற்ற வடையானது 2020 அம் ஆண்டு வன்னியில் 50 ரூபாவாகவும், யாழ்ப்பாணத்தில் 70 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

ஏழைகள் வடையை கண்ணால் மட்டுமே பார்க்க கூடிய நிலைமை உருவாகிவிட்டதா? என எண்ணத் தோன்றுகின்றது.வடக்கு மற்றும் வன்னியை பொறுத்தவரையில் கிராமப்புறங்களிலிருந்து நகரத்திற்கு தங்கள் தேவைகளை நிறைவேற்ற வரும் மக்கள் நகரத்தில் பிரதான சைவக்கடைகளையே நாடுவார்கள். அக்கடைகள் பெரும்பாலும் தங்கள் பெயர்களுக்கு பின்னால் 'கபே' என்ற பெயரை கொண்டிருப்பது வழமை. அக்கடைகளில் வாழையிலையில் வைக்கப்பட்ட பச்சை மிளகாய் சம்பலுடன் ஒரு வடை சாப்பிட்டு பசும் பால் தேநீர் ஒன்றை அருந்தி செல்வதற்கு தவறுவதில்லை. அவ்வாறு தங்களை ஆசுவாசப்படுத்தும் ஒரு முக்கிய சிற்றுண்டியாக ஏழை மக்களின் உணவாக இருந்து வந்த வடை மற்றும் தோசை உணவுகள் உளுந்தின் விலையேற்றம் காரணமாக யானைவிலை குதிரை விலையாகியிருக்கிறது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக பல கலவரங்கள் பல்வேறு காலப்பகுதிகளில் நடைபெற்றுள்ளன. அவ்வாறான கலவரங்களின் போது கூட 'அப்பிட்ட வடே, தோசே எப்பா' என சிங்களத்தில் கூறியவாறு மக்கள் தாக்கப்பட்டதாக கூறுவார்கள் வடை தோசை தமிழர்களின் அடையாளமாகவே மாறி இருப்பதை இது உணர்த்துகிறது.

இலங்கையில் உளுந்தின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ள நிலையில் உளுந்தை பயன்படுத்தி செய்யப்படும் உணவுகளான வடை இட்லி மற்றும் தோசை போன்ற உணவுகளின் விலைகள் வானளாவ உயர்ந்துள்ளன. வடக்கில் வன்னி பகுதியில் உளுந்து உற்பத்தி செய்யப்பட்ட போதிலும் அங்கு உளுந்தின் விலை கிலோ 800 ரூபாவாகவும், ஏனைய மாவட்டங்களில் ஆயிரத்து 200 ரூபா வரைக்கும் உயர்ந்துள்ளது.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கோரேனா பெருந்தோற்று காரணமாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் இருந்து உளுந்து இறக்குமதி செய்யப்பட முடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் கடந்த வருடம் வன்னியில் உளுந்து செய்கை பாரியளவில் முன்னெடுக்கப்படவில்லை என வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வடக்கில் வன்னி பெருநிலப்பரப்பில் உளுந்து விவசாயிகளால் பெருமளவில் விவசாயம் செய்யப்படுகின்றது. காரணம் உளுந்து உற்பத்திக்கு பெருமளவிலான நீர் தேவைப்படாது. காலநிலைக்கு இசைவாகவே உளுந்தானது பயிரிடப்படுகின்றது. கூடுதலாக தை மாதங்களில் பயிரிடப்படும் உழுந்தானது சித்திரையில் அறுவடை செய்யப்படுகின்றது. இக்காலப்பகுதியில் வன்னிப்பகுதியில் அதிகமான பனி பெய்வதால் குறித்த பனியில் வளர்ந்து பூத்து காய்க்கின்றது உளுந்து.



**கைகொடுத்தால் வன்னி விவசாயிகள் உப உணவு பொருட்களில் தன்னிறைவுக்கு வழி வகுப்பார்கள்**

வன்னி பெருநிலப்பரப்பை மையமாகக் கொண்டு பாரிய குளங்கள், காடுகள் மற்றும் வயல் நிலங்கள் காணப்படுகின்றன. அத்துடன் ஒவ்வொரு மாவட்டத்தையும் மையப்படுத்தி விவசாயத் திணைக்களங்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் கமநல அமைப்புக்கள் பல உருவாக்கப்பட்டு செயற்பாட்டில் உள்ளன.

எனினும் வன்னியில் உளுந்து செய்கை பாதிக்கப்பட்டுள்ளதானது பலரின் மத்தியில் சந்தேகத்தையும் கேள்வியையும் எழுப்பியுள்ளது. இலங்கையில் 1970 களில் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான முற்போக்கு அரசானது உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் முகமாக இறக்குமதியை தடை செய்திருந்தது.

அக்காலப்பகுதியில் வன்னியில் பாவற்குளம் தொடக்கம் கனகராயன்குளம் வரையில் பயிரிடப்படும் உளுந்து செய்கையானது வடக்கின் உளுந்து தேவையை மாத்திரமல்ல இலங்கை முழுவதுமான உளுந்தின் தேவையை பூர்த்தி செய்து உளுந்தில் தன்னிறைவுக்கு வழி செய்திருந்தது. விவசாயத்தில் நவீனத்துவம் புகுத்தப்படாத அக்காலப்பகுதியில் வடக்கின் விவசாயிகள் விவசாயத்தில் பாரிய வளர்ச்சியை கண்டதுடன் படித்தவர்கள் கூட தங்கள் அரசாங்க வேலைகளை உதறி விட்டு வந்து வன்னியில் விவசாயம் செய்யுமளவிற்கு விவசாயத்தில் போதிய வருமானத் ஈட்ட முடிந்தது.

1970களில் நாட்டில் நடைபெற்ற விவசாயப்புரட்சி பற்றி தெரிவித்த முதியவர் ஒருவர், மிளகாய், வெங்காயம், உளுந்து, பயறு, கௌப்பி என விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்து விவசாயிகள் இலங்கையில் பெரும் பொருளாதார முன்னேற்றத்தினை கண்டிருந்தனர் என்கிறார். அவர் எனினும் உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக இலங்கையிலிருந்து வடக்கு பகுதியானது துண்டாடப்பட்டு இருண்ட பிரதேசமாக மாறிப்போயிருந்தது. வடக்கு கிழக்கில் 30 வருடங்களாக நடைபெற்ற நீண்ட யுத்தம் மக்களின் உணவுத் தேவையை கேள்விக்குள்ளாக்கியத போதும், வன்னி மண்ணில் செய்யப்பட்ட விவசாயமானது தமிழ் மக்களை பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்றியிருந்தது. அத்துடன் உரம், கிருமிநாசினி போன்றன விவசாயத்திற்கான உபகரணங்கள் என்பன வடக்கிற்கு தடை செய்யப்பட்டிருந்த போதும் மின்சாரம் இல்லாத நிலையிலும் இயற்கை முறையிலன விவசாயத்தை மேற்கொண்ட வன்னி விவசாயிகள் 100 வீதம் விவசாயத்தில் வெற்றி கண்டிருந்தனர் என்கிறார் இந்த அனுபவஸ்தர்.

இதே சமயம், தென்னிலங்கையிலிருந்து முன்னெடுக்கப்பட்ட மகாவலி திட்டத்தினூடாக தமிழர் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் காரணமாக வடக்கு தமிழ் விவசாயிகளின் வாழ்வில் மகாவலி பெரும் வலியாக மாறிப்போனது.ஆகவே வன்னி பெருநிலப்பரப்பில் அதிகமானவர்கள் விவசாயிகளாக இருந்தபோதும் விவசாயம் செய்யப்படாமல் விவசாய காணிகள் கைவிடப்படுவதும், விவசாயிகள் நட்டமடைவதற்கான காரணங்கள் என்ன என்பதும் குறித்து ஆரா வேண்டிய தேவை இருக்கின்றது.

(19ஆம் பக்கம் பார்க்க)

**எம்.ஜி.ரட்ணகாந்தன்...**
வன்னி

## புதிய வலயக் கல்விப் பணிப்பாளரின் வருகை

# கிண்ணியாவின் கல்விப் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

**கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட கல்விப் பணிப்பாளர் ஏ. நகூகர்கான் தனது கடமைகளைப் பொறுப்பேற்று ஒரு மாதம் பூர்த்தியாகின்றது. இவரது கடமையேற்றல் நிகழ்வு ஒரு மகத்தான வரவேற்பாகவும் உணர்வுபூர்வமாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தமை கிண்ணியாவின் கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய தடம் பதித்த விடயம் என்றே கூறலாம்.**

வலயக் கல்வி அலுவலகமும் கிண்ணியா அதிபர்கள் சங்கமும் இணைந்து இந்த செங்கம்பள வரவேற்பினை புதிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கு ஏற்பாடு செய்திருந்தன.

இவ்வாறு உணர்வுபூர்மாக இந்த வரவேற்பு அளிக்கப்பட்டமைக்கு சில பின்னணிக் காரணங்கள் ஏதுவாக இருந்திருக்கின்றன.

அதில் பல வருடங்கள் தொடர்ச்சியாக கிண்ணியாவின் கல்வி நிலையானது தேசிய மட்ட தரப்படுத்தலில் இறுதியான இடத்தில் இருந்து வருகின்றமை ஒரு முக்கிய காரணமாகும்.

உண்மையிலே இந்த விடயம் குறிப்பாக கல்விச் சமூகத்தை தீவிரமாக சிந்திக்க வைத்திருக்கிறது. ஒவ்வொரு வருடமும் பொதுப் பரீட்சைகளின் பகுப்பாய்வு வெளியிடப்படுகின்ற போதெல்லாம் கிண்ணியா 98 வது வலயம், கிண்ணியா 99 வலயம் என்று வருகின்ற செய்தியானது கிண்ணியா வலய அதிபர்களை கடுமையாக பாதித்திருக்கின்றது. ஆகவே இதில் இருந்து மீள வேண்டும் என்பதை புதிய பணிப்பாளருக்கு அளிக்கப்பட்ட அந்த செங்கம்பள வரவேற்பு எடுத்துச் சொல்லியிருக்கின்றது.

அடுத்து கிண்ணியா மண்ணில் இருந்து கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது அதிகாரி என்ற வகையிலும் கிண்ணியா வலயத்திற்கு நிரந்தர நியமனம் பெற்ற முதல் கிண்ணியா வாசி என்ற வகையிலும் இவரது கடமையேற்பு வைபவம் முக்கியம் பெற்றிருக்கின்றது.

2009.02. 01 ஆம் ஆண்டு கிண்ணியா வலயம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, பல பணிப்பாளர்கள் பணியாற்றியுள்ளனர். இதில் நிரந்த பணிப்பாளர்களாக வெளியூரைச் சேர்ந்தவர்களும் பதில் கடமை பணிப்பாளர்களாகவும் உள்ளூர் மற்றும் வெளியூரைச் சேர்ந்தவர்களும் கடமையாற்றியுள்ளனர்.

அடுத்து, வரலாற்றில் முதற் தடவையாக கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் தனது

குடும்பத்தார் சகிதம் சென்று கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட ஒரு சந்தர்ப்பமாகவும் இந்த வைபவம் முக்கியம் பெற்றிருக்கின்றது.

இவ்வாறு குடும்ப சகிதம் வரவழைக்க நடவடிக்கை எடுத்தது ஏற்பாட்டுக் குழவினரே. இதன் மூலம் கிண்ணியாவின் கல்வி நிலை பற்றிய கவலையை சமூகமயப்படுத்தியிருக்கிறார்கள் என்று கூறலாம். அது மாத்திரமன்றி , புதிய பணிப்பாளர் தியாகத்தோடு உணர்வு பூர்வமாகவும் தனது கடமைகளைச் செய்ய வேண்டும் என்ற செய்தியையும் வழங்கியிருக்கிறார்கள்.

பொதுவாகவும் சுருக்கமாகவும் கூறுவதென்றால், புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் மீது, கல்விச் சமூகத்துக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றமையை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

கிண்ணியா வலயம் அடைவு மட்டத்தில் தேசிய ரீதியில் இறுதி இடத்தில் இருப்பது அது அந்த மக்களை மட்டும் பாதிக்கவில்லை. திருமலை மாவட்டம் தேசிய மட்டத்தில் பின் தள்ளப்படுவதற்கு இது காரணமாக இருக்கின்றது.

இதன் காரணமாக கிழக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் பின் தள்ளப்படுகின்றது.

கிண்ணியா வலயத்தில் 66 பாடசாலைகள் இருக்கின்றன. 3 கல்விக் கோட்டங்கள் இருக்கின்றன. எந்தப் பாடத்துக்கும் குறைவில்லாத ஆசிரியர்கள் இருக்கின்றனர். பொருத்தமான பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் இருக்கின்றனர். தேவையான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் இருக்கின்றனர். எல்லாப் பாடசாலைகளிலும் தேவையான பௌதீக வளங்கள் காணப்படுகின்றன.

அப்படியென்றால் ஏன் கிண்ணியாவின் கல்வி நிலை இந்தளவு மோசமான நிலையை அடைந்திருந்தது என்ற கேள்வி பெற்றார்களிடமிருந்து எழவது நியாயமானதே.





கற்றல் கற்பித்தலுக்குரிய வளங்கள் தாராளமாக இருந்தாலும் அவற்றை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு தேவையான சரியான வழிகாட்டலும் பொருத்தமான ஆலோசனைகளும் இருக்க வேண்டும். இதனை இலக்கை நோக்கிய திட்டமிடல் எவரிடமிருக்கிறதோ அவரிடமே எதிர்பார்க்கலாம். இது கல்வித் துறைக்கு மத்திரமன்றி அனைத்து துறைசார் தலைவருக்கும் பொருந்தும்.

எனவே, இலக்கை நோக்கிய திட்டமிடல் இல்லாமல் ஒரு போதும் கிண்ணியாவின் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்த முடியாது என்ற உண்மையை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு சீரான நிர்வாகத்துக்குரிய இந்த விடயங்களை செய்யக் கூடிய ஆளுமையும் ஆற்றலும் புதிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கு இருப்பது, கிண்ணியாவின் அதிபர் சங்கத்துக்கு மாத்திரமன்றி, பெற்றார்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. இதனை கடந்த ஒரு மாத கால அவரது நிர்வாக பணிகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

கடந்த காலங்களில் கட்சி, உறவு முறை, குடும்பம், சகபாடி போன்ற விடயங்கள் கல்வி துறையில் பல்வேறு வடிவங்களில் செல்வாக்குச் செலுத்தியிருந்ததாக கல்விச் சமுகத்தில் இருந்து அவ்வப்போது அதிருப்திகள் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்ததை இங்கு ஞாபகமூட்ட வேண்டியிருக்கிறது. இந்த நிலையானது கல்வி மட்டைத்தை உயர்த்துவதில் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தியிருந்ததாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மேற்கூறிய தாக்கங்களில் இருந்து, கல்வித் துறையை பாதுகாக்க கூடிய சிறந்த முகாமைத்துவ முறையின் அவசியம் குறித்து உணரப்படுகின்ற இந்த நேரத்தில் புதிய வலயக் கல்விப் பணிப்பாளரின் பதவியேற்பு இடம்பெற்றிருக்கின்றது.

எனவே, சமூகத்தின் கல்வி அபிவிருத்திக்கு தடையாக இருக்கின்ற பல்வேறு சவால்களுக்கு மத்தியில், இவரது கடந்த ஒரு மாத காலச் செயற்பாடு, கிண்ணியாவின் கல்வி அபிவிருத்திக்கு நல்ல சமிக்ஞையை தந்திருப்பதாக அதிபர்கள், ஆசிரியர்கள் மாத்திரமன்றி, பாடசாலைச் சமூகமும் திருப்தி வெளியிட்டிருக்கின்றமை ஒரு மாற்றத்தை நோக்கிய பாதையாக மாறலாம்.

**கியாஸ் ஷாபி...**
கிண்ணியா மத்திய நிருபர்

# நாராயணசாமியின் நினைவஞ்சலி கூட்டமும் பகல் போஷன நிகழ்வும்

"மஞ்சள் குங்குமம்" என்ற இலங்கைத் திரைப்படத்தின் தயாரிப்பாளரும் ஆமர் வீதி அம்பாள் கபே உரிமையாளரும் சமூக சேவையாளருமான அமரர் தொழிலதிபர் ஜி. நாராயணசாமியின் நினைவஞ்சலிக் கூட்டமும் பகல் போஷன நிகழ்வும் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொழும்பு 13, புதுச்செட்டித் தெருவிலுள்ள ஸ்ரீ ராம் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கை, இந்திய தொடர்பாளர் மணவை அசோகன் தெரிவித்தார்.

இதில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், தொழிலதிபர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தென்னிந்திய தூத்துக்குடி பரவள்ளிகோட்டை காயத்தாறு ஊரில் கணபதி நாயக்கருக்கு மகனாக பிறந்தார். இவர் 1930.03.09ஆம் திகதி பிறந்தார். இவருக்கு கொழும்பில் மாத்திரம் 24 ஹோட்டல்கள் இருந்தன. தமிழகத்தின் மதுரையிலும் ராஜேஷ் என்ற ஹோட்டல் ஒன்றும் உள்ளது. தமிழகத்தில் கல்யாண மண்டபமொன்று கட்டி கொடுத்துள்ளார்.



மஞ்சள் குங்குமம் 1970 ஆம் ஆண்டில் இலங்கையில் வெளிவந்த ஒரு முழுநீளத் தமிழ்த் திரைப்படமாகும். கிங்ஸ்லி எஸ். செல்லையா, ஸ்ரீசங்கர் ஆகியோரின் தயாரிப்பிலும், எம். வி. பாலனின் இயக்கத்திலும் வெளிவந்த இத்திரைப்படத்தில் எம். உதயகுமார், ஸ்ரீசங்கர், ஹெலன்குமாரி, ரொசாரியோ பீரிஸ், சிலோன் சின்னையா, ஏ. நெயினார், ஏ. எஸ். ராஜா, எம். வி. பாலன், மஞ்சுளா, ருத்ராணி, மணிமேகலை உட்பட மற்றும் பலர் நடித்தனர். அந்தனி ஜீவா உதவி இயக்குநராகவும், சுண்டிக்குளி சோமசேகரன் ஒலிப்பதிவாளராகவும் பணியாற்றினார்.

சில்லையூர் செல்வராஜன், இக்னேசியஸ் மொறாயஸ் ஆகியோரின் பாடல்களுக்கு ஆர். முத்துசாமி இசையமைத்திருந்தார். ஆர். முத்துசாமி, ஏ. சுந்தரஜயர், எம். ஏ. குலசீலநாதன், மீனா மகாதேவன், சுஜாதா ஆகியோர் பாடல்களைப் பாடினர். 1969ஆம் ஆண்டு முதல் கிங்ஸ்லி செல்லையா மேடையேற்றி வந்த "மஞ்சள் குங்குமம்" என்ற நாடகத்தைத் தழுவி இத்திரைப்படம் எடுக்கப்பட்டது. லீலா நாராயணனின் பரதநாட்டியமும், பரீனா லையின் நடனமும் இப்படத்தில் இடம் பெற்றன.

கொழும்பு சிலோன் ஸ்ரூடியோவில் பிரபல வர்த்தகர் ஜி. நாராயணசாமி உதவியுடன் இத்திரைப்படம் படமாக்கப்பட்டது. இத்திரைப்படம் முதன் முதலாக 1970 மார்ச் 14 இல் கொழும்பு கிங்ஸ்லி படமாளிகை உட்பட இலங்கை எங்கும் திரையிடப்பட்டது. இதே காலப்பகுதியில் அடிமைப்பெண், தில்லானா மோகனாம்பாள் போன்ற படங்களும் திரையிடப்பட்டிருந்தாலும், மஞ்சள் குங்குமம் சுமாராக ஓடியது.

**கே. ஈஸ்வரலிங்கம்**

# "அக்ஷரா"வின் வசந்த கானங்கள்

கவிக்கமலின் "அக்ஷரா" இசைக் குழு வழங்கும் வசந்த கானங்கள் இசை நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு கொழும்பு 13, ஜிந்துப்பிட்டி, விவேகானந்தா சபை மண்டபத்தில் நடைபெறும். இலங்கையின் முன்னணிப் பாடகிகள் பலர் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வில் பாடும் நிலாவின் தெவிட்டாத பாடல்கள் பல நம் நாட்டு இளம் பாடகர்களால் பாடப்படவுள்ளன. சமூக சேவையாளர் பிச்சை கிருஷ்ணா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பஸ்லி ஶூமி சென்டரின் உரிமையாளரான பஸ்லி ஶூமி முன்னிலை அதிதியாகவும் ஐடிஎம் நேஷன் கெம்பஸின் நிர்வாக இயக்குனர் கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகன் பிரதம அதிதியாகவும் தொழிலதிபர் லயன் சதீஸ் நடராஜா கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வார்கள். எண் கணித வாஸ்துகலை நிபுணர் மருதை பத்மராஜன், ஆசிரியர் ஏ. எம். சந்திரசேகர் , ஜோதிடர் குருசாமி எஸ் . யுவராஜா சமூக சேவையாளர் பழனிசாமி, சமூக சேவகி கௌசல்யாதேவி கோவிந்தப்பிள்ளை, நிவ் ரத்னமஹால் உரிமையாளர் சுந்தர், கவிஞர் தனபாலன், தொழிலதிபர்களான ஏ. கதிரேசன், ஜெ. ஓவியநாதன், மொஹமட் மூஸீன், ஏ. என். கோகுலன், சட்டத்தரணி ரஷித் எம். இம்தியாஸ், கலைஞர் பொன் பத்மநாதன், கொழும்பு நகர சபை உறுப்பினர் ஜோசப் பெர்ணான்டோ, சங்கவி பிலிம்ஸ் பணிப்பாளர் துரைராசா சுரேஷ் ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்து கொள்வார்கள். இந்நிகழ்வில் கலைஞர்கள் பலர் விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இங்கு எமது நாட்டு கலைஞர்கள் பாடிய பாடல்கள் அடங்கிய இறுவெட்டும் வெளியிட்டு வைக்கப்படும். தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், தினக்குரல் பத்திரிகை பாரதி ராஜநாயகம், வீரகேசரி பத்திரிகை நிறைவேற்று அதிகாரி செந்தில் நாதன், சிரேஷ்ட கலைஞர்களான ராதா மேத்தா, கே. ஈஸ்வரலிங்கம், திருமதி ஜீவா ராம், உவைஸ் செரீப், சுருதி பிரபா, பசால் ஜின்னாஹ், கவிஞர்கள் பிரேம்ராஜ், நஜ்முல் ஹுசைன் ஆகியோர் ஊடக அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

## வடை போச்சே!!... (18ஆம் பக்கத் தொடர்)

வடக்கை பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தில் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும் அங்கு பிரதான விவசாய விளை பொருட்களாக மிளகாய், வெங்காயம், மரவள்ளி, புகையிலை மற்றும் முந்திரிகை என்பனவே விளங்குகின்றன. வன்னியை பொறுத்தவரையில் நெல் மற்றும் சிறு தானிய உற்பத்திகள் அதிகமாக செய்யப்படும் விவசாய நிலங்களை கொண்டுள்ளது.

ஆனால் இன்று வன்னியில் விவசாயிகள் பலர் தங்கள் விவசாய உற்பத்தி பொருட்களை நியாய விலைக்கு விற்பனை செய்ய முடியாத நிலையில் பாரிய நட்டத்தை எதிர்கொள்வதால் விவசாயத்தை கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். விவசாய உற்பத்தி பொருட்களில் தரகர்களின் தலையீடு, பெரும் முதலாளிகளின் ஏகபோக உரிமை மற்றும் விவசாயப் பொருட்களை விளைவித்த விவசாயி விலையை நிர்ணயம் செய்யப்பட முடியாமை, விவசாயிகளுக்கான உழவர் சந்தைகள் இல்லாமை போன்ற காரணங்களால் இன்றைய இளைஞர்கள் வன்னியில் விவசாயத்தை கைவிட்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கு கொத்தடிமைகளாக வேலைக்கு செல்கிறார்கள்.

அத்துடன் குடும்ப பெண்கள் தங்கள் குடும்பங்களை கைவிட்டு பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று பணம் ஈட்டுகிறார்கள். விவசாயம் ஒரு நாட்டின் உயிர்நாடியாக விளங்குகின்றது. எமது மண்ணில் என்ன வளம் இல்லை என்று கேட்கும் அளவிற்கு வளங்கள் உள்ளன. நீரை சேமித்து வைப்பதற்கு வன்னியில் 600க்கும் அதிகமான குளங்கள் உள்ளன.

நாட்டில் புதிய அரசு பதவி ஏற்றிருக்கும் இத்தருணத்தில் குறித்த குளங்கள் புனரமைக்கப்படும் பட்சத்தில் விவசாயம் வன்னி மண்ணில் புத்துயிர்பெறும். வடக்கில் அமைந்துள்ள விவசாய திணைக்களங்களுக்கு புதிய இரத்தம் பாய்ச்சப்பட வேண்டும் விவசாய திணைக்களங்கள் விவசாய உற்பத்தி பொருட்களின் விதைகளை விவசாயிகளுக்கு தடையின்றி வளங்க வேண்டும்.

விவசாயத்தில் தனியார் தலையீடு மற்றும் ஏகபோக உரிமை என்பன கட்டுப்படுத்தப்பட்டு அரச திணைக்களங்கள் அனைத்தையும் பொறுப்பெடுத்து நடத்த முன்வர வேண்டும். அவ்வாறு விவசாயிகளுக்கு முழு ஆதரவை அரசாங்கம் வழங்கும் பட்சத்தில் எமது நாடு மாகாண ரீதியில் மாத்திரமல்ல நாடளாவிய ரீதியில் விவசாயத்தில் தன்னிறைவு அடைவதுடன் விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு இலங்கை முன்னேறும். அவ்வாறு இல்லை எனில் உழுந்து இந்தியாவிலிருந்து வருமா? இல்லை பாக்கிஸ்தானில் இருந்து வருமா? என காத்துக்கொண்டு இருப்பதோடு, 'வடபோச்சே' என வாய் பிளக்கும் நிலைமையே ஏற்படும்.

## எல்லோருக்கும் இனிய மனிதன்... (31ஆம் பக்கத் தொடர்)

எனது கவிதைகள், கதைகள், கட்டுரைகள் பலவும் புனைபெயர்களில் கூட தினகரனில் பிரசுரமாகியுள்ளன.

யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் அவர் கலந்துகொண்ட இலக்கியக் கூட்டங்கள் சிலவற்றில் எனது உரையை, கவிதையைக் கேட்டபின் மனம்திறந்து அவர் பாராட்டியமை ஞாபகத்திலுள்ளது.

அவரது நல்மனது எவராலும் என்றும் மறக்க முடியாதது.

அவர் எல்லோருக்கும் நண்பர். யாழ்ப்பாணம் வந்தால் அவர் மக்கள் எழுத்தாளர் கே. டானியலுடன் நட்புரிமையுடன் பேசிக்கொள்வார். மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுடனும் அதே நட்புரிமையுடன் பேசுவார். அண்ணர் நாவேந்தன், துரைசிங்கத்துடனும் சகோதரன் போலப் பேசுவார்.

எல்லோருக்கும் இனியவராகவே இறுதிவரை வாழ்ந்தார்.

'பத்திரிகை உலகம்' போட்டி, பொறாமை, காழ்ப்புணர்வு மேலோங்கியது எனப் பலரும் கூறுவர். சந்தர்ப்பம் பார்த்துச் சதிசெய்து ஒருவரை வீழ்த்தித் தாம் முன்னேற வேண்டுமெனச் சந்தர்ப்பவாதிகள் காத்திருப்பர் எனக் கூறுவதுண்டு. அப்படிப்பட்ட சூழ்நிலையில் பத்திரிகை ஆசிரிய பீடத்தில் சுமார் நாற்பது வருட காலம் பணியாற்றியமை என்பது சாதனைக்குரியது. அந்த வல்லமை, ஆளுமை, எல்லோருடனும் நட்புடன் பழகும் தன்மை என்பன நல்மனிதனான சிவகுருநாதன் அவர்களை மக்கள் மனதில் பதிய வைத்துள்ளது.

பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றியவாறே பட்ட மேற்படிப்பை மேற்கொண்ட அவர், 'இலங்கையில் தமிழ்ப் புதினப் பத்திரிகைகளின் வளர்ச்சி' என்ற பொருளில் ஆய்வு நூலைச் சமர்ப்பித்து முதுகலைமாணிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார்.

கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் தமிழ்ப்பணியாற்றியவர். இவரது பணிகளைப் பாராட்டி அரசு 'கலாசூரி' விருதினை வழங்கிக் கௌரவித்தது.

தினகரன் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இரண்டு தலைமுறை எழுத்தாளர்களை வெளிக்கொணர்ந்தாரென விமர்சகர்கள் குறிப்பிடுவர்.

சட்டத்துறையில் நுழைந்து படித்துச் சட்டத்தரணியாகவும், சட்டக்கல்லூரி பகுதிநேர விரிவுரையாளராகவும் பல ஆண்டுகள் கடமையாற்றினார்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவராக இரு தடவைகள் தெரிவுசெய்யப்பட்டுப் பணிபுரிந்தார். அச்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர் அவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது. சகல இன மக்களின் நன்மதிப்பையும் பெற்ற பண்பாளராக விளங்கினார்;.

அவரது மறைவின்போது நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஊடகத்துறையினர், எழுத்தாளர்கள், கலை இலக்கிய அமைப்புகளின் பிரதிநிதிகள், அமைச்சர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், பேராசிரியர்கள், அரசியல்வாதிகள் பலருட்பட ஏராளமான புத்திஜீவிகள் அஞ்சலி செலுத்தினர் என்பதை அறியும்போது அவர் நற்பண்புகள் புலனாகின்றன.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டதுபோல, சிவகுருநாதன் அவர்களிடம் ஒரு அங்கதச் சாயல் புன்னகையிருந்தது. இதனை யாவரும் அறிவர். அது அவரை எல்லோருடனும் நண்பனாக வாழவைத்தது.

அவரது படத்தை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வைத்து மதிப்பளித்துள்ளார்கள்.

நீண்ட காலம் பத்திரிகை உலகின் மதிப்புப்பெற்ற தலைமகனாக விளங்கிய சிவகுருநாதன் அவர்கள் எம்மக்களின் மனங்களில் என்றும் நிறைந்திருப்பார்.

## மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஆளுமை ... (08ஆம் பக்கத் தொடர்)

வீரகேசரியின் விலை 10 சதத்திலிருந்து 15 சதமாக உயர்த்தப்பட்டபோது, அட்டனிலிருந்து தலைமன்னார் வரை புகைவண்டியில் பிரயாணம் செய்து கார்மேகம் எழுதிய 'அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள்' என்ற தொடர் கட்டுரையையும் தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் வரை 'இராமானுஜம்' கப்பலில் பிரயாணம்செய்து எழுதிய 'எஸ். விஸ்வரட்ணம் சரித்திரம் திரும்புகிறது' என்ற தொடர் கட்டுரையும் வீரகேசரி பத்திரிகையின் விற்பனை சரிவை தடுத்து நிறுத்தியதோடு, விற்பனையையும் அதிகரிக்கச் செய்தது. இத்தொடர் கட்டுரைகள் நிச்சயமாக நூலாக்கப்படவேண்டியது அவசியம். இவர் வீரகேசரியில் 'அழைக்காதே, நெருங்காதே,' 'தந்தையின் காதலி', 'அற்புத டாக்டர்' என ஏராளமான தொடர்கதைகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தொடர்கதைகளும் பல சிறுகதைகளும் மற்றும் தோட்ட மஞ்சரியில் எழுதிய தேயிலையின் கதை வாசகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றிருந்தன. அவற்றைப் புத்தகமாக அவர் வெளியிட்டிருந்தால், நல்ல அங்கீகாரம் கிடைத்திருக்கும்.

இன்று மலையக இலக்கியம் பற்றி எழுதுவோர், பேசுவோர், வசதியாக இவரை மறந்துவிடுகிறார்கள். இவரது எழுத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தவர்கள் என்று சு.வே (சு.வேலுப்பிள்ளை) சொக்கன் ஆகிய இரு தமிழ் ஆசிரியர்களையும் மிகுந்த நன்றியுடன் நினைவு கூருவார். இவரது முயற்சியின் விளைவாக வீரகேசரி பல மலையக சிறுகதைப் போட்டிகளை நடத்தியது. நான்கு போட்டிகளிலும் பரிசு பெற்ற முதல் மூன்று சிறுகதைகளையும் தொகுத்து 'கதைக்கனிகள்' என்ற மகுடத்தில் 1971 பொங்கலன்று அட்டனில் வெளியிட்டார். இதுவே நமக்கு கிடைத்த முதலாவது மலையகச் சிறுகதை தொகுப்பாகும்.

மலையகம் தக்கவைத்துக்கொள்ள முடியாமல் போனவர்களில் இர. சிவலிங்கம், எஸ்.திருச்செந்தூரன், எஸ்.எம். கார்மேகம், மு. நித்தியானந்தன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். டில்லி என்ன? உலகின் எந்த மூலையில் இருந்தாலும் என் நினைவுகள் எல்லாம் மலையகத்தைச் சுற்றிசுற்றி வலம் வருவதாக கார்மேகம் பலதடவைகள் கூறியுள்ளார்.

நான் தமிழ்நாட்டில் குடியேறப் போகின்றேன்" என்று அவர் சொன்னபோது நான் திடுக்கிட்டுப் போனேன். ஏன் இந்த முடிவு என கேட்டதற்கு, உலகம் பரந்தது, உலகமெங்கும் தமிழர்கள் வாழ்கின்றார்கள். நம்மிடம் உள்ளது உழைப்பு ஒன்றுதான். அந்த உழைப்புக்கு எங்கெல்லாம் கூலி கிடைக்குமோ அங்கெல்லாம் நாம் உழைப்பை கொடுப்பதுதான் முறை" என்று விளக்கம் தந்தார். அவரது முடிவு அன்று எனக்கு உடன்பட்டதாக இருக்கவில்லை. ஆனால் அவரது நேர்மை, திறமை, உழைப்பு, ஆற்றலுக்கு அங்கு உரிய அங்கீகாரமும் மதிப்பும் மரியாதையும் கிடைத்துவந்ததைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன்.

தமிழ் கூறும் நல்லுலகின் தலைசிறந்த 'தினமணி' பத்திரிகை அவரது ஆற்றலை அறிந்து, தகைமையைப் புரிந்து அரவணைத்துக் கொண்டது. தினகரன், வீரகேசரி பத்திரிகைகளுக்கு தமிழ் நாட்டிலிருந்து ஆசிரியர்கள் வந்துகொண்டிருந்தகாலம் இருந்தது. இவரும் பொ. கிருஷ்ணசாமியும் தமிழ்நாட்டில் பத்திரிகையாளர்களாகப் பணியாற்றி மாற்றிக் காட்டினார்.

1988 இல் கார்மேகம் 'தினமணி' ஆசிரியர் பீடத்தில் இணைந்தார். அங்கும் 300 பட்டதாரிகளை அழைத்து நேர்முகப் பரீட்சை நடத்தி மூவரைத் தெரிவு செய்தார்கள். அதில் இவரும் ஒருவர். எடுத்த எடுப்பிலேயே இவர் ஆசிரியராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டதை அங்கு காலம்காலமாகப் பணியாற்றியவர்கள் ஆட்சேபித்து குரலெழுப்பியும் அது எடுபடாமல் போய்விட்டது. இவரது திறமை, பத்திரிகைத் துறையிலுள்ள நிபுணத்துவம் யாவும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நிறுவன நிர்வாக இயக்குநர்களால் நன்கு உணரப்பட்டது. அடுத்தடுத்து பதவி உயர்வுகளைப் பெற்றார். இலங்கைக்கு விஜயம் செய்து வடபகுதிக்குச் சென்று எழுதிய தொடர்கட்டுரை பத்திரிகை விற்பனையை அதிகரித்தது. அதனால் வாரப் பதிப்பிற்குப் பிரதம துணை ஆசிரியராக பதவியில் அமர்த்தி தினமணி இவரைக் கௌரவித்தது. தினமணி, தினமணி சுடர், வெள்ளிமணி, கலைமணி, வணிகமணி மற்றும் வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகளில் வெளியாகும் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

சாவியும் நா. பார்த்தசாரதியும் தினமணி பிரதம ஆசிரியராக மட்டுமே இருந்தார்கள். ஆனால் இவர் பொறுப்பில் பலவாரப் பதிப்புகள் ,ருந்தன. பின்னர் டில்லியின் சிறப்பு செய்தியாளராகப் பதவியுயர்வு பெற்று பணியாற்றினார்

இந்தியப் பத்திரிகையாளர்கள் மத்தியில் நன்கு அறிமுகமான பெருமனிதர் கார்மேகம் அவர்கள்.

சாவி, தீபம் பார்த்தசாரதி, கஸ்தூரி ரங்கன் போன்ற பழம்பெரும் பத்திரிகையாளர்களும் புகழ் பூத்த எழுத்தாளர்களும் அலங்கரித்த ஆசனத்தில் அமர்ந்து பணியாற்றிய ஒரு வரலாற்றுச் சாதனையாளர் கார்மேகம். ஒரு 'நாளிதழின் நெடும்பயணம்' (வீரகேசரியின் வரலாறு) ஈழத்தமிழர் எழுச்சி, கண்டி மன்னர்கள் ஆகிய 3 வரலாற்று நூல்களையும் கார்மேகம் வெளியிட்டுள்ளார்.

## வழித்தட ஒழுங்குவிதிகள்... (03ஆம் பக்கத் தொடர்)

மொத்தத்தில் புதிய வழித்தட முறைமையை சுமையாகப் பார்க்காமல் அனைவரதும் நன்மைக்காக அது ஏற்படுத்தப்பட்டுள்ளது, என்பதைச் சிந்தித்து வாகன சாரதிகளும் பாதசாரிகளும் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டால், இந்த அசௌகரியங்கள் நன்மைக்கு வழிவகுக்கும் என்பது எமது தாழ்மையான கருத்து.

அதேவேளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பயணிகள் போக்குவரத்து தொடர்பில் நீண்ட கால மற்றும் குறுகிய கால திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்ட துறையினருடன் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அதன்போது எதிர்வரும் ஐந்து வருட காலத்திற்கான வேலைத் திட்டங்களை அவர் தெளிவுபடுத்தியதுடன் பயணிகள் சிறந்த மனநிலையுடன் பயணிப்பதற்கு ஏதுவாக பொதுப் போக்குவரத்து பஸ்கள் மற்றும் ரயில்களில் சிறந்த வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அதன் ஒரு அம்சமாக சிறந்த நிலையில் உள்ள சாதாரண பஸ் வண்டிகளை அதிவேக நெடுஞ்சாலையில் சேவையில் ஈடுபடுத்தி குறைந்த கட்டணத்துடன் பெருமளவு பயணிகள் நன்மை பெறும் வகையில் சேவை வழங்குவது தொடர்பிலும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

நகர்ப்புறங்களில் வாகன நெரிசலை கட்டுப்படுத்தும் வகையில் சொந்தக் கார்களில் பயணிப்பவர்களையும் பஸ்களில் பயணிப்பதற்கான நிலையை விரைவாக உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நமது நாட்டில் மட்டுமன்றி உலக அளவில் வீதி விபத்துக்கள் இடம் பெறுவதும் அதனால் பாரிய விளைவுகள் ஏற்படுவதும் தவிர்க்கமுடியாததாகி வரும் நிலையில் இத்தகைய புதிய நடைமுறைகள் அவசியப்படுகின்றன. ஆனாலும் இப்புதிய நடைமுறை அமுல் செய்யப்படக்கூடாதென்றும் மீறி நடைமுறைப்படுத்தப்படுமானால் அதற்கெதிராக சட்ட உதவியை நாடப் போவதாகவும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ண தெரிவித்தார்.

எமது நாட்டிலும் கூட 15 நிமிடங்களுக்கு ஒரு வாகன விபத்து இடம் பெறுவதாக அறியமுடிகிறது. சில விபத்துக்களை மட்டுமே செய்திகளாக அல்லது காட்சிகளாக எம்மால் காணமுடிகின்றது. பெரும்பாலானவை யாரும் அறியாத விபத்துக்களாக இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

அந்த வகையில் அரசாங்கம் அனைத்து மக்களினதும் நன்மை கருதி முன்னெடுக்கும் சிறந்த திட்டங்களுக்கு நம் அனைவரதும் ஒத்துழைப்பு வழங்குவது அவசியமானது என்பதை ஒவ்வொரு கணத்திலும் மறவாமல் செயற்படுவோம்.

## நட்டத்தில் இயங்கும் பெருந்தோட்டங்கள் ... (08ஆம் பக்கத் தொடர்)

ஆனால் இதில் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் தோட்டத் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இதற்கான காரணங்கள் உள. தேவைகளும் காணப்படுகின்றன.

தற்போதைய நிலவரப்படி நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் 30 வீதத்தை மட்டுமே பெருந்தோட்டங்கள் தக்கவைத்துக் கொண்டுள்ளன. பெருந்தோட்டத் துறையில் ஈடுபடுத்தப்பட்ட காணிகளில் (236240 ஹெக்டயர்) 75000 ஹெக்டயர் நிலப்பிரமாணத்தை மட்டுமே கம்பனி தரப்பு கையாள்கின்றது. புள்ளி விபரப்படி மொத்த உற்பத்தியில் 62சதவீதம் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர் வசம் உள்ளது. அரச முகாமைத்துவத்தின் கீழ் 6 சதவீதம் காணப்படுகின்றது.

20 பேர்ச்சஸுக்கு அதிகமான தேயிலைக் காணியை கொண்டிருப்போர் 2005 இல் 116492 ஹெக்டயர்களில் தேயிலைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டதாக தரவுகள் தெரிவிக்கின்றன. கடந்த 10 ஆண்டுகாலமாக இவர்கள் இலங்கைத் தேயிலை துறையில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இதன் மூலம் மொத்த தேயிலை உற்பத்தியில் 70 வீதமானவற்றை இவர்கள் பெற்றுத் தருவதுடன் இத்துறையில் கம்பனிகளுக்குச் சவாலாகவும் மாறி வருகின்றனர். தனியார் கம்பனி வசம் இருக்கும் தோட்டங்கள் இன்று வீழ்ச்சியை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றன.

இக்கம்பனிகள் உற்பத்தியோடு ஏற்றுமதி செய்யும் முகவர் நிலையங்களாகவும் விளங்குகின்றன. எனினும் தோட்ட மக்களின் வாழ்வியலில் அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கான எந்தவொரு நடைமுறைகளும் இவைகளிடம் இல்லை. தவிர இத்துறையை கட்டி எழுப்புவதற்கான வேலைத்திட்டங்களும் இல்லாத காரணத்தால் ஆளணி இழப்பையும் ஆதாயக்குறைவையும் எதிர்நோக்க வேண்டி நேர்ந்துள்ளது.

கம்பனி தரப்பின் முறைமையற்றதும் அனுபவமற்றதுமான நிர்வாகம், முதலாளி வர்க்கத்தின் ஆடம்பர தோற்றத்துக்கான வீண் விரயம், மீள் பயிர்ச்செய்கை கைவிடப்பட்டமை என இத்துறை பல வீனமடைந்து காணப்படுகின்றது. இதனால் இத்துறை மீதான நாட்டம் குறைந்து போயுள்ளது. நிர்வாக சீர்கேட்டினால் உற்பத்தி நிலங்கள் ஏராளமாக கைவிடப்பட்டுள்ளன. சில தோட்டங்களுக்கு மூடு விழா நடாத்தவேண்டிய நிலைமையும் தோன்றியுள்ளது. வெளியாள் உற்பத்தி முறைமையை அறிமுகப்படுத்த மறைமுக நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. இன்று தோட்டத் தொழிற்றுறையில் 1 இலட்சத்துக்கும் குறைவானவர்களே ஈடுபட்டுள்ளனர். இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு இத்தொகை ஐந்து லட்சம் பேராக இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தனைக்கும் சகல பழிகளையும் தொழிலாளர் மீது போட்டுவிட்டு கிடைத்தவரையில் இலாபம் என்ற போக்கில் கம்பனிகள் சுரண்டலில் ஈடுபட்டு வருவதாகவே அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறன நிலையில் தான் பெருந்தோட்ட மக்களை சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்ற வேண்டும் என்ற கோஷங்கள் எழுந்தன. தற்போதுள்ள சிறுதோட்ட உரிமையாளர்கள் 1972 1977 காலப்பகுதியிலேயே இத்துறையில் காலடி எடுத்து வைத்தனர். ஆனால் குறுகிய காலத்தில் இத்துறைக்குப் பரிச்சயமாகி வெற்றி கண்டார்கள்.

ஆனால் இங்கு வாழும் தோட்ட மக்கள் தேயிலைப் பயிர்ச்செய்கையில் நன்கு அநுபவம் கொண்டவர்கள். இத்துறையை இதயபூர்வமாக நேசிப்பவர்கள். இதனால் இவர்களுக்குத் தோட்டக்காணிகள் உரிமையாக்கப்படும் பட்சத்தில் நலிவடைந்துவரும் பெருந்தோட்டத்துறை பயிர்ச்செய்கைக்குப் புத்துயிரளிக்க முடியும்.

இதற்கு தென் மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ள சிறு தோட்டங்களின் வளர்ச்சியை ஆதர்ஷமாகக் கொள்வது ஆரோக்கியமாக இருக்கும். ஏனெனில் தென் மாவட்ட சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்கள் முறைமையான பராமரிப்பில் இதனைக் கையாண்டு வருகிறார்கள். இத்தோட்டங்களில் காணிகள் துண்டாடப்படும் சந்தர்ப்பங்களில் குடியிருந்த தோட்ட மக்களே இன்னும் தொழில் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இத்துறையில் நல்ல பயிற்சி இவர்களுக்கு இருக்கிறது. இதனால் இவர்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் நல்ல பலனை எதிர்பார்க்க முடியும். சுதந்திரமாக தொழில் செய்ய இவர்கள் அனுமதிக்கப்படும்போது ஏனையோரோடு போட்டியிடும் நிலைமைக்குக் கூட இவர்கள் வரமுடியும்.

ஏற்கனவே சிறு தோட்ட உடைமையாளர்களிடம் ஆயிரக்கணக்கான பெருந்தோட்ட தொழிலாளர்கள் சிக்கியுள்ளார்கள். 'அத்தகூலி' எனப்படும் தினசரி வேதனத்தைப் பெறுபவர்களாக இருக்கிறார்கள். குறைந்த அளவிலான குடும்பம் குடும்பமாக இவர்கள் சிதறிப் போயுள்ளார்கள். தோட்டங்கள் துண்டாடப்படும்போது பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதார நிலப்பரப்பு மட்டுமல்ல. இம்மக்களின் இனப்பரம்பலும் துண்டாடப்படுவதை எவருமே கண்டுகொள்வதில்லை.

சிறு தோட்ட உரிமையாளர்களுக்குச் சொந்தமான இவ்வாறான தோட்டங்களில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான வரப்பிரசாதங்கள் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படுவது கிடையாது. குறிப்பாக தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் மலையக தொழிற்சங்கங்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்படும் கூட்டு ஒப்பந்தத்தில் சிறு தோட்டங்கள் உள்வாங்கப்படுவது இல்லை. இதனால் இவர்கள் தொழில்சார் உரிமைகளைப் பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள். பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வாழ வேண்டிய சிக்கல் நிலை.

தற்போதைய நிலைமையில் சிறு தோட்ட உரிமையாளர் 62 சதவீதம், தனியார் கம்பனிகள் 30 சதவீம், அரசக் கூட்டுத் தாபனம் 6 சதவீதம் பெரியளவில் தனிப்பட்ட உரிமையாளர் 2 சதவீதம் என்ற ரீதியில் பெருந்தோட்டத் துறையை பகிர்ந்து கொண்டுள்ளார்கள். இதில் சிறு தோட்ட உரிமையாளர்கள். பயன்படுத்தும் காணிகளில் 23 சதவீதம் தேயிலையை மாத்திரமே கொண்டுள்ளது. 88.4 சதவீதமானோர் 12 ஹெக்டேயருக்கும் குறைவான காணிகளிலேயே பயிர்செய்கிறார்கள். இவ்வாறு கையாளப்படும் நிலப்பரப்பு குறைவாக இருந்தாலும் இப்பயிர்ச் செய்கையின் முழு ஆதிக்கமும் இவர்களையே சார்ந்திருக்கிறது.

சிறு தேயிலை தோட்ட உரிமையாளர் என்ற பிரிவில் பெருந்தோட்ட தொழிலாளர்கள் உள்வாங்கப்படாமையானது திட்டமிடப்பட்ட ஒரு ஓரங்கட்டல். இதனாலேயே இன்று இந்தப் பிரிவுக்குள் தொழிலை சார்ந்து நிற்கும் தோட்ட மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பெருந்தோட்ட மக்கள் சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றப்படும்போது தற்போது நிலவும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படலாம்.

அதே நேரம் தனியார் துறை ஊழியர்களுக்கான தொழில் சார் உரிமைகள் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களை நம்பி வாழும் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

இது குறித்து ஜனாதிபதியின் அவர்களின் கவனத்துக்கு கொண்டுவர வேண்டிய கடப்பாடு இராஜாங்க அமைச்சா் ஜீவன் தொண்டமான், மலையக பிரதிநிதிகள் அனைவருக்கும் உண்டு. தாமதிக்காமல் சூட்டோடு சூடாக காய் நகர்த்தியாக வேண்டும்.

கிழக்குக் கடலில்

# வாழ்வாதாரத்திற்காகப் போராடும் கரைவலை மீனவர்கள்

வ.சக்திவேல்





"உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே" என பாடல் வரிகளும் உண்டு. அதற்கு ஏற்றாற்போல் இவ்வுலகில் கடவுள் இயற்கையாகவே படைத்துள்ள வளங்களைப் பயன்படுத்தி மனிதன் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக முன்னேறிக் கொண்டுதான் இருக்கின்றான். ஆனாலும் பொருளாதாரத்திலும், செல்வாக்கிலும் உயர்நிலையில் உள்ள சிலர், கீழ் மட்ட உழைப்பாளிகளையும், மக்களையும் சுரண்டுவதையும் அதானிக்க முடிகின்றது.

இவ்வாறான சுரண்டங்கல் அல்லது தடைக்கற்களிலிருந்தும் தமது வாழ்வாதாரத்திற்காகப் போராடி வரும் மக்களுக்கு துறைசார்ந்தவர்களும், சமூக ஆர்வலர்களும், அவர்களாலான ஒத்தாசைகளையும், உதவிகளையும்,



ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது தலையாய கடமையாகும்.

இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயத்தையும், மீன்பிடியையும் பிரதான வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் வாழ்கின்றனர். தமது வாழ்வை முன்கொண்டு செல்வதற்கு பல சவால்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர். மிக அண்மைக்காலமாக கடல் வளத்தைப் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளைப் பகுதி கடலில் கரை வலை மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்

அப்பகுதி கடலில் அனுமதியற்ற சுருக்கு வலைகளை சிலர் பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர மீன்களையெல்லாம் அவ்வப்போது அள்ளிச் செல்வதனால் அவர்களது கரைவலையில் மீன்கள் பிடிபடுவதில்லை. இதனால் அவர்களது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது, மீன் வாடிகளும் பயன்படுத்தப்படாமல், தூர்ந்துபோய்விட்டன, நீண்டகாலம் கரையேற்றிய தோணிகளை அவர்கள் இன்னும் கடலில் இறக்கவில்லை. இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அப்பகுதி கரைவலை மீனவர்கள் தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளை, தேத்தாத்தீவு, களுவாஞ்சிகுடி, செட்டிபாளையம், உள்ளிட்ட கடற் பிராந்தியங்களில் அனுமதியற்ற வகையில் சிலரால் சுருக்கு வலை பயன்படுத்துவதைத் தடை செய்யக்கோரி களுதாவளைப் பகுதி மீனவர்கள் களுதாவளை கடற்கரையில் செவ்வாய்கிழமை (15) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனுமதியற்ற முறையில் சிலரால் சுருக்குவலை பயன்படுத்தப்படுகின்றது. இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திலெடுத்து மீன்பிடிப்பதற்குத் அனுமதியற்ற அந்த சுருக்குவலைப் பயன்பாட்டை தடுத்து நிறுத்தி, அவர்களுக்கு எதிராக சட்ட நடிவடிக்கை எடுக்க வேண்டும் என களுதாவளைப் பகுதி கடலில் கரைவலை மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நாம் கடலில் கரைவலையை கொண்டு மீன்பிடித்து வருகின்றோம். இதுவரையில் நாம் தொழில் இல்லாமல் வருமானமிழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றோம். இதனால் எமது 200 இற்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் மத்தியில் உணவுத்தட்டுப்பாடு மாத்திரமின்றி வருமானமிழந்த நிலைமையும் காணப்படுகின்றது. அதனை தடைசெய்யக்கோரி நாம் அனைத்து உயர் அதிகாரிகளுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும், கடற்றொழில் அமைச்சருக்கும், படையினருக்கும், அறிவித்துள்ளோம். ஆனால் இதுவரையில் எந்த வித நடவடிக்கைகளும், எடுக்கப்படவில்லை.

செட்டிபாளையம், தேத்தாத்தீவு, களுவாஞ்சிகுடி, களுதாவளை, உள்ளிட்ட கடற் பிராந்தியங்களில், 20க்கும் மேற்பட்ட படகுகளில் வருபவர்கள், இவ்வாறு சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி நெத்தலி, கீரி, பாரை, உள்ளிட்ட அனைத்து, கடல் வளத்தையும், ஒருசிலர் மாத்திரம் இலட்சக் கணக்கில் சுருட்டிக் கொண்டு சென்றதால் நாளாந்தம் கரைவலை மீன்பிடியில் ஈடுபடும் நாம் வாழமுடியாதுள்ளது. இதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இதனால் எமது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு, எமது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளும், பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், நாம் பரம்பரை பரம்பரையாக செய்து வந்த கரைவலை மீன்பிடியை விட்டுவிட்டு கூலிவேலை, மேசன்வேலை போன்றவற்றை நாடியாவது எமது குடும்பத்தை பாதுகாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என களுதாவளை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் செல்லையா இராமலிங்கம் தெரிவிக்கின்றார்.

படித்தவர்களுக்கு அரசாங்கமும், அரச சார்பற்ற அமைப்புக்களும், தனியார் துறையினரும், ஏதோ ஒரு விதத்தில் தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்ற போதிலும், சுயமாக உழைத்து தமது குடும்பங்களைப் பேணிவரும் மக்கள் மத்தியில் அவ்வப்போது எழும் சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பும் கடமையுமாகும்.

அப்பகுதியில் கரைவலை மீன்பிடியில் ஈடுபடுபவர்களில் நானும் ஒருவர். எமது கிராமத்தில் 10 க்கும் மேற்பட்ட கரைவலை வாடிகளும், உள்ளன. சுமார் 200 குடும்பங்களுக்கு மேல் இந்த கரைவலைத் தொழிலை பிரதான தொழிலாக மேற்கொண்டு வருகின்றோம். கடந்த 2 வருடகாலமாக இந்த கரைவலை கடற்றொழிலில் எதுவித வருமானமும் அற்ற நிலையில் நாம் வாழ்ந்த வருகின்றோம். இதற்கெல்லாம் காரணம் சுமார் 10க்கும் மேற்பட்டவர்கள் வந்து எமது கடற் பிராந்தியத்தில் எமது கரைவலைக்குள் அகப்படும் மீன்களையெல்லாம் அதிக வெளிச்சம் கொண்ட போகஸ் லைட் கொண்டுபிடித்துக் கொண்டு செல்கின்றார்கள். அதுமாத்திரமின்றி வேறு மாவட்டங்களிலிருந்து இங்கு வருபவர்களும், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். நாங்கள் காலையில் வந்து வலையை வளைந்து இழுத்தால் ஒரு மீனும் பிடிபடுவதில்லை. இதனால் சலிப்படைந்துள்ள தொழிலாளர்களும், பிரிந்து, பிரிந்து, வெவ்வேறு கூலி வேலைகளை நாடிச் செல்லும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இதுவரையில் யாரும் எமது இந்த பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத்தரவில்லை. எனவே ஜனாதிபதியின் நேரடி அவதானிப்பின் கீழ் எமது இந்தப் பிரச்சினையைக் கொண்டு சென்று எமக்கு மிகவிரைவில் இதற்குரிய தீர்க்கமான முடிவை எடுத்துத் தரவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம் என இராமலிங்கம்



சுகுமாரன்



பிரசாந்தன்



ராமலிங்கம்

பிரசாந்தன் கூறுகின்றார்.

பெரிய படகுகளில் ஆழ்கடலில் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள், பெரிய மீன்களைப் பிடித்து வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்து அதிக வருமானமீட்டுபவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஆனாலும் கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபவடுபவர்களுக்கு எப்போதாவதுதான் அவ்வாறு அதிகளவு மீன்பிடிபடும் எனலாம். ஏனைய காலப்பகுதியில்ஒரு மீன் கூடப் பிடிபடாமல் போகும் நிலைமையும் உள்ளது. கரையை நோக்கி நகரும் மீன்களை இரவு வேளையில் அதிக ஒளி உடைய போக்கஸ் வெளிச்சங்களை உட்செலுத்தஒர் இடத்தில் குவியச் செய்து கடலில் தற்போதைய நிலையில் மீன்பிடிப்பதற்கு அனுமதியற்ற சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி பிடித்துச் செல்வதனால் கரைவலை மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

நான் களுதாவளைக் கடற்பகுதியில் சுமார் 10 வருடங்களாக கரைவலை மீன்பிடியில் தொழில் செய்து வருகின்றேன். கடந்த 2 வருடங்களாக எமக்கு எதுவித வருமானமும் இல்லை. காலையில் வந்து வலை இழுத்தால் மீன் படுவதில்லை, இதனால் எமக்கு அரிசிவாங்குவதங்குக்கூட பணம் இல்லாமல் உள்ளது. தொழிலை நம்பி கடன்வாங்கவும் முடியாதுள்ளது. வலைவாடி உரிமையாளரிடம் கடன் கேட்டால் அடகு வைத்துவிட்டு கடன் பெறுவதற்கு தங்க நகைகளும் இல்லை என அவரும் தெரிவிக்கின்றார். இவ்வாறான நிலைமையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மீன் பிடிபடாததால் ஏனைய சக தொழிலாளர்களும் தொழிலுக்கு வருகின்றார்கள் இல்லை. இரவு வேளையில் மிகவும் சூட்சுமமான முறையில் எமது கடற் பிராந்தியத்திற்குள் வருபவர்கள் அனுமதியற்ற சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி மீன்களையெல்லாம் எடுத்துக் கொண்டு சென்றுவிடுகின்றார்கள் என்று சுந்தரம் சுகுமாரன் தெரிவிக்கின்றார்.

இவர்களின் கருத்துக்கள் இவ்வாறு அமைகின்றபோதில் தாம் வாழ்வாதாரமாக நம்பியுள்ள கடலில் கரைவலையைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் அனைவருக்கும் அறிவித்துள்ள போதிலும், அதனை யாரும் கண்டுகொள்கின்றார்கள் இல்லை எனவும் அப்பகுதி கரைவலை மீனவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

வழ க்கமாக கரைவலை மீன்பிடியில் ஈடுபடும் கூலித் தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 1500 தொடக்கம் 20 00 ரூபா வரைக்கும் வருமானம் பெறுவார்கள், கடந்த இரண்டு வருடங்களாக அது படிப்படியாக குறைவடைந்து சென்றுள்ள போதிலும், இவ்வருடம் ஆரம்பித்ததிலிருந்து நாள் ஒன்றிற்கு 100 ரூபாய் தொடக்கும் 150 ரூபாய்தான் பெறக்கூடியதாக உள்ளது. சில நாட்களில் அதுவும் கிடைக்காது காலையில் வந்து வலையைப்போட்டு இழுத்தால் ஒரு மீனும் இருக்காது சும்மா வலையை கழுவி விட்டுச் செல்ல வேண்டிய நி லைமைக்குத்தான் தள்ளப்பட்டுள்ளோம் என அப்பகுதி கரைவ லை மீனவர்கள் அங்கலாய்க்கின்றார்ள்.

மக்களின் கருத்துக்கள் இவ்வாறு இருக்கின்ற இந்நிலைமையில், மட்டக்களப்பு மாவட்டம் தேத்தாதீவு கடற் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒருதொகுதி சுருக்குவலையை விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் செவ்வாய்கிழமை (15) பிற்பகல் மீட்டுள்ளதாக கடற்றொழிற் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ருக்ஷன் குரூஸ் தெரிவித்துள்ளார்.

பிரதேசத்திற்குப் பொறுப்பான கடற்றொழில் பரிசோதகர் தர்ஜனன், களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினர், ஆகியோர் ஒன்றிணைந்து இந்நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர். இந்நிலையில் இஸ்த்தலத்திற்கு நேரடியாக விஜயம் செய்த கடற்றொழிற் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ருக்ஷன் குரூஸ் உள்ளிட்ட குழுவினர்

(தொடர் 21ஆம் பக்கம்)

# பனங்கட்டி தயாரிப்புக்கு உற்பத்தி அடிப்படையிலான மானியம்







யாழ்ப்பான பனை உற்பத்திப் பொருட்களுக்கு தெற்கில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் சிறந்த கேள்வி நிலவுகின்ற நிலையில் குறித்த துறையை முன்னேற்ற பனை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அரசாங்கம் சிறந்த சந்தை வாய்ப்பினை பெற்றுத்தரவுள்ளது.

பனை அபிவிருத்தி அதிகார சபையின் பங்கேற்புடன் பனை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் யாழ் மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும், யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்றது.

கனடாவில் யாழ் மாவட்டத்தின் பனை சார்ந்த உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தக்கூடிய இரு கற்பகங்களை ஆரம்பிக்கவுள்ளதாக வடமாகாண பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிஷாந்தி பத்திராயா இதன்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு கடந்த மாதம் 5000 கிலோ பனங்கட்டி தேவைப்பட்டது. எனினும் 2000 கிலோ பனம் கட்டியே எமக்குக் கிடைத்தது என்றார்.

அரசாங்கம் கித்துள் உற்பத்திக்கு மானியம் வழங்குகிறது பனம் உற்பத்திக்களுக்கு மானியம் வழங்குவதில்லை. இதனால் பனை உற்பத்தியாளர்கள் தொழில் ரீதியான நெருக்கடிகளுக்கும் வாழ்வாதார ரீதியான நெருக்கடிகளுக்கும் உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது கித்துள் உற்பத்திகளுக்கு அரசாங்கம் வரிவிலக்கை வழங்கியுள்ளதுடன் பனை உற்பத்திப் பொருட்களுக்கும் தொழில் நடவடிக்கைகளுக்கும் அரசாங்கம் வரி அறவிடுகின்றது.

இலங்கை மது வரி சட்டத்தில் கித்துள் பாணி உள்ளடங்காத போதிலும் பதநீர் மது வரி சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பனையில் இருந்து எடுக்கப்பட்ட பதநீரானது 11 மணித்தியாலத்திற்கு பின்னரே மதுவாக மாறுகின்ற நிலையில் மருத்துவ குணங்கள் உடைய இயற்கை பானமாக பலரும் இதை அருந்துகிறார்கள்.

ஆகவே அரசாங்கம் பனை உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு சலுகைகளை வழங்கும் பட்சத்தில் குறித்த உற்பத்தி துறையை வீழ்ச்சி அடையாமல் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என உற்பத்தியாளர்கள் அங்கு தெரிவித்தனர்.

இதன் போது ஊடகங்களுக்குகருத்து தெரிவித்த அங்கஜன் இராமநாதன் பனங்கட்டி தயாரிப்பதற்கு மானியம் வழங்குவது பற்றி ஆராயவுள்ளதாகத் தெரிவித்தார்.

# தோட்டங்களை தொழிலாளர்களிடையே...

(09 ஆம் பக்கத் தொடர்)

ஒரு சரியான முடிவை சரியான நேரத்தில் மலையக சமூகத்துக்காக எடுக்கும் ஒரு துணிச்சல் மிக்க தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஐயா. அதேபோல அவருடைய புதல்வாரன ஜீவன் தொண்டமானும் அவரை போலவே மிகவும் துடி துடிப்பாகவே செயற்படுகிறார். எந்த விடயத்திற்கும் உடனே தீர்வு காண வேண்டும் என்ற சுறு சுறுப்புடன் பணியாற்றி வருகிறார்.

**மலையக மக்களுக்காக உங்களால் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் யாவை?**

அமரர் ஆறுமுகன் தொண்டமான் நினைத்ததுபோலவே பெருந்தோட்டங்கள் கிராமங்களாக உருவாக்கப்படவுள்ளன. லயன் முறை முற்றிலும் நீங்க வேண்டும். தற்போது 28 பெருந்தோட்ட கம்பனிகள் இருக்கின்றன. நட்டத்தில் இயங்கும் கம்பனிகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என நாங்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளோம். அத்தோட்டங்களை அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அவர்கள் சிறுதோட்ட உரிமையாளர்களாக ஆக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அரசாங்கமும் உடன்பட்டுள்ளது. அதற்கான பேச்சுவார்த்தையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பதற்கான வேலைத்திட்டமும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மலையகத்தை பொறுத்த வரையில் இந்த அரசாங்கத்துடன் இ.தொ.கா மட்டுமேத உள்ளது. எனவே அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களை நாங்கள் நிறைவேற்றுவோம். நாங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயமாக நிறை வேற்றுவோம்.

**பெருந்தோட்ட வீடமைப்பு திட்டங்கள் பெருந்தோட்ட தொழிலாளர்களுடன் மட்டுப்படுத்தப்படுமா?**

நிச்சயமாக இல்லை. அமரர் ஆறுமுகன் தொண்டமான். ஒரு தோட்டத்திற்கு 100 வீடுகள் கட்டப்படுமாயின் அதே தோட்டத்தில் பிறந்து வளர்ந்து ஆசிரியராகவும் அரசு உத்தியோகத்தவராகவும் அல்லது பெருந்தோட்ட உத்தியோகத்தராகவும் பணியாற்றுவோர் அனைவரையும் இந்த வீடமைப்பு திட்டத்தில் உள்வாங்க வேண்மும் என நினைத்திருந்தார். அதனை நாங்கள் நிறைவேற்றுவோம். கடந்த அரசாங்கத்தில் இந்த வீடமைப்பு திட்டங்கள் முறையாக முன்னெடுக்கவில்லை. அதனை இப்போது பேசி எதுவும் ஆகப்போவதில்லை. எனவே நாங்கள் வீடமைப்பு திட்டங்களை முறையாக ஆரம்பித்துள்ளோம். அமரர் ஆறுமுகன் தொண்டமான் கூறியதைப் போலவே லயன்களை இடித்து அவ்விடங்களிலேயே வீடுகளை நிர்மாணிப்போம். மாடி வீடு என்ற போலி கதைகளை மக்கள் நம்பக் கூடாது. வீடுகளையே நாம் அமைப்போம். கூரைக்கு பதிலாக கொங்க்றீட் போடப்பட்டிருக்கும் மிக விரைவில் உண்மை என்னவென்பதை உங்களால் நேரில் காண முடியும்.

***இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சவால்கள் யாவை?***

மக்களுக்கு சேவை செய்வதே எமது நோக்கம். அரசாங்கத்தினால் ஏனைய சமூகங்களுக்கு என்னென்ன நல்ல திட்டங்கள் கிடைக்கின்றனவோ அவற்றை எமது சமூகத்திற்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே எமது நோக்கமும். இதுவே அமரர் ஆறுமுகன் தொண்டமானின் நோக்கமாகவும் இருந்தது. ஏனைய கட்சிகளுடன் எமக்கு எந்தவித சவாலும் கிடையாது. இது ஒரு கட்டுக்கோப்பான அமைப்பு.

**வடக்கு கிழக்கு கட்சிகள் அடிப்படையான விடயங்களில் ஒன்றிணைய வேண்டும் என சம்பந்தன் கூறுகின்றார் அதேபோல மலையக கட்சிகளும் அவ்வாறு குரல் கொடுப்பது நல்லது என நீங்கள் நினைக்கின்றீர்களா?**

அதனை பொறுத்திருந்து பார்ப்போம். தேர்தலுக்காக மட்டும் சேரும் கூட்டணிகளாக நாம் ஒருபோதும் இருக்கக்கூடாது. நாம் ஒன்று சேருவோமாயின் என்றுமே பிரிவு ஏற்படாத ஒரு கூட்டணியாக அது இருக்க வேண்டும். கூட்டணியாக ஆரம்பித்து நாங்கள் ஒற்றுமையாகவே இருக்கின்றோம் என்று போலியாகக் காட்டாமல், தேர்தல் காலங்களில் பிரிந்திருந்தாலும் எமது மக்களுக்கு பிரச்சினை ஏற்படும்போது அனைத்து தரப்புகளும் ஒன்றிணைந்து குரல் கொடுப்போமாயின் அது வரவேற்கத்தக்கது. வடக்கு கிழக்காக இருந்தாலும் சரி மலையகமாக இருந்தாலும் சரி நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து செயற்பட்டால் வெற்றி நிச்சயம் தான். பேச்சளவில் இல்லாமல் செயற்பாட்டுக்கு வருவதே எமது வெற்றி.

**புதிய அரசியலமைப்பு நிபுணர்குழுவுக்கு இந்திய வம்சாவளியினர் சார்பாக ஒருவரும் தெரிவு செய்யப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

இந்தியவம்சாவளியினர் சார்பாக ஒருவரை நாங்கள் நியமித்துள்ளோம். நானும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானும் அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து இந்திய வம்சாவளியினர் சார்பாக ஒருவரை நியமித்துள்ளோம். மாடு அறுத்தல் தடை சட்டம் கொண்டுவரப்படும் என்ற அரசின் கூற்றுக்குக்கு எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளது. இது எதேச்சதிகாரமான முடிவாக உங்களுக்குத் தோன்றுகின்றதா? ஒரு மிருகத்தை மட்டும் மத ரீதியான கண்ணோட்டத்துடன் பார்ப்பதும் அதை ஒரு பண்ணை விலங்காக,வர்த்தகமாக பார்ப்பதற்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் உண்டல்லவா? மலையகத்தில் பலர் கால்நடை வளர்ப்பில் உள்ளதால் இந்த கேள்வியை உங்களிடம் முன்வைக்கின்றேன்.

அரசாங்கத்தினால் இந்த சட்டம் நிறைவேற்றப்படும்போது பார்ப்போம். நாம் சிறுபான்மை மக்கள். இது சிங்கள மக்களை பெரும்பான்மையினமாகக் கொண்ட நாடு. நாட்டை ஆள்பவர்களிடம் நாம் பங்காளிகளாகவே இருக்க வேண்டும். சிறுபான்மை மக்களுக்கு ஒரு பிரச்சினை ஏற்படும்போது நாம் அனைவரும் சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும்.

# வாழ்வாதாரத்திற்காகப் போராடும்...

(20ஆம் பக்க தொடர்)

நிலமையை அவதானித்து பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தனர். அப்பகுதி கடற்றொழில் பரிசோதகருக்குக் கிடைத்த தகவலையடுத்தே, விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் நிமித்தம் கடலில் பதுக்கி வைத்திருந்த அனுதியற்ற சுருக்கு வலைகளும், ஒரு இந்திரப்படகும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட சுருக்கு வலை சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியுடையது எனவும், அதனை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், கடற்றொழிற் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது இவ்வாறு இருக்க களுவாஞ்சிகுடி பகுதியிலும் ஒரு தொகுதி சுருக்குவலைகள் அண்மையில் கைப்பற்றப்பட்டுள்ளன, அதனையும், நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி கடற்றொழில் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறு அமைந்தாலும், கரைவலையில் நாளாந்தம் வலை பிடித்து இழுத்தால்தான் ஒவ்வொரு மீனவனின் வீட்டிலும் அடுப்பெரியும். கடலில் தொழில் செய்வதற்கு அனைவருக்கும் உரிமையிருந்தாலும், அனுமதியற்ற முறையில் மீன் பிடிப்பதையும், அனுமதியற்ற சுருக்கு வலைகளைப் பயன்படுத்துவதையும், தடுப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் தீர்க்கமான கட்டமைப்பு ஒன்றைக் அமுல்படுத்த வேண்டும். ஆழ்கடல் மீன் பிடித் தொழிலை, கரைவலை மீன்பிடித் தொழிலோடு ஒப்பு நோக்க முடியாது. எனினும் ஒரு சிலர் மாத்திரம், கடல் வளத்தை அனுமதியற்ற முறையில் பயன்படுத்தி இலாபமீட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும். கடல் வளம் அனைவருக்குமானது எனக் கூறினாலும், கரைவலை மீனவர்கள் பாதிப்புறாவண்ணம் அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு, பொறுப்பு வாய்ந்தவர்களும், தமது செயற்பாடுகளை முடுக்கி விடவேண்டும் என்பதையே களுதாவளைப் பகுதி கரைவலை மீனவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

**வெற்றிடங்கள்**

**தும்பு தொழிற்சாலைக்கு**
ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர்.

**வயது 20-45 வரை**
குருநாகல், மெல்சிரிபுர
**0777-555932**

## பதவி வெற்றிடங்கள்

**காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டத்திற்கான செயற்றிட்ட பதவிநிலையினரின் ஆட்சேர்ப்பு**

**நீர்ப்பாசன அமைச்சு**

CRIWMP

பசுமை காலநிலை நிதியத்தினால் நிதியிடப்பட்ட காலநிலை தாக்கக்குறைப்பு ஒருங்கிணைக்கப்பட்ட நீர் முகாமைத்துவசெயற்றிட்டத்திற்காக 01/2016 என்ற முகாமைத்துவ திணைக்கள சேவை சுற்றறிக்கையின் 2019 மார்ச் 5ஆம் திகதிய ''செயற்றிட்டங்களின் பதவி எண்ணிக்கை மற்றும் வேதன முகாமைத்துவ பிரகாரம் பின்வரும் பதவிநிலைகளுக்க **"ஒப்பந்த அடிப்படையில்"** செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் பணியாற்றுவதற்காக தகைமையும் அனுபவமுமுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களை அழைப்பதற்கு அமைச்சு விரும்புகின்றது. இச்செயற்றிட்டமானது மீஓய, மல்வத்துஓய மற்றும் யான்ஓய ஆற்றுப் படுக்கைகளின் ஏழு நிருவாக மாவட்டங்களில் 2017ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து 7 வருட காலப்பகுதிக்கு அமுல்நடாத்தப்படும்.

விண்ணப்பதாரிகள் விருப்பத்திற்குரியவாறு **45 வயதிற்கு குறைவாகவும்** ஆங்கில புலமை, அரசாங்க ஒழுங்குவிதிகளுடனான பரிச்சயம் மற்றும் கணனி அறிவும் முக்கியமான முன்தகைமைகளாகும்.

### 1. செயற்றிட்டப் பணிப்பாளர் - PS 4 வகுதி A

**வெளிக்கள அடிப்படையிலானது.**

**01 பதவிநிலை - குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்கள்**

**01 பதவிநிலை - வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்கள்**

**01 பதவிநிலை - அனுராதபுரம், பொலன்னறுவ மற்றும் திருகோணமலை மாவட்டங்கள்.**

**தேவைப்படும் தகைமைகள்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதொரு பட்டதாரிப் பட்டம்.

**அல்லது**

- சிவில் பொறியியல் துறைக்கான பட்டத்திற்கு நிகரான தகைமையொன்றென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.

**அல்லது**

சிவில் பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவம்/ நிகரான தொழில்சார் தகைமையொன்று.

**அத்துடன்**

- உரித்தான துறையில் ஆகக் குறைந்தது ஏழு (7) வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

2. உரித்தான துறையில் அரசாங்க நாடளாவிய ரீதியிலான சேவையின் III/IIஆம் வகுப்பிலுள்ள அலுவலரொருவர் அல்லது மேற்பட்டது அல்லது நிகரான நிலபரம்.

**அத்துடன்**

- III/II ஆம் வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 7 வருட அனுபவம்.

**சம்பள மட்டம்: 115,000 ரூபா - 130,000 ரூபா***

* 01/ 2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவு படியும் வழங்கப்படும்.

### 2. செயற்றிட்ட பொறியியலாளர் - PS 4 வகுதி B

**01. பதவிநிலை - கொழும்பு தலைமையகத்தில் நிலையாகவும் வெளியகங்களுக்கான உரித்தான விஜயங்களும்.**

**தேவைப்படும் தகைமைகள்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதொரு பட்டதாரிப் பட்டம்.

**அல்லது**

- சிவில் பொறியியல் துறைக்கான பட்டத்திற்கு நிகரான தகைமையொன்றென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.

**அல்லது**

சிவில் பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவம்/ நிகரான தொழில்சார் தகைமையொன்று.

**அத்துடன்**

- சிவில் பொறியியல் துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

2. சிவில் பொறியியல் துறையில் அரசாங்க நாடளாவிய ரீதியிலான சேவையின் III/IIஆம் வகுப்பிலுள்ள அலுவலரொருவர் அல்லது மேற்பட்டது அல்லது நிகரான நிலபரம்.

**அத்துடன்**

III/II ஆம் வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவம்

**சம்பள மட்டம்: 100,000 ரூபா - 110,000 ரூபா***

* 01/ 2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப் படியும் வழங்கப்படும்.

### 3. தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் உதவியாளர் - (வகுதி: முகாமைத்துவ உதவியாளர்) - கொழும்பை தளமாகக் கொண்டது

**தேவைப்படும் தகைமைகள்:**

- கபொத (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06)) பாடங்களில் ஆங்கிலம் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழிகள் அடங்கலாக மூன்று (3) பாடங்களில் சித்தி அத்துடன் உ/த பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று (03)/ நான்கு (4) பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

- அரசாங்க அல்லது தனியார் துறையில் முகாமைத்துவ உதவியாளராக ஆகக் குறைந்தது 2 வருட வேலை அனுபவம் அல்லது நிகரான நிலை.
- மூன்று மொழிகளிலும் பணியாற்றுவதற்கான ஆற்றல் - அதாவது சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் (எழுதும் திறன்கள் மற்றும் பேச்சாற்றல்) கட்டாயமானதாகும்.
- பல்லூடகம் மற்றும் தொடர்பாடல் அல்லது உரித்தானதொரு பாடத்தில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களில் பணியாற்றிய அனுபவமுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சம்பள மட்டம்: 01/2016 என்ற இலக்கமும் 2019 மார்ச் 5ஆம் திகதியுமுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படும்.**

* 01/ 2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப் படியும் வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள்:**

விண்ணப்பதாரிகள் அவர்களின் கல்விசார், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் தொடர்புகள் அடங்கலான சுயதரவை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அதியுயர் தகைமைகள் மற்றும் அனுபவத்தையுடைய தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்பட்டு திறமை அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும். அடிப்படை தகைமையை சான்று பகருவதற்கான சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பதுடன் இணைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அனைத்து பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

அரசாங்க/ ஓரளவு அரசு சார்ந்த துறையிலுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்களின் உரித்தான திணைக்களங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியை 2020 ஒக்ரோபர் 5ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் வழியாக அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பிக்கும் பதவியானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

**செயலாளர்,**
**நிருவாகம்/ மனிதவளங்கள் பிரிவு,**
**நீர்ப்பாசன அமைச்சு,**
**இல. 500, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10.**
திகதி: 2020 செப்டம்பர் 20.

## வர்த்தக அமைச்சு

## கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்

### சதொசவிற்கு சொந்தமான நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கான விலைமனுக்கோரல்

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்கு சொந்தமான நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் நிறுவனங்களிலிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ரூ.1000/- வீதம் மீளளிக்கப்படாத கட்டணத்தை தலைமையகத்தின் காசாளரிடம் செலுத்திய பின்பு பெறுகைப்பிரிவிலிருந்து கேள்வி பற்றிய விபரப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகளை சமர்ப்பிக்கும்போது ரூ.15,000/- மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகையை செலுத்த வேண்டியதுடன் அதனை, 2020.10.14 இற்கு இடையில் ந.ப.12.00 இற்கு முன் சதொச தலைமையகத்தின் காசாளரிடம் செலுத்துதல் வேண்டும்.

பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2020.10.14ஆம் திகதி 14.00 மணிக்கு முன் கடிதத்தலைப்பு மூலம் உறையொன்றில் இட்டு இல.20 கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அத்துடன், அவ்வேளையிலேயே விலைமனுக்கள் திறக்கப்படும்.

இறுதித்தீர்மானம் கேள்விச் சபைக்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்,**
**இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு - 02.**
2020.09.16

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை

## பதவி வெற்றிடங்கள்

தேசிய மருந்துகள் கட்டுப்படுத்தல் அதிகார சபையின் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் பதவிகளாகும் என்பதுடன் இடமாற்றங்கள் பெற முடியாதவையாகும்.

### 01. பணிப்பாளர் (மனித வளங்கள்) பதவி: (வெற்றிட எண்ணிக்கை 1)

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம் / அபிவிருத்தி / சமூகவியல் போன்ற துறைகளில் பட்டத்தைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

முகாமைத்துவம்/ அபிவிருத்தி/ சமூகவியல் போன்ற துறைகளில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச, அரை அரச நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் மனித வளங்கள் தொடர்பில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது பதினைந்து (15) வருட கால அனுபவம்

**வயது:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் HM1-1 2016 ரூபா (81,670 - 15x2,270 - 115,720) சம்பள அளவில் 2020-01-01ஆம் திகதிக்கு உரித்தான சம்பள நிலை 81,670.00 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

**ஆட்சேர்க்கப்படும் முறை:** நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்.

### 02. மருத்துவ அதிகாரி பதவி : (வெற்றிடங்களின் எண்ணிக்கை 04)

| | | |
|---|---|---|
| i. | மருத்துவ அதிகாரி (தர முகாமைத்துவம்) | - 02 |
| ii. | மருத்துவ அதிகாரி (திட்டமிடல்) | - 02 |

**தகைமைகள்:**

இலங்கை அல்லது வெளிநாடு ஒன்றின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகமொன்றில் மருத்துவ பீடத்தினால் வழங்கப்படும் ஆரம்ப அல்லது அதற்கு மேற்பட்ட மருத்துவ பட்டம் சகிதம் இலங்கை மருத்துவ பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலையொன்றில் ஒரு வருட கால கட்டாய உள்ளகப் பயிற்சி சகிதமான மருத்துவரொருவராக இலங்கை மருத்துவ பேரவையின் பதிவைப் பெற்றிருத்தல்

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MM1-3 2016 ரூபா (55,925 - 10x1,375 - 15x1,910 - 98,325)) சம்பள அளவில் 2020-01-01ஆம் திகதிக்கு உரித்தான சம்பள நிலை 55,925.00 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

**ஆட்சேர்க்கப்படும் முறை:** திறந்த போட்டிப் பரீட்சை அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்.

**திறந்த போட்டிப் பரீட்சைக்கான பாட விதானம்:**

(அ) மொழி தேர்ச்சி
(ஆ) உளச்சார்பு பரீட்சை

(அ) **மொழி தேர்ச்சி -** வெளிப்படுத்தல், புரிந்துணர்வு, எழுத்துப் பிழை மற்றும் இலக்கண விதி பாவனை தொடர்பில் விண்ணப்பதாரியின் ஆற்றலை அளவிட்டுப் பார்ப்பதற்கான வினாப்பத்திரமாகும்.

(ஆ) **உளச்சார்பு பரீட்சை -** பதவிக்குரித்தான வேலைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காக விண்ணப்பதாரியின் உளச்சார்பு மற்றும் ஆற்றலை அளவிட்டுப் பார்ப்பதற்கான வினாப் பத்திரம்.

**ஏனைய விடயங்கள்:**

**சகல விண்ணப்பதாரர்களும்:**

i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் வேலைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

- அரச, அரை அரச நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

பிழையின்றி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை 2020-10-03ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இல. 120, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை.**

**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை**

........................................ பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. முழுப் பெயர்:
2. முதலெழுத்துகளுடன் பெயர்:
3. முகவரி:
4. வதியும் மாவட்டம்:
5. பிறந்த திகதி:
6. வயது: வருடம்:.................. மாதம்:.................... திகதி:....................
7. பால்:
8. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
9. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:
10. தொலைபேசி இலக்கம்: நிலையானது...................... கையடக்க தொலைபேசி:...................
11. மின்னஞ்சல் முகவரி:
12. கல்வித் தகைமைகள்:
13. தொழில்சார் தகைமைகள்:
14. அனுபவம்:
15. விண்ணப்பதாரர் தொடர்பான தகவல்களை விசாரிக்கக்கூடிய உறவினரல்லாத இரு நபர்களின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் மற்றும் முகவரி:

இங்கு மேலே தரப்பட்டுள்ள என் தொடர்பான விபரங்கள் எனது அறிவு, விசுவாசத்தின் பிரகாரம் சரியானவை மற்றும் உண்மையானவை என பிரகடனப்படுத்துகின்றேன்.

திகதி:............... ...................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

**கவனிக்க வேண்டியது:**

இயைபுடைய மாதிரியின் பிரகாரம் மட்டுமே விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன் உங்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

# கலாசார அலுவல்கள் திணைக்களம்

## அரச நடனக் குழுவின் நடனக் கலைஞர் பதவியின் பொருட்டு (ஒப்பந்தஅடிப்படையில்)ஆட்சேர்த்துக்கொள்ளல்

**01.** கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் அரசநடனக் குழுவில் வெற்றிடங்களின் பொருட்டு ஒப்பந்தஅடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்படும் தகுதிகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02.** விண்ணப்பப்படிவங்களை 2020.10.09ம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பணிப்பாளர் கலாசார அலுவல்கள் திணைக்களம், 08ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்

**03.** இந்த ஒப்பந்தத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப A4 அளவினையுடைய தாளில் தயாரித்து விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும்.

**04.** இப் பதவியின் பொருட்டு விண்ணப்பப்படிவங்களை அனுப்பும்போது விண்ணப்பிக்கின்ற பதவி **"நடனக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்)"** என்று விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**05.** விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது கல்வி மற்றும் ஏனைய தகுதிகள் தொடர்பான விபரங்களை பிழையின்றி உட்படுத்துதல் வேண்டும்.

**06.** பணியில் ஈடுபடுத்தச் செய்தல் மற்றும் நிபந்தனைகள்:

ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவதுடன் 03 வருட ஒப்பந்த காலத்திற்காக நியமிக்கலாம்.

சம்பளம் ரூ. 33600/= இற்கான மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்படும்.

**07. கல்வி மற்றும் பிறதகைமைகள்**

**I. கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாதவாறு தோற்றி இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் நடன பாடம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

தேசிய இளைஞர் சேவைசபையினால் நடாத்தப்படும் நடன டிப்ளோமா பாடநெறியை கற்று சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

அரசினால் அங்கீகரிக்கப்படுகின்ற நடன பாடம் தொடர்பில் டிப்ளோமா பாடநெறியை கற்று சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

தேசிய நடன பூர்வாங்க பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**II. தொழிற் தகைமைகள்: உரித்துடையதல்ல**

(தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் தொழில்சார் தகுதிகள் மேலதிக தகைமை ஒன்றாகக் கருதப்படும்)

**III. அனுபவம்:**

அரசாங்கத்தினால் அங்கீகரித்த கலை நிறுவனம் ஒன்றில் அல்லது அதற்கு இணையான நிலையம் ஒன்றில் நடனக் கலைஞர் ஒருவராக 03 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்

**அல்லது**

பரம்பரை ரீதியான நடனக் கலைஞர் ஒருவராக இருத்தல் (எழுத்து மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்)

**IV. உடற் தகைமைகள்:**

i. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலாயினும் பணியாற்றலாம் போதுமானளவு உடல் மற்றும் உள ரீதியாக பொருத்தப்பாட்டு மனநிலை கொண்டதாக இருத்தல்

ii. 5 அடி 2 அங்குலத்திற்குக் குறையாத உயரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**V. ஏனைய தகைமைகள்:**

i. சகல விண்ணப்பதாரிகளும் சிறந்த குண ஒழுக்கத்தினையும் சிறந்த உடல் பொருத்தப்பாட்டினையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

ii. பதவியில் ஆட்சேர்த்துக் கொள்ளும் பொருட்டான தகுதிகளை பூர்த்தி செய்தல் வேண்டும் என விண்ணப்பப்படிவத்தினை கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதியில் அத் தகுதிகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

iii. நடன/ வாத்தியம் சகல பிரிவுகளிலும் தேர்ச்சியடைந்துள்ளமை கவனத்திற் கொள்ளப்படும்.

**08. வயதெல்லை:**

விண்ணப்பப்படிவத்தினைப் பொறுப்பேற்கும் திகதியில் 18 வருடங்களுக்குள் குறையாத மற்றும் 25 வருடங்களுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**09. ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை:**

- தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைகளினதும் தெரிவுப் பரீட்சைகளினதும் பெறுபேற்றின் அடிப்படையிலும் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.
- தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமைபடி முறைக்கேற்ப தற்போதுள்ள வெற்றிட எண்ணிக்கையினைவிட இரு மடங்கு ஆட்கள் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் பரீட்சைகளிலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமைப் படிமுறைக்கேற்ப பதவியில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | தெரிவு செய்வதற்கு கவனத்திற் கொள்ளப் படுகின்ற ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | உரித்துடையதல்ல |
| 2. குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவங்கள் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) | 35 | |
| 3. தொழிற் தகைமைகள்<br>i. பிரபல கலைஞர்களின் கீழ் தேசிய மட்ட படைப்புக்களில் கலந்து கொண்டிருத்தல்<br>ii. கலாசார நிலையங்கள் ஊடாகவோ அல்லது பிரபல கலைஞர்கள் ஊடாகவோ வெளிநாட்டு கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருத்தல் | 25 | |
| 4. மொழித் தேர்ச்சி | 15 | |
| 5. நேர்முகப் பரீட்சைகளில் காட்டும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

**தொழில்சார் பரீட்சை**

| புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | தேறுவதற்கான புள்ளி அளவு |
|---|---|---|
| 1. கலைத் திறமைகள் | 30 | 15 |
| 2. தாளஞானமும் ராக பாவமும் | 20 | 10 |
| 3. தோற்றம் (உயரம்/பருமன்) | 20 | 10 |
| 4. விசேட திறமைகள் | 20 | 10 |
| 5. கோட்பாட்டு ரீதியான அறிவு | 10 | 05 |
| மொத்தம் | 100 | 50 |

**பணிப்பாளர்,**
**கலாசார அலுவல்கள் திணைக்களம்,**
**08ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை.**
**2020.09.20**

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

அலுவலகப் பாவனையின் பொருட்டு [ ]

**கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நடனக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்) பதவியின் பொருட்டு விண்ணப்பித்தல்**

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :
02. முதலெழுத்துக்களை குறிக்கும் பெயர்கள் :
03. பிறந்த திகதி :
04. வயது (2020-10-09ம் திகதிக்கு) :
05. உயரம் : ...... அடி ........... .அங்குலம்
06. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
07. ஆண்/பெண் பால்நிலை :
08. முகவரி :
09. தொலைபேசி இலக்கம் :
10. கல்வித் தகைமை :

i. க.பொ.த. (சா/த)

ஆண்டு: பரீட்சை சுட்டெண்:

| பாடம் | பெற்ற சித்தி | பாடம் | பெற்ற சித்தி |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

ii. தேசிய இளைஞர் சேவைசபையினால் நடாத்தப்படும் நடன டிப்ளோமா பாடநெறி/அரசினால் அங்கீகரிக்கப்படுகின்ற நடன பாடம் தொடர்பில் டிப்ளோமா பாடநெறி/தேசிய நடன பூர்வாங்க பரீட்சை

| செல்லுபடியாகும் திகதி | சித்தியடைந்த பரீட்சை | நிறுவனம்/பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |
| | | |

11. தொழிற் தகைமைகள்:
12. அனுபவம்:

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் நான் அறிந்த வரையில் உண்மையானதும் சரியானதும் எனவும் இங்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் ஒன்று பிழையானது என தெரிவு செய்வதற்கு முன்னர் அறியக் கிடைத்தால் நான் தகுதியற்றவன் எனவும் நியமனம் பெற்றதன் பின்னர் அது தொடர்பில் வெளிக்காட்டப்பட்டால் நியமனம் செல்லுபடியற்றதாகும் என்பதனையும் நான் அறிவேன்.

திகதி :................... விண்ணப்பதாரியின் கையொப்பம்:....................................................

---

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

# கலாசார அலுவல்கள் திணைக்களம்

## அரச இசைக்குழுவின் இசைக் கலைஞர் பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) ஆட்சேர்த்துக்கொள்ளல்

**01.** கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் அரச இசைக் குழுவில் வெற்றிடங்களின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்படும் தகுதிகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02.** விண்ணப்பப்படிவங்களை 2020.10.09ம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பணிப்பாளர் கலாசார அலுவல்கள் திணைக்களம், 08ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்

**03.** இந்த ஒப்பந்தத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப A4 அளவினையுடைய தாளில் தயாரித்து விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும்.

**04.** இப் பதவியின் பொருட்டு விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் போது விண்ணப்பிக்கின்ற பதவி **"இசைக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்)"** என்று விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**05.** விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது கல்வி மற்றும் ஏனைய தகுதிகள் தொடர்பான விபரங்களை பிழையின்றி உட்படுத்துதல் வேண்டும்.

**06. பணியில் ஈடுபடுத்தச் செய்தல் மற்றும் நிபந்தனைகள்:**

I. ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவதுடன் 03 வருட ஒப்பந்த காலத்திற்காக நியமிக்கலாம்.

II. சம்பளம் ரூ. 33,600/= இற்கான மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்படும்.

**07. கல்வி மற்றும் பிற தகைமைகள்:**

**I. கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சங்கீத பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

தேசிய சங்கீத இடைநிலை தரம் அல்லது இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது பாத்கண்டே கல்லூரியில் சங்கீதத்திற்கான விசாரத பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்படுகின்ற சங்கீத பாடம் தொடர்பில் பட்டத்தினை பெற்றிருத்தல்

**II. தொழிற் தகைமைகள்: உரித்துடையதல்ல**

(தகுதி மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையில் தொழில்சார் தகுதிகள் மேலதிக தகைமை ஒன்றாகக் கருதப்படும்)

**III. அனுபவம்:**

அரசாங்கத்தின் அங்கீகரித்த கலை நிறுவனம் ஒன்றில் அல்லது கலாசார அலுவல்கள் பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும் அதற்கு இணையான நிறுவனம் ஒன்றில் இசைக் கலைஞராக 05 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்

**அல்லது**

பரம்பரை ரீதியான இசைக் கலைஞராக இருத்தல் (எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்)

**IV. உடற் தகைமைகள்:**

i. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலாயினும் பணியாற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள ரீதியான பொருத்தப்பாடு மனநிலை கொண்டதாக இருத்தல்

ii. 5 அடி 3 அங்குலத்திற்குக் குறையாத உயரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**V. ஏனைய தகைமைகள்:**

i. சகல விண்ணப்பதாரிகளும் சிறந்த குண ஒழுக்கத்தினையும் சிறந்த உடல் பொருத்தப்பாட்டினையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

ii. பதவியில் ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டான தகுதிகளை பூர்த்தி செய்தல் வேண்டும் என விண்ணப்பப்படிவத்தினை கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதியில் அத் தகுதிகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

iii. பாடல்/வாத்தியம் சகல பிரிவுகளிலும் தேர்ச்சியடைந்துள்ளமை கவனத்திற் கொள்ளப்படும்.

**08. வயதெல்லை:**

விண்ணப்பப்படிவத்தினைப் பொறுப்பேற்கும் திகதியில் 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 45 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

**09. ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை:**

- தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் பரீட்சையினதும் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.
- தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் தொழில்சார் பரீட்சைக்கு உட்படுத்தப்படும் வேளை, தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் பரீட்சைகளிலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமைப் படிமுறைக்கேற்ப பதவியில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | தெரிவு செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுகின்ற ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | உரித்துடையதல்ல |
| 2. குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவங்கள் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) | 35 | |
| 3. தொழிற் தகைமைகள்<br>i. பிரபல கலைஞர்களின் கீழ் தேசிய மட்ட படைப்புக்களில் கலந்து கொண்டிருத்தல்<br>ii. கலாசார நிலையங்கள் ஊடாகவோ அல்லது பிரபல கலைஞர்கள் ஊடாகவோ வெளிநாட்டு கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருத்தல் | 25 | |
| 4. மொழித் தேர்ச்சி | 15 | |
| 5. நேர்முகப் பரீட்சைகளில் காட்டும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

**தொழில்சார் பரீட்சை**

| புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | தேறுவதற்கான புள்ளி அளவு |
|---|---|---|
| பிரதான பாடம் (பாடல்/வாத்தியம்) | 60 | 30 |
| நானாவிதம் (பாடகருக்காக இசை/ இசையமைப்பாளருக்காக பாடல்) | 20 | 10 |
| ஸ்வர தாளங்களின் பாடும்/ எழுதும் திறன் | 20 | 10 |
| மொத்தம் | 100 | 50 |

**பணிப்பாளர்,**
**கலாசார அலுவல்கள் திணைக்களம்,**
**08ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை.**
**2020.09.20**

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

அலுவலகப் பாவனைக்காக [ ]

**கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இசைக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்) பதவிக்காக விண்ணப்பித்தல்**

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :
02. முதலெழுத்துக்களை குறிக்கும் பெயர்கள் :
03. பிறந்த திகதி :
04. வயது (2020-10-09ம் திகதிக்கு) :
05. உயரம் : ...... அடி ........... .அங்குலம்
06. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
07. ஆண்/பெண் பால்நிலை :
08. முகவரி :
09. தொலைபேசி இலக்கம் :
10. கல்வித் தகைமை :

i. க.பொ.த. (உ/த)

ஆண்டு: பரீட்சை சுட்டெண்:

| பாடம் | பெற்ற சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

ii. பெற்ற பட்டம்:.........................................................

| செல்லுபடியாகும் திகதி | துறை | நிறுவனம்/பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |
| | | |

iii. தேசிய சங்கீத இடைநிலை அல்லது இறுதிப் பரீட்சை / பாத்கண்டே கல்லூரியின் சங்கீத விசாரத பட்டப் பரீட்சை

| செல்லுபடியாகும் திகதி | துறை | நிறுவனம்/பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |
| | | |

11. தொழிற் தகைமைகள் :
12. அனுபவம் :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் நான் அறிந்த வரையில் உண்மையானதும் சரியானதும் எனவும் இங்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் ஒன்று பிழையானது என தெரிவு செய்வதற்கு முன்னர் அறியக் கிடைத்தால் நான் தகுதியற்றவன் எனவும் நியமனம் பெற்றதன் பின்னர் அது தொடர்பில் வெளிக்காட்டப்பட்டால் நியமனம் செல்லுபடியற்றதாகும் என்பதனையும் நான் அறிவேன்.

திகதி :................... விண்ணப்பதாரியின் கையொப்பம்:....................................................

---

# தமிழ் கலாசாரத்தின்...

(10ஆம் பக்க தொடர்)

வந்தவர் புதிதாக ஒரு ஊரில் தங்க முடிவு செய்து அந்த ஊரின் முக்கியப் பிரமுகரான ஞானவேல் பண்டிதரிடம் உதவி கேட்கிறார். பண்டிதரும் கந்தசாமிக்கு உதவி செய்ய... அவருடைய நிலத்திலேயே குடிசை போட்டு தங்கிக் கொண்டு ஊருக்குள் மாட்டை ஓட்டிக் கொண்டு போய் குறி சொல்லி வருகிறார் கந்தசாமி.

அதே ஊரில் வசிப்பவர்தான் நாயகி 'தாமரை' என்னும் காவ்யா மாதவ். தந்தையை இழந்த காவ்யா, தனது தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வருகிறார். தாய், தந்தை இருவருமே பூ கட்டி விற்கும் வேலையைச் செய்து வருகிறார்கள்.

நாயகனும், நாயகியும் ஊருக்குள் சந்தித்துக் கொள்கிறார்கள். தனக்கு வரும் மாப்பிள்ளை எப்படியிருப்பான் என்கிற கற்பனையில் இருக்கும் காவ்யாவிடம் அவளுக்குச் சீக்கிரமாக கல்யாணமாகப் போகிறது..

மாப்பிள்ளையும் வரப் போகிறான் என்று நிஜமாகவே குறி சொல்கிறார் குணா.

நாயகியும் ஆசையுடன் இருக்க.. ஒரு சந்தர்ப்பத்தில் அந்த மாப்பிள்ளை குணாதான் என்று காவ்யாவின் உள் மனது சொல்கிறது. இருவரும் தங்களது காதலை வெளிப்படுத்திக் கொள்ள.. காதல் வளர்கிறது.

இதையடுத்து தனக்கு ஊருக்குள் இருக்க அனுமதித்த ஞானவேல் பண்டிதர் மூலமாக நாயகியின் தாயிடம் பெண் கேட்கிறார் நாயகன். நாயகியின் தாயோ மாப்பிள்ளை பூம் பூம் மாட்டை விற்றுவிட்டு.. வேறு தொழில் செய்ய முன் வந்தால் தனது மகளைக் கட்டிக் கொடுப்பதாக சொல்கிறார்.

ஆனால், இதனை நாயகன் ஏற்க மறுக்கிறார். இது தனது குலத் தொழில் என்றும்.. இந்தக் கலாச்சாரத்தை அடுத்துத் தலைமுறைக்குக் கொண்டு செல்லும் ஒரு பணியில் தான் இருப்பதாகவும், இது தன்னோடு முடியக் கூடாது என்பதால் இந்த குறி சொல்லும் வேலையை விடவே முடியாது என்று தீர்க்கமாக மறுக்கிறார்.

நாயகியின் தாயும் தன் நிலையில் உறுதியாய் நிற்க.. கடைசியில் இருவரின் திருமணமும் நிற்கிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஞானவேல் பண்டிதரும் முயற்சிக்கிறார். நாயகியும் முயற்சிக்கிறாள். கடைசியில் என்னாகிறது என்பதுதான் இந்தக் 'கயிறு' படத்தின் சுவையான திரைக்கதை.

இதைபோல் கிராமத்து எளிய பெண்ணாக தோற்றத்தில் நம் மனதில் இடம் பிடித்த நாயகி காவ்யா மாதவன்.. நடிப்பிலும் குறையில்லை என்றாலும், இயக்குதலில் இருக்கும் சிறிய குறையினால் நிறைவை எட்டவில்லை. இருந்தும் பல காட்சிகளில் நாயகனை நடிப்பில் மிஞ்சியிருக்கிறார். பாராட்டுக்கள்.. வாழ்த்துகள்..

படத்தில் மிக முக்கியக் கதாபாத்திரத்தில் 'உதார்' கணேசனாக நடித்திருக்கும் ஹலோ கந்தசாமி சிரிக்க வைக்கவில்லையென்றாலும் போரடிக்காமல் இருக்கவும், புன்னகைக்கவும் வைத்திருக்கிறார்.

2020ம் வருடத்தில் அவசியம் பார்க்க வேண்டிய படங்களின் பட்டியலில் இப்படமும் இடம் பிடித்திருக்கிறது.

ஈழத்து குணா நடித்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கயிறு திரைப்படம் மெஜஸ்டிக் யாழ்ப்பாணம், றீகல் நுவரேலியா, மெஜஸ்டிக் கொழும்பு, கொன்கோட் தெஹிவளை, ஜெயபிம கம்பஹா, ரூபி மாளிகாவத்தை, நெல்சன் திருகோணமலை, சினிசிட்டி மருதானை, பிவிஆர் காலிமுகத்திடல், ஜீகே கல்முனை, ராஜா யாழ்ப்பாணம், சிட்டி சினிமா கல்கிசை ஆகிய திரையரங்குகளில் திரையிடப்பட்டுள்ளன.

---

## திருத்தம் பற்றிய அறிவித்தல்

**பாதுகாப்பு அமைச்சு**

**அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியின் 04ஆம் தொகுதிக்கு தீயைக் கண்டறிதல் மற்றும் தீப்பாதுகாப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதலுக்கான விலைமனு**

**Contract No.: DHQC/FP & FD 04/2020**

மேற்படி தலைப்பில் 2020 செப்டெம்பர் 13ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையில் பிரசுரமான விளம்பரம் சம்பந்தமானது.

அந்த விளம்பரத்தின் 09ஆம் பந்தியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படும் திகதி மற்றும் நேரம் 2020-10-12ஆம் திகதி மு.ப. 11.00 மணி எனப் பிழையாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒப்படைக்கப்படும் நேரம் மு.ப. 10.00 மணியென திருத்தப்படல் வேண்டும்.

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு (MPC),**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல.: 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03, இலங்கை.**
**தொலைபேசி : 0094-2390719.**
**தொலைநகல் : 0094-2390720.**

## திருத்தம் பற்றிய அறிவித்தல்

**பாதுகாப்பு அமைச்சு**

**அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியின் 03ஆம் தொகுதிக்கு தீயைக் கண்டறிதல் மற்றும் தீப்பாதுகாப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதலுக்கான விலைமனு**

**Contract No.: DHQC/FP & FD 03/2020**

மேற்படி தலைப்பில் 2020 செப்டெம்பர் 13ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையில் பிரசுரமான விளம்பரம் சம்பந்தமானது.

அந்த விளம்பரத்தின் 09ஆம் பந்தியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படும் திகதி மற்றும் நேரம் 2020-10-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி எனப் பிழையாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒப்படைக்கப்படும் நேரம் மு.ப. 11.00 மணியென திருத்தப்படல் வேண்டும்.

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு (MPC),**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல.: 15/ 5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03, இலங்கை.**
**தொலைபேசி : 0094-2390719.**
**தொலைநகல் : 0094-2390720.**



# சிறுவர் உலகம்

- சிங்கம் -



குறளமுதம் :

**செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.**

**தெளிவுரை :** செவியால் கேட்டறியும் செல்வம், செல்வங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் செல்வமாகும்; அச் செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும்.

## நல்லவை செய்து நாம் வாழ்வோம்!

ஓடி ஓடி விளையாடு
உடலும் உள்ளமும் உறுதிபெறும்
ஆடிப்பாடி விளையாடு
அகத்தில் இன்பம் துள்ளிவரும்.

அன்பாய் சிரித்து கதை பேசு
உன்பால் மதிப்பு மேலோங்கும்
பண்பாய் நடக்க நீ பழகு
பலரின் நட்பு தேடிவரும்.

அடக்க முடனே நீ வாழ்ந்தால்
அகந்தை உன்னை நெருங்காது
உகந்த வழியில் நீ நடந்தால்
உயர்வு என்றும் உ(ன்)னைச் சேரும்.


குற்றம் சொல்லி வாழாதே
குறைகளைச் சொல்லித் திரியாதே
நல்லவை செய்து நீ வாழ்ந்தால்
நாளைய உலகம் உனதாகும்..!

**ஷெல்லிதாசன்,**
**திருகோணமலை.**

## இவ்வார மழலை




இல்மி - றம்ஸானி,
இறக்காமம் 01.



## அநகாரிக தர்மபால

**(17 செப்டெம்பர் 1864 – 29 ஏப்ரல் 1933)**

அநகாரிக தர்மபால, டொன் கரோலிஸ் ஹேவாவிதாரண, மல்லிகா தர்மகுணவர்த்தன ஆகியோருக்கு மகனாக 1864ம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் திகதி பிறந்தார். இவரது இயற்பெயர் டொன் டேவிட் ஹேவாவிதாரண.


இலங்கை பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இருந்த காலமது. பெரும்பாலான பாடசாலைகள் கிறிஸ்தவப் பாடசாலைகளாகவே இருந்தன. டொன் டேவிட்டும் ஒரு கிறிஸ்தவப் பாடசாலையிலேயே கல்வி பயின்றார். முதலில் கோட்டேயிலிருந்த கிறிஸ்தவக் கல்லூரியிலும் பின்னர் கொழும்பு அக்கடமியிலும் பயின்றார். 1875 ஆம் ஆண்டு நியூயோர்க்கில் கேர்னல் ஒல்கொட் மற்றும் பிலவத்ஸ்கி அம்மையாரும், பிரம்மஞான சபையை நிறுவினர். புத்த மதத்தின்பால் ஈர்ப்புக் கொண்டிருந்த இவர்கள் 1880 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த அவர்கள் தங்களைப் பௌத்தர்களாக அறிவித்துக் கொண்டனர். ஒல்கொட் அடிக்கடி இலங்கைக்கு வந்து பௌத்த கல்வி வளர்ச்சிக்குத் தொண்டாற்றினார். இவர் 300 பௌத்த பாடசாலைகள் வரை நிறுவினார். இவற்றுட் சில இன்றும் உள்ளன. இளைஞனாக இருந்த தர்மபால, ஒல்கொட்டின் பணிகளில் உதவி வந்தார். ஒல்கொட்டுக்கு உதவி வந்த தர்மபால, பெரும்பாலும் அவருக்கு ஒரு மொழி பெயர்ப்பாளராகச் செயல்பட்டார். பிளவத்ஸ்கி அம்மையாரோடும் நெருங்கியவராக இருந்த தர்மபாலவுக்கு, பாளி மொழியைக் கற்கும்படி அம்மையார் ஆலோசனை வழங்கினார். இக் காலத்திலேயே இவர் தனது பெயரை, தர்மத்தின் காவலன் எனப் பொருள்படும், தர்மபால என்று மாற்றிக்கொண்டார்.

1893 ஆம் ஆண்டில் சிக்காகோவில் நடைபெற்ற உலகச் சமயங்களின் பாராளுமன்றத்துக்கு, தேரவாத புத்த சமயத்தில் சார்பாளராக அழைக்கப்பட்டார். இவர் தனது முப்பதுகளின் தொடக்கத்திலேயே உலகம் அளவில் இயங்கும் ஒருவரானார். உலகம் முழுதும் பயணம் செய்து விரிவுரைகள் ஆற்றியதுடன், விகாரைகளையும் நிறுவினார். இத் தொண்டு அடுத்த 40 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது. அதே வேளை, இலங்கையில் பாடசாலைகளையும், மருத்துவ நிலையங்களையும் நிறுவியதுடன் இந்தியாவிலும் பௌத்த கோயில்களையும், விகாரைகளையும் நிறுவினார். இவற்றுள் முக்கியமானது, புத்தர் முதன் முதலாக உபதேசம் செய்ததாகக் கருதப்படும் சாரநாத் என்னும் இடத்தில் அவர் அமைத்த கோயில் ஆகும். சாரநாத்தில் 1933 ஆம் ஆண்டில் பிக்குவாக மாறிய தர்மபால அங்கேயே, அதே ஆண்டில், தனது 69 வயதில் காலமானார்.

**லுனுகலை,**
வதனி.

## சிறுவர் சித்திரங்கள்



**வீ. சுபாஸ்ராஜ்,**
*தரம் 10,*
*ம.மா/நா/கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,*
*கம்மடுவ, மாத்தளை.*



**ரஞ்சன் அரஞ்சிகா,**
*தரம் 11,*
*யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்,*
*சுமாரம்புலம் சுளிபுரம்.*



**எம்.எஸ். பாத்திமா ஹப்னா,**
*தரம் 03,*
*கமு/கமு/ அல் மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை,*
*நிந்தவூர்.*



**எம்.ஏ. தீமா மரியம்,**
*தரம் 04, கே/தெஹி நாபாவல மு.ம.வி.,*
*நாபாவல.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 289

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | | 11 | 12 | | 13 |
| 14 | 15 | | 16 | 17 | |
| | 18 | | | 19 | |
| 20 | 21 | 22 | 23 | 24 | |

பெயர் ..........................................................
வகுப்பு ..........................................................
பாடசாலை பெயர் ..........................................................
பாடசாலை முகவரி ..........................................................
..........................................................

.............................. ..........................................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் / பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

*1. விருந்து வழங்கி மரங்களின் மீது வளர்கின்ற குறையொட்டுண்ணித் தாவரம்.*
*8. நீர்வழிப் போக்குவரத்துக்கு உதவுகின்ற சாதனம்.*
*11. இது உறுதியாக இருந்ததாலேயே குளத்தில் நீரை தேக்கி வைக்க முடியும்.*
*14. மிகச் சிறிய உருவமுள்ள பறவை. எமது நாட்டில் இப்பறவை இல்லை. நியூஸிலாந்து நாட்டின் தேசியப் பறவை இது. (தலைகீழான சொல்)*
*16. நாம் பயணம் செய்கின்ற போக்குவரத்து மார்க்கம்.*
*20. உலகம் என்ற பொருள் தரும் சொல்.*

**மேலிருந்து கீழ்**

*1. எண்ணெய் விட்டு, திரியில் தீயை வைத்தால் வெளிச்சம் தருவது. (தலைகீழான சொல்)*
*3. மரங்கள் செறிந்த பிரதேசம். பிராணிகள் பலவற்றின் வாழ்விடம். (தலைகீழான சொல்)*
*5. உழுந்து மா சேர்த்து தயாராகும் உணவுப் பண்டம். (தலைகீழான சொல்)*
*9. சுவரில் அடித்தால் படங்களை தொங்கவிடலாம். (தலைகீழான சொல்)*
*12. இனிய ஒலி எழுப்பும் நரம்பிசை வாத்தியக் கருவி. (தலைகீழான சொல்)*
*15. பணத்தை பாதுகாப்பாக வைப்பிலிடக் கூடிய இடம். (தலைகீழான சொல்)*
*17. நாள் என்றும் இச்சொல்லைக் குறிப்பிடலாம்.*

**குறுக்கெழுத்துப் போட்டி**
**இல. 289 சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834. கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 288

### விடைகள்

**இடமிருந்து வலம்**

*01. நீதிமன்றம் 06. தாரா 12. வானவில் 16. ஓடம் 19. மலர் 22. வாழை 25. பிள்ளை*

**மேலிருந்து கீழ்**

*01. நீராவி 02. தாதி 04. ஓவியன் 06. வாரம் 12. மடல் 16. பாலம் 22. வாள் 23. பிழை*

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 287 பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
சி. பவதாரணி,
தரம் 08C, ஊவா விஞ்ஞான கல்லூரி,
ஹாலி எல.

**இரண்டாம் பரிசு**
எம்.ஜே.எப். ஸவ்தா,
தரம் 08, மாறை/அஸ்ஸபா மு.வி.,
மதுராபுர தெனிபிடிய,
வெலிகம.

**மூன்றாம் பரிசு**
ஜே.எப். சஹானி,
தரம் 07D, ஜீலான் மத்திய கல்லூரி,
ஹேனமுல்லை,
பாணந்துறை.

## பாராட்டு பெறுவோர்

**1. மோ. லக் ஷிகா,**
*தரம் 12,*
*மே/மா/மது/கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம்,*
*மத்துகம.*

**2. எம்.எப். பஸ்ஹான் முஹம்மத்,**
*தரம் 11G, சாஹிரா தேசியக்கல்லூரி,*
*மன்னார் வீதி,*
*புத்தளம்.*

**3. வீ. கோணேஸ்வரன்,**
*தரம் 05, தி/க/பே/ பரஸேவராக் கல்லூரி,*
*சிவன் வீதி, கந்தளாய்.*

**4. எம்.சி.எப். சீமா,**
*தரம் 05, மா/ அல்மினா ஆரம்பப் பாடசாலை,*
*எல்கடுவ வீதி, உக்குவலை.*

**5. கு. துவாரகன்,**
*தரம் 03, கார்மேல் பற்றிமா கல்லூரி,*
*கல்முனை.*





மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மாத்தளை சுபிட்சம் இந்து சமூக ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயத்திற்கு புலமைப் பரிசில் மாணவர்களுக்கு இலவச கற்றல் கையேடுகள் பிரதி அதிபர் ராஜ்மோகன் தலைமையில் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

மாணவர் கழக அங்கத்துவ
இல : 420



எம். ருஸ்வின்,
தரம் 06,
கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ, மாத்தளை.

மாணவர் கழக அங்கத்துவ
இல : 421



T. முகம்மத் வலீத்
தரம் 03,
கமு/சது அல். ஹம்றா வித்தியாலயம்,
செந்நெல் கிராமம்,சம்மாந்துறை.

## மாணவர் கழக அனுமதி

**வர்ணப் புகைப்படம்**

மாணவர் பெயர் ..........................................
பிறந்த திகதி ..........................................
வகுப்பு ..........................................
பாடசாலை ..........................................
..........................................

..........................................
வகுப்பாசிரியர் கையொப்பம்

**மாணவர் கழகம்**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834 கொழும்பு.**

# மஞ்சரி விளையாட்டு



தெரிவுக்குழுவில் பங்குபற்றியோர் துமிந்த குரே (தலைவர், இலங்கை கிரிக்கெற் நடுவர்கள் சங்கம்), ஜுட் சில்வா (மொபிற்றெல்), திலக் வத்துஹேவா (அதிபர், கொழும்பு நாலந்தா கல்லூரி, தலைவர் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெற் சங்கம்), டபிள்யூ. தயாரட்ன (தலைவர், லேக்ஹவுஸ் நிறுவனம்), அசந்தா டி மெல் (தலைவர் தேசிய கிரிக்கெற் தெரிவுக்குழுத் தலைவர்), ஜே. ஏ. கே. எஸ். இந்திரஜித் (செயலாளர், இலங்கை பாடசாலைகள் கிரிக்கெற் சங்கம்), உப்புல் வேவகே (செயலாளர், இலங்கை கிரிக்கெற் நடுவர்கள் சங்கம்)
**பின்வரிசை:** திருமதி சம்பிக்கா வீரதுங்க (எஸ்எல்எஸ் சீஏ மகளிர் அணிச் செயலாளர்), வை.நிசாந்தகுமார (19வயதுக்குக் கீழ்ப்பட்டோருக்கான எஸ்எல்எஸ் சீஏ விளையாட்டுக்குழுவின் தலைவர்), விராஜ் சாமிந்த டி சில்வா (எஸ்எல்எஸ் சீஏ தொழில்நுட்ப உத்தியோகத்தர்), அம ரஜீவ திசாநாயக்க (மத்திய மாகாண கிரிக்கெற் நடுவர்கள் சங்கத்தின் செயலாளர்), ஏ. எம். சீ. வி. குமார (தென் மாகாண கிரிக்கெற் நடுவர்கள் சங்கத்தின் தலைவர்), தேசப்பிரிய திசாநாயக்க (ஏசியூஎஸ்எல் நிர்ணயக்குழுவின் தலைவர்), குமார் கம்ஹேவா (பட்ஸ்மன்.கொம் பொது முகாமையாளர்), வந்த ஆரியவிக்கிரம (ஏசியூஎஸ்எல் பொருளாளர்), சமன் ஹெட்டியாராச்சி (முன்னாள் பாடசாலைகள் எஸ்எல்எஸ் சீஏ தெரிவுக்குழுவின் தலைவர்), மஞ்சுள வாஸ் (எஸ்எல்எஸ் சீஏ பொருளாளர்)

## உலகின் தலைசிறந்த ஒருநாள் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரரை தேர்வு செய்த ஸ்மித்



சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ஸ்டீவ் ஸ்மித், ஒருநாள் கிரிக்கெட்டில் விராட் கோலிதான் உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர் எனத் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் போட்டியில் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் இருந்து வருகிறார். அதேபோல் இந்திய அணி தலைவர் விராட் கோலி, இங்கிலாந்து அணியின் ஜோ ரூட், நியூசிலாந்து அணியின் கேன் வில்லியம்சன் ஆகியோரும் இந்த தலைமுறையின் சிறந்த வீரராக கருதப்படுகிறார்கள்.

இவர்களில் இந்திய அணி தலைவர் விராட் கோலிக்கும், அவுஸ்திரேலியா துடுப்பாட்ட வீரர் ஸ்டீவ் ஸ்மித்திற்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. இந்நிலையில் இந்திய அணியின் தலைவர் விராட் கோலிதான் தற்போதைய நிலையில் உலகின் தலைசிறந்த ஒருநாள் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர் என்று ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் துடுப்பாட்ட வீரர்களான கேஎல் ராகுல், சஞ்சு சாம்சன் ஆகியோரை பாராட்டியுள்ளார். விராட் கோலி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 11,867 ஓட்டங்கள் அடித்துள்ளார். அதில் 43 சதங்கள் அடங்கும். சச்சின் சாதனையை தொட இன்னும் ஏழு சதங்களே தேவையுள்ளது. ஏபி டிவில்லியர்ஸ் பற்றி ஒரு வார்த்தையில் கூற வேண்டுமென்றால், அவர் வித்தியாசமானவர்'' என்றார்.

## கொரோனா பாதிப்பால் கால்பந்து உலகில் ரூபா 1 இலட்சம் கோடி இழப்பு – பிபா



கொரோனா பாதிப்பால் உலகம் முழுவதும் கழகம் மற்றும் சர்வதேச கால்பந்து போட்டிகளின் மூலம் கிடைக்கும் வருவாயில் கிட்டத்தட்ட ரூ.1 இலட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டு உள்ளது.

உலகம் முழுவதும் பரவிய கொரோனா வைரசின் கோர தாண்டவத்தால் ஏறக்குறைய 6 மாதங்கள் கிளப் மற்றும் சர்வதேச கால்பந்து போட்டிகள் சீர்குலைந்து போயின. படிப்படியாக கால்பந்து போட்டிகள் தொடங்கப்பட்டாலும் இரசிகர்கள் இன்றியே நடத்தப்படுகிறது.

இந்த நிலையில் கொரோனா பாதிப்பால் உலகம் முழுவதும் கிளப் மற்றும் சர்வதேச கால்பந்து போட்டிகளின் மூலம் கிடைக்கும் வருவாயில் கிட்டத்தட்ட ரூ.1 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டு உள்ளது. இந்த இழப்பு சர்வதேச கால்பந்து அமைப்பில் உறுப்பினராக உள்ள 211 நாடுகளுக்கு உட்பட்டது. பொதுவாக கழகப் போட்டிகளின் மூலம் ஆண்டுக்கு ரூ.3 இலட்சம் கோடி வருவாய் புரளும். கொரோனா தாக்கத்தால் ஐரோப்பிய கழகங்கள் தான் பெரும் இழப்பை சந்தித்து இருக்கின்றன.

மேற்கண்ட தகவலை சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (பிபா) கொரோனா நிவாரண திட்டத்திற்கான கமிட்டியின் சேர்மன் ஆலி ரென் தெரிவித்தார்.

## ரியல் மாட்ரிட் அணியிலிருந்து வெளியேறுகிறார் காரேத் பேலே

ரியல் மாட்ரிட் அணிக்கு முக்கியமான கட்டத்தில் வெற்றியைத் தேடிக்கொடுத்த காரேத் பேலே டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணிக்கு செல்கிறார். கால்பந்து போட்டியில் முக்கிய வீரர்களில் ஒருவராக வேல்ஸ் நாட்டின் காரேத் பேலேவையும் கருதலாம். இவர் கடந்த ஏழு ஆண்டுகளாக ஸ்பெயின் நாட்டின் லா லிகா புகழ் ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடி வந்தார்.

ரியல் மாட்ரிட் அணியின் முக்கிய எதிரி அணியான பார்சிலோனாவுக்கு எதிராக 251 போட்டிகளில் விளையாடி 105 கோல்கள் அடித்துள்ளார். 68 கோல்கள் அடிக்க துணை புரிந்துள்ளார். இவருடைய துணையுடன் 13 கோப்பைகளை ரியல்மாட்ரிட் அணி வென்றுள்ளது. இதில் நான்கு சாம்பியன்ஸ் லீக், இரண்டு லா லிகா, ஒரு கோபா டெல் ரே ஆகியவை அடங்கும்.

காரேத் பேலே கடந்த சில மாதங்களுக்கு மேலான அடிக்கடி காயத்தால் அவதிப்பட்டு வந்தார். இதனால் பெரும்பாலான போட்டிகளில் விளையாடாமல் இருந்தார். ஆனால் களத்தில் இறங்கும் போட்டிகளில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணிக்க வெற்றியை தேடிக்கொடுத்துள்ளார்.

இந்நிலையில் ரியல் மாட்ரிட் அணியில் இருந்து டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணிக்கு செல்ல இருக்கிறார். அவருக்கு வருடத்திற்கு 35.59 மில்லியன் டொலர் சம்பளம் வழங்கப்பட இருப்பதாக தகவல் தெரிவிக்கின்றன.



## ஆரவாரமில்லாமல் ஆரம்பமானது ஐ.பி.எல்.!




மார்ச் மாத இறுதியில் ஆரம்பமாகவிருந்த இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் 13வது அத்தியாயம் கொரோனா முடக்கத்தின் காரணமாக பிற்போடப்பட்டு, பல இழுபறிகளுக்கு மத்தியில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நேற்று இரவு அபதாபி நகர மைதானத்தில் மும்மை இந்தியன்ஸ் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியுடன் ஆரம்பமானது.

இம்முறை ஆரம்ப வைபவத்தில் கடந்த ஐ. பி. எல். அத்தியாயங்களைப் போல் சினிமா நட்சத்திரங்களின் நடன நிகழ்ச்சிகளும், இசை நிகழ்ச்சிகள் களியாட்டங்கள் போன்ற கோலாகலங்கள் இல்லாமல் நடைபெற்றன.

13வது ஐ.பி.எல். தொடர் ஐக்கிய அரபு இராச்சிய நகரங்களான டுபாய், அபுதாபி, ஷர்ஜா நகரங்களில் 53 நாட்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. வழமை போல் மொத்தம் எட்டு அணிகள் மோதவுள்ள இத்தொடரில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் இரு போட்டிகளில் மோத வேண்டும். அவ்வடிப்படையில் ஒரு அணி 14 போட்டிகளில் மோதவுள்ளது. அவ்வணிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் அடிப்படையில் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகள் பிளே ஒப் சுற்றுக்குத் தெரிவாகும். பிளே ஒப் சுற்று முதல் ஆட்டத்தில் புள்ளிப்பட்டியலில் முதலிரு இடங்களைப் பெறும் அணிகள் மோதும். அதில் வெற்றி பெறும் அணி நேரடியாக இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும். புள்ளிப்பட்டியலில் 3ம், 4ம் இடங்களைப் பெறும் அணி 2வது பிளே ஒப் சுற்று ஆட்டத்தில் மோதி அதில் தோல்வியுறும் அணி தொடரிலிருந்து வெளியேற, வெற்றி பெற்ற அணி முதல் பிளே ஒப் சுற்றில் தோல்வியுற்ற அணியுடன் இரண்டாவது அரையிறுப் போட்டியில் மோதும். அதில் வெற்றிபெறும் அணி முதல் பிளே ஒப் சுற்றில் வெற்றிபெற்ற அணியுடன் நவம்பர் 10ம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் மோதவுள்ளது.

இப்போட்டிகள் யாவும் ஸ்போர்ட் ஸ்டார் தொலைக்காட்சி அலைவரிசைகளில் நேரடியாக ஒளிபரப்பப்படவுள்ளதோடு இலங்கை நேரப்படி பகலிரவுப் போட்டிகள் மாலை 3.30 மணிக்கும், இரவுப் போட்டிகள் 7.30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளன. ஐ.பி.எல். வரலாற்றிலே அதிக நாட்கள் நடைபெறும் இத்தொடர் மூன்று பிரதான நகரங்களான டுபாயில் 24 போட்டிகள், அபுதாபியில் 20 போட்டிகள், ஷார்ஜாவில் 10 போட்டிகள் என முதற் சுற்று ஆட்டங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

இம்முறை இத்தொடர் பல கட்டுப்பாடுகளுடன் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. போட்டி அட்டவணை கூட இறுதி நேரத்திலேயே வெளியிடப்பட்டுள்ளது. அந்தளவுக்கு இத்தொடரில் கொரோனா தொற்றின் தாக்கம் ஆதிக்கம் செலுத்தியிருந்தது.

உயர் பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்பட்டு ஐ.பி.எல். தொடரில் பங்கேங்கும் வீரர்கள், பணியாற்றவுள்ள ஊழியர்கள், அவர்கள் தங்கும் ஹோட்டல் ஊழியர்கள் முதல் பஸ் சாரதி வரை அனைவரும் அவ்வலயத்தை விட்டு சுமார் இரண்டரை மாதங்கள் வெளியே செல்லக் கூடாது என்னும் கடும் கட்டுப்பாடு, மேலும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு வருவதற்கு முன் ஒரு வாரத்தில் ஒவ்வொரு வீரர்களுக்கும் இரண்டு முறை கொரோனா வைரஸ் பரிசோதனை, அங்கு சென்று தனிமைப்படுத்தப்பட்ட 1ம், 3ம், 5ம் நாட்களில் பி. சி. ஆர். பரிசோதனை என்று இதுவரை 4000க்கும் அதிகமான பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. போட்டித் தொடர் நடைபெறும் காலப்பகுதியில் இன்னும் 16 ஆயிரம் இவ்வைகப் பரிசோதனைகள் செய்யப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சோதனைகள், கடும் கட்டுப்பாட்டுகள் என்ற நிலையிலும் கூட சில அணி நிர்வாகிகள், மருத்துவர்கள், வீரர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாகக் கடந்த இரு வாரங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டிருந்ததையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சிக்கல்களுக்கு மத்தியில் இந்திய கிரிக்கெட் சபை ஐ. சி. சி. யின் உயர் மட்ட வெளிநாட்டு நடுவர்களை இத்தொடரில் பயன்படுத்தத் திட்டமிட்டிருந்தாலும் முக்கிய மூன்று வெளிநாட்டு நடுவர்கள் இத்தொடரிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகியுள்ளனர். கடந்த ஐ.பி.எல். இறுதிப் போட்டி உட்பட பல தொடர்களில் நடுவராகக் கடமையாற்றிய இலங்கையின் குமார் தர்மசேனவும் தனிப்பட்ட காரணங்களுக்காக விலகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

எம்.எஸ்.எம்.ஹில்மி

### போட்டி அட்டவணை

| திகதி | அணிகள் | நகரம் | நேரம் |
|---|---|---|---|
| 19 | மும்பை – சென்னை | அபுதாபி | இரவு 7.30 |
| 20 | டெல்லி – பஞ்சாப் | டுபாய் | இரவு 7.30 |
| 21 | ஹைதராபாத் – பெங்களூர் | டுபாய் | இரவு 7.30 |
| 22 | ராஜஸ்தான் – சென்னை | சார்ஜா | இரவு 7.30 |
| 23 | கொல்கொத்தா – மும்பை | அபுதாபி | இரவு 7.30 |
| 24 | பெங்களூர் – பஞ்சாப் | டுபாய் | இரவு 7.30 |
| 25 | டெல்லி – சென்னை | டுபாய் | இரவு 7.30 |
| 26 | ஹைதராபாத் – கொல்கொத்தா | அபுதாபி | இரவு 7.30 |
| 27 | பஞ்சாப் – ராஜஸ்தான் | சார்ஜா | இரவு 7.30 |
| 28 | மும்பை – பெங்களூர் | டுபாய் | இரவு 7.30 |
| 29 | ஹைதராபாத் – டெல்லி | அபுதாபி | இரவு 7.30 |
| 30 | கொல்கொத்தா – ராஜஸ்தான் | டுபாய் | இரவு 7.30 |
| | ஒக்டோபர் | | |
| 01 | மும்பை – பஞ்சாப் | அபுதாபி | இரவு 7.30 |
| 02 | ஹைதராபாத் – சென்னை | டுபாய் | இரவு 7.30 |
| 03 | ராஜஸ்தான் – பெங்களூர் | டுபாய் | மாலை 3.30 |
| 03 | கொல்கொத்தா – டெல்லி | சார்ஜா | இரவு 7.30 |
| 04 | ஹைதராபாத் – மும்பை | சார்ஜா | மாலை 3.30 |
| 04 | சென்னை – பஞ்சாப் | டுபாய் | இரவு 7.30 |
| 05 | பெங்களூர் – டெல்லி | டுபாய் | இரவு 7.30 |
| 06 | ராஜஸ்தான் – மும்பை | அபுதாபி | இரவு 7.30 |
| 07 | சென்னை – கொல்கொத்தா | அபுதாபி | இரவு 7.30 |
| 08 | பஞ்சாப் – ஹைதராபாத் | டுபாய் | இரவு 7.30 |
| 09 | டெல்லி – ராஜஸ்தான் | சார்ஜா | இரவு 7.30 |
| 10 | கொல்கொத்தா – பஞ்சாப் | அபுதாபி | மாலை 3.30 |
| 10 | பெங்ளூர் – சென்னை | டுபாய் | இரவு 7.30 |
| 11 | ராஸ்தான் – ஹைதராபாத் | டுபாய் | மாலை 3.30 |
| 11 | மும்பை – டெல்லி | அபுதாபி | இரவு 7.30 |
| 12 | கொல்கொத்தா – பெங்களூர் | சார்ஜா | இரவு 7.30 |
| 13 | சென்னை – ஹைதராபாத் | டுபாய் | இரவு 7.30 |
| 14 | ராஜஸ்தான் – டெல்லி | டுபாய் | இரவு 7.30 |
| 15 | பஞ்சாப் – பெங்களூர் | சார்ஜா | இரவு 7.30 |
| 16 | கொல்கொத்தா – மும்பை | அபுதாபி | இரவு 7.30 |
| 17 | ராஜஸ்தான் – பெங்களூர் | டுபாய் | மாலை 3.30 |
| 17 | சென்னை – டெல்லி | சார்ஜா | இரவு 7.30 |
| 18 | கொல்கொத்தா – ஹைதராபாத் | அபுதாபி | மாலை 3.30 |
| 18 | பஞ்சாப் – மும்பை | டுபாய் | இரவு 7.30 |
| 19 | ராஜஸ்தான் – சென்னை | அபுதாபி | இரவு 7.30 |
| 20 | டெல்லி – பஞ்சாப் | டுபாய் | இரவு 7.30 |
| 21 | பெங்களூர் – கொல்கொத்தா | அபுதாபி | இரவு 7.30 |
| 22 | ராஜஸ்தான் – ஹைதராபாத் | டுபாய் | இரவு 7.30 |
| 23 | சென்னை – மும்பை | சார்ஜா | இரவு 7.30 |
| 24 | டெல்லி – கொல்கொத்தா | அபுதாபி | மாலை 3.30 |
| 24 | ஹைதராபாத் – பஞ்சாப் | டுபாய் | இரவு 7.30 |
| 25 | பெங்களூர் – சென்னை | டுபாய் | மாலை 3.30 |
| 25 | ராஜஸ்தான் – மும்பை | அபுதாபி | இரவு 7.30 |
| 26 | கொல்கொத்தா – பஞ்சாப் | சார்ஜா | இரவு 7.30 |
| 27 | ஹைதராபாத் – டெல்லி | டுபாய் | இரவு 7.30 |
| 28 | மும்மை – பெங்களூர் | அபுதாபி | இரவு 7.30 |
| 29 | சென்னை – கொல்கொத்தா | டுபாய் | இரவு 7.30 |
| 30 | பஞ்சாப் – ராஜஸ்தான் | அபுதாபி | இரவு 7.30 |
| 31 | மும்பை – டெல்லி | டுபாய் | மாலை 3.30 |
| 31 | ஹைதராபாத் – பெங்களூர் | சார்ஜா | இரவு 7.30 |
| | நவம்பர் | | |
| 01 | சென்னை – பஞ்சாப் | அபுதாபி | மாலை 3.30 |
| 01 | ராஜஸ்தான் – கொல்கொத்தா | டுபாய் | இரவு 7.30 |
| 02 | டெல்லி – பெங்களூர் | அபுதாபி | இரவு 7.30 |
| 03 | மும்பை – ஹைதராபாத் | சார்ஜா | இரவு 7.30 |

அதேவேளை இம்முறை நடைபெறவுள்ள தொடரில் பிரபல வீரர்கள் பலர் தனிப்பட்ட காரணங்களால் (கொரோனா தொற்று அச்சமோ தெரியவில்லை) இத்தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர். இதன் காரணமாக தொடரில் ஒரு சில அணிகளின் வெற்றியிலும் பாதிப்பை ஏற்படுத்துமென விமர்சகர்கள் கருதுகின்றனர்.

ஐ.பி.எல். ஆரம்பம் முதல் தனது திறமையினால் அணியை முன்னிலைப்படுத்திய மும்மை இந்தியன் அணியின் முக்கிய வேகப்பந்து வீச்சாளராக லசித் மலிங்க திகழ்கிறார். நடந்து முடிந்த 12 ஐ. பி. எல். தொடர்களிலும் 122 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 170 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள அனுபவ வீரர். இவர் போட்டியின் இறுதி ஓவர்களை யோர்க்கர் முறையில் பந்துகளை வீசி எதிரணி வீரர்களை திக்குமுக்காட வைத்து ஓட்ட வீதத்தைக் குறைக்கக் கூடியவர். மும்பை இந்தியன்ஸ் அணியின் பல வெற்றிகளுக்கு முக்கிய பங்காற்றியவர்.

கடந்த ஐ.பி.எல். தொடரின் இறுதிப் போட்டியில் கடைசி ஓவரின் கடைசிப் பந்தில் மும்மை இந்தியன்ஸ் அணிக்கு இல்லாத வெற்றியைப் பெற்றுக்கொடுத்தவர். இம்முறை தனிப்பட்ட காரணத்தால் இத்தொடரிலிருந்து விலகியுள்ளார். இவருக்குப் பதிலாக அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பெட்டின்சன் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

மிச்சேல் மெக்லஹேன், ஜஸ்பிரிட் பும்ரா, ட்ரென்ட் போல்ட், ஹர்திக் பாண்டியா என சிறந்த வேகப்பந்து வீச்சாளர் அவ்வணியில் இடம்பெற்றாலும் லசித் மலிங்க விளையாடாதது அவ்வணிக்கு சற்றுப் பின்னடைவே.

தலைவர் மஹேந்திர சிங் டோனிக்கு அடுத்தபடியாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் துடுப்பாட்ட வரிசையை வலுப்படுத்தக்கூடியவர் சுரேஷ் ரெய்னா. தேவையான நேரங்களில் அணியின் ஓட்ட வேகத்தை அதிகரிக்கக் கூடிய அவர் ஐ. பி. எல். வரலாற்றில் கூடிய போட்டிகளில் விளையாடியவருமாவார்.

கடந்த மாதம் சர்வதேச கிரிக்கெட் உலகுக்கு விடைகொடுத்த அவர் இம்முறை ஐ.பி.எல். தொடரிலிருந்தும் விலகியுள்ளார். இவரின் இடத்துக்கு அதிரடி வீரர் ருட்டுராஜ் காய்க்வாத் தேர்வாகியுளளார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் துடுப்பாட்ட வரிசையைப் பலப்படுத்த அம்பதி ராய்டு, ஷேன் வொட்சன், பப் டு பிளஸி தலைவர் டோனி ஆகியோர் இருந்தாலும், ரெய்னாவின் துடுப்பாட்ட திறமையுடன் அவரின் களத்தடுப்பும் பல சந்தர்ப்பங்களில் சென்னை அணிக்கு கைகொடுத்துள்ளது. எனவே அவரது விலகல் சென்னை அணிக்கு பெரும் இழப்பாகும்.

இந்தியா அணியை மிக நீண்ட காலமாகப் பிரதிநிதித்துவப்படுத்திய 40 வயதான ஹர்பஜன் சிங் இந்திய பிரிமியர் லீக் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். ஐ.பி.எல். தொடர்களில் சிறப்பாகப் பந்து வீசும் அவர் இதுவரை 160 போட்டிகளில் விளையாடியுள்ளார். இம்முறை தனிப்பட்ட காரணங்களுக்காக தொடரிலிருந்து விலகியுள்ளார். இதுவரை தொடரில் ஓட்டங்கள் கொடுக்காத அதிக பந்துகளை வீசியுள்ள ஹர்பஜன் சிங், 12 தொடர்களில் 160 போட்டிகளில் விளையாடியுள்ளதுடன் எதிரணி வீரர்களுக்கு ஓட்டங்கள் கொடுக்காத 1299 பந்துகளை வீசியுள்ளார். இவர் சில போட்டிகளில் துடுப்பாட்டத்திலும் கடைநிலை ஆட்டக்காரராக வந்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு கைகொடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரரான கிறிஸ் வோக்ஸ் ஐ.பி.எல். தொடரில் டில்லி கெபிட்டல் அணிக்கு ஆடிவருகிறார். இவரும் இம்முறை தனிப்பட்ட காரணங்களுக்காக விலகியுள்ளார். இவரின் இடத்திற்கு தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் அன்ட்ரிஜ் நோஜ்ஜை நியமித்திருந்தாலும், துடுப்பாட்டத்திலும் திறமை காட்டக்கூடிய கிறிஸ் வோக்ஸ் இல்லாதது டெல்லி அணிக்கு பின்னடைவே.

மேலும் இங்கிலாந்து அணியின் சகல துறை வீரர் பென் ஸ்டொக்ஸ், அதிரடி வீரர் ஜேசன் ரோய், அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் கேன் ரிச்சட்சன், பங்களாதேஷ் வீரர் முஸ்டாபிசூர் ரஹ்மான் போன்ற கடந்த ஐ.பி.எல். தொடர்களில் கலக்கிய வீரர்கள் இம்முறை பல்வேறு காரணங்களினால் விலகியுள்ளமை அவ்வணிகளுக்கு பின்னடைவே.

எம்.ஐ.எம். சாஹில்...

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




# இலங்கையில் தமிழ் சினிமா பின்தங்கியமைக்கு ஆடிக் கலவரமும் ஒரு காரணம்

இலங்கையில் சினிமாத் தொழில் பின் தங்கியமைக்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. 1983ஆம் ஆண்டு நடைபெற்ற ஜூலைக் கலவரமும் முக்கிய காரணம் என்றும் சொல்லலாம். இத் தீயில் ஆரம்பகால அருமை பெருமையான சிங்களப்படங்கள் கூட அழிந்து போயின. அதே போல் அந்தக் காலத்தில் தயாரித்து முடிக்கப்பட்டு திரைக்கு வரத்தயாராக இருந்த தமிழ்த் திரைப்படங்கள் சிலவும் தீக்கு இரையாகின.

பிரபல சிங்களத் திரைப்பட இயக்குனர் லெனின் மொறாயஸ் இயக்கிய 'நெஞ்சுக்குத் தெரியும்' என்ற தமிழ்ப் படமும் தீக்கிரையாகியது. அதே போல் கணேசானந்தன் தயாரித்த 'எனக்கென்று ஒரு உலகம்' என்றபடமும் தீக்கிரையாகியது.

டொக்டர் இந்திரகுமார் தயாரித்த 'அந்த நாள்' என்ற படமும் தொடர்ந்து வளராமல் இடையில் நின்று போனது.

இலங்கையின் இசை அமைப்பாளர்களில் 'டென்மார்க் சண்' ஒரு பொப் பாடகர். பல பொப் பாடல்களை பாடி இறுவெட்டுகளை தயாரித்தவர்.

சண், பல நண்பர்களுடன் சேர்ந்து தயாரித்த படம் 'இளையநிலா'. தென்னிந்திய நடிகர் தியாகராஜன் (நடிகர் பிரசாந்தின் தந்தை) இலங்கை நடிகர் காமினி பொன்சேகா ஆகியோர் இப்படத்தில் பிரதான பாத்திரங்களில் நடித்திருந்தனர்.

எஸ்.பி. பாலசுப்பிரமணியம், எஸ்.பி. சைலஜா போன்ற புகழ் பெற்ற பின்னணிப் பாடகர்களை இலங்கைக்கு அழைத்து பாடவைத்து ஒலிப்பதிவு செய்தார்.

பிரமாண்டமான முறையில் தயாரிக்கப்பட்ட இப்படம், திரைக்கு வரத் தயாராக இருந்தது.

அப்பொழுது 1983 ஜுலைக் கலவரம் ஆரம்பித்துவிட்டது. ஆனாலும் தீக்கு இரையாகாமல் தப்பி விட்டது. தயாரிப்பாளர்கள் திசைக்கு ஒருவராக சென்றபடியால் இப்படம் திரைக்கு வரமுடியாமல் போய்விட்டது. கடைசி நேரத்தில் இப்படம் றொபின் தம்புவிடம் வந்து சேர்ந்தது. அவராலும் இத்திரைப்படத்தை திரைக்குக் கொண்டுவர முடியவில்லை.

'நெஞ்சுக்கு தெரியும்' 'எனக்கென்று ஒரு உலகம்', 'அந்த நாள்', 'இளையநிலா' போன்ற அந்தத் தமிழ்ப் படங்கள் 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் காரணமாக திரைக்கு வராமலே போய்விட்டன.

1983ஆம் ஆண்டுக்குப் பின்பு தயாரிக்கப்பட்டு திரைக்கு வரத் தயாராகயிருந்த படம் 'சூர்யா'.

இலங்கையில் பிறந்து இந்தியாவில் படித்து சுவிசர்லாந்தில் வாழ்ந்த டொக்டர் நிரஞ்சன் இப்படத்தை தயாரித்தார். இப்படத்தை சிங்களத்திலும் தமிழிலும் உருவாக்க வேண்டும் என்பதுதான் அவரது எண்ணம்.

அதன் சிங்களப்பிரதியை தயாரித்து முடித்து தணிக்கை சபையின் அனுமதி பெற்று பத்திரிகையாளர்களுக்கும் போட்டுக் காண்பித்து விட்டார். டொக்டர் நிரஞ்சனின் திடீர் மரணத்தால் அந்தப்படம் திரைக்கு வராமலே போய் விட்டது. எனவே 'நெஞ்சுக்குத் தெரியும்' எனக்கேன்று ஒரு உலகம்" 'இளையநிலா' 'காதல் கடிதம்' 'சூர்யா' ஆகிய படங்கள் திரைக்கு வராமலேயே போய் விட்டன.

இவற்றை 'மலர்ந்தும் மலராதவை' என்று வகைப்படுத்தலாம். இவற்றிலே 'நெஞ்சுக்குத் தெரியும்' என்ற படம் பற்றி ஒரு கதை உண்டு. அது கட்டுக்கதையோ கட்டாத கதையோ எனக்குத் தெரியவில்லை.

1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தின் போது ஹெந்தலையில் உள்ள விஜயா ஸ்டூடியோ தீப்பிடித்து எரிந்தது. அப்பொழுது யாரோ ஒரு சிங்கள நடிகர் வந்து சிலபடங்களை எடுத்துச் சென்றதாகவும் அதற்குள் இந்த 'நெஞ்சுக்கு தெரியும்' என்ற படம் இருந்ததாகவும் ஒரு கதை உண்டு.

**தம்பிஐயா தேவதாஸ்** ✍





'நெஞ்சுக்குத் தெரியும்' பட இயக்குநர் லெனின் மொறாயஸ்


'நெஞ்சுக்குத் தெரியும்' நல்லூர் மனோகரன், ஹெலன் குமாரி

## வாழ்வாதாரமா சேதாரமா 146




# குளங்களை மூடுங்கள், வீடுகளை கட்டுங்கள்!

பண்டைய மன்னர் காலத்தில் மக்களது தேவைக்காகவும் மழைநீரை சேமிக்கவும் குளங்கள் கட்டப்பட்டன. இவை காத்திரமான அணைக்கட்டுகளை கொண்டமைந்தன. மன்னன் தாதுசேனனின் மகனான காசியப்பன் தந்தை தனது சொத்துகளையெல்லாம் எங்கோ பதுக்கி வைத்திருப்பதாக சந்தேகித்தான். அவன் தனது தந்தையை சிறையிலிட்டு ஆட்சியை கைப்பற்றியதும் அவரது சொத்துகளை கேட்டு தொந்தரவு செய்தான். அவனை தன சொத்துகள் இருக்குமிடத்தை காட்டுவதாக கூறி அவர் அழைத்துச் சென்றார். அநுராதபுரத்திலிருக்கும் கலாவேவ என்ற நீர்த்தேக்கத்தை கொண்டு சென்று காட்டினான்.

எனது சொத்து முழுதும் இதுதான் என அவன் கூறினான். ஆம் அன்றைய மன்னர்கள் பெரும் சொத்துகளாக மக்களுக்கு சேகரித்து வைத்ததெல்லாம் குளங்கள்தான். இந்தக்குளங்களின் பின்னர் பின்வந்த அரசுகளும் குளங்களை நிர்மாணித்திருக்கின்றன. ஆனால் சிறியது முதல், பெரியதுவரை மன்னர்கால குளங்கள் அனைத்தும், ஒரு கட்டுக்கோப்பான அமைப்பை கொண்டிருக்கின்றன. குளங்களை அடுத்து ஏணி சாற்றி வைத்துவிட்டது போல நில அமைப்பு இருக்கும். அவை வயல் நிலங்களாகும். குளம் நிறைந்து வரும் காலங்களில் மிகையான நீர் வடியும் பக்கத்தை வான் என்று குறிப்பிடுவர். இந்த வான் எல்லாக்குளங்களிலும் பெரும் பாறைகளை இயற்கையாக கொண்டமைந்திருக்கும். எவ்வளவுதான் நீர் ஊடறுத்து பாய்ந்தாலும் கரையாத வகையில் பாறைகள் தொடராக அமைந்திருக்கும். பெரும் மாரிகாலத்தில் வான் பாயும் போது இந்த பாறைகளில் முட்டி மோதி நீர் பாயும் அழகை ரசிக்க ஏராளமான மக்கள் கூடுவார்கள்.

இந்தக்குளங்களின் நீர் அழகுமட்டுமல்ல அந்த கிராமத்தின் வளங்களுமாகும். நேரடியாக நீர் பாய்ந்து விளையும் வயல்கள். நிலத்தடியாக நீர் உறிஞ்சப்பட்டு கிணறுகளை நிறைக்கும். குளங்கள் நிறைந்திருந்தால் கிணறுகளும் நிறைவாக இருக்கும். அந்த கிராம மக்களுக்கு தேவையான மீன் குளத்தில் இருக்கும். குளிப்பதற்கும் ஆடைகளை அலசவும் இந்த குளத்துக்கே மக்கள் போவார்கள் இவர்களுக்கென குளத்தில் இறங்கும் படித்துறை அமைக்கப்பட்டிருக்கும். அவ்வூர்வாசிகளின் கால்நடைகள் குளத்தின் எல்லைகளில் மேயும். அவற்றுக்கான குடிநீரும் அந்தக்குளமே கொடுக்கும்.

குளக்கட்டுகளை கிராமவாசிகளான குளப்பங்காளர்களே சுத்தமாக வைத்திருப்பர். மந்துகள் முளைக்காமலும், பின்கட்டின் மீது படரும் பெரும் குளிர் மரங்களும் பாதுகாக்கப்பட்டு, அங்கும் அசுத்தம் நேராமல் அவற்றின் கீழ் தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வர். ஒரு பிள்ளையார், ஒரு குருசுமரம், எல்லையில் ஒரு வைரவர். என எல்லாக்குளங்களும் அறுவடை முடிந்ததும் பொங்கல் வழிபாடுகளுக்குள்ளாகும். இன்னும் இருக்க, நாம் இன்றைய குளங்களின் நிலையை பார்ப்போம்.

ஊருக்கு ஊர் குளங்கள் இருக்கின்றன. வன்னியின் வளமே இந்தக் குளங்கள்தான் ஆனால் குளங்களின் அணைக்கட்டுகள் பெரும்பாலும் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. குளங்கள் அனைத்திலும் புதியவகை மீனினங்கள் போடப்பட்டன. பழைய நாட்டின மீனினங்கள் வரால் உட்பட அருகிவிட்டன. குளத்தில் வலை போடத் தக்கவர்கள் அதை ஏலத்தில் பேரம் பேசி பணம்கட்டி எடுத்தாக வேண்டும். அந்தக்கிராம மக்கள் தமது தூண்டிலை போட்டு மட்டுமே மீன் பிடிக்கலாம். அது எல்லோராலும் முடிவதில்லை. பிடிக்கும் மீன்கள் உள்ளூர் வியாபாரிகளுக்கு கிடைப்பதில்லை. பெரும்பாலும் பச்சையாகவும் கருவாடாகவும் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. குளப்பங்காளர்களும் முற்காலம் போல குளம் வற்றிய காலத்தில் கரப்புக்குத்தியோ வாரியோ மீன்பிடிப்பதில்லை.

குளத்தின் நீர் வரவர குறைந்து கொண்டே போகிறது. குளத்தின் ஆழமும் நீளமும் அகலமும் பெருமளவு குறைந்து வருகிறது. குறைந்து வருகிறது என்பதை விட, நகரப்பகுதியை அண்டியுள்ள குளங்கள் மட்டுமல்ல, புதிய காடுகளை அண்டியுள்ள குளங்களே களவு போய்க் கொண்டிருக்கின்றன. நாம் மீண்டும் மீண்டும் இதைப்பற்றி பேசவேண்டியே உள்ளது.

உணவுக்காக பத்து ரூபாய் திருடியவனை திருடன் என்று சொல்லும் நாம் பேருந்தில் பயணிக்கும்போது பத்து ரூபா தர மறுக்கும் நடத்துநரை எதுவும் செய்வதில்லை. அவன் நாளாந்தம் ஒரு பயணியிடம் இரண்டு ரூபா கொடுக்காமல் விட்டாலே. மாலையில் அவனுடைய சம்பளத்தைவிட பெரிய தொகை கையில் வரும். இது போலதான் களவு போகும் குளங்கள்.

பார்வையாளர்களுக்கு சின்னச்சின்ன வீடுகளை கட்டி யாரோ குடியிருக்க வந்ததாகத்தான் தெரியும். இந்த சின்னச்சின்ன வீடுகள் பல்கிப் பெருகி பெருமளவான குளத்து மண்ணை ஆக்கிரமித்து விட்டால், இப்போது தான் விளைவுகளைப் பார்க்கலாம்.

ஒருகாலத்தில்வவுனியாநகரத்துகழிவுநீரை வெளியேற்றும் வாய்க்கால்கள் வவுனியா நகரை அண்டியுள்ள குளத்தையடைந்து வெள்ளத்துடன் வெளியேறி வயலுக்கு உரமாகியது. இப்போது குளம் உயரமாகி கழிவுவாய்க்கால்கள் பள்ளமாகிவிட்டது காரணம், குளத்தைக் களவாடியவர்கள் தமது நிலங்களுக்கும் பாதைகளுக்கும் கொட்டிய மண் பெருமழை வரும்போது கரைந்தோடி குளத்தை நிரப்பிவிட்டது. அதாவது அதன் ஆழம் குறைந்து விட்டது. முற்காலத்தில் தூண்டில் போடுவோரைக்கூட அதற்கான புழு பிடிப்பதற்கு குளத்துக்குள் மண் கொத்த விடமாட்டார்கள். காரணம் கொத்தியமண் கரையும். கரைந்தமண் குளத்துக்குள் ஓடி, குளத்தை மிதத்தி விடும் என்பதால். அப்படியும் குளம் வரட்சியாகும் காலத்தில் சட்டி, பானை வனையும் தொழிலாளர்கள் வருடம் முழுதும் தமக்குத் தேவையான களிமண்ணை அள்ளி வீடுகளில் சேகரித்துக் கொள்வார்கள். அதைவிட விவசாயிகளும் குளப் பொருக்குகளை போட்டிபோட்டு அள்ளிச் சென்று வயலில் பரவிவிடுவார்கள். அது இயற்கைப் பசளையாகும். குளமும் ஆழமாகவே இருக்கும்.

இப்போது வவுனியா குளத்தில் கழிவகற்ற பல கோடி ரூபாக்கள் செலவில் கழிவுகளை தேக்கவும் அவற்றை குளத்துக்குள் செலுத்தவும், அரும்பாடு பாடுகிறது நகர சபை நிர்வாகம். ஆனால் குளம் வற்றும் காலத்திலாவது அதனை ஆழமாக்க ஏதாவது செய்கிறதா என்றால் இல்லை. எவராவது குளத்தில் மண்அள்ள அனுமதி கேட்டால் அதை கொடுப்பதில் ஆர்வம் காட்டாமல் தட்டிக்கழிக்கிறது. அப்படியில்லாமல் அனுமதி வழங்கினாலும் அது கரையோர மண் அள்ளத்தான்

இதுதான் கிராமத்தின் அனுபவசாலிகளுக்கும் பட்டதாரிகளுக்கும் உள்ள வித்தியாசம். வவுனியாகுளம் மட்டுமல்ல பண்டாரிகுளம் வைரவபுளியங்குளம் அட போங்கப்பா திருநாவற்குளம் முழுதுமாக களவு போய்விட்டது. மேலும் பல குளங்களை பட்டியலிட முடியும். கிளிநொச்சி நகரத்தில் அமைந்துள்ள குளமும் மோசமாக ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.

ஆரம்பத்தில் வீட்டைக் கட்ட மட்டும் இரண்டு பரப்பு நிலத்தை ஆக்கிரமித்தவர்கள் இப்போது அவற்றை விரிவாக்கி ஏக்கர் கணக்கில் ஆக்கிரமித்து வருகின்றனர். அவர்கள் ஏதோ கஷ்டப்பட்ட மக்களா என்றால் அதுவும் இல்லை.



படிப்படியாக இந்த ஆக்கிரமிப்பை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டிருப்பதுதான் ஆச்சரியமானது. எப்படியென்றால் இந்த குளங்களை பிடித்து வீடுகட்டுவோருக்கு வீட்டுத்திட்டம் கிடைத்திருப்பதுதான்.

குளங்கள் மூடப்படுவதால் நில ஊற்று உவராக மாறிக்கொண்டிருக்கிறது. குளத்தின் கொள்ளளவு குறைந்து வருகிறது. அதனால் விவசாயிகள் பாதிப்படையும் நிலை ஏற்படுகின்றது. மழை பெருமளவு கைவிட்டால் கிணற்று ஊற்றுகளும் வரண்டு போகும் ஆபாயம் உள்ளது. பெரும்பாலும் படித்தவர்களும் பணக்காரர்களுமே ஆக்கிரமிப்பில் முக்கியமான பங்காளர்களாக இருப்பதால் அரச அதிகாரிகளும் மெத்தனமாக நடந்து கொள்கிறார்கள். நாலைந்து வருடம் பதவியில இருந்து விட்டு வேறிடத்துக்கு மாற்றலாகிவிடும் உத்தியோகத்தர் வேலை செய்யுமிடத்தின் வளத்துக்காக யாரையும் பகைத்துக் கொள்ள முடியுமா என்ன? எது எப்படியோ மக்களின் வாழ்வாதாரம் திட்டமிடப்படாததால் பறி போகிறது. தட்டிக்கேட்பார் யாருமில்லை.

## கொவிட்–19 தொற்றுப் பரவலின் பின்னர் சிறந்த முன்னேற்றத்தைப் பதிவு செய்த AMW – Capital Leasing



கொவிட்19 தொற்றுப் பரவல் என்பது பெருமளவு சமூக மற்றும் பொருளாதார சவால்களைத் தோற்றுவித்திருந்ததுடன், எதிர்வரும் காலப் பகுதியில் கடந்த சில மாதங்களில் ஏற்பட்ட பின்னடைவுகளின் தாக்கங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பது தற்போது புலனாகின்றது. நாட்டிலுள்ள நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் தற்போது பாரிய நெருக்கடிகளுக்கும், தடங்கல்களுக்கும், உறுதியற்ற நிலைக்கும் முகங்கொடுத்துள்ளன.

எவ்வாறாயினும், இந்த நெருக்கடியான சூழலிலும், AMW – Capital Leasing தனது வாடிக்கையாளர்களுக்கு இந்த சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையிலும், நிதி நெருக்கடிகளிலிருந்து பாதுகாக்கும் வகையிலும் சலுகைகளை வழங்கியிருந்ததுடன், தனது நிதி இலக்குகளையும் தொடர்ச்சியாக எய்தியிருந்தது.

துறையின் தற்போதைய நிலைமை தொடர்பாக AMW – Capital Leasing பிரதம நிறைவேற்று அதிகாரி சமத் முனசிங்க கருத்துத் தெரிவிக்கையில், “அண்மைக்காலங்களில் ஏற்பட்ட தாக்கங்களிலிருந்து வெற்றிகரமாக விடுபட வேண்டுமாயின், துரித, முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட, முறையாக மூலதனமிடப்பட்ட, வெளிப்படையான மற்றும் முன்னாயத்தமான நிதி நிறுவனங்கள் பாரிய பங்களிப்பை வழங்க வேண்டியுள்ளது. தற்போதைய நெருக்கடியான நிலையிலிருந்து மீண்டுவர முடியும் என்பதில் உறுதியான நம்பிக்கையை Capital Leasing கொண்டுள்ளதுடன், இந்த சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையிலும், வேகமான மீட்சியை உறுதி செய்யும் வகையிலும் விசேட செயற்திட்டங்களை முன்னெடுத்துள்ளது” என்றார்.

AMWகுரூப்பின் அங்கமாக AMW – Capital Leasing திகழ்வதுடன், புகழ்பெற்ற சர்வதேச வியாபார குழுமமான AlFuttaim இன் அங்கமாகவும் அமைந்துள்ளது. நிறுவனத்தின் நீண்ட கால வியாபார மூலோபாயம் என்பது, Capital Leasing ஐ எந்தவொரு நெருக்கடியான சூழலும் உறுதியான நிலையில் பேணியுள்ளது.

சமத் மேலும் குறிப்பிடுகையில், ”எமது வியாபார செயற்பாடுகளை நாம் எப்போதும் நேர்மையானதும் ஒழுக்கமானதுமான முறையில் முன்னெடுத்துள்ளோம். ” என்றார்.

## 12 ஆண்டுகால நிறைவைக் கொண்டாடும் Evoke

நாட்டின் முன்னணி பொழுதுபோக்கு வர்த்தகநாமங்களில் ஒன்றான Evoke International (Pvt) Ltd தனது 12 ஆண்டு பூர்த்தியை அண்மையில் கொண்டாடியது. இலங்கையை தளமாகக் கொண்ட மிகப் பாரிய பெறுமதி சேர் சேவை வழங்குநராக Evoke திகழ்வதுடன், 360 பாகை உள்ளகமேம்பாட்டுக் குழுவுடன், புத்தாக்க, தரவுகளை அடிப்படையாகக் கொண்ட மற்றும் வாடிக்கையாளர்கள் தேவைகளை பூர்த்தி செய்வதை பிரதான நோக்கமாகக் கொண்ட தயாரிப்புகளை வழங்குகிறது. அவர்களது சேவைகளில் மொபைல் செயலி மற்றும் இணையத்தள உருவாக்கம், content ஒருங்கிணைப்பு, content தயாரிப்பு, WAP தயாரிப்புகள், IVR மற்றும் Voice சேவைகள் மற்றும் டிஜிட்டல் ஊடகம் ஆகியனவும் அடங்குகின்றன.

வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்ற பிரதான பொழுதுபோக்கு அலைவரிசைகளிலிருந்து டிஜிட்டலை நோக்கி விரைவாக மாறுவதனை பயன்படுத்தி 2008 ஆம் ஆண்டில் Evoke ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் ஏனைய போட்டியாளர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டுவதென்பதுடன், தற்போது வாடிக்கையாளர்களுக்கு பணத்திற்கான உகந்த திருப்தி மற்றும் பெறுமதியை வழங்க தனித்துவமான மற்றும் கவர்ச்சிகரமான தீர்வுகளை உருவாக்கும் டிஜிட்டல் சேவை வழங்குநராக தன்னை ஸ்தாபித்துள்ளது.



SLT Filmhall, Evoke Video Unlimited, Airtel Movie Box, Airtel Music Box, Vindana Application, Vindana TV, Reverse Bid மற்றும் Youtubeஇல் முதற்தர உள்நாட்டு இசை செனலான Evoke Music ஆகியவை உள்ளடங்கலாக பல குறிப்பிடத்தக்க தயாரிப்புகளை Evoke கடந்த காலங்களில் உருவாக்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

தற்போது தொலைத்தொடர்பு வர்த்தகநாமங்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் Hungama, iTunes, Spotify மற்றும் AWS போன்ற உலகளாவிய பங்காளர்களின் ஊடாக மக்களுக்கு பொழுதுபோக்கு சேவையை Evoke வழங்குகின்றது. Evoke இன் உள்ளடக்கங்களின் வரிசையானது, சுயாதீன கலைஞர்கள் முதல் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் வரை மற்றும் இடையில் உள்ள அனைவரையும் உள்ளடக்கிய அதன் விரிவான வாடிக்கையாளர்களால் மிகவும் தேடப்படுபவையாக உள்ளன.

## ஐடியல் மோட்டார்ஸ் உடன் இணைந்து வசதியான லீசிங் தீர்வுகளை வழங்கும் செலான் வங்கி



மஹிந்திரா மோட்டார் வாகனங்களை வாங்க விரும்பும் நுகர்வோருக்கு லீசிங் குத்தகை தீர்வுகளை வழங்குவதற்காக, ஐடியல் குழுமத்தின் துணை நிறுவனமும், இலங்கையில் மஹிந்திரா மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான ஒரே அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தருமான ஐடியல் மோட்டார்ஸ் நிறுவனத்துடன் செலான் வங்கி கூட்டுசேர்ந்தது.

செலான் லீசிங் மூலம் மோட்டார் கார்கள், இலகுரக டிரக்குகள், கனரக வணிக வாகனங்கள் மற்றும் பயணிகள் வாகனங்கள் உள்ளிட்ட மஹிந்திரா வாகனங்கள் கொள்வனவு செய்ய தகுதியான வாடிக்கையாளர்களுக்கு இந்த கூட்டாண்மை மூலம்; சிறப்பு வட்டி விகிதங்கள் மற்றும் இலவச வாகன பதிவு, 1 வருடம் அல்லது 50,000 கிலோமீட்டர் வரை உத்தரவாதம், ரூ. 10,000 முதல் ரூ. 50,000 வரை சிறப்பு கொள்முதல் தள்ளுபடிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட காப்பீட்டு கூட்டாளர்கள் மூலம் சிறப்பு காப்புறுதி வெகுமதிகள், அபல்லோ டயர்களுக்காக 20% தள்ளுபடி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட செலான் க்ரெடிட் கார்டுகள் ஆகிய சலுகைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலே குறிப்பிட்டுள்ள நன்மைகளுக்கு மேலதிகமாக, குறைந்தபட்ச ஆவணங்களுடன் நுகர்வோரின் கொடுப்பனவு திறனுக்கு ஏற்றவாறு தனிப்பயனாக்கப்பட்ட லீசிங் கட்டமைப்புகளை வழங்க செலான் குழு தயாராக உள்ளது. செலான் வாடிக்கையாளர்களுக்கு இப்போது அதிக வருமானம் உள்ள மாதங்களில் அதிக வாடகை அல்லது மொத்தமாக பணம் செலுத்தும் வாய்ப்பும், சராசரி வருமானம் பெரும் மாதங்களில் குறைந்த அல்லது வழக்கமான வாடகையும் செலுத்த வாய்ப்பு உள்ளது.தேசம் மெதுவாகவும் சீராகவும் இயல்பு நிலைக்கு திரும்பும் இந்த நேரத்தில், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும், புதிய தொழில் முனைவோராக முன்னேற வாய்ப்புகளைத் தேடும் நுகர்வோருக்கும் இந்த வாய்புக்கள் தனித்தனியாக கட்டமைக்கப்பட்டுள்ளன.

அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி, அதிநவீன தொழில் நுட்பம், புதுமையான தயாரிப்புகள் மற்றும் வகுப்பில் சிறந்த சேவைகள் மூலம் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு உன்னத வங்கி அனுபவத்தை வழங்குவதற்கான தொலைநோக்குடன் செயல்படுகிறது.

முன்னணி சுப்பர்மார்க்கட்டுகளுடன் இணைந்து நுகர்வோருக்கு

## உற்சாகமூட்டும் தள்ளுபடிகளை வழங்கும் Pelwatte Dairy




இலங்கையின் புகழ்பெற்ற பால் உற்பத்தியாளரான Pelwatte Dairy Industries, நுகர்வோர் செலுத்தும் பணத்துக்கான பெறுமதியை வழங்கும் பல அற்புதமான தள்ளுபடிகளை இலங்கையின் முன்னணி சுப்பர்மார்க்கெட்களில் இந்த செப்டம்பரில் வழங்குகின்றது. இந்த உள்நாட்டு நிறுவனமானது பால், யோகட், ஐஸ் கிரீம் மற்றும் பட்டர் உப்பு சேர்க்கப்பட்ட, சேர்க்கப்படாத அத்தோடு வீடு, நிறுவன பாவனைக்கானவை அடங்கலான அதன் ஆரோக்கியமான, புதிய மற்றும் சுவையான தயாரிப்புகளுக்காக கொண்டாடப்படுகின்றது. மேலும் அனைத்து தரப்பு மக்களது தேவைகளையும் பூர்த்தி செய்யும் ஒரு வர்த்தகநாமமாக Pelwatte Dairy தொடர்ந்து உயர் தரமான பால் தயாரிப்புகளை அனைத்து இலங்கையர்களுக்கும் பெற்றுக்கொடுக்க முயற்சிக்கிறது.

எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு சலுகைகளை வழங்குவதில் எமது நிறுவனம் எப்போதும் முன்னணியில் உள்ளது. அந்த வகையில், Pelwatte Dairy தனது தயாரிப்புகளுக்கு கவர்ச்சிகரமான தள்ளுபடிகளை வழங்குகிறது. Keells விற்பனை நிலையங்களில் 200g உப்பு சேர்க்கப்பட்ட பட்டர்களுக்கு ரூபா 60 மற்றும் Arpico விற்பனை நிலையங்களில் 200g உப்பு சேர்க்கப்படாத பட்டர்களுக்கு ரூபா 41 தள்ளுபடிகளும், செப்டம்பர் 15 முதல் ஒக்டோபர் முழுவதும் வழங்கப்படவுள்ளன.

கொஸ்வத்தை Sirilak SUPERஇற்கு விஜயம் செய்யும் வாடிக்கையாளர்கள் ஐஸ் கிரீம் தவிர்த்து ஏனைய அனைத்து குளிரூட்டப்பட்ட Pelwatte தயாரிப்புகளுக்கும், அவற்றின் மொத்த சில்லறை விலையில் 10% தள்ளுபடியை செப்டம்பர் 15 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையும், மற்றும் ஒக்டோபர் மாதம் முழுவதும் பெற்றுக்கொள்ள முடியும். மேலும், எமது அனைத்து குளிரூட்டப்பட்ட தயாரிப்புகளும் SPAR மற்றும் Softlogic சுப்பர்மார்க்கட்டுக்களில் கிடைப்பதுடன், எமது ஐஸ் கிரீம் தயாரிப்பு வரிசையானது Sathosa சுப்பர்மார்க்கட்டுக்களில் கிடைக்கின்றது.

Pelwatte Dairyஇன் முழு ஆடைப் பால்மா மற்றும் கொழுப்பற்ற பால்மா உள்ளடங்கலாக பால்மா தயாரிப்பு வரிசையானது அனைத்து Keells விற்பனை நிலையங்களிலும் கிடைக்கின்றது.

## நவீன வசதிகளுடன் கொழும்பு 7இல் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ள Health Life Clinic



கொழும்பின் முதன்மையான மருத்துவமனைகளில் ஒன்றான ஹெல்தி லைஃப் கிளினிக், சுகாதாரத்துறையில் சிறந்து விளங்குவதற்கான தனது உறுதிப்பாட்டை மேலும் பலப்படுத்தும் வகையில் இல. 139, தர்மபால மாவத்தை, கொழும்பு 07இல் உள்ள நவீன நோக்கம் கருதி புதிதாக கட்டப்பட்ட வளாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. 2005இல் நிறுவப்பட்ட ஹெல்தி லைஃப் கிளினிக் தனிப்பயனாக்கப்பட்ட நீரிழிவு கட்டுப்பாட்டு சிகிச்சையளிப்பு, சருமம அழகு சாதன ஆலோசனைகள், குழந்தை மருத்துவம், பிசியோதெரபி, மனநலம், முதியோர் மருத்துவம், ஆப்டோமெட்ரிக் பராமரிப்பு, பாதக் கோளாறுகளுக்கு சிகிச்சையளிப்பு மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளை கண்டறிதல் மற்றும் செயல்திறன் மிக்க சுகாதார மேம்பாட்டு தீர்வுகள் போன்றவற்றிலும் நிபுணத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“நவீன வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்ட வளாகத்திற்கு இடம்மாறிச் சென்றுள்ளதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இது விரிவான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சுகாதார சேவையை வழங்குவதற்கான எமது பொறுப்பை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. அத்துடன் கொழும்பு 07இல் ஒரு விசாலமான இட வசதி கொண்ட எமது விரிவாக்கமானது நோயாளர்களுக்கு வசதியான, பாதுகாப்பான சூழலில் மிக உயர்ந்த தரமான சுகாதார சேவையை வழங்குவதற்கான எமது முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றியென நாங்கள் நம்புகிறோம்” என ஹெல்தி லைஃப் கிளினிக்கின் தலைவர் டொக்டர் காயத்ரி பெரியசாமி தெரிவித்தார்.

அழகான சூழலில் நன்கு வெளிச்சமான உட்புறங்களுடன், சரும அழகு சாதன ஆலோசனைக் கூட வசதி, பலவிதமான நோயறிதல் முறைகள் மற்றும் சிகிச்சையளிப்பு கூட இட வசதிகள் மற்றும் நவீன கருவிகளும் இங்கு பொருத்தப்பட்டுள்ளன. ‘6 by 6 Optics’ மற்றும் ‘Evolve Centre’ என்ற பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கான நவீன பேச்சு மற்றும் மொழி சிகிச்சை மற்றும் கற்றல் பிரிவும் இதில் அடங்கும்.

ஹெல்தி லைஃப் கிளினிக்கில் நீரிழிவு சிகிச்சைகளுக்காக வரும் நோயாளிகளை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் அணுகுமுறைகள் பல ஆண்டுகளாக இந்த கிளினிக்கை விரும்பும் நோயாளிகளை சிறந்த விதத்தில் தக்கவைத்துக் கொண்டுள்ளது.


## அபிலாஷைகளை வலுவூட்டும் வெற்றிகரமான 25 ஆண்டுகளை கொண்டாடுகிறது CDB




பெரியளவிலானதும், இலங்கையிலுள்ள வங்கியல்லாத நிதி நிறுவனங்களுள் மிக வெற்றிகரமானவற்றுள் ஒன்றானதும் மற்றும் அறிவுக்கூர்மையுள்ளதும் நிலைபேறானதுமான இலங்கைக்கு அதிகாரமளிப்பதற்கான தனது அர்ப்பணிப்பினால் பலப்படுத்தப்பட்டுள்ளதுமான சிட்டிசன் டெவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பீஎல்சீ , வெற்றிகரமான 25 ஆண்டுகளை 2020 செப்டம்பர் 7 இல் கொண்டாடுகின்றது. இலங்கையின் நிதியியல் அமைப்பினை உருமாற்றும் குறிக்கோளை நோக்கி செயலாற்றிக்கொண்டு, CDB இனது பயணம் கடந்த இரண்டரை தசாப்தங்களாக உண்மையிலேயே குறிப்பிடத்தக்கதாக அமைந்திருக்கின்றது.

நாடெங்கிலுமுள்ள அனைத்து சமூக அடுக்குகளிலுமுள்ள வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றி, அண்ணளவாக ரூ. 100 பில்லியனை சொத்து அடிப்படையாகக் கொண்டு, இலங்கையிலுள்ள வங்கியல்லாத நிதி நிறுவனங்களுள் பெரியளவிலானவற்றுள் ஒன்றாக CDB இன்று வளர்ந்திருக்கிறது. நாடு பூராகவும் 71 கிளைகளையும், 1,700 ஊக்கம்பெற்ற தனிநபர்களையும் கொண்டு இந்நிறுவனம் அதன் இறக்கைகளை விரித்துள்ளது. இந்நிறுவனம் வெற்றியை நோக்கிய தனது அர்ப்பணிப்பை நிலைநாட்டி, 2019 இல் மதிப்புமிகு பிஸ்னஸ் டுடே முதல் 30 இல் தனது இடத்தை கைப்பற்றியது..

நிலைபேறுதன்மை என்பது இந்நிறுவனத்திற்குள்ளேயான வளர்ச்சியின் முக்கிய தூண்களில் ஒன்று என்பதுடன் சிறுவர் சுகாதாரம் மற்றும் கல்வி, சமூக வலுவூட்டல் மற்றும் சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பு என்பவற்றை மேம்படுத்துவதற்காக கடந்த வருடங்களில் CDBபல்வேறு முன்னெடுப்புக்களைக் கொண்டு நிலைபேறுதன்மையை ஏற்றுக்கொண்டுள்ளது. CDB இல், நிலைபேறுதன்மையானது வெறும் நன்கொடைகளுக்கும் அப்பால் சென்று குறிக்கோளை ஆதரிப்பதற்காக தனது வியாபார மாதிரியை அடிமட்டத்திலிருந்து மாற்றுவதிலும் மேம்படுகின்றது. இக்குறிக்கோளை நோக்கிய நிறுவனத்தின் அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாட்டின் விளைவாக, CDB தென்னாசியாவில் ISO 14064 1 கார்பன் உறுதிசெய்யப்பட்ட முதலாவது நிதி நிறுவனமானது. தொடர்ந்து கொண்டிருக்கும் முயற்சிகள், 2019 சிலோன் சாம்பர் (Ceylon Chamber) இனால் நிலைபேறான கூட்டாண்மைகளுக்கான விருது வழங்கும் விழாவில், இலங்கையிலுள்ள சிறந்த கூட்டாண்மைகளில் முதல் பத்து நிறுவனங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டது உள்ளடங்கலாக பல்வேறு பாராட்டுக்களை இந்நிறுவனத்திற்கு ஈட்டித் தந்திருக்கின்றன.




## மேஷம்

**மேடம் (அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்)**

மேடராசிகாரர்களை கண்டு பிறர் பயப்படும் படியும் விளங்குபவர் நீங்கள்தான். உங்கள் ராசிநாதன் செவ்வாய் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கின்றார். அவரை 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ஆட்சி பெற்ற குரு பகவான் பார்வைபடுவதால் குருமங்கலயோகம் ஏற்படுகின்றது. 6ஆம் இடத்தில் சூரியனுடன் உச்சம் பெற்ற புதன் கூடி புத – ஆதித்திய யோகமும் ஏற்படு கின்றது. இதனால் எடுக்கின்ற காரியங்கள் உங்கள் மனம் திருப்திபடும் வரை நிறைவேறும் வாரம் ஆகும்.

## ரிஷபம்

**இடபம் ( கார்த்திகை 2ம், 3ம், 4ம் பாதம், ரோகினி, மிருகசீரிடம், 1ம், 2ம் பாதம்)**

இந்த ராசியில் பிறந்தவர்கள் சுமாரான உயரமா கவோ குள்ளமாகவோ இருப்பார்கள் உடல்கட்டு நன்கு அமைந்திருக்கும். உங்கள் ராசிநாதன் சுக்கிரன் 3ஆம் இடமான சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். தனாதி பதி புதன் கன்னியில் உச்சம் பெற்றிருக்கின்றார். உங்கள் 12ஆம் வீட்டுக்குரிய விரயாதிபதி செவ்வாய் சொந்த வீடான மேஷத்தில் பலம்பெற்றுள்ளார். தொழில்முன் னேற்றம், அரசாங்க உத்தியோக உயர்வு, விருப்பமான இடம் மாற்றம் ஏற்படலாம். செலவுகள் வீடு வாகனங் களால், சகோதரர்களால் ஏற்படலாம்.

## மிதுனம்

**மிதுனம் (மிருகசீரிடம் 3ம், 4ம், பாதம், திருவாதிரை, புநர்பூசம் 1ம், 3 பாதம்)**

எதையும் ரசித்து சுவைத்து சாப்பிடுவதில் நீங்கள் மிகவும் அலாதி பிரியமானவர்கள். உங்கள் ராசிக்கு 7ஆம் இடத்தில் தன் சொந்தவீட்டில் தனுசு ராசியில் இருந்து குரு பலம் பெற்று உங்கள் ராசியை பார்க்கின் றார். புதனும், சூரியனும் சுக ஸ்தானத்தில் (4ம் இடம்) சஞ்சரித்து புத – ஆதித்திய யோகத்தை ஏற்படுத்தியுள் ளார். லாபாதிபதி (11ம் இடம்) செவ்வாய் 11ஆம் இடமான லாபஸ்தானத்தில் சந்திப்பதால் இவ்வாரம் மகாலஷ்மியின் பூரணமான அனுக்கிரகம் ஏற்படும். சிறப்பு மிக்க வாரமாக அமைகிறது.

## கடகம்

**கடகம் (புனர்பூசம் 4ம், பாதம், பூசம், ஆயிலியம்)**

கடக ராசிகாரர்கள் எதையும் ரசித்து அனுபவிப்ப தில் திறமை பெற்றவர்கள் என்றால் மிகையாகாது. உங்கள் ராசிக்கு யோகத்தினை அள்ளித் தரும் கிரகமான செவ்வாய் பத்தாம் இடமான தொழில் (ஜீவன) தானத் தில் பலம் பெற்று சஞ்சாரம் செய்கின்றார் மேலும் தொழில் சிறப்புறும் அத்துடன் சகாயதானமான 3ஆம் இடத்தில் புதனும் சூரியனும் இணைந்து புத ஆதித்திய யோகம் ஏற்படுவதால் உடன் பிறந்த இளைய சகோதரர் களிடையே பரஸ்பர உறவு மேம்படும்.

## சிம்மம்

**சிங்கம் (மகம் பூரம் – உத்தரம் 1ம் பாதம்)**

பொதுவாக சொன்னால் சிம்மராசிகாரர்கள் உணர்ச்சி மிகுந்தவர்கள் சுறுசுறுப்பாக இயங்கும் தன்மை பெற் றவர்கள் உங்கள் ராசிநாதன் தனஸ்தானமான 2ஆம் வீட்டில் தனலாபாதிபதி (2க்கும், 11க்கும் உரிய புதன்) புதயகிரகம் கன்னி ராசியில் உச்சமும், ஆட்சி பெற்று சூரியனோடு இணைந்து புத ஆதித்திய யோகம் தருவ தால் அரச வழி ஆதரவும், உதவிகளும் கிடைக்கலாம். பண வருவாய்க்கும் குறைவு இருக்காது. சிறப்பு தரும் வாரமாகும்.

## கன்னி

**(உத்தரம் 2ம், 3ம், 4ம் பாதம், அத்தம், சித்திரம் 1ம் பாதம்)**

பி றரை பற்றி எண்ணுவதைவிட தன்னைப்பற்றி தாங்களே அறிந்து கொள்ள முயலும் இயல்பு கொண்ட வர்கள்.

உங்கள் ராசி நாதன் புதன் உங்கள் ராசியிலேயே ஆட் சியும், உச்சமும் பெற்று அதே நேரம் உங்கள் ராசிக்கு செலவுதானமான 12ம் வீட்டுக்குரிய விரயாதிபதி சூரியன் உங்கள் ராசியிலேயே சஞ்சாரம் செய்கின்றார். இதனால் வேலைவாய்ப்புகளுக்காகவும் தந்தை வழி உறவுகளாலும், தந்தையின் ஆரோக்கியம் சம்பந்தமாக வும் செலவுகள் ஏற்படும் வீணான செலவுகளை கட்டுப் படுத்தி கொள்ளுங்கள்.

## துலாம்

**துலாம் (சித்திரை 3ம், 4ம், பாதம், சுவாதி, விசாகம் 1ம், 2ம், 3ம் பாதம்)**

எந்தச் செயலையும்முன் அனுபவத்தின் அடிப்படை யில் சீர்தூக்கி பார்ப்பது துலாராசி நேயர்களின் சிறப்பு ஆகும் உங்கள் ராசிநாதன் இம்மாதம் ஆரம்பத்தில் சுக்கிரன் தொழில் ஸ்தானம் எனப்படும் 10ஆம் இடத் தில் சஞ்சாரம் செய்கின்றார் சுயதொழில்களில் ஈடுப டுவோர் பெரும் பாலம் அடைவர் ஆடம்பர பொருள் விற்பனையாளர்களும் நன்மை அடைவர் ராகு அட்ட மதானத்தில் இருப்பதால் எதிலும் முன் கவனம் நன்று. கேது 2ம் இடத்தில் சஞ்சாரம் செய்வதால் வீண் வார்த் தைகளை தவிர்க்கவும்.

## விருச்சிகம்

**விருச்சிகம் (விசாகம் 4ம், பாதம், அனுசம், கேட்டை)**

ஏதாவது ஒரு எக்ஸ்ட்ரீமில்தான் காணப்படுவர் நினைத்ததை சாதிக்கவேண்டும் என்ற துடிப்பும் அதற்கு ஏற்ற மனவலுவும் இவர்களிடம் காணப்படும். உங்கள் ராசிநாதன் செவ்வாய் மேடராசியில் சொந்த வீட்டில் சஞ்சாரம் செய்கின்றார்.

தனாதிபதி 2ம் வீட்டிற்குரிய குரு தனஸ்தானத்தில் (2ம்வீட்டில்) 11ம் வீட்டிற்குரிய லாபாதிபதி புதன் லாபஸ்தானத்தில் (11ல் வீட்டில்) இருப்பதால் பொரு ளாதார வளம் மேம்படும் இவ்வாரம் எதிர்பாராதவண் ணம் நீண்ட நாட்களாக வராமல் இருந்த பொருள் அல்லது பணம் வந்து சேரலாம்.

## தனுசு

**தனுசு (மூலம், பூராடம், உத்தராடம், 1ம் பாதம்)**

எதையாவது செய்து தம் சொந்த வருமானத்தை யும் சுகத்தையும் பெருக்கி கொள்ள வேண்டுமென்ற அவாவில் அதிகப்படியான உழைக்கும் குணம்கொண் டவர்கள் உங்கள் ராசிநாதன் குரு உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கின்றார். அவரதுபார்வை 5, 7, 9 ஆகிய இடங் களிலும் குருவின் பார்வை படுவதால் பிள்ளைகளால் பெருமையும், சமூகத்தில் உங்களுக்கான பாராட்டும், தந்தைவழி உறவு மூலம் மகிழ்ச்சியும், புண்ணிய கரு மங்களில் ஆர்வமும் ஏற்படும்.

## மகரம்

**மகரம் (உத்தராடம் 2ம், 3ம், 4பம், பாதம் திருவோ ணம், அவிட்டம் 3ம் பாதம்)**

பெரிய அரசியல்வாதிகள், அறிஞர்கள் தொழில கத்தை விஸ்தரித்து கொண்டு செல்லும் திறமையுடைய வர்கள் மகரராசியினர். உங்கள் ராசி நாதன் சனி 12ஆம் இடமான விரயஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கின்றார். மோட்டார் வாகனங்களால், இரும்பு பொருட்களால் செலவுகள் அதிகம் ஏற்படும். ஏழரை சனியும் இப்பொ ழுது நடக்கின்றது. வரவுக்கு மீறிய செலவுகள் இருக் கும்.

## கும்பம்

**கும்பம் (அவிட்டம் 3ம், 4ம் பாதம் சதயம், புரட்டாதி 1ம், 2ம், 3ம், பாதம்)**

கும்ப ராசிகாரர்களைப் போன்ற குணம் படைத்தவர் கள் மனித சமூகத்தில் அதிகரித்தால்தான் மனித இனம் முன்னேறமுடியும். உங்கள் ராசி நாதன் சனி வக்கிரம நிவர்த்தியாகி 11ம் இடமான லாப ஸ்தானத்தில் சஞ்சா ரம் செய்கின்றார். அத்துடன் உங்கள் குடும்பதானத்திக் குரிய (2ம் இடம்) குடும்பங்தானபாதிபதியான குருவு டன் சேர்க்கை பெற்றுள்ளார். இதனால் குடும்ப உறவு மேன்மை அடைந்து மகிழ்ச்சி ஏற்படும். உத்தியோக உயர்வு ஏற்படலாம்.

## மீனம்

**மீனம் (புரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)**


குருவின் அம்சமும் இருப்பதால் கல்வி, கேள்விக ளில் சிறந்து விளங்குவார்கள். ஈகை இரக்க குணம், காணப்படும் கணிதத்திலும், ஜோதிடத்திலும் சிறந்து விளங்குவார்கள். உங்கள் ராசிநாதன் குருபகவான் 10ம் இடமான தொழில்ஸ்தானத்தில் பலம் பெற்று சஞ்சா ரம் செய்கின்றார். தொழில் மாற்றமோ அல்லது இட மாற்றமோ நன்மையை தரும். மேலும் குருவோடு 11, 12 ஆகிய இடங்களுக்கு உரிய சனிபகாவும் இணைந்து சஞ்சரிப்பதால் பொருளாதார துறை வளர்ச்சி மேம்ப டும்.

# 'Celfie' மூலம் ஆச்சரியப்படுத்தும் வாய்ப்பை வழங்கும் லக்விமன

உங்களுக்கு பிடித்த பிரபலத்தை உங்கள் பிறந்தநாளில் நீங்கள் விரும் பியது போல் வாழ்த்து சொல்லி வீடியோ எடுத்து அனுப்புவது எந்தவொருவருக்கும் உண்மையி லேயே மகிழ்ச்சியான அனுபவமா கும். உங்கள் அன்புக்குரியவர்களை தங்களுக்கு பிடித்த பிரபலங்கள் தனிப்பட்ட முறையில் வாழ்த்துவ தன் மூலம் ஆச்சரியப்படுத்த 'லக் விமன' அறிமுகப்படுத்திய முதல் டிஜிட்டல் தயாரிப்பு 'செல்ஃபி.

ஆட்டோகிராஃப்களின் சகாப் தத்திலிருந்து செல்ஃபி வரை உலகம் நகர்ந்துள்ளது. ஒவ்வொரு முறையும் நமக்கு பிடித்த பிரபலங் களை சந்திக்கும் போது செல்பி எடுப்பது ஒரு டிரெண்டாக மாறி யுள்ளது. நாங்கள் அவர்களுடன் இருந்த தருணத்தை நினைவுகூ ரும் சைகையாகத் தொடங்கி, இப்போது மக்கள் ஆட்டோகி ராஃப்களை வாங்கி பிரபல ரசிகர் பட்டாளத்திற்கு விற்கும் லாபகர மான சந்தையாக மாறியுள்ளது.

செல்பியுடன் நீங்கள் இனி அவர் களின் ஆட்டோகிராஃப்கள் மற்றும் புகைப்படங்களைப் பெறுவதற்கு வரிசையில் காத்திருக்க வேண்டி யதில்லை. மூன்றாம் தரப்பினரிட மிருந்து அவர்களின் ஆட்டோகி




ராஃப்களை வாங்க நீங்கள் பணம் செலவழிக்க வேண்டியதில்லை. அதற்கு பதிலாக தனிப்பயனாக்கப் பட்ட வீடியோ வாழ்த்தினை உங்க ளுக்கு பிடித்த பிரபலத்திடமிருந்து பெறலாம்!

பரிசளிக்கும் பிரிவுகளை மைய மாகக் கொண்டு சந்தையில் மிக நீண்ட இகாமர்ஸ் நிறுவனங்களில் லக்விமனவும் ஒன்றாகும். லக் விமன பிராண்ட் தாழ்மையான தொடக்கத்திலிருந்து, உலகெங்கி லும் உள்ள இலங்கையர் மத்தியில், குறிப்பாக மத்திய கிழக்கு சந்தை யில் வலுவாக தன்னை நிலைநிறுத் தியது.

லக்விமன அடுத்த கட்ட முயற் சியாக அதன் தனித்துவமான, மற்றும் சுவாரஸ்யமான தயாரிப் புகளை இலங்கையில் உள்ளூர் தொடுதலுக்காக அறியப்படுகிறது. வெளிநாட்டு சந்தைக்கு மத்தியில் அவர்களின் வலுவான பயணத்து டன், இந்த பிராண்ட் இப்போது இலங்கை சந்தையில் மிகவும் தனித் துவமான தயாரிப்புகளை வழங்குகி றது.

லக்விமனவின் பல தனித்துவ மான முதல் டிஜிட்டல் தயாரிப்புக ளில் 'Celfie'யும் ஒன்றாகும் 'Celfie'. இலங்கையில் மிகவும் பிரபலமான மற்றும் விரும்பப்படும் பிரபலங் கள் மற்றும் செல்வாக்குமிக்கவர் களுடன் இந்த பிராண்ட் பிணைந் துள்ளது.

# கொழும்பு ரமாடா ஹோட்டலில் "யாழ் உணவுத் திருவிழா"



கொழும்பு ரமாடா ஹோட்டல் வருடாந்தம் நடத்தி வரும் யாழ். விருந்து உணவுத்திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை ரமாடா ஹோட்டலில் நடைபெறவுள் ளது.

யாழ். விருந்து உணவுத்திருவிழா கொழும்பு ரமாடா ஹோட்டலின் வருடாந்த சிறப்பம்சமாகும். யாழ்ப்பாண உணவு ககைகளை முதல் முறையாக கொழும்பு அறிமுகப்படுத்திய இந்த உறவு விழா கடந்த 16 வருடங்களாக தொடர்ந்து இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இம்முறை யாழ். விருந்து "மை சிஸ் டர்ஸ் கிச்சன்" நிறுவனத்தின் துஷாரா இன்னாசித்தம்பி மற்றும் தனு இன்னா சித்தம்பி ஆகியோருடன் இணைந்து உணவு விழாவுக்கு இம்முறை கொண்டு வருவார்கள் என்று பரவ லாக எதிர்பார்க்கப்படுகிறது.

நெல்லி கிறஸ், ஒடியல் கூழ், வறுத்த வாழைக்காய், ஆட்டு முள்ளு சூப், சவுர வரால், வறுத்த மீன், மாங்காய் ஊறுகாய் மற்றும் பல்வேறு மரக் கறி வகைகள், கடல் உணவு மற்றும் நண்டு கணியுடன் கூடிய யாழ். உணவு பொதியில் விலை ஒரு நபருக்கு 2750 ரூபாவாகும்.

கடந்த பல வருடங்களாக கொழும்பு மக்களின் அபிமானத்தை பெற்றுள்ள "யாழ். உணவு விருந்து" உணவுத்திரு விழா இவ்வருடம் கொழும்பு மக்க ளுக்கு அறுசுவை அனுபவமொன்றை வழங்கும் என்று எதிர்பார்க்கக்படு கிறது.

கொழும்பு ரமாடா ஹோட்டலின் சமையலறைக்கு புதிதாக இணைந் துள்ள பிரான்ஸைச் சேர்ந்த சமையற் காரர் பிலிப் வெகன்பூரர் இந்த யாழ் உணவுத் திருவிழாவில் கலந்துகொள் ளவுள்ளதாக தெரிவித்தார். சிறு வயதி லேயே தனது தந்தைக்குச் சொந்தமான உணவு விடுதியின் சமையலறையில் வேலையை ஆரம்ப பிலிப் 12ஆவது வயதிலேயே முழுமையான சமையல் காரராக மாறிவிட்டதாகக் குறிப்பிட் டார்.

# குடிமனைகள், கைத்தொழில் சேதனக் கழிவுகளுக்கு ICC Smart Ecoமூலம் முகாமைத்துவ தீர்வுகள்

குடிமனைகள் மற்றும் கைத்தொ ழில் சேதனக் கழிவுகள் பதனிடல் தொழில்நுட்பத்தினை வாடிக்கையா ளர்களுக்கு எளிதில் பெற்றுக்கொள் வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் International Construction Consortium (ICC) நிறுவனம் புதிய கழிவுகள் பதனி டல் பொறித்தொகுதிகளை அறிமுகப் படுத்தியுள்ளது.

ICC Smart Eco Solutions இன் கீழ் அறிமுகப்படுத்தப்படுத்தப்பட்டுள்ள இப்புதிய உற்பத்திகள், சேதனக் கழி வுகள் கொம்போஸ்ட் இயந்திரங்கள் மற்றும் ஸ்மார்ட் மாதிரி கழிவுநீர் சுத்திகரிப்புத் தொகுதிகளாலானது. கொம்போஸ்ட் தொழில்நுட்ப வடிவங் களின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட Smart Eco Quick Composter இயந்தி ரம் "FOODCYCLER" என்ற பெயரில் குடிமனை பாவனைக்கு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதுடன் வணிகப் பாவனைக்கு 'PL Series' எனும் இயந் திர மாதிரிகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

துர்நாற்றம் வெளியேறாத வகையில் அகற்றி பொருத்தக்கூடிய இயங்கு நிலை காபன் பில்ட்டரை இச் சகல கூறுகளும் கொண்டுள்ளதோடு சேதனக் கழிவுகளை 06 தொடக்கம் 24 மணித்தியாலங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் தரமான சேதனப் பசளை களாக மாற்றக்கூடிய ஆற்றல் இந்த இயந்திரத்திடம் உள்ளமை குறிப்பிடத் தக்கது.

அடுக்குமாடி வீடுகள், ஹோட்டல் கள், வீட்டுத் தொகுதிகள் மற்றும் கைத்தொழிற்சாலைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு இச் சேதனப் பசளை இயந்திரத்தின் மூலம் பயன் பெற முடியும். ICC நிறுவனத்தின் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் கைத்தொ ழிற்சாலைகளுக்கு இலகுவாக தமது கழிவுகளை மீள் சுழற்குட்படுத்தி தமது கழிவுகளை களஞ்சியப்படுத்துவதற்கு விரயமாகும் அதிக செலவை தவிர்த்து பணத்தை மீதப்படுத்துவதற்கு இது பேருதவியாக இருக்கும்.

ஸ்மார்ட் சேதனக் கழிவுகள் முகா மைத்துவத் தொழில்நுட்பத்திற்கு வாடிக்கையாளர்களுக்குள்ள வாய்ப் புகளை விரிவுபடுத்தி ICC நிறுவனம் நாட்டில் துரிதமாக வளர்ச்சியடைந் துள்ள கழிவுகள் பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் முனைப்பான பங்காளராக தமது பங்களிப்பினை வழங்குகிறது. கொம்போஸ்ட் இயந்திரங்களுக்கு மேலதிகமாக ICC Smart Eco Solutions கழிவுநீர் சுத்திகரிப்பு போன்ற பல்வேறு தீர்வுகளை அறிமுகப்படுத் தியுள்ளது.

# வைப்பர் பிளேட் சிறப்பு விலைத்தள்ளுபடி


Robert Bosch Lanka பிரைவேட் லிமிடட் நிறுவனமானது Browns Thermal Engineering உடன் இணைந்து சமீபத்தில் வைப்பர் பிளேட் சிறப்பு விலைத்தள்ளுபடி நிகழ்வொன்றினை ஹெவ்லொக் வீதியில் அமைந்துள்ள Browns பவர் மார்ட் கட்டிடத்தில் எற்பாடு செய்திருந்தது.

உலகின் மிகப்பெரிய வாகன உதிரிப்பாக உற்பத் தியாளர்களில் ஒருவரான BOSCH SRI LANKA, உலகத் தரம் வாய்ந்த தயாரிப்புகளை இலங்கை வாடிக்கையாளர் களுக்கு மலிவு விலையில் வழங்குவதற்காக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந் தனர். செப்டம்பர் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் இந்த நிகழ்வு நடைபெற்றதுடன் அனைத்து BOSCH தயாரிப்பு களும் சிறப்பு விலையில் வழங்கப் பட்டது.




இந்நிகழ்ச்சியை Browns Thermal இன் பொது முகாமையாளர் அசங்க பீரிஸ் ஆரம்பித்து வைத்ததுடன் Robert Bosch Lanka பிரைவேட் லிமிடட் நிர்வாக இயக்குனர் ஆர். சுவாமிநாதனும் கலந்து சிறப்பித் தார்.

# ஸ்மார்ட்போன் புகைப்படவியலில் புதிய அளவுகோலை நிர்ணயிக்கும் Huawei P40 Pro



புத்தாக்க ஸ்மார்ட்போன் உற்பத்தியாளரான Huawei இனால், இலங்கையில் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள முதற்தர ஸ்மார்ட்போன் Huawei P40 Pro. இந்த புத்தம் புதிய Huawei P40 Pro தனது Ultra Vision Leica Quad Camera அமைப்பின் மூலம் ஸ்மார்ட்போன் புகைப்படவி யலில் புரட்சியை ஏற்படுத்துமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது. கெமரா என்பது ஏனைய அம்சங்களை விட முக்கியத்துவம் பெறும் சிறப்பம்ச மாக மாறியுள்ளதுடன், Quad camera அமைப்பு வரையான ஸ்மார்ட்போன் கெமராக்களின் பரிணாம வளர்ச்சியா னது கற்பனைக்கு அப்பாற்பட்டது. Huawei P40 Pro வின் Ultra Vision Leica Quad Camera அமைப்பானது 50 MP Ultra Vision camera + 40 MP Ultra Wide Cine Camera + 12 MP Super Sensing Telephoto Camera + 3D Depth Sensing Camera ஆகியன வற்றை உள்ளடக்கியுள்ளது.

இந்த 50 MP Ultra Vision main camera (Wide Angle, f/1.9 aperture, OIS) பரந்த பட மெடுக்கும் வீச்சு மற்றும் அதிக அளவிலான noise balance வழங்குவதனால், இரவோ அல்லது பகலோ எந்த நிலை யிலும் படமெடுக்க இதனை ஒரு சிறந்த தெரிவாக்கியுள்ளது. இது தெளிவான புகைப்படங்களுக்காக 1/1.28 inch Ultra Vision Sensor, RYYB color filter array, Octa PD auto focus போன்ற தெரிவுகளுடன் வரு கிறது. இந்த 40 MP Ultra Wide Cine Camera உள்ளடக்கியுள்ள UltraWide Angle f/1.8 aperture சிறந்த குறைந்த ஒளி படங்களை வெளிக்கொணர உத வுவதுடன், உயர் தரமான குறைந்த ஒளி வீடியோக்கள், ultraslow motion வீடியோக்கள் மற்றும் 4K timelapse வீடியோக்களையும் இதன் மூலம் உருவாக்கலாம். மேலும் இந்த f/3.4 aperture உடன் கூடிய 12 MP Telephoto camera, OIS ஆகியன புகைப்படங்களில் சிறந்த விபரங்க ளுக்கு 5x zoom காரணியை வெளிக் கொணர்கிறது.

# சிசேரியன் மூலம் பிறக்கவைக்கும் சிசுவுக்கு சாதகம் எழுதுவது சரியானதா?

## சர்ச்சைக்குரிய சோதிட ஆய்வு!

பவிஷ்ய புராணத்தில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் நூற்றுக்கு நூறுவீதம் நடந்தேறியுள்ளதை அவதானிக்கும் போது, அதனைப் புராணப்புளுகு என்று தள்ளிவிட முடியாது. மகாபாரதமென்ற மகாகாவியத்தை நமக்கு அருளிச் சென்றவரும் இதே வியாசர்தான். அப்படியானால் அதில் வரும் கிருஷ்ண பரமாத்மாவின் அவதாரத்தைக் கூறும் மகா பாகவதமும், பகவத்கீதையும் கூட பொய்யாகி விடுமல்லவா?

குழந்தையொன்றை அறுவைச் சிகிச்சை மூலம் (CESARIAN) பெறவேண்டியுள்ளது. அதற்கு ஒரு நல்ல நாள் நேரத்தை இந்த வாரத்தில், அல்லது இந்த மாதத்தில் குறித்துக் கொடுங்கள் என்று சோதிடரிடம் கேட்டால், அவரும் இதுசரியானதா, இயற்கையோடு இயைந்ததா என்பதையெல்லாம் யோசிக்காமல், அப்போதைய காலகட்டத்தில் பலமானதொரு இலக்கின அடித்தளம், இராசி மற்றும் கேந்திர திரிகோணங்களில் முக்கிய கிரகங்களின் சஞ்சாரம் போன்றவற்றை பஞ்சாங்கத்தின் மூலம் அவதானித்து, முடிந்தவரை ஒரு நல்ல நாள் நேரத்தை குறித்துக் கொடுத்து விடுகிறார். அதன்படி பெற்றோரும் அறுவை மூலம் பிள்ளையைப் பிறக்க வைத்துவிட்டு, எதிர்காலத்துக்கான ஒரு வீரனையோ அன்றி வீராங்கனையையோ பெற்றெடுத்து விட்டதாகக் கூறி பெருமிதம் கொள்கின்றனர்.

ஆனால் இதுவொரு சரியான பிறப்பாக அமையாது. அதற்கான வேளைவந்து வயிறு நொந்து தானாகவே பிரசவிப்பதற்கும், உரியகாலத்திற்கு முன்னால் வலியே இல்லாமல் அல்லது வேதனையே தெரியாமல் அறுவை மூலம் சிசுவை வெளியே கொண்டு வருவதற்கும் அதிக வித்தியாசமுண்டு எனவும், இயற்கையின் நியதியை மீறி மனிதனால் செய்யப்படும் எந்த வெளிப்பாட்டுக்கும், ஜனனத்தோடு மரணத்திற்கும் கூட எந்தவித சாஸ்திர சம்பிரதாயமும் கிடையாதெனவும் இந்தியாவின் பிரபல சோதிட மேதையான வழுத்தூர் கோபால சர்மா அங்குள்ள பிரபல சோதிட சஞ்சிகையான *Astrological Magazine* இல் அண்மையில் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு குழந்தையானது எப்போது எந்நாளில் எத்தனை மணி நிமிட விநாடிகளில் பிறக்கும் அல்லது பிறக்க வேண்டுமென்பது யாருக்குமே தெரியாது. வைத்தியர்கள் குறிப்பிட்டுச் சொல்வதெல்லாம் வெறும் உத்தேசம்தான். அதுபோல ஒருவர் எப்போது இறக்கப் போகிறார் என்பதும் தெரியாது. தற்கொலை செய்து கொள்கிறவருக்குக் கூட அவரது சாவு பற்றி அவருக்கே நிச்சயமிராது. தற்செயலாக அவர் காப்பாற்றப்பட்டுவிட்டால் அவரால் அவரது இறப்பைக் கூட சரிவரச் செய்யமுடியாத கையாலாகாத்தனம் வெளிப்பட்டு விடும்.

இயற்கையைக் கையகப்படுத்திவிட்டதாகக் கூறி மனிதர்கள் தம்மிஷ்டப்படியே காடுகளை அழித்தும், பூமியைக் குடைந்தும் மலைகளைத் தகர்த்தும், நீர் நிலைகளை மூடி கட்டடங்கள் அமைத்தும், வனவிலங்குகளை அழித்தும், இடம் பெயரவைத்தும் இயற்கையின் சமநிலையை சீர்குலைக்க முனைகின்றபோது, பொறுத்தது போதுமென்று பொங்கியெழுந்து அது நிகழ்ந்ததும் அனர்த்தங்களை கண்ணாரக்கண்டும், அவற்றில் சிக்கி அவஸ்தைப்பட்டும் நமக்குப் புத்திவராதது நமது துரதிஷ்டமே!

பிறப்பு என்பது அவரவர் பூர்வ ஜென்ம வினைகளுக்கான சம்பாவனை. அதனை ஒவ்வொரு கால கட்டங்களிலும் இன்பமாகவும் துன்பமாகவும் அனுபவித்தே தீரவேண்டுமென்பது விதியாகும். அதனை நாம் நல்லநேரம், கிரக நிலைபார்த்து பூமியில் பிறக்க வைப்பதன் மூலம் நம்மால் மாற்றியமைத்து விடமுடியாது. அது இறைவனின் சித்தத்தை மீறுவதற்குச் சமமானதாகும்.

பவிஷ்ய புராணம் என்றொரு இதிகாசம் சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வேதவியாசர் என்ற மாமுனிவரால் எழுதப்பட்டது. இந்தியாவில் எந்த ஆட்சி எவ்வளவு காலம் நிகழும் என்பது பற்றி அச்சுவடிகளில் அப்போதே எதிர்வு கூறப்பட்டுள்ளது. வடதிசை நாடுகளிலிருந்து மொகலாயர்கள் படையெடுத்துவந்து இந்தியாவைக் கைப்பற்றி ஆளப்போவதனையும், அதன் பின் ஆங்கிலேயர்கள் வியாபார நோக்கில் வந்து படிப்படியாக முழுநாட்டையும் ஆக்கிரமித்து மக்களைப் பல வகையாலும் வருத்தி வரி வசூலித்து பல்லாண்டு காலம் ஆட்சி நடத்தப்போவதனையும் பற்றி ஏற்கனவே அந்நூற் சுவடிகளில் தீர்க்க தரிசனம் கூறப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | | ரா | |
| செ வி | நவாம்சம் | | |
| பு சுக் | | | சூ |
| ல சந் | கே | | சனி |

அப்புராணத்தில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் பின்னாளில் நூற்றுக்கு நூறுவீதம் நடந்தேறியுள்ளதை அவதானிக்கும்போது, அதனைப் புராணப்புளுகு என்றும் தள்ளிவிட முடியாது. மகாபாரமென்னும் மகாகாவியத்தை அருளிச் சென்றவரும் இதே வியாசர்தான். அப்படியானால் அதில் வரும் கிருஷ்ண பரமாத்மாவின் அவதாரத்தைக் கூறும் மகாபாகவதமும் பகவத்கீதையும் கூடபொய்யாகி விடுமல்லவா?

ஆனாலும் ஒரு விடயம்; தாயின் வயிற்றிலிருந்து சேயை அகற்றாவிடில் இருவரினதும் உயிருக்கே ஆபத்து ஏற்படலாமென்ற ஓர் இக்கட்டான நிலையில் அறுவை சிகிச்சை மூலம் சிசு வெளிக்கொணரப்படுவது வேறு விடயம். அதற்கும், நாள் நட்சத்திரம் நேரம் பார்த்து சிசேரியன் மூலம் சிசு வெளிக்கொணரப்படுவதற்கும் வித்தியாசமுண்டு. சிசேரியன் சிசுவுக்கு சாதகம் எழுதுவது மாத்திரமே சாஸ்திர விரோதமானதாகக் கொள்ளப்படுகிறது.

எப்படித்தான் காலநிலையை அவதானித்து பிறக்க வைத்தாலும், தலையெழுத்துப்படி எப்போது பிறக்க வேண்டுமென்பது விதியோ, அந்தத் திகதிக்குள்ள கிரக நிலைப்படிதான் வாழ்க்கை நடக்கும். எத்தகைய பலமான கிரக சஞ்சாரத்தை வைத்து பிறப்பை நிச்சயித்தாலும் கடையில் இவ்விதமே நடக்கும். பிறக்கவைக்கும் சுபயோக சுபதினத்திற்கும் நடைமுறை வாழ்க்கைக்குமிடையே தொடர்பிராது. எல்லாமே பொய்; மாயம் என்று தோன்றும்!

ஒரு சிசுவினுடைய உண்மையான பிறப்புக்காலம் எப்போதென்று கண்டுபிடிப்பது சோதிடத்தில் தேர்ந்த ஞானமும் அனுபவமும் உள்ளவர்களுக்கே சாத்தியமானது. அதுவும் அக்குழந்தையானது பிறந்த வளர்ந்து வாழ்க்கை நடத்துகிறபோது அதன் இயல்புகளையும் நடவடிக்கைகளையும், சோதனை சாதனைகளையும் வரிசைக் கிரமமாக அவதானித்தே அவர்களால் கண்டுபிடிக்க முடியும். ஆனாலும் சோதிடம் என்பது பிறப்பின் கிரக நிலைகளை வைத்து வாழ்வின் போக்கை நிர்ணயிப்பதற்கே எதிர்வு கூறுவதற்கே தவிர, பிறந்து வளர்ந்து வாழ்ந்த பிறகு அவருக்குரிய வாழ்வே இதுதான் தீர்மானிப்பதற்கல்ல என்று சோதிடமேதை கோபால சர்மா தமது கட்டுரையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**திருவோணம்**





## கோழி இறைச்சி, கோழி முட்டை வளர்ப்பில்

# சிறுபண்ணையாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்

நதிக்கரையோரங்களில் உருவாகிய மனிதனின் பண்டைய நாகரிகங்கள் படிப்படியாக பல்வேறு வகையான வளர்ச்சிகளை அடைந்து நவீன யுகத்தில் அவை உச்ச நிலையை அடைந்துள்ளன. எனினும், அன்று தொட்டு இன்றுவரை மனிதர்களுடன் பின்னிப் பிணைந்து உயிர் வாழுகின்ற பண்ணை ஜீவராசிகள் மனிதர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்பவையாக இன்றும் இருக்கின்றன. அவற்றுள் பறவை இனத்தைச் சேர்ந்த கோழி முக்கிய இடத்தை வகிக்கின்றது. எனினும் சங்க, சமய இலக்கியங்களில் மனிதர்கள் கோழி இறைச்சியையும் முட்டைகளையும் உணவாகக் கொள்வது பற்றிய குறிப்புகள் இல்லை.

எமது நாட்டின் போஷாக்கு மிக்க அசைவ உணவாக கோழி முட்டை இருந்து வருகின்றது. பரபரப்பான வேலை பளுமிக்க இன்றைய காலகட்டத்தில் முட்டைப் பாவனையின் தேவை எமது நாட்டில் மட்டுமின்றி உலக நாடுகளிலும் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. எமது நாட்டிலும் கிராமவாசிகள் மட்டுமின்றி நகரப் புறங்களில் வாழும் வறிய குடும்பத்தைச் சார்ந்த குடும்பங்களும் தமது வாழ்வாதாரத்துக்காக சிறியளவில் கோழிக்கூடுகளை அமைத்து முட்டைக் கோழிகளை வளர்த்து வருகின்றனர். முட்டைகளை பெற்றுக் கொள்வதற்காக மாத்திரமே கோழிகளை பண்ணைகளில் வளர்த்து வருகின்ற உற்பத்தியாளர்கள் எமது நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் உள்ளனர். குருநாகல் மாவட்டத்திலேயே கூடுதலான கோழிப்பண்ணையாளர்கள் முட்டைக்கான கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் முட்டை உற்பத்தி செய்வதை தமது நிரந்தரமான தொழிலாக மேற்கொண்டும் வருகின்றனர். எனினும் கோழிப்பண்ணை வைப்பது என்பது மிகவும் சவாலான தொழிலாகும் என்ற கருத்து பரவலானது. எமது நாட்டில் கோழி முட்டையின் பாவனை அதிகரித்துள்ளது. மீன், இறைச்சி ஆகியவற்றை வாங்குவதற்கு வசதிகள் இல்லாத போது எமது அடுத்த எளிமையான பரத உணவு கோழி முட்டையாகவே இருக்கும். முட்டை புரதச்சத்து நிறைந்த உணவாகும். நகர்ப்புற வேலைத்தலங்களுக்கும் பாடசாலைகளுக்கும் அரக்க பரக்க ஓடுபவர்களின் எளிமையான தெரிவாக முட்டை விளங்குகிறது. சாப்பாடு சுமார் எனக்கருதினால் நீங்கள் ஒரு முட்டையை பொரித்துக் கொண்டு சமாளித்து விடுவீர்கள்.

ஏனெனில் முட்டை உணவு கையடக்கமான உணவாகவும் இலகுவில் சமைத்து எடுக்கக் கூடிய உணவாகவும் இருப்பதே இதற்குக் காரணம். இதனால் பாடசாலை மாணவர்களின் உணவுப் பொதிகளிலும் முட்டை பிரதானமான இடத்தைப் பிடித்துள்ளது. ஆனால் எமது நாட்டில் முட்டை விலை ஏறுவதும் இறங்குவதுமான ஒரு தளம்பல் நிலையிலேயே காணப்படுகின்றது.

நகரப் புறங்களிலுள்ள சில்லறை விற்பனைக் கடைகளில் சிவப்பு முட்டையொன்று விலை 19 / = ரூபாவிற்கும் வெள்ளை முட்டையொன்று விலை 17.50 சதத்திற்கும் தற்போது விற்பனையில் உள்ளன. கிராமப்புற சில்லறைக் கடைகளில் சிவப்பு முட்டையொன்று 18.50 சதத்திற்கும் வெள்ளை முட்டையொன்று 16.50 சதத்திற்கும் விற்பனையாகிறது. முட்டைகளை விற்பனை செய்யும் மொத்த வியாபாரிகள் சிவப்பு முட்டையொன்றை 17/= ரூபாவிற்கும், வெள்ளை முட்டையொன்றை 16.50 சதத்திற்கும் விற்பனை செய்கின்றனர். கோழிப்பண்ணை வைத்திருக்கும் உரிமையாளர்கள் சிவப்பு முட்டையொன்றை 16/= ரூபாவிற்கும் மேலும் வெள்ளை முட்டையொன்றை 15.50 சதத்திற்கும் விநியோகம் செய்கின்றனர். முட்டை விலையில் ஸ்திரத்தன்மை பேணப்படுவதில்லை. கொரோனா காலத்தில் 10 ரூபாவுக்கு விற்பனையான முட்டை, இரண்டு வாரங்களுக்கு முன்னர் 37 ரூபா வரை உயர்ந்தது. அரசுடன் கலந்து ஆலோசித்தே முட்டை விலையை முட்டை உற்பத்தி பண்ணையாளர்கள் தீர்மானிக்கின்றனர் என்று கூறப்பட்டாலும் முட்டைக் கோழிகளுக்குரிய உணவுகளில் விலை குறைப்பு ஏற்படுவதில்லை.

500 முட்டைக் கோழிகளை தமது வீட்டோடுள்ள கோழிக் கூடுகளில் வளர்த்து வருகின்ற கொட்டராமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 42 வயதுடைய றீஸா மொகமட்டுடன் இது பற்றி பேசினோம். தனது மனைவியின் தந்தை செய்து வந்த கோழிப்பண்ணையை தான் தமது வாழ்வாதரத்துக்காக தொடர்ந்து செய்து வருவதாக சொல்லும் இவர், தனது குடும்பச் செலவுகள், பிள்ளைகளின் கற்றலுக்கான செலவுகள் உட்பட ஏனைய இதர செலவுகளுக்கு தனது முட்டை வர்த்தகத்தையே நாம் நம்பியிருப்பதாக இவர் தெரிவிக்கின்றார். உண்மையிலேயே நல்ல வருமானம் தரக்கூடிய தொழிலாகவே முட்டை வியாபாரம் இருக்கின்றது.

எனினும் கோழி வளர்ப்பு என்பது சுத்தம் சுகாதாரம் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒரு வர்த்தகத்துறை.

கோழிக் கூடுகளை சுத்தமான முறையில் வைத்துக் கொள்ள வேண்டும். உரிய கிருமிநாசினிகளைத் தெளிக்க வேண்டும். மழைக் காலங்களில் கோழிகளை பராமரிக்கும் போது விலங்கியல் மருத்துவர்களின் ஆலோசனைகளை பெறுவது அவசியம். கொரோனா தொடர் ஊரடங்கின்போது முட்டையொன்றின் சில்லறை விலை 10/= ரூபாவாக இறங்கியது. இதனால் நாடளாவிய ரீதியில் முட்டைப் பண்ணையாளர்கள் பாரிய நட்டத்தை அடைந்தனர்.

**நீர்கொழும்பு ருஸ்மான்**

முட்டை வியாபாரிகளும் பண்ணையாளர்களும் கோழிக் குஞ்சுகளை வாங்கி வளர்ப்பதில் தயக்கம் காட்டினர். எனினும் முட்டை வியாபாரம் கடந்த ஜூலை மாதம் முதல் மீண்டும் தலை தூக்கியது. இதேபோல கொரோனோ தொற்று பரவும் அபாயகரமான காலத்தில் இறைச்சிக்காக கோழி பண்ணையாளர்கள் அச்சமடைந்தனர். அப்போது ஒரு கிலோ புரோய்லர்ஸ் கோழி இறைச்சி 250 / = அல்லது 275 / = ரூபாவுக்கே விற்பனையாகின. இதனால் விற்பனை செய்து பண்ணைகளிலுள்ள கூடுகள் முற்றாகவே வெறிச்சோடிப் போயின. மேலும் புரொய்லர் வளர்க்கப்படுகின்ற கோழிக்குஞ்சுகளையும் கொரோனா தொற்றும் என்று கட்டி விடப்பட்ட கதையும் பண்ணையாளர்களை ஸ்தம்பிக்கச் செய்தது.

கோழி முட்டை மற்றும் கோழி இறைச்சி சந்தைகள் இறங்குமுகத்தில் இருக்கவே பண்ணையாளர்கள் மீள்வளர்ப்பில் தயக்கம் காட்டினர். சந்தை நிலவரங்களை பார்த்து முடிவெடுப்போம் என அவர்கள் காத்திருந்திருக்கலாம். இதனால் இறைச்சிக் கோழிகளின் உற்பத்தியில் பாரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டது. எமது நாட்டிலிருந்து கொரோனா வைரஸின் அபாயம் படிப்படியாக மறையவே இறைச்சிக்காக கோழிகளை வளர்ப்பதில் பண்ணையாளர்கள் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழிக் குஞ்சொன்று தற்போது 145/= ரூபாய்க்கு விற்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. முன்னர் 90 /= ரூபாய்க்கு விற்கப்பட்ட கோழிக்குஞ்சே தற்போது 145/= ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது. இறைச்சிக்கோழி வளர்ப்பில் ஒரு தளர்வு ஏற்பட்டதால் தற்போது கோழி இறைச்சியின் விலை அதிகரித்துள்ளது. இதனால் ஒரு கிலோ கோழி இறைச்சி 450 /= ரூபாய் அல்லது 500/= ரூபாய்க்கு சந்தையில் விற்பனையாகி வருகிறது. கோழி இறைச்சியின் விலையிலும் ஸ்திரத்தன்மை பேணப்படுவதில்லை.

பண்ணைகளில் முட்டையிடுவதற்கு வளர்க்கப்படும் கோழிகள் ஆறு மாதங்கள் பூர்த்தியானதும் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு முட்டையிடும். இதனாலேயே கோழிப்பண்ணைகளை நடத்தி வருகின்ற முட்டை உற்பத்தியாளர்கள் நஷ்டம் ஏற்பட்டபோதும் பண்ணைகளை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் முட்டைக்கான கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் புகழ்பெற்ற நிறுவனங்கள் உள்ளன. பிறீமா, பாயிறா, எஸ். ஜே. எஸ் மற்றும் நெல்பார்ம் ஆகிய நிறுவனங்கள் உள்ளன. இவ்வாறான நிறுவனங்கள் தமது பண்ணைகளில் உருவாக்கப்படும் கோழிக்குஞ்சுகளுக்கான உணவு தயாரிப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றன. இதனால் முட்டைக்கான கோழிக்குஞ்சுகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கிடையே சந்தையில் போட்டித் தன்மை காணப்படுகிறது. இவ்வாறான நிறுவனங்களின் உரிமையாளர்கள் தங்களது சந்தை மதிப்பை பேணும் வகையில் சிறந்த கோழிக்குஞ்சுகளை உருவாக்குவதில் கூடுதலான கரிசனை காட்டி வருகின்றனர். கோழிக் குஞ்சுகளின் விலை 350/= ரூபாய் மற்றும் 370/= என்பதாக தற்போது அதிகரித்துள்ளது. 110/= ரூபாய் மற்றும் 105/= ரூபாய் ஆகிய விலைகளில் இருந்த கோழிக்குஞ்சுகளின் விலைகளே 350 / = மற்றும் 370 / = ரூபாயாக அதிகரித்துள்ளது. இந்த விலைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும் என பண்ணையாளர்கள் விரும்புகின்றனர். முட்டைவிலை ஏற்றமும் இறக்கமுமாக இருப்பதால் ஒரு ஸ்திரவிலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என பண்ணையாளர்கள் கருதுவதால் இவ்விடயத்தில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி பண்ணையாளர்களுடன் ஆலோசனை செய்து முட்டையின் விலையைத் தீர்மானம் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. முட்டைக் கோழிகளுக்கும் அவ்வப்போது நோய்கள் ஏற்படும். முட்டைக்காக வளர்க்கப்படும் பண்ணைக் கோழிகளை பார்டீன், கம்போரி மற்றும் கொக்ஷி ஆகிய நோய்கள் தொற்றும். கோழிப் பண்ணைகளுக்கு அருகிலுள்ள அரச விலங்கியல் மருத்துவ நிலையங்கள் கோழிகளுக்கு நோய் தொற்றும் போது உரிய மருத்துவ சிகிச்சை வழங்கும்.

முட்டைக்கான கோழி வளர்ப்பில் கோழிப் பண்ணையாளர்கள் மாத்திரமின்றி குறைந்த வருமானமுடைய குடும்பங்களும் கூடுதலான ஆர்வம் காட்டி வருகின்றன. இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழிகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்பு இருப்பது போல் முட்டைகளின் தேவையும் தற்போது அதிகரித்துள்ளது. இவ்வாறான சுய தொழில் முயற்சிகளை குடிசைத் தொழிலாக மக்களிடையே நிலைபெறச் செய்ய விவசாய, கமத்தொழில் துறையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். இது பொதுமக்களின் எதிர்பார்ப்பு.



(படங்கள்: நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

SPMC

# பதவி வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுள்ள, சுறுசுறுப்புள்ள, சுயமாக சிந்தித்து செயலாற்றக்கூடிய மற்றும் தொழிலில் சாதனை படைக்க ஆர்வமுள்ளவர்களை SPMC உடன் இணைய நாம் அழைக்கின்றோம்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக உடல் உள தகுதியை உடையவராகவும் நாட்டின் எந்தப் பாகத்திலும் பணியாற்றுவதற்கான தகுதியையும் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
iii. அதிசிறந்த குணவியல்புகளை உடையவராக இருத்தல் வேண்டும்.

### 1. பிரதி பொது முகாமையாளர் - மனித வளங்கள் (ஏச்எம் 1-1)

**தொழில் வெகுமதி**

மனித வளங்கள் மற்றும் நிருவாக பிரிவு மற்றும் மனித வளங்கள் மற்றும் நிருவாகம் தொடர்பாக அனைத்து விடயங்களிலும் தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பொது முகாமையாளருக்கு பதிலிறுக்கும் வகையில் செயற்படல் வேண்டும். அதனது மனித வளங்கள் மற்றும் நிருவாக பிரிவு ஆகியவற்றிற்கு தலைமை தாங்கக்கூடிய உயர் திறன் மற்றும் பெறுபேறுகள் நோக்கமுள்ளவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகளுக்கானது**

(அ)(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து மனித வளங்கள்/ நிருவாகம் ஆகியவற்றில் மேல் பிரிவில் முதலாம் பட்டதாரிப் பட்டம் அல்லது உரித்தான துறையில் நிகரான தகைமை.

**அல்லது**

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து மனிதவளங்கள்/ நிருவாகம் ஆகியவற்றில் விஷேட பட்டதாரிப் பட்டம் அல்லது உரித்தான துறையில் நிகரான தகைமை.

**அல்லது**

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து மனித வளங்கள்/ நிருவாகம்/ சட்டம் ஆகியன அடங்கலான பட்டதாரிப்பட்டமொன்று அல்லது உரித்தான துறைக்கான நிகரான தகைமைகள்.

**அத்துடன்**

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நிகரான துறைக்கு மனித வளங்கள்/ முகாமைத்துவம்/ நிருவாகம் ஆகியவற்றில் பட்டப்பின் பட்டம் (முதுமாணி)

**அத்துடன்**

(இ) மனித வளங்கள் மற்றும் நிருவாகம் ஆகிய துறைகளுக்கு உரித்தான துறையில் அரசாங்க/ கூட்டுத்தாபனம் / சபை / நியதிச்சட்ட சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 12 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

### 2. பிரதி பொது முகாமையாளர் - தரக் கட்டுப்பாடு (ஏச்எம் 1-1)

**தொழில் வெகுமதி**

தர கட்டுப்பாட்டு பிரிவிற்கு தலைமைதாங்கவும் தரக்கட்டுப்பாடு தொடர்பாக அனைத்து விடயங்கள் தொடர்பாக தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பொது முகாமையாளருக்கு பதிலிறுக்கக்கூடிய வகையில் செயற்படல் வேண்டும். அதனது தரக் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு தலைமை தாங்கக்கூடிய உயர் திறன் மற்றும் பெறுபேறுகள் நோக்கமுள்ளவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகளுக்கானது:**

(அ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புடன் இரசாயனவியல் விஞ்ஞானமாணி பொது பட்டதாரிப்பட்டம் அல்லது உரித்தான துறைக்கான நிகரான தகைமைகள்.

**அல்லது**

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரசாயனவியலில் விஞ்ஞானமாணி விஷேட பட்டம் உரித்தான துறைக்கான நிகரான தகைமைகள்.

**அல்லது**

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரசாயனவியல் விஞ்ஞானமாணி பொது பட்டதாரிப்பட்டம் அல்லது உரித்தான துறைக்கான நிகரான தகைமைகள்

**அத்துடன்**

(ஆ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பகுப்பாய்தல் இரசாயனவியலுக்கு அல்லது வேறேதாவது விஞ்ஞான பரிசோதனை மருந்துப் பொருட்களில் பகுப்பாய்வு தொடர்பான முதுமாணிப் பட்டம்.

**அல்லது**

(ii) இரசாயனவியல் நிறுவகத்தின் கூட்டுரு அங்கத்துவம்.

**அத்துடன்**

(இ) விஞ்ஞான ரீதியிலான மதிப்பீடு/ ஆய்வுகூட பரீட்சித்தல்/ மருந்துகளின் உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி/உணவு ஆகிய துறைகளுக்கு உரித்தான துறையில் அரசாங்க/ கூட்டுத்தாபனம்/ சபை/ நியதிச்சட்ட சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 12 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

### 3. பிரதி பொது முகாமையாளர் -உருவாக்கம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (ஏச்எம் 1-1)

**தொழில் வெகுமதி**

ஆராய்ச்சி மற்றும் உருவாக்கம் அபிவிருத்தி பிரிவின் தலைமையக மற்றும் ஆராய்ச்சி மற்றும் உருவாக்கம் தொடர்பாக அனைத்து விடயங்களிலும் தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பொது முகாமையாளருக்கு பதிலிறுக்கும் வகையில் செயற்படல் வேண்டும். அதனது உருவாக்கம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுகளுக்கு தலைமை தாங்கக்கூடிய உயர் திறன் மற்றும் பெறுபேறுகள் நோக்கமுள்ளவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகளுக்கானது**

(அ)(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புடன் இரசாயனவியல் விஞ்ஞானமாணி பொது பட்டதாரிப்பட்டம் அல்லது உரித்தான துறைக்கான நிகரான தகைமைகள்.

**அல்லது**

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரசாயனவியலில் விஞ்ஞானமாணி விஷேட பட்டம் உரித்தான துறைக்கான நிகரான தகைமைகள்.

**அல்லது**

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரசாயனவியல் விஞ்ஞானமாணி பொது பட்டதாரிப்பட்டம் அல்லது உரித்தான துறைக்கான நிகரான தகைமைகள்

**அத்துடன்**

(ஆ)(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பகுப்பாய்தல் இரசாயனவியலுக்கு அல்லது வேறேதாவது விஞ்ஞான ரீதியிலான முதுமாணிப் பட்டம்.

**அல்லது**

(ii) இரசாயனவியல் நிறுவகத்தின் கூட்டுரு அங்கத்துவம்.

**அத்துடன்**

(இ) விஞ்ஞான ரீதியிலான மதிப்பீடு / ஆய்வுகூட பரீட்சித்தல்/ மருந்துகளின் உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி/ உணவு ஆகிய துறைகளுக்கு உரித்தான துறையில் அரசாங்க/ கூட்டுத்தாபனம்/ சபை/ நியதிச்சட்ட சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 12 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

### 4. பிரதி பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் (ஏச்எம் 1-1)

**தொழில் வெகுமதி**

சந்தைப்படுத்தல் பிரிவின் தலைமையாகவிருந்து சந்தைப்படுத்தல் தொடர்பான அனைத்து விடயங்களிலும் தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பொது முகாமையாளர் ஆகியோருக்கு பதிலிறுக்கும் தன்மையில் செயற்படுதல். அதனது சந்தைப்படுத்தல் பிரிவிற்கு தலைமைதாங்குவதற்கான உயர் திறன், பெறுபேறுகள் நோக்கமுள்ள தனிநபரை அழைக்கின்றது.

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகளுக்கானது**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட சந்தைப்படுத்தல்/ வர்த்தகம்/ வியாபார நிருவாகம் ஆகியவற்றில் பெறப்பட்ட முதலாம் பட்டதாரிப் பட்டம் அல்லது விஞ்ஞானமாணி விஷேட பட்டம்.

**அத்துடன்**

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சந்தைப்படுத்தல் / வர்த்தகம் / வியாபார நிருவாகம் ஆகிய துறைகளுக்கு உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின் பட்டம் (முதுமாணி)

**அத்துடன்**

(இ) சந்தைப்படுத்தலுக்கு உரித்தான துறையில் முகாமைத்துவ மட்டத்தில் அரசாங்கம்/ கூட்டுத்தாபனம் / சபை / நியதிச்சட்ட அமைப்பு அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் ஆகக் குறைந்தது 12 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**மேலேயுள்ள (1) இலிருந்து (4) வரையிலான பதவிகளுக்கான தகைமைகள்: உள்ளக விண்ணப்பதாரிகளுக்கானது**

பதவிக்குரித்தான பாடப்பரப்பில் I ஆம் தரத்தில் முகாமையாளர் வகுதியில் (எம்எம் 1-1) ஆகக் குறைந்தது இரு (2) வருட திருப்திகரமான தொடர்ச்சியான சேவை.

**மேலேயுள்ள (1) இலிருந்து (4) வரையிலான பதவிகளுக்கான பொதுவானது**

**சம்பள அளவுத்திட்டம்:** ஏச்எம் 1-1-2016 – 80,295/= – 15 x 2,270/= – 114,345 ரூபா.

**வயது:** 35 வருடங்களுக்கு குறையாமலும் 55 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

**ஆட்சேர்ப்பு முறைமை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்றின் மூலமாக நடாத்தப்படும்.

**மேலேயுள்ள (1) இலிருந்து (4) வரையிலான பதவிகளுக்காக ஏனைய நன்மைகள்:**

- கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது சொந்த வாகனமெனின் PED 1/2015(i) என்ற இலக்கமுடைய சுற்றறிக்கையின் பிரகாரம் படி வழங்கப்படும்.
- எரிபொருள் படி: மாதத்திற்கு 120 லீட்டர் டீசல் அல்லது பெற்றோல்.

### 5. முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் பெறுகை (எம்எம் 1-1 – II ஆம் தரம்)

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகளுக்கானது:**

(அ)(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட விஞ்ஞானமாணி பட்டம்/ வர்த்தகத்தில் பெற்ற பட்டதாரிப் பட்டம்.

**அல்லது**

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின்/ நிறுவனமொன்றின் வேறேதாவது நிகரான பட்டதாரிப் பட்டம்.

**அத்துடன்**

(ஆ) கணனி அறிவு

**அத்துடன்**

(இ) திட்டமிடல் மற்றும் பெறுகை, உள்ளூர்/ வெளிநாட்டு பெறுகை / கொள்வனவு ஆகியவற்றிற்கு உரித்தான துறையில் அரசாங்க / கூட்டுத்தாபனம்/ சபை / நியதிச்சட்ட சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் ஆகக் குறைந்தது 5 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**தகைமைகள்: உள்ளக விண்ணப்பதாரிகளுக்கானது.**

1. வெளியக விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள தகைமையை பெற்றிருத்தல்.

**அல்லது**

2. பதவிக்குரித்தான பாடப் பரப்பில் கனிஷ்ட முகாமையாளர் வகுதியில் (ஜேஎம் 1-1) பதவியொன்றில் ஆகக் குறைந்தது 5 வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

- **சம்பள அளவுத்திட்டம்:** எம்எம் 1-1-2016 – 53,175/= – 10 x 1,375/= – 15 x 1,910/= – 95,575 ரூபா.
- **வயது:** 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். மேல் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப்படுத்தப்படமாட்டாது.
- **ஆட்சேர்ப்பு முறைமை:** எழுத்து மூலமான போட்டி ரீதியிலான பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை.

### 6. மருந்தாக்க தொழில்நுட்பவல்லுநர் - உற்பத்தி (ஜேஎம் 1-1- II ஆம் தரம்)

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகள்:**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து மருந்தியல், இயற்கை விஞ்ஞானம் **அல்லது** பொறியியலில் பெற்ற முதலாம் பட்டம் அல்லது நிகரான தகைமைகள்.

**அத்துடன்**

(ஆ) கணனி அறிவு

**அத்துடன்**

(இ) மருந்தாக்கல் உற்பத்தி துறையில் ஒரு வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**தகைமைகள்: உள்ளக விண்ணப்பதாரிகளுக்கானது:**

1. வெளியக விண்ணப்பதாரிகளுக்காக மேலே தேவைப்படுத்தப்பட்டுள்ள தகைமைகளை பெற்றிருத்தல்.

**அல்லது**

2. பதவிக்குரித்தான பாடப்பரப்பில் II ஆம் தர முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல் (எம்ஏ 2-1) பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பளத்திட்டம்:** ஜேஎம்-1-1-2016 – 42,600/= – 10 x 755/= – 18 x 1135/= – 70,580 ரூபா.

**வயது:** 22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

- **ஆட்சேர்ப்பு முறைமை:** எழுத்து மூலமான போட்டி ரீதியிலான பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை.

### 7. களஞ்சியசாலை பொறுப்பாளர் (எம்ஏ-2-1 IIIஆம் தரம்)

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகளுக்கானது**

**(அ) கல்விசார்:**

(i) க.பொ.த (சா-த) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் அடங்கலாக 4 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

(ii) க.பொ.த (உ-த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) (பொது வினாத்தாள் நீங்கலாக) விஞ்ஞான துறையில் 2 பாடங்களில் சித்தி.

**அல்லது**

க.பொ.த (உ-த) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) விஞ்ஞான துறையில் 2 பாடங்களில் சித்தி

**அத்துடன்**

(iii) கணனி அறிவு

**அத்துடன்**

**(ஆ)** அரச கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு வருட தகைமைப்பட்ட அனுபவம்.

**அத்துடன்**

**(இ) வாழ்தொழில்:**

தேசிய வாழ்தொழில் தகைமை 5ஆம் மட்டத்திற்கு நிகரான கொள்வனவு செய்தல் அல்லது பொருட்பதிவேடு முகாமைத்துவத்தில் டிப்ளோமா.

### 8. திட்டமிடல் மற்றும் பெறுகை உதவியாளர் - (எம்ஏ-2-1- III ஆம் தரம்)

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகளுக்கானது**

**(அ) கல்விசார் தகைமைகள்:**

(i) க.பொ.த (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் அடங்கலாக 4 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

(ii) க.பொ.த (உ.த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) (பொது வினாத்தாள் நீங்கலாக) விஞ்ஞான துறையில் 2 பாடங்களில் சித்தி.

**அல்லது**

க.பொ.த (உ.த) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) விஞ்ஞான துறையில் 2 பாடங்களில் சித்தி

**அத்துடன்**

(iii) கணனி அறிவு

**அத்துடன்**

**(ஆ)** அரச கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு வருட தகைமைப்பட்ட அனுபவம்.

**அத்துடன்**

**(இ) வாழ்தொழில்:**

தேசிய வாழ்தொழில் தகைமை 5ஆம் மட்டத்திற்கு நிகரான கொள்வனவு செய்தல் அல்லது பொருட்பதிவேடு முகாமைத்துவத்தில் டிப்ளோமா.

### 9. தொழில்நுட்ப உதவியாளர் - உருவாக்கம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (எம்ஏ-2-1 IIIஆம் தரம்)

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகளுக்கானது**

**(அ) கல்விசார் / வாழ்தொழில்**

(i) க.பொ.த (சா-த) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் அடங்கலாக 4 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

(ii) க.பொ.த (உ-த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) இரசாயனவியலில் திறமைச் சித்தியொன்றுடன் (பொது வினாத்தாள் நீங்கலாக) 2 திறமைச் சித்திகளுடன் 3 விஞ்ஞான பாடங்களில் சித்தி.

**அல்லது**

க.பொ.த. (உ-த) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) இரசாயனவியலில் திறமைச் சித்தியொன்று அடங்கலாக 2 திறமைச் சித்திகளுடன் 3 விஞ்ஞான பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

(iii) கணனி அறிவு சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**அத்துடன்**

(iv) புகழ் வாய்ந்த ஆய்வுகூடமொன்றில் மூன்று (3) வருட பகுப்பாய்வு அனுபவம்.

**(ஆ) பயிலுனர்களின் ஆட்சேர்ப்பு:** மேலேயுள்ள (i), (ii) மற்றும் (iii) தகைமைகளுடன் பயிலுனர்களாக ஆட்சேர்த்தல்.

உட்சேவை பயிற்சிக் காலப்பகுதியில்1 ½ வருடங்களை (தேசிய வாழ்தொழில் தகைமை – 5ஆம் மட்டத்திற்கு நிகரானது) பயிலுனர் தொழில்நுட்ப உதவியாளராக (FD&R) SPMC இல் பூர்த்தி செய்த பின்னர், எழுத்து மூலமான பரீட்சையில் சித்தியடைதல் என்பன உருவாக்கம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்ப உதவியாளராக நிரந்தர பதவி எண்ணிக்கைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கான முன்தகைமைகளாகும்.

**(இ)** பயிற்சி காலப்பகுதியில் அவர்களுக்கு படியொன்று வழங்கப்படும்.

### 10. தரக் கட்டுப்பாட்டு உதவியாளர் (எம்ஏ-2-1- IIIஆம் தரம்)

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகள்**

**(அ) கல்விசார்/வாழ்தொழில்:**

(i) க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், மற்றும் கணிதம் அடங்கலாக 04 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி.

**மற்றும்**

(ii) க.பொ.த (உ/த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) பொது வினாத்தாள் நீங்கலாக 02 திறமைச் சித்திகள் அடங்கலாக இரசாயனவியலில் திறமைச் சித்தி அடங்கலாக 03 விஞ்ஞான பாடங்களில் சித்தி.

**அல்லது**

க.பொ.த (உ/த) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) இரசாயனவியலில் திறமைச் சித்தி அடங்கலாக 2 திறமைச் சித்திகளுடன் 3 விஞ்ஞான பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

(iii) கணனி அறிவு சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**அத்துடன்**

(iv) புகழ்பெற்ற மருந்தாக்கல் உற்பத்தி அமைப்பொன்றில் இரு (2) வருட அனுபவம்.

**(ஆ) பயிலுனர்களை ஆட்சேர்த்தல்:** மேலேயுள்ள **(i), (ii)** மற்றும் **(iii)** இற்கான தகைமைகளுடன் பயிலுனர்களை ஆட்சேர்த்தல்.

அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தில் தரக் கட்டுப்பாட்டு உதவியாளர் பயிலுனராக 5 ஆம் மட்ட தேசிய வாழ்தொழில் தகைமைக்கு நிகரான 1 ½ வருட உட்சேவை பயிற்சிக் காலத்தை பூர்த்தி செய்தல் மற்றும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைதல் ஆகியன தரக்கட்டுப்பாட்டு உதவியாளர் நிரந்தர பதவி எண்ணிக்கைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கான முன்தகைமைகளாகும்.

**(இ)** பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு படியொன்று வழங்கப்படும்.

### 11. மருந்தாக்கல் தொழில்நுட்பவியலாளர் - உற்பத்தி (எம்ஏ -2-1- IIIஆம் தரம்)

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகள்**

**(அ) கல்விசார்:**

(i) க.பொ.த. (சா-த) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகியன அடங்கலாக 4 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

(ii) விஞ்ஞான துறையில் (பொது வினாத்தாள் நீங்கலாக) க.பொ.த (உ-த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) 2 பாடங்களில் சித்தி.

**அல்லது**

க.பொ.த (உ-த) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) 2 பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

(iii) மருந்தாக்கல் உற்பத்தி தொழிற்சாலையில் நிரந்தர ஊழியராக ஆகக் குறைந்தது 2 வருட உற்பத்தி அனுபவம்.

**(ஆ) பயிலுனர்களின் ஆட்சேர்ப்பு:** மேலேயுள்ள (i) மற்றும் (ii) உடன் பயிலுனர்களாக ஆட்சேர்த்தல்.

அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தில் பயிலுனர் மருந்தாக்கல் தொழில்நுட்பவியலாளர்-உற்பத்தியாளராக 1 1/2 வருடங்கள் பயிற்சி காலப்பகுதி (5 ஆம் மட்ட தேசிய வாழ்தொழில் தகைமைக்கு நிகரானது) பூர்த்தி செய்த பின்னர் எழுத்து மூலமான பரீட்சையில் சித்தியடைதல் ஆகியன மருந்தாக்கல் தொழில்நுட்பவியலாளர்-உற்பத்தியாளராக நிரந்தர பதவி எண்ணிக்கைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கான முன்தகைமைகளாகும்.

**(இ)** பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு படியொன்று வழங்கப்படும்.

### 12. கணக்கு பேணுபவர் - (எம்ஏ-2-1 – III ஆம் தரம்)

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகள்**

**(அ) கல்விசார்:**

(i) க.பொ.த (சா-த) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியன அடங்கலாக 4 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

(ii) க.பொ.த (உ-த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) - விஞ்ஞானம் அல்லது வர்த்தக துறை விரும்பத்தக்கது பொது வினாத்தாள் நீங்கலாக 2 பாடங்களில் சித்தி.

**அல்லது**

க.பொ.த (உ-த) பரீட்சையில் - (பழைய பாடத்திட்டம்) விஞ்ஞானம் அல்லது வர்த்தக துறை விரும்பத்தக்கது - 2 பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

**(ஆ) வாழ்தொழில்:**

(i) தேசிய வாழ்தொழில் தகைமை 5 ஆம் மட்டத்திற்கு குறையாமல் நிருவாக கணக்காளர்கள் நிறுவகத்தின் இடைநிலை பரீட்சையில் சித்தி.

**அல்லது**

(ii) தேசிய வாழ்தொழில் தகைமை 5 ஆம் மட்டத்திற்கு குறையாமல் Associate Member of the Institute of Book Keepers.

**அல்லது**

(iii) AAT இன் இறுதிப் பரீட்சையில் சித்தி.

**அல்லது**

(iv) NVQ 5ஆம் மட்டத்திற்கு குறையாத, கணக்கு பேணுவதுடன் தொடர்புடைய வேறு ஏதாவது சான்றிதழ் பாடநெறி.

**அத்துடன்**

**(இ)** கணனி அறிவு

**அத்துடன்**

**(ஈ)** அரசாங்க/ கூட்டுத்தாபன/ சபை/ நியதிச்சட்ட சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் அல்லது கணக்காய்வு நிறுவனமொன்றில் கணக்கு பேணுபவர் அல்லது கணக்கிடல் எழுதுவினைஞராக ஆகக் குறைந்தது 3 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**தகைமைகள்: பதவிக்கான உள்ளக விண்ணப்பதாரிகள் (06) இலிருந்து (12) வரையிலானது.**

க.பொ.த. (சா-த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் அடங்கலாக இரு அமர்வுகளில் நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியுடன் ஆரம்ப மட்டம் - தேர்ச்சியற்ற, ஓரளவு தேர்ச்சியுள்ள, தேர்ச்சியுள்ள வகுதிகளில் SPMC இன் ஊழியராகவிருத்தல் அத்துடன் உரித்தான அனுபவத்தை பெறுதல் உட்பட்டதாக நிரந்தரமான பதவியில் 5 வருட திருப்திகரமானதும் தொடர்ச்சியானதுமான சேவை.

- **சம்பள அளவுத்திட்டம்:** எம்ஏ-2-1-2016: 30,310/= - 10x 300/= – 7x350/= – 4x495/= - 20x660/= - 50,940 ரூபா.
- **வயது:** 18 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். மேல் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது.
- **ஆட்சேர்ப்பு முறைமை:** எழுத்து மூலமான போட்டி ரீதியிலான பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை.

### 13. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பவியலில்லாதது) எம்ஏ-1-1-III ஆம் தரம்

**தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகள்**

(அ) க.பொ.த (சா-த)பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் வேறேதாவது ஒரு பாடம் அடங்கலாக 4 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

(ஆ) (i) பொது வினாத்தாள் நீங்கலாக க.பொ.த (உ-த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) 2 பாடங்களில் சித்தி.

**அல்லது**

(ii) க.பொ.த (உ-த) பரீட்சையில் - (பழைய பாடத்திட்டம்) 2 பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

(இ) கணனி அறிவு அத்துடன் ஆகக் குறைந்தது ஒரு நிமிடத்திற்கு 35 சொற்கள் வீதம் தட்டெழுத்து வேகம்.

**அத்துடன்**

(ஈ) அரசாங்க கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு வருட தகைமைப்பட்ட அனுபவம்.

**குறிப்பு:** Microsoft Office அல்லது Open Office Packagesகளில் திறன் இருப்பது சேர்க்கப்பட்ட தகைமையாகக் கருதப்படும்.

**தகைமைகள்: உள்ளக விண்ணப்பதாரிகளுக்கானது (13)**

க.பொ.த. (சா-த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் அடங்கலாக இரு அமர்வுகளில் நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியுடன் ஆரம்ப மட்டம் - தேர்ச்சியற்ற, ஓரளவு தேர்ச்சியுள்ள, தேர்ச்சியுள்ள வகுதிகளில் SPMC இன் ஊழியராகவிருத்தல் அத்துடன் உரித்தான அனுபவத்தை பெறுதல் உட்பட்டதாக நிரந்தரமான பதவியில் 5 வருட திருப்திகரமானதும் தொடர்ச்சியானதுமான சேவை.

**பதவிக்கான பொதுவானது (13)**

- **சம்பள அளவுத்திட்டம்:** எம்ஏ 1-1-2016: 27,910/- - 10x 300/- - 7x 350/- - 4x495/- -20x660/- - 48,540 ரூபா.
- **வயது:** 18 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
- **ஆட்சேர்ப்பு முறைமை:** - எழுத்து மூலமான போட்டி ரீதியிலான பரீட்சை மற்றும் கட்டமைப்பான நேர்முகப் பரீட்சை.

**மேலதிகமான நன்மைகள்:**

- வரவு மற்றும் செயற்பாட்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவு.
- பயன்படுத்தப்படாத வருடாந்த மற்றும் சுகவீன விடுமுறைக்கான பணக்கொடுப்பனவு.
- மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் மருத்துவ மீள்நிரப்பல் திட்டம்.
- சம்பளத்தின் 15% ஐ ஊசேநி இற்கு கூட்டுத்தாபனம் செலுத்தும் அதே வேளையில் ஊழியரானவர் 10% ஐ பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
- கூட்டுத்தாபனம் சம்பளத்தின் 3% ஐ ஊநநி இற்கு செலுத்தும்.

**பொதுவான பணிப்புரைகள்:**

- விண்ணப்பமானது விதிக்கப்பட்ட படிவத்தை பயன்படுத்தி உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு விபரங்கள் ஆகியவற்றை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்துடன் அனைத்து கல்விசார் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்ப படிவமானது **http://www.spmclanka.lk** என்ற அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.
- அரசாங்க திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவைகளின் நிறுவனங்களின் தலைமையூடாகவே அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் அவர்கள் விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் நியமனத்தை ஏற்றுக் கொள்வதற்காக விடுவிக்கப்படலாம் என்பதை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
- விண்ணப்பத்தை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை எழுதுவதுடன் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட 10 நாட்களுள் விண்ணப்பமானது பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
- மேலேயுள்ள தேவைப்படுத்தல்களுக்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவள தோட்டம், இரத்மலான.**

சற்றே நீண்ட சிறுகதை

# சைக்கோ

பாலா. சங்குப்பிள்ளை

(கடந்த வாரத் தொடர்)

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை கண்டிக்கு வந்து விட்டான். இன்று புதன்கிழமை – கௌசல்யா அவனை அவசரமாக புறப்பட்டு வரச் சொன்னாள். இதோ ரயிலில் புறப்பட்டு விட்டான்.

சுகுமார் இருக்கையில் அமர்ந்தான். அவன் மனம் எண்ணியது. இந்த முறையாவது கௌசல்யாவிடம் மனம் விட்டு பேசி விட வேண்டும். எப்படியாவது அவன் மனதில் உள்ளதை அவளிடம் சொல்லிவிட வேண்டும். கையருகே கனிகனிந்து தொங்கும்போது உடனடியாக அதை கையகப் படுத்ததாவிட்டால் அப்புறம் அதுகைமாறி விடக் கூடும்.

அடுத்தநாள் – காலை சுகுமார் தலவாக்கலையிலிருந்து நுவரெலியா நோக்கிப் புறப்பட்டான். அவன் மனதில் இன்னமும் குழப்பமிருந்தது. வழமையாக மாதத்தில் இரண்டு முறையாவது அவன் பெற்றோரைப் பார்க்க நானோயா போய் விடுவான். ஆனால் எப்போது கௌசல்யாவை சந்தித்தானோ அன்றிலிருந்து அவன் வீட்டுப் பக்கமே போக வில்லை. எப்படியாவது அவளிடம் சம்மதம் வாங்கி விட்டால் அந்த நிமிஷமே பெற்றோரை சந்தித்து விடலாமென்று நினைத்திருந்தான். ஆனால் இதுவரை அது நடக்கவில்லை.

சுகுமார் கௌசல்யாவின் வீட்டையடைந்த போது காலை பதினொரு மணி. அவள் முகம் குழப்பத்திலிருந்தது.

“அண்ணனோட மரண அறிக்கை சம்பந்தமாக விசாரிக்க இன்ஸ்பெக்டர் பார்த்திபன்னு ஒருத்தர் வந்திருந்தாரு. அப்போ... பேச்சி வாக்குல ரெண்டு நாளைக்கு முன்னால அதாவது ஞாயிற்றுக்கிழமை காலையில மார்க்கஸ்தொட்ட பகுதியில் பாலத்துக்கு கீழே முகம் சிதைஞ்சிப் போன நிலையில சடலம் ஒண்ணை கண்டுபிடிச்சாங்களாம். ஆரம்பக் கட்ட விசாரணையில் அவர் பேரு மனோகர்ன்னு தெரிஞ்சிச்சாம். எனக்கு தூக்கி வாரிப்போட்டுச்சி. அது சிலவேளை உங்களோட நண்பர் மனோகரா இருப்பாரான்னு. ஏன்னா அவரு சம்பவம் நடந்த ஞாயிற்றுக்கிழமைக்கு முதல் நாள் பகல் அதாவது சனிக்கிழமை என்னை சந்திக்க வாறதா சொன்னாரு. ஆனா வரலை. நாள் பொலிஸ் கிட்ட எதுவும் சொல்லலை. நீங்க மனோகரை கண்டிங்களா... கைபேசியில் பேசி பாருங்களேன்...”



சுகுமாருக்கு மனம் படபடவென அடித்துக்கொண்டது. உடல் முழுவதும் வியர்த்தது. வார்த்தைகள் உதடுவரை வந்து காற்றோடு கரைந்துப் போனது. “கௌசல்யா... மனோகர் ரெண்டு மூணுநாளா காரியாலயத்துக்கும் வரலை. கைபேசி செயல் இழந்து போயிருக்கு அநேகமா மனோகர் காரியாலய விஷயமா கொழும்பு போயிருக்கலாம்.. எனக்கு காரியாலயத்துல ஓய்வில்லாத வேலை... அதுனால மனோகரைப் பற்றியே சிந்திக்கவில்லை..

“மனோகர் போனவாரம் என்கிட்ட கைபேசி மூலமா ரொம்ப நேரம் பேசினாரு... அவரு உங்களைப் பத்திதான் பேசினாரு...” சுகுமாருக்கு முகம் வியர்த்தது. கோபம் தலைக்கேறியது.

“ஏ... என்னைப் பற்றி என்னை சொன்னான்...?”

“மனோகர் என்னை விரும்பினாராம். அதை சொல்ல பல முறைமுயற்சி செய்தாராம். ஆனா அப்புறம் தான் தெரிஞ்சதாம் நீங்கத்தான் என்னை நேசிக்கிறீங்கன்னு. உங்களைப் பத்தி உயர்வா சொன்னாரு... எனக்கு நீங்க தான் பொருத்தமானவருன்னும் சொன்னாரு...”

சுகுமார் – அதிர்ச்சி, ஆச்சரியம், படப்படப்புடன் அவளைப் பார்த்தான்.

“நீங்க உண்மையாகவா சொல்லுறீங்க... மனோகர் அப்படியா... சொன்னான்... நீங்க என்ன சொன்னீங்க...?”

“நீங்க எல்லாருமே அண்ணனோட மரணம் சம்பந்தமான விஷயத்துல எவ்வளவோ உதவி செஞ்சீங்க. என்னால் அதை மறக்க முடியலை. உங்க மேலயும் அப்படிதான் ஒரு அன்பு இருக்கு... ஆனா... எதிர்காலத்துல சில வேளை உங்க மேல எனக்கு அதீத அன்பு ஏற்படலாம். இப்போதைக்கு இதைத்தான் என்னால சொல்ல முடியும். அண்ணனோட இழப்பு என்னை ரொம்ப பாதிச்சிடுச்சி... அதுமாற கொஞ்சக்காலம். அதுவரை காத்திருப்பீர்களா?”

“நிச்சயமா கௌசல்யா.. எவ்வளவு நாள் வேணும்னாலும் காத்திருப்பேன். எனக்கு டவுண்ல ஒரு வேலை இருக்கு முடிச்சிட்டு நேரம் இருந்தா வந்துட்டுப் போறேன்...”

சுகுமார் – வெளியே வந்தான். அவனுக்கு படப்படப்பு நீங்கவில்லை. மனோகரை தன் பரம எதிரியாக நினைத்திருந்தான். ஆனால்... அதற்குள் அவசரப்பட்டு....!

சுகுமார் – டவுனை நோக்கி நடந்தான். அப்போது அவன் கைபேசி சிணுங்கியது. அவன் அதை பையிலிருந்து கையிலெடுத்தான்.

“மனோகர் விஷயமா பேச வேண்டியிருக்கு... இன்றைக்கு சரியா மாலை ஆறுமணிக்கு நான் சொல்லுற இடத்துக்கு வந்திடணும். தனியா வரணும்... பஸ்ல புறப்பட்டு இறங்கி அங்கேயிருந்து தனியா வரணும். நேர்ல பேசலாம் இதை யார் கிட்டயும் சொல்லக்கூடாது...”

சுகுமார் ஏற்கனவே பல்வேறு குழப்பத்துடன் அதிர்ந்து போயிருந்தான். இப்போது இப்படியொரு கைபேசி தகவல் நிச்சயமாக போயாக வேண்டும் என்று முடிவுசெய்துக் கொண்டான்.

அது டவணுக்கு பக்கத்தில் அமைந்திருந்த தோட்டம். சுந்தரம் போதை ஓரளவு தெளிந்த நிலையில் கட்டிலை விட்டு எழுந்தபோது மாலை ஆறுமணி செவ்வந்தி ஏற்கனவே போயிருந்தாள்.

சுந்தரத்தின் மனைவி பார்வதி இறந்து ஒருவருடமாகி விட்டது. அவள் இறந்த பத்தாவது நாளே ஏற்கனவே தொடர்பு வைத்திருந்த செவ்வந்தி அங்கே வந்து போக ஆரம்பித்துவிட்டாள். சுந்தரத்தின் ஒரே மகன் அழகுமணிக்கு பத்து வயது. தோட்டப் பாடசாலையில் படிக்கிறான். அவனுக்கு அம்மா என்றால் உயிர். குடிக்கார அப்பாவுக்கும் அம்மாவுக்கு தினமும் சண்டைதான். ஆரம்பத்தில் வாய் பேச்சில் மட்டுமிருந்த சண்டை பின்பு அடிதடியாக மாறியது. சுந்தரம் மிருகமாக மாறி பார்வதியின் தலைமயிரை வளைத்துப் பிடித்து அடிப்பான். அம்மாவை காப்பாற்றப் போகும் அழகுமணிக்கும் அடி விழும். ஒரு நாள் இரவு பத்து மணியிருக்கும். வழமைப்போல சண்டை நடந்தது. காலையில் கண் விழித்த அழகு மணியின் காதில் அப்பாவின் அலறல் கேட்கவே படுக்கையைவிட்டு எழுந்து ஓடினான். அவன் அம்மா குசினியில் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள்.

அவனால் அம்மாவின் இழப்பை தாங்க முடியவில்லை. அதையும் தாண்டி அம்மா தானாக தூக்கில் தொங்கவில்லை அவன் தந்தைதான் அந்தப் படுபாதகத்தை செய்திருக்க வேண்டுமென்று அழகுமணி உறுதியாக நம்பினான். அம்மாவின் மறைவுக்குப்பின் சுந்தரம் மகனை கண்டுக்கொள்வதில்லை. சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் சாராயத்துக்கும் செவ்வந்திக்கும் செலவு செய்தான். பக்கத்து லயத்தில் சுந்தரி இருந்தாள். அவள் இளம் விதவை. யாருமற்ற அனாதை. தோட்டத்தில் வேலை செய்த அவளுக்கு அழகுமணி மேல் பாசம். அவனை அழைத்து சாப்பாடு கொடுப்பாள். கொப்பி புத்தகம் வாங்க பணம் கொடுப்பாள். தன் சொந்த மகனைப் போல அவனை பார்த்துக் கொண்டாள்.

அழகுமணிக்கு மூன்றாம் தவணை பரீட்சை இருந்தமையினால் சுந்தரியுடனேயே இருந்து படிக்கத் தொடங்கினான். அன்று அமாவாசை கும்மிருட்டு அதிகாலை மூன்று மணியிருக்கும். தொழிலாளர்கள் கூச்சலிட்டவாறு ஓடும் சத்தம் கேட்கவே சுந்தரி திடுக்கிட்டு எழுந்தாள். அழகுமணியை எழுப்பினாள். வெளியே வந்த போது ஏதோ லயம் தீயில் எரிவதாக யாரோ சொல்ல சுந்தரி அழகுமணியையும் கூட்டிக்கொண்டு ஓடினாள்.

சற்று தூரத்தில் அழகுமணியின் தந்தை சுந்தரத்தின் காம்பறா தான் எரிந்துக் கொண்டிருந்தது. தொழிலாளர்கள் மிகவும் போராடி தீயை அணைத்தமையினால் தீ மற்ற காம்பறாக்களில் பரவவில்லை. ஆனால் சுந்தரமும் அவனுடன் இருந்த செல்வந்தியும் கரிக்கட்டைகளாகிக் கிடந்தார்கள்.

சுந்தரி – அழகுமணியின் கைகளை இறுக பற்றிக் கொண்டு அவன் தலையை தடவியவாறு நானிருக்கேன் என்று சொல்லாமல் சொன்னாள். ஆனால் அன்று அதிகாலையில் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த இரண்டு லீட்டர் மண்ணெண்ணையை காம்பறாவின் பின்புறம் மறைத்து வைத்த அழகுமணி எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த சமயம் சுந்தரிக்கு தெரியாமல தன் வீட்டுக்கு போனவன் காம்பறாக் கதவை வெளிப்புறமாக பூட்டிவிட்டு செய்ய வேண்டிய வேலையை கனக்கச்சிதமாக முடித்து விட்டு ஒன்றும் தெரியாதவனைப்போல சுந்தரியிடம் வந்து படுத்து தூங்குவதைப் போல பாசாங்கு செய்தான்...!

அழகுமணி என்கின்ற மணிமாறன் – சுகுமாரை கொலை வெறியுடன் பார்த்தான். சுகுமாரின் கைகள் அந்த இரும்பு நாற்காலியின் பின்புறமாக கட்டப்பட்டிருந்தது. சுகுமார் கைபேசியில் வந்த அழைப்பினை ஏற்று பஸ்ஸை விட்டு இறங்கும் போது சரியாக ஆறுமணி சீமெந்துப் பாதை வழியாக நடந்த போது அந்தப் பாலம் வந்தது... அதை கடந்து சென்ற போது தேயிலைத்தோட்டத்துக்கு போகும் போது மரங்கள் அடர்ந்து வளர்ந்த அந்த இடத்தில் தனியாக அந்த வீடு இருந்தது. சுற்று வட்டாரத்தில் வேறு எந்த வீடுகளோ மனிதர்களோ இருப்பதற்கான அறிகுறிகளே காணப்படவில்லை.

மணிமாறன் அவனருகே வந்து ஒரு நாற்காலியைப் போட்டு அமர்ந்தவாறு அவனையே உற்றுப்பார்த்தான். “நண்பா... வசமா மாட்டிக்கிட்டியா... என்ன முழிக்கிற சாதுவா இருக்கிறவன் எப்படி கொடிய விஷமுள்ள சர்ப்பமா மாறிட்டானேன்னு பார்க்கிறியா... எல்லாமே அன்புக்காகத் தான். அம்மா கிட்ட கிடைக்காத அன்பு சுந்தரியம்மா கிட்ட கிடைச்சிச்சி... நான் நல்லாப்படிச்சி வேலைக்குப்போனேன். அவங்களை பூப்போல வச்சி காப்பாத்த நினைச்சேன். ஆனா அற்ப ஆயுல போய் சேர்ந்துட்டாங்க... நல்லவேளை கை நிறைய சம்பளம். ஆனா அன்பு செலுத்தயாருமில்லை. அதுக்காக ஏங்கினேன். அப்பத்தான் மல்லிகாவை சந்திச்சேன். என்னோட ஒண்ணா ஒரே காரியாலயத்துல வேலை செஞ்சா... மணி மணின்னு மூச்சுக்கு முந்நூறு தடவை கூப்பிடுவா... ஒருவருஷம் நாங்க நேசிச்சோம். அவ என் மூச்சி காற்றாயிருந்தா திடீர்னு அவளுக்கு வேறு இடத்துக்கு மாற்றல் வந்திருச்சி. நான் துடிச்சிப் போனேன். அவ என்னை விட்டுப்போன அன்றைக்கு நான் என்னையே மறந்து படுக்கையிலேயே மரம் போல கிடந்தேன். அடுத்த நாள் காலை எனக்கு கைபேசியில பேசினா பெரிசா பேசலை நல்லாயிருக்கீங்களான்னு மட்டும் கேட்டுட்டு தொடர்பை துண்டிச்சிட்டா... என்னால அவளை மறக்க முடியலை. ஆனா காரியாலயத்துல அதிக வேலைப் பளுவாயிருந்ததால லீவு எடுக்கவும் முடியாது. இரண்டு வாரம் கழிச்சித்தான் விடுப்பு கிடைச்சிச்சி. நான் பறந்து வந்தேன் நுவரெலியாவுல அவ வீட்டுக்குப் போனன். வீட்டுல தோரணம் கட்டி ஓரே கலகலப்பாயிருந்திச்சி... விசாரிச்சதுல மல்லிகாவுக்கும் வெளிநாட்டுல வேலை செய்யிற அவளோட மாமன் மகன் மாதவனுக்கும் நிச்சயதார்த்தமாம்.

நான் நொருங்கி போயிட்டேன் – ரொம்ப சிரமப்பட்டு அவளை சந்திச்சேன். அவ என்னை அலட்சியமா பார்த்தாள். “இங்கப் பாருங்க மணி... நான் கட்டிக்கப்போறவர் கைநிறைய சம்பாதிக்கிறார். கார் பங்களான்னு இருக்காரு. நீங்க எடுக்கிற சம்பளம் எனக்கு மேக்அப்புக்கே பற்றாது. காதல், கத்திரிக்கான்னு நான் எதுக்காக என் இளமையை வீணாக்கணும்? கல்யாணத்துக்கப்புறம் நானும் அவரோட வெளிநாடு போயிடுவேன் ஜொலியா இருப்பேன்...”

அவ ரொம்ப அலட்சியமாக திமிரா பேசினா... நான் முடிவு பண்ணினேன். அவளையும் அவளோட எதிர்கால கணவனை ஏமாற்றி இங்கே கூட்டி வந்தேன். என் ஆத்திரம் தீரும்வரை கட்டி வச்சி இதோ இந்த இரும்பால தலையில அடிச்சி கொன்னுப்போட்டேன். சுடுகாட்டுல வச்சி ரெண்டு பேரோட தலைகளையும் எரிச்சிட்டேன். எந்த சாட்சியமும் இல்லை. அடையாளமும் இல்லை இன்னமும் பொலிஸ்ல தேடிக்கிட்டிருக்காங்க. நான் கௌசல்யாவை நுவரெலியா பேங்கலவச்சி தற்செயலா பார்த்தேன். அசந்துப்போயிட்டேன். என் அன்பு தெய்வம் சுந்தரியம்மாவோட அதே முகச்சாயல். மனசுல முடிவு பண்ணிட்டேன். எப்படியும் அவளை கைப்பிடிக்கணும். அதனால் அவளோட அண்ணன் செந்திலோட அறிமுகத்தை ஏற்படுத்திக்கிட்டேன். நுவரெலியாவுல கிடைக்காத சில பொருட்களை கண்டியில வாங்கிவருவேன். அப்படியே செந்திலின் வீட்டுக்கு போய் கௌசல்யாவோட சரளமா பேசி பழகிட்டேன். இந்த சமயத்துலத்தான் நான் செஞ்ச மிகப்பெரிய தவறு உன்னையும் மனோகரையும் செந்தில் வீட்டுக்கு கூட்டிப் போனது. மனோகர் நேரடியா என் கிட்ட சொன்னான். கௌசல்யாவை விரும்புறதாகவும் அதுக்கு நான் உதவி செய்யனும்... எனக்கு எப்படி இருக்கும்? எனக்கு மனோகர் மேல ஆத்திரம் வந்திச்சி... நீங்க ரெண்டுபேரும் வந்துட்டுப் போனதும் தொடர்ந்து கண்டியில உங்களோட சேர்ந்து வேலைசெய்ய விரும்பலை.

நான் தாமதிக்காமல் உடனடியா செந்திலை தோட்டத்துல வச்சி சந்திச்சேன். என்னோட விருப்பத்தைச் சொன்னேன். செந்திலுக்கு கோபம் வந்திருச்சி கௌசல்யாவுக்கு சொந்தத்துல நிறைய நல்ல வேலையோட மாப்பிள்ளை இருக்காங்களாம். அதுனால இனி இதைப் பற்றிபேச வேணாம்னு கடுந்தொனியில சொல்லிட்டான். என்னால கோபத்தை அடக்க முடியலை. கௌசல்யாவை கல்யாணம் பண்ணுறதுக்காக நான் எந்த எல்லைக்கும் போக முடிவு செஞ்சேன். அதுனால தனியா தோட்டத்துக்குப் போன செந்திலை அடிச்சி கிணத்துல தள்ளினேன். மனோகர் தொடர்ந்து கௌசல்யாவுக்கு கைபேசியில தொடர்பு கொள்ளுறதை அறிஞ்சேன். அவனையும் நான்தான் கொன்னு பாலத்துக்கடியில தள்ளினேன். இப்ப நீ...”

சுகுமார் – கோபத்துடன் அவளை .............


“உனக்கு என்ன பைத்தியமா? உனக்கு அன்புகிடைக்கலைன்னுறதுக்காக மற்றவங்களை கொலை பண்ணுறே... முட்டாள் மாதிரி நடந்துக்குறே எனக்கும் மனோகர் மேல கோபம் வந்திச்சித்தான். ஆனால நான் நிதானமா யோசிச்சேன். அவன் கிட்ட மனம் விட்டு பேசுவோம்னுதான் கண்டியில இருந்து வந்தேன். ஆனா கடைசி வரை அவனை என்னால சந்திக்க முடியலை... கைபேசியும் வேலை செய்யலை.. இங்கப்பாரு மணிமாறன்...கௌசல்யா என்னைக் கூட இன்னும் நேசிக்கவேயில்லை... என்னை விட்டுடு...தவறு மேல தவறு செய்யாதே... முட்டாள் மாதிரி நடந்துக்காதே...”

மணிமாறன் எதையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தலையை சுழற்றினான். கண்களை மூடிக்கொண்டான். என்னவோ முணுமுணுத்தான்.. பின்பு சட்டென கண்களைத்திறந்தான். சற்று தூரத்திலிருந்த அந்த நீண்ட தடித்த இரும்புக்கம்பியை எடுத்தான் சுகுமாரின் எதிரே வந்தான். அவனை உற்று நோக்கினான் கையிலிருந்த கம்பியை இறுக பற்றிக் கொண்டவன் அதை தூக்கி சுகுமாரின் நடுமண்டையை நோக்கி வேகமாக அடிக்க தயாரானான். அச் சமயத்தில் சட்டென வெளிப்புற கதவு படாரென திறந்தது. மணிமாறன் சுகுமாரின் தலையைத்தாக்க வேகமாக கம்பியை கொண்டு போகும்போது துப்பாக்கி வெடித்தது. “ஐயோ” என அலறியவாறு மணிமாறன் தரையில் சாய்ந்தான். அவன் வலது கையில் துப்பாக்கி சூடு பட அருவியாக ரத்தம் கொட்டியது. இன்ஸ்பெக்டர் பார்த்திபன் துப்பாக்கியுடன் சுகுமாரை நெருங்கினார். “எனக்கு முதல்ல உங்களை யார்னு தெரியாது. மனோகர் சேலை வாங்கின பிடவைக்கடைக்கு போய் விசாரிச்சப்பத்தான் ரெண்டு மூணு முறை நீங்களும் மனோகரோட அந்தக் கடைக்கி வந்ததா சொன்னாங்க. நீங்க ரெண்டு பேரையும் கைபேசியில் படம் பிடிச்சதாகவும் சொல்லி அதை என் கிட்ட காட்டினான். வேலையாள் எனக்கு உங்க மேலயும் சந்தேகம் வந்திச்சி. இன்னைக்கு உங்களை டவுண்ல வச்சி கண்டேன். உடனே ஏற்கனவே வேறு ஒரு கேஸ் விஷயமா போக இருந்ததை கைவிட்டுட்டு பொலிஸ் ஜீப்ல பஸ்ஸை பின் தொடர்ந்தேன்..”

பார்த்திபனுடன் வந்திருந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மணிமாறனை கைது செய்தனர். அவன் அமைதியாக இருந்தான் கண்களை மூடிய நிலையில் சூடுபட்டு கையில் ரத்தம் வடிவதையும் பொருட்படுத்தாமல் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்த மணிமாறனைக் கண்டு சுகுமாருக்கு கோபம் வரவில்லை. அனுதாபமே வந்தது. அவனுக்கு அன்பு கிடைக்க வேண்டும் என்பதற்காக அநியாயமாக அப்பாவிகளை கொன்று விட்டானே...! சுகுமார் நீண்டதொரு பெருமூச்சுடன் அந்த இடத்திலிருந்து புறப்பட்டு ஜீப்பில் ஏறினான். ஜீப் பொலிஸ் காரியாலயம் நோக்கி ஓடத்தொடங்கியது...

(யாவும் கற்பனை)

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல : 10



திரு/திருமதி/செல்வி ..........................................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................................................
..........................................................................
..........................................................................

............................ ..............................
திகதி கையொப்பம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 10

**இடமிருந்து வலம்**

1. ஓர் இசைக்கருவி
4. அறிவு குழம்பிவிட்டது
6. ஒரு வாழை இனம்
7. புலி
8. சூரியன்
9. குறைந்த கனமுள்ள உலோகத் துண்டு (குழம்பியுள்ளது)
11. செருக்கு (குழம்பியுள்ளது)
13. புதல்வி திரும்பி விட்டாள்
15. பூ (திரும்பியுள்ளது)
16. வாழ்விடம்
18. கயிறு திரிப்பதற்கு தேவையானது
20. எப்போதும்
21. ஒன்றைப் பெற வேண்டும் என்ற பெருவிருப்பு
22. உணவு (குழம்பியுள்ளது)
24. நியாய வழியில் நடந்துகொள்ளும் தன்மை.

**மேலிருந்து கீழ்**

1. மலையுச்சி
2. அறிஞர் (குழம்பியுள்ளது)
3. மாங்கல்ய சின்னம்
4. மதி
5. நெருப்பிலிருந்து தோன்றும் படலம்
7. பொட்டணம்
9. பலன் கருதாத கொடை
10. வேதனமின்றி செய்யும் பொதுநலப் பணி (குழம்பியுள்ளது)
12. ஒருவருக்கு பக்கபலமாக இருந்து உதவுவதை இப்படிச் சொல்லலாம்
14. பாதுகாப்பு அணிகலம்
17. புத்திசாலி
19. முறைப்பாடு
23. தரையிலும் கடலிலும் வாழும் பிராணி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 09

### விடைகள்

**இடமிருந்து வலம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. கற்பகதரு | 06. சுடலை | 07. தீது | 08. பரி | 10. புயல் | 12. மாதவி |
| 14. துணை | 15. வம்பன் | 17. வைகாசி | 20. அத்தை | 22. கர | 23. பழுது |
| 25. மைதானம் | 27. மணி | 28. ஊதியம் | | | |

**மேலிருந்து கீழ்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. கவரிமான் | 02. பசு | 03. கடல் | 04.தலையணை | 05. மதுரை | 09. பதம் |
| 11. புதுவை | 13. விபத்து | 16. வதை | 18. கானகம் | 19. சிரம் | 21. அமைதி |
| 23. பணி | 24. மழு | 26. ஊதா | | | |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 08

### பரிசுபெறுவோர்

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|
| **செல்வராசா தனலக்ஷ்மி,** பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். | **சந்திராணி தங்கத்துரை,** வட்டவிதானை வீதி, பெரியநீலாவணை 01. கல்முனை. | **எம். அமேஷிகா,** 158, கொஸ்கஹகந்த சந்தி, யடதொல, நவுதுடுவ, மத்துகம. |

## பாராட்டு பெறுவோர்

**1. எச். சுல்பியா ,**
சரிகாமுல்லை, பாணந்துறை.
**2. எஸ். கனகரட்னம்,**
அன்புவெளிபுரம்,
திருகோணமலை.
**3. எஸ். கோபிகா,**
வடிவேல் வீதி,
காரைதீவு 12.
**4. பாத்திமா ஷிம்லா காசிம்,**
மருகோன, உக்குவலை.
**5. எம்.எம்.பி.எப். ரிஸ்னா,**
ஹப்புகஸ்தலாவ.

# எல்லோருக்கும் இனிய மனிதன் கலாசூரி சிவகுருநாதன்..!

## ஓர் நினைவோட்டம்

எங்கள் வீடு ஒரு செய்தி நிறுவனம் போன்று பல்லாண்டுகள் இயங்கியது. மூத்த சகோதரர் நாவேந்தன் முதல் கடைசிச் சகோதரர் வரை எங்கள் சகோதரர்கள் யாபேருமே சுமார் நாற்பது வருடங்கள் ஒருவரைத் தொடர்ந்து ஒருவரெனக் காலத்துக்காலம் பத்திரிகை, வானொலிச் செய்தியாளர்களாகச் செயற்பட்டோம்.

நாவேந்தன் பதினாறு வயதில் வீரகேசரியில் ஒப்புநோக்காளராகச் சேர்ந்து சில மாதங்கள் கடமையாற்றிவிட்டு ஊருக்குத்திரும்பிச் சில வருடங்கள் வீரகேசரியின் நிருபராகச் செயற்பட்டார். துரைசிங்கம் அண்ணர் தினகரன் நிருபராக விளங்கினார். பின்னர் அக்கா ஞானசக்தி, சிவானந்தன் அண்ணர், யான், தங்கை சரோஜினி, தம்பி தமிழ்மாறன் என எல்லோருமே காலத்துக் காலம் இலங்கையிலிருந்து வெளிவந்த சகல பத்திரிகைகளுக்கும் நிருபர்களாகக் கடமையாற்றினோம்.

வீரகேசரி, தினகரன் குறூப், தினபதி குறூப், டெயிலி மிரர், ஈழமணி, ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, செய்தி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் யாவற்றுக்கும் எமது வீட்டு மேசையிலிருந்து விதம்விதமாகச் செய்திகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அனுப்பப்பட்டன. இந்தியச் சஞ்சிகைகளுக்கும் செய்திகள், கட்டுரைகள் அனுப்பப்பட்டன. அக்காலத்தில் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் சிறப்புடன் இயங்கியது. சமாச விழாக்கள், யாழ் முற்றவெளியில் சமாசம் நடாத்தும் மாபெரும்



மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி, வாணவேடிக்கை என்பன குடாநாட்டு மக்களைக் குதூகலிக்க வைத்த காலம்.

'சமூகஜோதி' கேற் முதலியார் சி. தியாகராசா சமாசத்தின் தலைவராகவும் துரைசிங்கம் அண்ணர் செயலாளராகவும் கடமையாற்றினர். சமாசத்திற்கு இலங்கை வானொலியில் மாதமொருமுறை கிராமசஞ்சிகை நிகழ்ச்சியில் இடம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய அந் நிகழ்ச்சியை மாதமொருமுறை துரைசிங்கம் அண்ணர் தயாரித்தளிப்பார். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களைச் சேர்ந்த கலைஞர்களுக்கு அந்நிகழ்ச்சியில் பங்குபற்றச் சந்தர்ப்பமளித்து வந்தார்.

அக்காலம் வானொலி கிராமசஞ்சிகை நிகழ்ச்சியின் பொறுப்பாளராக விவியன் நமசிவாயம் அவர்கள் கடமையாற்றி வந்தார்.

ஒரு தடவை வானொலி நிகழ்ச்சிக்கென அண்ணருடன் கொழும்பு வந்து கோட்டை வை. எம். சி. ஏ. விடுதியில் தங்கியிருந்தோம். வானொலி நிலையத்திற்குச் சென்று கிராம சஞ்சிகை நிகழ்ச்சியில் பங்குபற்றிவிட்டு வந்தோம்.

பின்னர் அண்ணர் 'லேக்கவுஸ்' செல்வோம் என அழைத்துச் சென்றார். அங்கு தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன் எம்மை அன்புடன் வரவேற்று உபசரித்தார்.




சிறுவனான என்னோடும் அன்பாக உரையாடினார். நீயும் பத்திரிகைக்கு எழுதுகிறாயா என ஆச்சரியத்துடன் கேட்டுவிட்டுப் பாராட்டினார்.

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே யான் வீரகேசரி நிருபராக (டிசம்பர் 1966) நியமனம் பெற்றேன்.



எங்கள் வீட்டிலிருந்து சகல பத்திரிகைகளுக்கும் செய்திகள் அவைக்கேற்றவாறு அனுப்பப்படுவது அப்பத்திரிகை ஆசிரியர்களுக்குத் தெரிந்திருந்தது. அக்காலத்தில் ஒரு பத்திரிகையின் நிருபர் மற்றப் பத்திரிகைக்குச் செய்தி அனுப்புவது விரும்பத்தக்கது அல்ல. பத்திரிகை ஆசிரியர்கள் அப்படிச் செயற்படும் நிருபர்களைக் கண்டித்துவிடுவார்கள்.

ஆனால் அன்று தினகரன் ஆசிரியராக விளங்கிய சிவகுருநாதன், வீரகேசரி ஆசிரியராக விளங்கிய சிவப்பிரகாசம், அல்லது தினபதி ஆசிரியராக விளங்கிய எஸ்.டி. சிவநாயகம் ஆகியோர் எமது செயற்பாடுகளைக் கண்டித்ததில்லை. காழ்ப்புணர்வு கொண்ட ஒரு சிலர், பாராளுமன்ற உறுப்பினர் உட்பட எமக்கெதிராக முறைப்பாடுகள், பெட்டிசங்கள் எழுதியனுப்பிய போதிலும் அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியப் பெருமக்கள் எமது செய்திகளின் உண்மைத் தன்மை, தரமறிந்து எமது எழுத்துப் பணியை மேலும் ஊக்குவித்தே வந்தார்கள்.




யான் 'தினகரன் குறூப் நிருபராக நியமனம்பெற்ற காலம் முதல் கொழும்பு வரும்போதெல்லாம் தினகரன் ஆசிரியர் சிவகுருநாதனை சந்தித்துச் செல்வது வழக்கம். அவர் மூத்த சகோதரர் போன்றே என்னை 'வா... தம்பி.. வா'என வரவேற்று உபசரிப்பார். வந்ததும் முன்னால் இருக்கவைத்து நீண்ட நேரம் பலதும் பத்துமாக உரையாடுவார். அவரது நகைச்சுவை கலந்த பேச்சு சுவையாகவிருக்கும். சகோதரர்களின் உடல்நலம் சுகம் விசாரிப்பார். இலக்கிய விடயங்கள் சர்ச்சைகள் குறித்துப் பேசுவார். எனக்கு மிகத் தெரிந்த எழுத்தாளர்களின் நலம் விசாரிப்பார். அவரோடு பேசிக்கொண்டிருப்பது மிக மகிழ்ச்சியைக் கொடுக்கும். 'தொடர்ந்து உற்சாகமாகச் செயற்படு. செய்திகளை எழுதியனுப்பு. நல்ல வருமானமும் கிடைக்குமல்லவா..' எனக்கூறி அவர் சிரிக்கும் பாணியே தனி அழகு தான்..!

தினகரனில் எமது செய்திகள் அதிகமாகப் பிரசுரமாகும். அதிக செய்திகள் பிரசுரமாகையில், சில செய்திகளின் தலைப்பில் எமது அடையாளமாக 'புங்குடுதீவு குறூப் நிருபர் எனப் போடாது, செய்தியின் கீழ் 'தீவுப்பகுதி நிருபர்' எனப் பொருள்பட 'தீ. நி.' என அடையாளமிடப்படும். தீவுப்பகுதிச் செய்திகள், யாழ். மாவட்டச் செய்திகள் மாத்திரமல்ல சிலவேளை எமக்குத் தெரிந்த 'கொழும்புச் செய்திகள்' கூட நாம் எழுதிப் பிரசுரமாகியுள்ளன.


'செய்திகளில் திருத்தம் செய்யும் வேலை இருக்காது. தரமாக இருக்கும். அவை தெளிவான கையெழுத்தில் இருக்கும். எனவே அவை அப்படியே பிரசுரிக்கத்தக்கன என உதவி ஆசிரியர்களுக்கும் எமது செய்திகள் குறித்து சிவகுருநாதன் குறிப்பிட்டுள்ளார்.

19ஆம் பக்கம் பார்க்க...



**வி.ரி. இளங்கோவன்**

# மனத்திரை



## தேசத்தின் கண் கே.எஸ்.சிவகுமாரன்

1964 ஆம் ஆண்டு. கல்வித்துறையில் பட்டங்கள் பெற்றிராத சாமான்யன் நான். ஆயினும், திறனாய்வுத் துறையில் ஓரளவு கவனத்தைப் பெற்றிருந்தேன். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இயங்கிய தமிழ்ச்சங்கத்தினர், அங்கு நடைபெறவிருக்கும் நூல் வெளியீட்டொன்றில் திறனாய்வு செய்யும் படி அழைப்பு விடுத்தனர். நூலின் பெயர் 'யோகநாதன் கதைகள்'. அந்த தமிழ் சங்கத்தில், இப்போதைய ஆய்வறிவாளர் க. சண்முகலிங்கம், அப்போதைய மாணவராக, சங்கச் செயலாளராக, இருந்தார் என நினைக்கிறேன்.

இன்று பேராசிரியராகவும், செய்தித்தாள் ஆசிரியராகவும், தலைசிறந்த எழுத்தாளராகவும் விளங்கி பலர், அந்த நூல் வெளியீட்டுக்காக வந்திருந்தனர்.

பேராசிரியர்கள் செல்வநாயகம், வித்தியானந்தன் தனஞ்ஜெய ராஜசிங்கம், சதாசிவம் உட்பட பலர் மேடையில் வீற்றிருந்தனர்.

நானோ பயம் தெரியாத இளங்கன்று எனக்கு 28 வயதாக இருக்கக் கூடும். கூடியிருந்த மாணவர்களே பதின்ம வயதுடையோர்.

பேராசிரியர் செல்வநாயகம், "ஹா மாப்பிளை வந்து விட்டார்" என வரவேற்றார்.

நூலாசிரியர் செ. யோகநாதன் அன்புடன் என்னை வரவழைத்து மேடையில் என்னை ஏற்றினார். நானும் அவரது சிறுகதைத் தொகுப்பை திறனாய்வு செய்து பேசினேன். அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது என்றுதான் நினைக்கிறேன். ஏனெனில் கூட்டம் முடிந்த பின் மாணவர்கள் என்னை நெருங்கித் தம்மை அறிமுகஞ் செய்து கொண்டனர்.

அப்பொழுது அவர்கள் வெறும் மாணவர்கள் தான் என நான் புன்சிரிப்புடன் அவர்களுடன் உரையாடினேன்.

அந்த மாணவர்கள் தமிழ்மொழியில் பயின்ற இன்றைய அறிஞர்கள் என்பதை நான் அறிவேன்.

### அந்த மாணவர்களின் பெயர்கள் சில:

சண்முகதாஸ், சந்திரசேகரம், சபா ஜெயராசா, சிவநேசச் செல்வன், சண்முகலிங்கம், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், யோகநாதன், கதிர்காமநாதன், நவசோதி, கைலாசநாதன், மௌனகுரு, முத்து சிவஞானம் போன்ற பலர்.

## இப்போதைய பேராசிரியர்கள் அன்று

இன்று நமது நாட்டில் பெரும் புள்ளிகளாக அவர்கள் விளங்குவது நமக்கெல்லாம் பெரும் பெருமை.

மறைந்த செ. யோகநாதன் பிற்காலத்தில் சிறந்த எழுத்தாளராகவும், "ஆதவன்" என்ற பகுதியில், குறிப்பிடத்தக்க திறனாய்வாளராகவும் விளங்கினார்.

செ. யோகநாதன் Novella என்று கூறத்தக்க குறுநாவல்கள் கொண்ட ஒரு நூலையும் வெளியிட்டு இருந்தார். அதன் பெயர் ஒளி நமக்கு வேண்டும் என்பதே.

அந்த தொகுப்பில், 20 வருடங்களும் மூன்று ஆசைகளும், தோழமை என்றொரு சொல், ஜானகி, அந்த நாளும் வரவேண்டும், திருச்சிற்றம்பலம், என்பவை அக் குறுநாவல்களின் பெயர்கள். 1974இல் டெயிலிநியூஸ் பத்திரிகையில் நான் எழுதிய கட்டுரையில், கதைகளின் தலைப்புகளை மேற்கண்டவாறே நான் குறிப்பிட்டதால், தமிழ் தலைப்புகள் சிலவேளை சரியாக இருக்கமாட்டாது.

இந்த ஐந்து குறுநாவல்களில் 'ஜானகி' என்ற படைப்பு பற்றி எழுதுவதாயின்.

பிராமணப் பெண்ணொருத்தி தனது அடையாளத்தை ஒதுக்கிவிட்டு, தனது விதவைத் தாய்க்கும் தனக்குமாக ஒரு வேலையைத் தேடுகிறாள். அவளது தமையனார் கூட, கிரியைகளைப் பின்பற்றுவதை மறந்துவிட்டு, லொறி ஒன்றில் கிளினராக வேலை பார்க்கிறான். ஜனாகி தாதியர் பயிற்சி நிலையத்தில் சேர்ந்த பின்னர் தான். வாழ்க்கையின் புதிர்களை நேரடியாக உணர்ந்து கொள்கிறாள். அவளுக்குப் போதிய அறிவை புகட்டியவள், பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மற்றொரு பெண்.

"இருபது வருடங்களும் மூன்று ஆசைகளும்" என்ற நாவலில், தம்மிகா (மத்திய தர விவசாயின் மகள்) சுமணதாஸ (கட்டட தளத்தில் கூலிவேலை செய்யும் ஒரு பெண்ணின் மகன்), தர்மபால (கமக்காரன் ஒருவனின் மகன்), சிவகுமார் (ஒரு பெட்டிக்கடை சொந்தக்காரனின் மகன்) என்ற பாத்திரங்கள் வருகின்றன. உரையாடல் மூலம் கதை நகர்கிறது. இவர்கள் சமூகத்தில் காணப்படும் வெவ்வேறு தளத்தினர். சுயநலமும், குறுகிய மனப்பாங்குமுடையவர்களின் ஈடாட்டம் துன்பியல் நாடகமாக அமைகிறது.

மற்றைய குறுநாவல்களும் யதார்த்தபூர்வமான பகுப்பாய்வுகளாகவும் அமைகின்றன.

நிழற்பட யதார்த்தமாக இல்லாது தேர்ந்த சம்பவங்களின் பார்வையாக இந்த யதார்த்தம் அமைகிறது.

யோகநாதன் பல சிறுகதைகளையும், நாவல்களையும் எழுதிப் பெயர் பெற்றவர் என்பது நாம் அறிந்ததே.

நமது நாட்டுத் தமிழ் இலக்கியப் போக்கில், நீண்ட நாவல்களும், கட்டுக்கோப்பு இல்லாத சிறுகதைகளும் எழுதப்படுவது வரவரக் குறைந்துபோவது நல்ல அறிகுறி. புதிய எழுத்தாளர்கள், குறிப்பாகப் பெண்கள் நமது இலக்கியங்களுக்கு செழிப்பூட்டுகின்றனர் என்பது அவதானிக்கத்தக்கது. அதுபோன்றே நீண்ட உயர்மட்ட ஆய்வுகளும் (Academic writing) வாசிக்கக் கஷ்டமாக இருக்கிறது. வாசிப்பே அற்றுப்போகும், இன்றைய சூழலில் சுருக்கமாக எழுதுவது விரும்பத்தக்கது.

நம்மில் சிலர் இதிகாசங்கள், காப்பியங்கள், நீண்ட நாவல்கள் போன்றவற்றை விரும்புவதை தவிர்க்க முடியாது. அவை நமக்குத் தேவைதான். அவற்றை போதிய நேரமிருந்தால், சுவைத்து மகிழலாம்.

டிஜிட்டல் உலகில், அனாவசியமான எழுத்தை புதிய சமூகத்தினர் அதிகம் விரும்பமாட்டார். எனவே, காலத்தின் தேவையை உணர்ந்து, சுருக்கமாக எளிதிற் விளங்கக்கூடிய எழுத்தை, புதிய எழுத்துக்களே ஜனரஞ்சகமாகவும், கனதியானதாகவும் எழுதப்படும் தேவை நமக்கு இருக்கிறது.

# நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

## பருந்தின் நிழலாகத் தரைமீது விழும் கட்டுபொல் (நாவல்)


நல்ல படைப்பிலக்கியம் தன்னுடைய வரலாற்றையும் மண்ணையும் தன் உடன் பயணியாக அழைத்துச் செல்லும் தன்மை பெற்றதாக விளங்கும்.

வரலாறு என்ன என்பதில் தமிழில் நிறையக் குழப்பம் மிகுந்துள்ளது. கடந்த கால விபரங்களின் தொடர்ச்சியே என்று கற்பிக்கப்படும் வகுப்பறைப் பாடம் சொல்கிறது.

உண்மையில் அது கடந்த காலத்தது இல்லை. நடப்புக் கால மூளை. நிகழ்கால அடுக்குகளிலிருந்து பிரித்தெடுத்து உருவாக்கித் தரும் ஒருவகைக் கூட்டமைப்பே வரலாறு என்று அறியப்படுகிறது என்றால் வரலாறு என்பது நிகழ்ந்தது அல்ல.மாறாக நிகழ்ந்து கொண்டிருப்பது. அவை இன்றைய நிகழ்வுகளோடு மரபுத் தொடர்ச்சி கொண்ட புரிதல்களுக்கும் இடையில் நிற்பவை.

பிரமிளா பிரதீபனின் "கட்டுபொல்" நாவலின் ஊடாக அவரது எழுத்தைக் கொண்டே வரலாறை உணரலாம்.

ஏறத்தாழ இருநூறு வருட காலமாக இந்திய வம்சாவளித் தமிழர்கள் மலை நாட்டிலும் இலங்கையின் தென் கரையோரப் பகுதியிலுள்ள கொழும்பு முதல் களுத்துறை வரையிலான இடங்களிலும் காலங்காலமாக கறுவா, கோப்பி, தேயிலை, இறப்பர் தோட்டங்களில் பணி புரிகிறார்கள்.




இப் பகுதிகளில் வேலை செய்தோர் பலர் சிங்களவர்களாகவும் மாறி விட்டுள்ளனர்.

இந்த நாவலில் வரும் கட்டுபொல் என்பது சிங்கள மொழிச் சொல். இதனை மொழி பெயர்த்தால் "முட்தேங்காய்" எனப் பொருள்படும். பாக்குப் போன்ற முட்கள் நிறைந்த நாற்பது ஐம்பது கிலோ கொண்ட பாரமான கொப்புகளுடையவை.

அதனையே உருக்கி எண்ணெய் எடுக்கிறார்கள்.

காலி மாவட்டத்தில் "இகல்கந்தை" என்ற பெருந் தோட்டத்தில் கட்டுபொல் எனும் மரச் செய்கை நடைபெறுகிறது. அங்கு தொழில் புரிவோரில் பெரும் பங்கினர் இந்திய வம்சாவளியினர்.

'இகல்கந்தை' என்பது வெறும் பெயர்ப் பலகை அல்ல. அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை வரலாறு பல்வேறு பின்புலங்கள் உடையது எனக் கதை சொல்லும் பிரமிளாவுக்குள் ஒரு கொதிப்பான மனம் உள்ளது.

'அடிமைகள்' என்ற பொதுப் புத்தியைச் சிதைத்து அங்கு உலாவும் தமிழர்கள் 'வாழ்வின் பகுதியாக' எவ்வாறு நிலைக்கின்றனர் என்பதை நாவல் சுட்டுகின்றது.

எனக்கு எப்படி இந்த நாவல் கிடைத்தது? நண்பர் சிராஜ் மஷ்ஹூரிடமிருந்துதான்;

சகோதரி பிரமிளா என் முகநூல் நண்பி, எப்போதாவது பேசுபவர்; நல்ல கதை சொல்லி;

பீலிக்கரை, பாக்குப்பட்டை என்பன இவரது சிறுகதைத் தொகுப்புகள். எங்கு பார்த்தாலும் இருட்டு. இவர்கள் வாழ்வு பள்ளத்தில் இருக்கிறது என்பதை தொலைவில் தெரியும் கட்டுபொல் மரங்களின் முகப்பை வைத்து அறிந்து கொள்ளலாம்.

ஆனாலும் இயற்கையால் வடிவமைக்கப்பட்ட தோட்டங்கள், அத் தோட்டத்துப் பூக்களின் வாசம் இரவை ஓர் ஆலாபனைக்குள் இழுக்கின்றது.

மரங்கள் அசையும் 'உஸ்' சத்தம் வீடுகளுக்குள் தெரிந்த இடைவெளி வழியாக நம்மை அங்கு அழைத்துச் செல்கின்றது.

ஒவ்வொரு கணத்திலும் சமூகப் பிரக்ஞையுடன் உற்றுப் பார்க்கும் மன நிலையுடையவரான பிரமிளா பற்றிச் சொல்ல நிரம்பச் சேதிகள் இருபதனால் முதல் நாவலிலே விரிவான பின்புலத்தில் கதையாடலைத் தொடங்கியுள்ளார்.

அங்குள்ள பாடசாலை ஒன்றுக்குப் புதிதாக வரும் ஆசிரியர்களின் மனப்பாங்கு அதிலும் வசந்தன் ஆசிரியரின் வழிகாட்டல்கள், அதுவரையும் அப் பாடசாலைலையில் கடமை புரிந்த ஒற்றை நட்சத்திரம் நஸ்ரினா ரீச்சர், இவர்களின் முயற்சியால் புதிதாக ஒலிக்கும் பாடசாலைக் கீதம், வேலைக்குச் செல்லும் ஆண்கள், பெண்கள் என்று பலர் பாதையோரங்களில் நின்று வாய் பிளந்து இதனைப் பார்ப்பது, இது போன்ற உணர்வு நிலைகளில் லயித்து எம்மை மீள் உயிர்ப்புச் செய்யும் சந்தர்ப்பங்கள் இந் நாவலில் இழைகின்றன. அந் நிலத்தின் உயிரினங்களில் உடும்பு மனிதனின் அக உலகின் பிரதி விம்பமாகக் கதையில் அங்குமிங்கும் ஊர்ந்து செல்கிறது.

ஒரு சம்பவத்தைக் கதையாக்கும்போது செய்யும் சிறு சிறு சித்து வேலை தவிர இக் கதையில் சொல்லப்பட்ட விஷயங்கள் முழுவதும் பிரமிளாவின் உண்மை அனுபவங்கள்.

விடுதியில் தங்கியிருக்கும் திலகா, பத்மபிரியா ரீச்சர்கள் பகலில் இல்லாத விசித்திரமான அச்சத்தை இருள் வேளைகளில் எதிர் கொள்கின்றனர்.

**காமுகர்களின் அட்டகாசம் பின் தொடர்கிறது.**

கட்டுபொல் காட்டுக்குள் பூச்சிகள் இரைவதும், நள்ளிரவைத் தாண்டிய நிலையில் உடும்புகளின் சத்தமும் எங்கோ தூரத்தில் நாய்கள் குரைக்கும் ஒலிகளும் தொடர்கின்றன

இதனிடையே அந்த மேட்டு லயத்தில் பேயோட்டும் நிகழ்வுகளும் கதையின் குறுக்கு வெட்டாக காண்பிக்கின்றார்.

சாரதா என்ற பெண் மொழியின் தனித்துவம் பெண்ணின் மனம் பற்றிய சமூகப் புனைவினைக் கட்டுடைத்து அவளுக்கான இருப்பினை உடல் வழியே கண்டடைவது கதையின் நுட்பமாக வெளிப்பட்டுள்ளது;

தன்னைச் சுற்றிலும் நடப்பவைகளைப் புனைகின்ற பிரமிளாவின் முயற்சி தனித்து விளங்குகின்றது. அவரின் புனைவுலகு வெளியெங்கும் பரவி வாழ்க்கை குறித்த மதிப்பீடுகளைத் தேடி அலைகிறது.

அமுதா என்கின்ற இளம் பெண்ணின் நோக்கில் விரியும் கதை, ஆண் பெண் மனங்களுக்கிடையிலான அவஸ்தையை அசலாகப் பதிவாக்கியுள்ளது.

அசட்டுத்தனமான காதல் என்று மாரியப்பன் அமுதா இருவரின் உறவை எளிதில் புறக்கணிக்க முடியாதவாறு பெண்ணின் வதையானது கூர்மையான மொழியில் உள்வாங்கப்படுள்ளது. கதையில் வரும் ஒவ்வொரு தனி மனிதனும் மனுஷியும் நாவலுக்கான ஆளுமைகள்தான்.

ஊருக்குப் புறத்தில் ஆலமரத்தடியில் இதமாக வீசும் காற்றினூடே விளையாடும் இளையவர்களின் வர்ணிப்பும் விசில் சத்தங்களும் பிரமிளாவின் எழுத்தில் பட்டங்களாக எழுகின்றன.

கட்டுபொல் மரங்களைத் தாண்டித் தாண்டி நடக்கையில் தெரியும் அடர் பச்சை நிறமும் இருளும் கூடுதலான மாலை நேரங்களும் கதையைத் தூக்கி விடுகின்றன.

இம்மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையானவர்களாகத் தோட்டத்துக் கண்டாக்கு, புஞ்சிபண்டா அவனது கையாள், முத்துசாமித் தலைவர், பெண் பித்தனான கங்காணி, பின்னாலிருந்து ஊறு விளைவிக்கும் அயற் கிராம சில விசமிகள் என்போரின் நிலக் காட்சிகள் பட்டை பட்டையாக உரிகின்றன.

அங்கிருக்கும் மனித வாழ்வின் விநோதங்களில் குடி முக்கியமானதாகும்; குடிக்காத மனிதர்கள் அரிதாகவே நடமாடுவதாகக் கொந்தளிக்கும்போது; அவர் கதையில் வார்ந்தோடும் 'தொனி' எனப்படும் பொருள் கொள்ளும் முறை கனதியாகின்றது. இகல்கந்த தோட்டமெங்கும் ஒரே ஆரவாரமாகத் துவங்கும் திருவிழா கோயில் கொடியேற்றமென்று விரிவடைந்து அங்கு நிகழும் குறிப்பெடுத்தல் எனும் பேரிகை பல்வேறு அர்த்தங்கள் கற்பிதமாகும் வகையில் புதிய அனுபவங்களைக் கிளர்த்துகின்றன.

இப்படி நீளும் கதையில் சில இடங்களில் உடும்பிறைச்சியும் அங்கு கலாதியான கறியாக வருகிறது. நீளமான தடிகளில் கத்திகளை இணைத்து மரம் மரமாக அண்ணார்ந்து பார்த்தபடி கொப்புகளைத் தேடி அறுத்துத் தள்ளுவார்கள். இந்தத் தொழில் முறைக்குள் விளிம்பு நிலையில் வாழ நேரிட்ட 'இம் மக்கள் இருப்பு' என்பது சூழலின் வெக்கையில் கருகிப் போய் எதன்மீது நம்பிக்கை கொள்வது என்ற கேள்வி மீண்டும் மீண்டும் தோன்றுகின்றது. இது முதல் நாவல் என்பதால் திரை விழுவது போல் சில கதைத் தொடர்களில் கவனம் கலைந்திருகின்றன.

ஆனாலும் வாசிப்பின் முடிவில் அப்பொழுதுதான் தொடங்குவதான மன நிலையை வாசகரிடையே உருவாக்குகின்றது. புனைவின் சரடு வழியாகக் கதாசிரியர் விபரிக்கும் காட்சிகள் பருந்தின் நிழலாகத் தரை மீதில் விழுகின்றன.



# யாவரும் கேளீர்

## பல்சுவை இலக்கியத் திரட்டு 08

**தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்**

***("யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்')***

### மகாகவி பாரதியாரின் குருநாதரான யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்?



மகாகவி பாரதி அமரத்துவம் அடைந்த நாள் 12.09.1921 ஆகும். அவரது நினைவுநாள் ஆண்டுதோறும் தமிழ்கூறு நல்லுலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. பாரதி எல்லாத் தரப்பினராலும் அங்கீகரிக்கப்பட்ட கவிஞன். சமூக சீர்திருத்தவாதியாக, தத்துவஞானியாக, தேசாபிமானியாக, பிறர் ஈனநிலை கண்டு துள்ளுகின்ற மனிதக்குரலாக, ஆணும் பெண்ணும் சரிநிகர்சமன் எனக் குரல் எழுப்பும் பெண்ணியவாதியாக, இன விடுதலைக்குரல் எழுப்பியவனாக, பாட்டுத்திறத்தால் பாரினைப் பாலித்திட எண்ணங்கொண்ட கலை இலக்கியவாதியாக பன்முகம் காட்டி நின்றவன் பாரதி.

இலக்கியத்தில் நவீனத்தைப் புகுத்தியவன் பாரதி. நவீனத்தை பாடுபொருளிலும் எடுத்துரைப்பு முறைமையிலும் புகுத்தி புதுமைசெய்தவன் பாரதி. அவன் தான் முதன்முதலில் சாதாரண மக்களின் அரசியல், சமூக வாழ்வை கவிதையில் பாடுபொருளாக்கியவன். இலக்கியத்தில் திருப்பு முனையை ஏற்படுத்தியவன் பாரதி. இத்தகைய பெருமைகொண்ட பாரதியாரின் ஞானகுருவாக விளங்கியவர் ஓர் ஈழத்தவர் என்பதில் நாமெல்லாம் பெருமைப்படலாம்.

'பாரதி அறுபத்தாறு' என்னும் நூலில் பாரதியார் தம் குருநாதரான யாழ்ப்பாணத்துச் சுவாமியின் புகழைப் பின்வருமாறு பாடியுள்ளார். "....வீரர்பிரான் குவளையூர்க் கண்ணன் என்பான் ஜகத்தினிலோர் உவமையிலா யாழ்ப்பாணத்துச் சுவாமிதனை யிவனென்றன் மனைக் கொணர்ந்தான். அகத்தினிலே அவன்பாத மலரைப் பூண்டேன் அன்றே யப்போதே வீடதுவே வீடு". யாழ்பாணத்துச்சுவாமி என்று பாரதியாரால் போற்றப்பட்டவர் யார் என்பது பலகாலம் யாராலும் அறியப்படாத புதிராக இருந்தது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் 07.05.1963இல் அருளம்பல சுவாமிகளே பாரதியாரால் போற்றப்பட்ட யாழ்ப்பாணத்துச் சுவாமி என ஆய்ந்தறிந்து, விழாவெடுத்து சுவாமிகள் பிறந்த வியாபாரிமூலையில் நடுகல் நாட்டினர். இவ்விழாவை முன்னிட்டு தினகரன் பத்திரிகையில் பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோர் கட்டுரைகள் எழுதினர். பாரதியாரின் ஞானகுருவாக விளங்கிய அருளம்பல சுவாமிகள் 07.05.1880இல் பிறந்தவர். இவர் இளமையில் விவசாயம் செய்தவர். பின்னர் கம்பளை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டவர். திருவருள் கூடவே நிஷ்டை கற்பதற்கு சிதம்பரம் சென்றவழியில் நாகபட்டினத்து நாகை நீலலோசினி ஆலயத்தில் தங்கினார். அம்பாள் முன்பாக நான்கு ஆண்டுகள் நிஷ்டையில் இருந்தார். நிஷ்டை கைகூடியதால் சித்தரானார். இவர் தலயாத்திரையின் பொருட்டு வேதாரணியம், அகத்தியாம் பள்ளி, மாயவரம், புதுவை ஆகிய இடங்களுக்குச் சென்றார். 1914ஆம் ஆண்டிலிருந்து 1927வரை யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் புதுவையில் இருந்துள்ளார். அக்காலத்தில் புதுவையில் இருக்கும் அச்சுக்கூடங்களில் தனது மூன்று நூல்களைப் பதிப்பித்துள்ளார். பாரதியார் 1908ஆம் ஆண்டுமுதல் 1918ஆம் ஆண்டு வரை புதுவையில் வாசஞ் செய்திருக்கிறார். அக்காலத்திலேதான் பாரதியாரிடம் யாழ்ப்பாணத்துச் சுவாமியை குவளைக் கண்ணன் அழைத்துச் சென்றார். பாரதியார் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளின் மௌன நிலையில் ஈர்க்கப்பட்டு ஆத்மஞானம் பெற்றார். அருளம்பல சுவாமிகளின் சமாதி வியாபாரிமூலையில் உள்ளது.

### ஒரு போர் இலக்கிய நாவல் – சமரபாகு சீனா உதயகுமாரின் 'ஒரு நிலமும் சில சுயசரிதைகளும்'




இன்றைய தலைமுறை இலக்கியப் படைப்பாளிகளில் முக்கியமான ஒருவராகத் திகழ்பவர் சமரபாகு சீனா உதயகுமார். கவிதை, சிறுகதை, கட்டுரை, சிறுவர் இலக்கியம் ஆகிய துறைகளில் இயங்கிவரும் இவர் பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். அவரது முதலாவது நாவலாக 'ஒரு நிலமும் சில சுயசரிதங்களும்' வெளிவந்துள்ளது.

இந்த நாவல், ஈழத்தமிழினத்தின் போர்க்கால வரலாற்றின் ஒரு காலகட்டத்தையும் அந்தக் காலத்தில் நடந்துமுடிந்த சம்பவங்களையும் விபரிக்கிறது.

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு மூன்று தசாப்தகால நீட்சி கொண்டது. அவர்களின் வீரதீரச் செயல்கள் மற்றும் ஆனையிறவு முகாமை வீழ்த்தி வெற்றிகொள்ள அவர்கள் வகுத்த வியூகம் போன்றவை விரிவாக இந்த நாவலில் விவரணமாகியுள்ளன. போராட்ட காலத்தில் போராடிய இராணுவத் தளபதிகள் எவ்வெக் காலங்களில் எந்தெந்த இடங்களில் புலிகளுக்கெதிரான போராட்டங்களில் ஈடுபட்டனர் போன்ற விபரங்கள் அச்சொட்டாக இந்த நாவலில் பதிவாகியிருக்கின்றன. போராட்டம் நடைபெற்ற காலம், இடங்கள் பற்றியெல்லாம் திகதி, ஆண்டு கால விபரங்களை இணைத்து ஆசிரியர் பதிவு செய்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.


ஈழத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி தமிழ்கூறு நல்லுலகெங்கும் பரந்து வாழும் தமிழினத்துக்கு முகவரி கொடுத்தவர்கள் விடுதலைப்போராளிகளே எனவும் தமிழரை தலைநிமிர வைத்தவர்கள் அவர்களே எனவும் இந்நாவல் பதிவுசெய்கிறது.

கட்டுக்கோப்புடன் வளர்ந்த இயக்கத்திற்குள் கட்டுப்பாடுகளும் இருந்தன. அதனால்தான் இயக்கம் பெருவளர்ச்சி கண்டது. ஆனாலும் இந்த இயக்கத்துக்குள் சில எட்டப்பர்களும் இருந்தார்கள். இவர்கள் தமக்கு வேண்டாதவர்களைச் சுட்டுத்தள்ளிவிட்டு இயக்கத்தின்மேல் பழியைச் சுமத்தி இயக்கத்தைக் களங்கப்படுத்தியவர்கள். அவர்களில் சிலர் எதிரிகளின் அடிவருடிகளாகவும் இருந்தார்கள். தமிழர் விடுதலைப் போராட்டங்களைத் தோல்வியடையச் செய்தவர்கள் தமிழர்கள்தான் என்பது நீண்டகால வரலாறு. தமிழனுக்குத் தமிழனே எதிரி போன்ற தகவல்கள் நாவலில் உள்ளடங்கியுள்ளன.

தமிழர்களின் போராட்ட வரலாற்றை எதிர்காலச் சந்ததியினர் அறிந்துகொள்ள இந்த நாவல் ஒரு வரலாற்றுக் கருவூலமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியருக்கு இதுவொரு வெற்றிப்படைப்பு என்பதைக் காலமும் எடுத்தியம்பும்.

### பிரித்தானிய அருங்காட்சியகத்தில் எமது நாட்டின் தொல்பொருட்கள்

பிரித்தானிய அருங்காட்சியகம் 250 வருட வரலாற்றைக்கொண்டது. பிரித்தானியர்கள் உலக நாடுகள் பலவற்றைக் கைப்பற்றி தமது ஆட்சியின் கீழ்வைத்திருந்த காலத்தில் அந்த நாடுகளில் உள்ள தொல்பொருட் செல்



வங்கள் பலவற்றைத் தமது நாட்டிற்கு எடுத்துச் சென்றுள்ளனர். அவை இன்று இந்த அருங்காட்சியகத்தின் காட்சிப்பொருட்களாக இருக்கின்றன.

அத்தோடு இந்த அருங்காட்சியகத்திற்குப் பொருட்கள் அன்பளிப்புகளாகவும் வந்து சேர்ந்தன. உலகம் சுற்றும் கடலோடியும் அவுஸ்திரேலியக் கண்டத்தைக் கண்டுபிடித்தவருமான கப்ரின் ஜேம்குக் என்பவர் தனது கடல்பயணங்களின்போது கிடைத்த அரிய பொருட்களை இந்த



அருங்காட்சிச்சாலைக்கு வழங்கினார். சேர் வில்லியம் ஹமில்ரன், கிறீஸ் தேசத்திலிருந்து பல அரிய பொருட்களை இரண்டு வள்ளங்களில் அனுப்பிவைத்தார். சாள்ஸ் ரவுண்லி என்பவர் உரோமாபுரிப் பொருட்களை விற்றார். நெப்போலியன்தோற்கடிக்கப்பட்டபின்னர் அங்கிருந்து ஈஜிப்ற் தொல்பொருட்கள் கிடைத்தன. 1816இல் ஏதென்ஸ் நகரத்திலிருந்து பலவிதமான மாபிள் கற்கள் கிடைத்தன. எல்கின் பிரபு கிறீஸ் நாட்டுத் தொல்பொருட்களை 1802இல் விற்றார். உலகநாடுகளில் அக்காலகட்டத்தில் இருந்த பிரித்தானியத் தூதுவர்கள் பலர் அந்தந்த நாடுகளில் இருந்த தொல்பொருட்களைத் தமதாக்கி அனுப்பிவைத்தனர். மேற்குறிப்பிட்ட தகவல்கள், பிரித்தானிய அருங்காட்சியகத்தைப் பற்றிய தகவல்கள் அடங்கிய பிரசுரங்களில் காணப்படுகின்றன.



எமது இலங்கைத் தீவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் இந்த அருங்காட்சியகத்தில் உள்ளன. அவற்றுள் 'தாரா' என்ற புத்த சமய பெண் தெய்வத்தின் வெண்கலச் சிலை என் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது. இதனை கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிலை எனக் குறிப்பிட்டுள்ளார்கள். பெண் தெய்வத்தின் வலது கரம் வரதகரமாக அமைக்கப்பட்டுள்ளது. வரதகரம் என்பது கொடுக்கும் கரம். வரமளிக்கும் கரம். இந்தச் சிலை மட்டக்களப்புக்கும் திருகோணமலைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டு, சேர். றொபேட் பிறவுன்றிக் என்பவர் அதனை 1830ல் பிரித்தானியாவுக்குக் கொண்டுசென்றுள்ளார். அனுராதபுரக் காலத்தில் மகாயான பௌத்தம் இலங்கையில் நிலவியதற்கு இச்சிலை சான்று பகர்கிறது என்ற குறிப்புகள் சிலையின் அருகில் காணப்படுகின்றன. மகாயான பௌத்தத்தில் கௌதம புத்தரைக் கடவுளாகக் கொள்வர். மகாயான பௌத்தம் சீனா, யப்பான் போன்ற நாடுகளில் தற்போது கைக்கொள்ளப்படுகிறது. இலங்கையில் தற்போது கைக்கொள்ளப்படும் தேரவாத பௌத்தத்தில் புத்தர் கடவுளாகக் கொள்ளப்படுவதில்லை. தேரவாத பௌத்தம் இலங்கையில் இருந்து கம்போடியா, தாய்லாந்து, பர்மா, லாஓஸ் போன்ற நாடுகளுக்குப் பரவியுள்ளது. அருங்காட்சியகத்தில் உள்ள இலங்கை மன்னன் பத்துத்தலை இராவணனது சிலையும் பார்வையாளர்கள் பலரைப் பெரிதும் கவர்ந்ததைக் காணமுடிந்தது.

**(இனி அடுத்த இதழில்)**





# படித்ததும் பகர்வதும்



**சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### மூத்தவர்களை மதிப்போம்

சமுதாயத்தில் வயதில் மூத்தவர்களை சிரேஷ்ட பிரஜைகள் (senior citizens) என்று அழைக்கின்றோம். இவர்களது ஆழ்ந்த அனுபவங்களும், ஆற்றல்களும் குடும்பங்களும், சமுதாயங்களும் வளர்ச்சியடையவும் சிறப்படையவும் வழிசெய்துள்ளன. இவர்களின் ஆளுமைகள் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும். இவர்களின் கருத்துக்களுக்கு இடமளிப்பதும், அவற்றை உரிய முறையில் நடைமுறைப் படுத்துவதும் அவசியம். அத்தோடு இவர்களின் நலன்களில் அக்கறை எடுத்து செயல்படுவது ஒவ்வொருவர் மீதுமுள்ள தார்மீக பொறுப்பாகும்.

தமக்காக மட்டுமன்றி தம்மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள், உற்றார் உறவினர்கள், ஊரவர்கள் மற்றும் சமுதாய உறுப்பினர்கள் என அனைத்து தரப்பினருக்கும் ஏதோ ஒருவகையில் இவர்கள் ஆற்றியுள்ள சேவைகள் அளப்பரியன. அவை சிறிதாயினும் பெரிதாயினும் அவற்றின் பெறுமதிக்கு ஈடு இணை இருக்க முடியாது. இதனையுணர்ந்து அவர்களுக்கு கண்ணியம் செய்யவேண்டும்.

தம் வாழ்நாளில் சிறுபிராயம், இளம்பிராயம் மட்டுமன்றி அதன் பின்னரும் தம்மால் ஆனவற்றை மற்றவர்களுக்காக செய்த இத்தகைய மூத்தவர்களை பராமரிப்பதிலும் அவர்களின் நலன்களை பேணுவதிலும் தம்மால் ஆனவற்றை செய்ய ஒவ்வொருவரும் முயல்வது அவசியம். இத்தகைய சிரேஷ்ட பிரஜைகள் எமது குடும்ப அங்கத்தவர்களாக, அயலவர்களாக, ஏன்?, பிற சமூகத்தை சார்ந்தவராககூட இருக்கலாம். அவர்கள் அனைவரும் எம்மால் நன்கு கவனித்து பராமரிக்கப்படவேண்டியவர்கள் என்பதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும்.

மூத்தவர்களை மதிப்போம், முகமலர்ச்சியோடு மகிழ்விப்போம்,

## தகவல் களஞ்சியம்

### முத்தம் பிறந்த கதை



முதன் முதலாக முத்தம் எப்படி ஆரம்பமாயிற்று என்பதை அறிய பலருக்கும் ஆர்வமாக இருக்கும். இது பற்றி லத்தீன் சரித்திர ஆசிரியர் கேட்டோ பின்வருமாறு எழுதி வைத்திருக்கிறார்.

"ரோம் நாட்டில், அந்தக் காலத்தில் ஆண்கள் மட்டுமே மது அருந்தலாம் என்ற சம்பிரதாயம் இருந்தது. ஆயினும் அதற்கு மாறாக மங்கையர். திருட்டுத்தனமாக மது குடிக்கும் பழக்கமும் இருந்துள்ளது. ரோம் சாம்ராஜ்யத்தின் சீமான்கள், தங்களது மனைவியர் மது அருந்தியிருக்கிறார்களா? என்பதை கண்டுபிடிப்பதற்காக தமது உதடுகளையும் மூக்கையும் மனைவியின் முகத்திலே பதிப்பதை பொதுவான வழக்கமாகக் கொண்டிருந்தார்களாம். அதைக் கண்டு பிடிப்பதற்கு ஏற்பட்ட ஒரு பழக்கம் கால ஓட்டத்தில் எப்படி எப்படியோ வளர்த்து "முத்தம்" ஆகியுள்ளது."

முத்தத்தில் பல வகைகளை குறிப்பிடுகிறார்கள். அவற்றில் சில இங்கே.

குழந்தைக்கு கன்னத்தில் கொடுப்பது, அன்பு முத்தம்.

பெற்றோருக்கு அவர்களின் சிரசின்மீது கொடுப்பது, கிருபை முத்தம்.

உடன்பிறப்புகளுக்கு நெற்றியில் கொடுப்பது, பிரிய முத்தம்.

கணவன் தன் மனைவிக்கு இதழின்மீது கொடுப்பது, ஆசை முத்தம்.

பெரியோருக்கு அவர்களின் கையின்மீது கொடுப்பது, காணிக்கை முத்தம்.

இப்படி முத்தத்தில் இன்னும் எத்தனை, எத்தனையோ வகைகள்.

## பாடிப் பறந்த பறவை 02

### 'பூபாளம்'




1980களின் ஆரம்பத்தில் கவிதைகளுக்காகவே வெளிவந்த சஞ்சிகை இது. பிரபல கவிஞர் அல் அஸூமத் அவர்களை பிரதம ஆசிரியராகவும், கவிஞர் கவின் கமல் அவர்களை துணை ஆசிரியராகவும் கொண்டு இக்கவிதைக்கான சஞ்சிகை சிறப்பாக வெளிவந்துள்ளது. முற்றும் முழுதாக, கவிதைகளுக்கும் கவிதைகளோடு தொடர்புடைய விடயங்களுக்கும் மட்டுமே இதில் இடமளிக்கப்பட்டுள்ளது. அன்றைய காலகட்டத்தில் கவிதைகள் எழுதி வந்துள்ள கவிஞர்களில் மூத்தவர்கள் உட்பட பெரும்பாலானோரின் கவிதைகள் பூபாளம் சஞ்சிகையை சிறப்பாக அலங்கரித்துள்ளன. தொடர்ச்சியாக வெளியிடும் நல்ல நோக்கத்தோடு இது தொடங்கப்பட்டுள்ள போதிலும், நான் அறிந்த வகையில் இதன் நான்கு அல்லது ஐந்து இதழ்கள் மட்டுமே வெளிவந்துள்ளன. 1983 ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தோடு பூபாளம் இதழின் பயணம் தடைப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

1982 ஒக்டோபர் மாதத்தில் வெளிவந்த "பூபாளம்" முதல் இதழை உங்கள் பார்வைக்குத் தருகிறோம். விலையை கவனியுங்கள். மூன்று ரூபா மட்டுமே. கூடவே ஒரு குறிப்பு, "இரவலினி வேண்டா. எடு மூன்று ரூபாய். அறைக்கவுன் நண்பர்க்கும் அஃது"

## பொன் மொழி அது பொய்யா மொழி

★ தோல்விகளை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ள கற்றுக்கொள். அது தான் வெற்றிக்கான மிக முக்கியமான திறமை.

★ வாய்ப்புகள் உன்னைத் தேடி வரும் என்று காத்திருக்காதே. உனக்கான வாய்ப்பை நீயே தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

★ நீ மற்றவரை ஏமாற்றுவதைக் காட்டிலும் தோற்றுப் போவது மிகவும் மரியாதைக்குரியது.

★ நீ வாழ்க்கையில் முழுப் படிக்கட்டுகளையும் கடக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நம்பிக்கையுடன் முதல் அடியை எடுத்து வை.

★ வாழ்க்கையில் தேவையான இடத்தில் முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் வார்த்தையும் வாழ்க்கையும் அர்த்தம் இல்லாமலாகி போய் விடும்.

★ துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்து விடு. ஆனால் அது கற்றுத் தந்த பாடத்தை எப்போதும் நினைவில் வைத்துக் கொள். செய்து முடிக்கப்பட்ட மாபெரும் சாதனைகள் எல்லாம் செய்ய முடியாது என பலராலும் நிராகரிக்கப்பட்டவைதான் என்பதை உணர்.

★ ஒரு அன்பான இதயம் ஆயிரம் அழகான முகங்களுக்குச் சமம். எப்போதும் அழகான முகத்தை விட அன்பான இதயத்தை நேசி. உன் வாழ்க்கை இனிதாக இருக்கும்.

**கௌதம புத்தரின் கருத்துக் குவியலிலிருந்து**

## காண வேண்டிய காட்சியொன்று



**இராமாயணத்தில் குறிப்பிடப்படும் கிஷ்கிந்தா மலை**

## வாசித்ததில் வசீகரித்தது




நாம் வாசிக்கும் புத்தகங்களில், சஞ்சிகைகளில், பத்திரிகைகளில் ஒரு சில பகுதிகள், சில வாசகங்கள் விசேடமாக எம்மை கவர்கின்றன. அத்தகைய வசீகரிக்கும் வாசகங்களை "வாசித்ததில் வசீகரித்தது" எனத்தர விழைகிறோம். நீங்களும் உங்களை வசீகரித்த விடயங்கள் மூலம் இப்பகுதியை அலங்கரிக்கலாம்.

இன்று புரவலர் புத்தகப் பூங்காவின் 31வது வெளியீடாக பிரசுரமான சமூக ஜோதி எம். ஏ. ரபீக்கின் "சமூக ஜோதியின் சங்கநாதம்" என்ற நூலில் எம்மை வசீகரித்த ஒரு பகுதி இங்கே இடம் பிடித்துக் கொள்கிறது.

காதல்! காதல்! காதல்!

"ஆண்டவன் மீது ஆத்திரப்படுகின்ற அளவுக்கு வேதனை நிறைந்தது தான் காதல் என்ற கருத்தும் கண்மூடித்தனமானது. கண்டிக்கத்தக்கது. காதல் கடுகளவும் வேதனை தரக்கூடியது அல்ல. வேதனை தரக்கூடியது காதலுமல்ல. சில சந்தர்பங்களில் ஏற்படும் சிறு வேதனைகள் கூட, காதல் பூங்காவில் மலர்கின்ற ஊடல் ரோஜாக்களே தவிர துன்ப முட்களல்ல.

காதல் என்றால் என்ன? ஒருவர் இன்னொருவர்மீது கொண்டிருக்கின்ற அளவுக்கு அதிகமான பற்று, பிரியம், விருப்பம் என்பவைதான் அன்பு, பாசம், காதல் என்ற தூய தமிழ் சொற்களால் அடையாளப்படுத்தப்படுகின்றது.

அன்பு, பாசம் என்பவை உடல் ரீதியாக இரத்தத் தொடர்போடு சம்பந்தப்பட்ட இயற்கையான உணர்வாகும்.

ஆனால் காதல் என்பது இரு இதயங்களோடு சம்பந்தப்பட்ட இணையற்ற உணர்வு, உணர்வுகளின் இமயம், உணர்வுகளின் சிகரம், உணர்வுகளுக்கெல்லாம் மகுடம்.

ஒருவர் எத்தனைபேர் மீதும் அன்பு செலுத்தலாம். ஒருவர் எத்தனைபேர் மீதும் பாசம் காட்டலாம். ஆனால் ஒருவர் மீது மட்டும் கொள்வதுதான் உண்மையான காதல்.

ஆயிரக்கணக்கான அறிவுரைகளைத் தந்த ஆன்றோர்களாக இருக்கட்டும். கணக்கிலடங்காத படிப்பினைகளைத் தந்து கொண்டிருக்கும் காவியங்களாக இருக்கட்டும். காதல் புனிதமானது, தெய்வீகமானது, இல்லற இன்பத்துக்கு இன்றியமையாதது என்றுதான் கூறியிருக்கிறார்கள். கூறிக் கொண்டிருக்கின்றன.

வனப்பின் காரணமாகவோ, வாலிப முறுக்கின் காரணமாகவோ, ஏதோ ஒரு சிறப்பின் காரணமாகவோ ஏற்படுவது ஆசையே தவிர, காதல் அல்ல. ஆசைகள் எல்லாம் காதலாக முடியாது".

**நூல் : சமூக ஜோதியின் சங்கநாதம்**
**நூலாசிரியர்: சமூக ஜோதி எம். ஏ. ரபீக்**
**வெளியீடு : புரவலர் புத்தகப் பூங்கா**

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.